இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 155 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை 30.04.2017

## தமிழ் பேசுவோருக்கு பொலிஸ் ஆள்சேர்ப்பில் முன்னுரிமை கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 30
பொலிஸ் ஆள் சேர்ப்பில் தமிழ்பேசும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.
"பொலிஸ் காவலர், பெண் காவலர், சாரதி உள்ளிட்ட பதவிகளுக்கு ஆயிரத்து ஐநூறு பேரை ஆள் >> 04

# முள்ளிக்குளம் காணிகள் கடற்படையால் விடுவிப்பு

### 27 வீடுகளை உள்ளடக்கிய நிலப்பகுதியிலிருந்து வெளியேறக் கால அவகாசம் கேட்கிறது

மன்னார், ஏப்ரல் 30
மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம் பிரதேசத்தில் கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்திருந்த காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. 27 வீடுகளை உள்ளடக்கிய நிலப் பிரதேசத்தை விடுவிப்பதற்கு மாத்திரம் கடற்படையினர் கால அவகாசம் கோரியுள்ளனர். விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் மக்கள் இன்றைய தினம் வழிபாடுகளின் பின்னர் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



கடற்படையினர் வசமுள்ள முள்ளிக்குளம் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் முன்னெடுத்து வந்த போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை 38ஆவது நாளாகவும் தொடர்ந்தது. மக்களின் காணிகள் விடுவிப்பது தொடர்பான உயர் மட்டக் கலந்துரை >> 52

## மதுபான சாலைகள் நாளை திறக்கா

கொழும்பு, ஏப். 30
மே தினக் கூட்டங்கள் நடக்கவுள்ள பிரதேசங்களில் மதுபானசாலைகள் முற்றாக மூடப்பட வேண்டும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.
கொழும்பு >> 52

## மேதினத்தில் இம்முறை 17 கூட்டங்கள்

கொழும்பு, ஏப். 30
மே தினத்தை முன்னிட்டு கொழும்பிலும் நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் மொத்தமாக 17 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகப்படியாக 11 கூட்டங்கள் தலைநகர் கொழும்பில் நடை >> 52

## ஓ.எல். மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

### வடக்கு முதலமைச்சரிடம் கோருகிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 30
"ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின்படி வடக்கு மாகாணம் தொடர்ந்தும் கடைசி இடத்தில் இருந்து வருகின்றது. இத்தகைய நிலை >> 52

## தமிழீழத்தை உருவாக்கும் அரசமைப்பை நிறைவேற்ற அரசு இரகசியத் திட்டமாம்

### மோடியின் வருகை குறித்து மகிந்த அணி அச்சம்

கொழும்பு, ஏப். 30
"நாட்டை இரண்டாகப் பிரித்து தமிழீழத்தை உருவாக்கும் அரசமைப்பை திருட்டுத்தனமாக நிறைவேற்றும் நோக்கில்தான் உலக >> 52

## வெசாக் கொண்டாட்டத்தில் மட்டுமே மோடி பங்கேற்பார்

### மைத்திரி நேற்று விளக்கம்

மட்டக்களப்பு, ஏப். 30
"உத்தியோகபூர்வ அழைப்பில் இலங்கைக்கு வரும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, ஐக்கிய நாடுகள் சபையின் உலக வெசாக் தினக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவாரேயன்றி >> 52

## தமிழ் அரசியல் கைதி தாக்கப்பட்டமையை விசாரிக்கக் கோரி மனு

யாழ்ப்பாணம், ஏப். 30
"சிறைச்சாலை அதிகாரிகளால் தமிழ் அரசியல் கைதி தாக்கப்பட்டமை தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். தாக்குதலை மேற்கொண்ட சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"
இவ்வாறு சிறைச்சாலைகள் அத்தியட்சகரிடம் கோரிக்கை மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. >> 53

## மைத்திரி கவலைப்பட்டதால்தான் காணியை விடுவித்தது படைகள்

மன்னார், ஏப். 30
'மக்கள் வீதிகளில் எனக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு எனது படையினரே காரணமாக உள்ளனர். இது எனக்கு வருத்தமளிப்பதாக உள்ளது' என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எம்மிடம் கூறினார். அதனாலேயே காணிகளை விடுவிக்கின் >> 53

## எவ்வாறான புதிய கூட்டுக்கள்வேண்டும் என்று சிந்திக்கும் காலம் வந்துவிட்டது

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 30
"கூட்டமைப்பு என்பது மாறக்கூடியது. மாறிக் கொண்டே இருக்கக் கூடியது. கூட்டுக்கள் எவ்வாறு மாற வேண்டும்? எவ்வாறான புதிய கூட்டுக்கள் வேண்டும்? எவ்வாறான போராட்டங்களை >> 52

## ஒரே ஒரு பற்சிகிச்சை நிலையமே அனுமதி பெற்று இயங்குகிறது

### வடக்கிலேயே இந்த அவலம்

யாழ்ப்பாணம், ஏப். 30
'ஒரேயொரு பற்சிகிச்சை நிலையம் மாத்திரமே வடக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 16 பதிவு செய்யப்படாத பற்சிகிச்சை நிலையங்கள் இயங்குகின்றன. பதிவு செய்யப்பட்ட 118 மருந்தகங்கள் இயங்குவதுடன், 14 பதிவு செய்யப்படாத மருந்தகங்கள் இயங்குகின்றன'
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகா >> 49




அப்ப அவரு புதிய கூட்டுல உறுதியாத்தான் உள்ளாரோ?...

## கல்வி நிலையில் முன்னேறுகிறது வடக்கு மாகாணம்

### மைத்திரியின் கணிப்பு இப்படி

மட்டக்களப்பு, ஏப். 30
நாட்டிலுள்ள மாகாணங்களில் கிழக்கு மாகாணம் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வியில் பின்நோக்கிக் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாணம் கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளது.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மட்டக்களப்பு ஒட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் >> 52

## தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஈபிஆர்எல்எப்பின் செயற்பாடு குறித்து ஆராயக் குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 30
இலங்கைதமிழரசுக் கட்சி மீதும் அதன் தலைவர் மீதும் தொடர்ந்து அவதூறு பரப்பும் >> 53

## முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு வகுப்பெடுத்தார் மகிந்த

### தனது ஆட்சியில் இனவாதம் தலைதூக்கவில்லையாம்

கொழும்பு, ஏப். 30
"பத்து வருடங்கள் நாட்டை நான் ஆட்சி செய்தேன். எனது காலத்தில் இனவாதம் எப்போதும் தலைதூக்கவில்லை. >> 52




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தை கிழக்கு காணி அலுவலக பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்

*மக்களின் தொடர் முறைப்பாட்டை அடுத்து*

முல்லைத்தீவு, ஏப்.30

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் காணி அலுவலகம் மக்களின் முறைப்பாட்டை அடுத்து பிரதேச செயரால் மூடப்பட்டுள்ளது. அவற்றின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை பிரதேச செயலருக்கு காணி அதிகாரி அலுவலகம் தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"காணி அதிகாரி அலுவலகத்தில் முறைகேடுகள், ஊழல்கள் நடைபெறுகின்றன என்று பொதுமக்களும், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் எழுத்து மூலம் பல முறை முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடுகளின் அடிப்படையில் அதிகாரியின் நடவடிக்கைகள் கண்காணிப்பு செய்யப்பட்ட நிலையில் மேலதிக நடவடிக்கைக்காக காணி அலுவலகத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

மேலகதி நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

எதிர்வரும் வாரம் மாவட்டச் செயலரின் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் வாரத்தின் இறுதிப் பகுதியில் காணி அலுவலகத்தின் சேவைகள் சிறப்பான முறையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும்." என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-101)

## கூட்டுறவாளர்களின் மே தினப்பேரணி புதுக்குடியிருப்பில்

வட மாகாணக் கூட்டுறவாளர்களின் மே தின நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு நகரில் நாளை திங்கட்கி ழமை 2 மணிக்கு நடைபெறும். புதுக்குடியிருப்பு சிவன் கோயிலுக்கு அருகாமை ஆரம்பமாகும் மேதினப் பேரணி, புதுக்குடியிருப்பு சந்தியைச் சென்றடைந்து, அங்கிருந்து புதுக்கு டியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தைச் சென்றடையும். அங்கு மேதினக் கூட்டம் நடைபெறும். மேதினப் பேரணியை வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைப்பார். வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வர். (ஜ - 7)

# பயங்கரவாதச் சட்டம் தவறான வகையில் கையாளப்பட்டது

## ஒப்புக்கொள்கிறது அரசு

கொழும்பு, ஏப். 30

"கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தவறான வகையில் கையாளப்பட்டது என்பதே உண்மை"

இவ்வாறு பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்சடி சில்வா தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற அரசின் வாக்குறுதிகளுக்கும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்கவுள்ளமைக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. நல்லிணக்கத்தை பலப்படுத்துவதன் மூலம் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்கும் வழிமுறை மேலும் உறுதிப்படுத்தப்படும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் மாறப்போகின்றது எனவும் பன்னாட்டுத் தேவைக்காக வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சிலர் இன்று பேசுகின்றனர். உண்மையில் பயங்கரவாதமானது இலங்கைக்கும் ஏனைய ஒரு சில நாடுகளுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாடு அல்ல. இன்று மேற்கத்தேய நாடுகள் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை உணர ஆரம்பித்துள்ளன.

நாம் கடந்த முப்பது ஆண்டுகளில் எதிர்கொண்ட அனுபவங்கள், எமது மக்கள் அனைவரும் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பில் அவர்களும் உணர ஆரம்பித்துள்ளனர். பன்னாட்டுத் தரப்பில் இந்த உண்மைகளை நாம் வெளிப்படுத்தி வருகின்றோம். இன்று பல நாடுகளுக்கு இலங்கை நல்லதொரு முன்னுதாரண நாடாக மாறியுள்ளது.

ஒருபுறம் மனித உரிமைகளை பாதுகாக்கும் அதே நிலையில், மறுபுறம் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். இரண்டையும் சரியாகக் கையாண்டால் மாத்திரமே பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் இந்த சமநிலைத்தன்மை உருவாக்கப்படும். அதற்கான முயற்சிகளையே நாம் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த காலத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தவறான வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதே உண்மையான காரணியாகும் - என்றார். (வ-5)

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

*வவுனியாவில் துயரம்*

வவுனியா, ஏப். 30

வவுனியா மன்னார் வீதி சாம்பல் தோட்டத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா கப்பாச்சி செட்டிக்குளத்தில் வசித்து வரும் சின்னச்சாமி விஜயகாந்தன் (வயது 29) என்ற இளைஞனே மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.


"வவுனியா சாம்பல் தோட்டம் சென்று கிணறு வெட்டும் பணியில் இளைஞன் ஈடுபட்டு வந்தார்.

வழமை போன்று நேற்றும் அவர் கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

கிணறு வெட்டும் இயந்திரத்தில் (கொம்பிறசர்) மின்சார கசிவு ஏற்பட்டதால் அவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-21)

# "பாட்டெழுதிப் பெயர் வாங்கிறவையும் இருக்கினம் எழுதின பாட்டில குற்றம் கண்டு பிடிச்சு பெயரெடுக்கிறவையும் இருக்கினம் பாருங்கோ"



## அம்பலத்தாடி அப்புச்சி

தமிழ்நாட்டில ஹிந்தி எதிர்ப்புப்போராட்டத்திலதான் இளஞர்கள் எழுச்சியாப் போராடிச்சினமாம். அதுக்குப்பிறகு ஜல்லிக்கட்டுக்கெதிராக இளைஞர்களின்ர எழுச்சி அபாரமா இருந்தது.

எங்கட எழுச்சியும் புரட்சியும் முள்ளிவாய்க்காலோட புரண்டுபோக மக்கள் எழுச்சி என்றதே இனி சாத்தியமில்லாத நிலமையாப் போய்க் கிடந்தது பாருங்கோ.

காணாமற் போனவர்களின் குடும்பங்களின்ர ஏக்கமும் அங்கலாய்ப்பும் சொல்லி விளங்காது பாருங்கோ. அதுகள் தங்கட உறவுகளைத் தேடி அலையிறதைப் பார்க்கேலாது. தொடர்ச்சியா அதுகள் நடத்துற போராட்டத்திற்குப் பதில் சொல்ல முடியாதளவுக்கு நல்லாட்சி இங்க இருக்குது. அதுக்குச் செதில் பிடிக்க உள்ளூரில கொஞ்சப் பேரும் பிறகு வெளிநாடுகள் சிலதும் இருக்குப் பாருங்கோ. கண்துடைப்புக்காகத் திறக்கிறதாச் சொன்ன காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்தையும் காணேல்லை. அதைத் தேடவேண்டிய நிலமையாப் போய்ச்சுது. காணாமற் போனவையின்ர உறவுச் சனம் நடத்தின போராட்டங்களுக்கு முத்தாய்ப்பாய் வடக்கு கிழக்கு தழுவி நடத்தப்பட்ட கடையடைப்பு இருந்தது. அது ஒரு எழுச்சிதான். ஆச்சரியப்படத்தக்கதாக இருந்திச்சுது.

வடக்கும் கிழக்கும் இணைந்து நடத்தினதென்றால் அது சிறப்பான அம்சம் தானே. மக்கள் உணர்வோட இருக்கிறதை அது பறைசாற்றி இருக்குது. எதிர்காலத்தில மக்கள் எழுச்சி சாத்தியமென்றதையும் சொல்லியிருக்குது.

எங்கள் எல்லாருக்கும் சூடு சுரணை இருக்கென்று சொல்லியிருக்கிறம். ஆனா அவ்வளவுக்கும் பிறகும் கொழும்பு மூச்சும் காட்டுதில்லை. உருப்படியா எதுவும் செய்யிறதாக் காணேல்லை, என்று பலதையும் பத்தையும் நினைச்சுக் கொண்டு சைக்கிள எடுத்து அடைப்பு எப்பிடி இருக்கென்று ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வந்தன். ஊருக்க ஒரு கடை திறக்கேல்லை.

ஆனால் பாருங்கோ அந்தச் சந்தோசம் எல்லாம் கன நாள் நீடிக்கேல்லை. அடுத்த நாளே ஒழுங்கையில என்னைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்,

"அப்புச்சி! நீ சொன்னமாதிரி உந்தக் கம்பசின்ர துணை வேந்தர் பதவி அரசியலாப் போச்சுதென்று சொல்லுறாங்கள் உண்மையோ ?""

"துணைவேந்தர் தேர்தலில முதலாவதா வந்தவரத்தான் மைத்திரி நியமிப்பார் என்று எல்லாரும் நம்பினவையளாம். இப்ப இரண்டாவதா வந்தவரைப் போட்டிருக்குதாம். அதுக்குள்ளையும் அரசியல் இருக்கென்று சொல்லுறாங்கள். உண்மையோ?"" என்று கேட்டிச்சுது அந்தாள். "இப்ப வந்திருக்கிறவர் கடந்த மூன்று தடவையா துணைவேந்தர் பதவிக்குப் போட்டி போட்டவர். அந்தநேரம் உள்ளூர் அமைச்சரிண்ட காலில போய் விழாததால அந்தப் பதவி கிடைக்கேல்லை. அமைச்சரின்ர காலில ஓடிப்போய் சாஸ்டாங்கமா விழுந்தவைக்குப் பதவிகள் ஒன்றுக்கு இரண்டு தடவை போய் சேர்ந்தது தெரியும்தானே. ஆப்பிடி பார்க்கேக்க பாதிக்கப்பட்டவருக்குப் பரிகாரம் கிடைச்சிருக்குத்தானே. அந்த வகையில மனுசனின்ர தெரிவு பரவாயில்லை. அமைச்சரின்ர எச்ச சொச்சமா இருந்தவ போய் சேருறது எவ்வளவு நிம்மதியான விசயம். நல்லது நடக்குதுதானே"" என்றன் ஏறுக்கு மாறா.

"உன்னோட கதைக்கேலாது. அப்ப கம்பசில அம்மாவைச் சுத்தி நின்று பதவி சுகம் அனுபவிச்சவங்கள் எல்லாம் என்ன செய்யப் போயினமாம்?" என்றார். "பதிலுக்கு நான் சொன்னன் இனியென்ன அம்மாவைச் சுத்தி நின்றதுகளெல்லாம் செத்த மாட்டில உண்ணி கழறது மாதிரி கழன்று இஞ்சால ஏறிப்போடுவினம். காலம் காலமா அதுதானே நடக்கிறது!"

"சரியாத்தான் சொல்லுறாய்!" என்றுகொண்டு பக்கத்திலேயே சைக்கிள்ள ஓடிக்கொண்டு கதைச்சுக் கொண்டு வந்தார்.

"உந்தக் கடையடைப்பைத் தாங்கள் நடத்தினதாக்காட்ட பேரவைக்காரர் முக்கின் முக்கை பாக்கமாட்டாய் அப்புச்சி. போராட்டம் நடத்தின சனத்தைச் சம்பந்தருக்கெதிராத் தூண்டிவிட்டுக் கூத்துப்பார்க்க துடியோ துடியோ என்று துடிச்சவையாம். பிறகு அது சரிவரேல்ல என்று போட்டு கடையடைப்புக்கு ஆதரவென்று அறிக்கை விட்டிட்டு நழுவிட்டினமாம்" தனக்கு தெரிஞ்ச சங்கதிகளை சொல்லிக் கொண்டு வந்தான். நான் கேட்டுக்கொண்டே நடந்து வந்து மெயின் றோட்டில ஏறினாப் பிறகு சைக்கிள்ள வெளிக்கிட்டிட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தடுப்பூசி ஏற்றுவதற்குப் பயிற்சி

கொழும்பு, ஏப். 30

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்த் தடுப்புத் தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது பயிற்சி வகுப்பு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

கருப்பைக்கழுத்துப்புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி வழங்குதல் தொடர்பாக சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் விசேட திட்டம் சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவினரால் நடத்தப்படுகின்றது.

கிளிநொச்சி பழைய வைத்திய சாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், தாதிகள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

"நாட்டில் ஆண்டுதோறும் ஆயிரம் பேர் வரையில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயால் இறக்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு எச்பிவி எனும் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும். தரம் 6 இல் பயிலும் மாணவிகளுக்கு அதாவது 10, 11 வயதுச் சிறுமிகளுக்கு ஆறு மாத இடைவெளியில் இரு தடவைகள் எச்பி.வி தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும்." என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் தொற்றுநோய் விஞ்ஞான விசேட வைத்திய நிபுணர் தீபா கமகே தெரிவித்தார்.

இந்த மாதம் ஜூலை மாதமளவில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்த் தடுப்பூசியானது இலங்கையின் தேசிய நிர்ப்பீடனத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளது. அதன் பின்னரே தடுப்பூசி ஏற்றுதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# மத்திய வகுப்புக் காணி உரிமையாளர்களும் போராட வர வேண்டும்

## கேப்பாபிலவில் தொடர் போராட்டம் நடத்தும் மக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஏப்.30

கேப்பாபிலவில் நாம் முன்னெடுத்து வரும் நில மீட்புப் போராட்டத்தில் கேப்பாபிலவு மத்திய வகுப்புக் காணி உரிமையாளர்களும் இணைந்து கொண்டு வலுச் சேர்க்க வேண்டும். அவ்வாறு கேப்பாபிலவில் தொடர் நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



"எங்கள் பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி நாம் உறுதியுடன் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். எங்கள் காணிகள் விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும். கேப்பாபிலவில் 150 ஏக்கருக்கு மேற்பட்ட மேல் மத்திய வகுப்புக் காணிகள் உள்ளன. அவர்களும் எங்கள் அமைதி வழிப் போராட்டத்தில் இணைந்தால் எங்கள் போராட்டம் வலிமை பெறும்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி கேப்பாபிலவு மக்கள் 60 நாள்களாகத் தொடர் அறவழிப் போராட்டத்தை நடத்துகின்றனர். அவர்களின் போராட்டத்துக்குப் பல தரப்பினரும் ஆதரவு வழங்குகின்றனர். நேற்று கேப்பாபிலவைச் சேர்ந்த மோகனராஜ், ஜதுர்சன் ஆகியோர் மதிய உணவு வழங்கினர். (ற-7)

# ஊடக சுதந்திர தின நிகழ்வு 2ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஏப்.30

உதயன் ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து ஊழியர்கள் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மே 2 ஆம் திகதி ஊடக சுதந்திர தின நிகழ்கள் நடத்தப்படவுள்ளன. உதயன் பத்திரிகை நிறுவனத்தில் மு.ப. 9 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

2006ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி இரவு புகுந்த ஆயுததாரிகள் அங்கிருந்த பணியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த நாள் ஊடக சுதந்திர நாளாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. வேட்கை எனும் தொனிப்பொருளில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

உதயன் குழுமத் தலைவரும், யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஊடகத்துறைக்காக உயிர் நீத்த உத்தமர்கள், ஊடக சுதந்திர தின நிகழ்வில் நினைவு கூரப்படவுள்ளனர்.

பன்னாட்டு ஊடக சுதந்திர தினம் மே 3 ஆகும். (ற-5)

# நாடக வரலாற்றில் முத்திரை பதித்த பிரான்சிஸ் ஜெனம் காலமானார்

யாழ்ப்பாணம், ஏப். 30

ஈழத்து நாடக வரலாற்றில் தனக்கென முத்திரை பதித்துக் கொண்ட அ.பிரான்சிஸ் ஜெனம் (வயது-75) நேற்றுக் கொழும்பில் காலமானார்.



யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பின்னர் கொழும்பில் வசித்து வந்தார்.

நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்கத்தில் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவராக குழந்தை ம.சண்முகலிங்கத்துடன் செயற்பட்ட இவர், தொடர்ந்து திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து செயற்பட்டார். நாடக நடிகனாகவும், நெறியாளராகவும் அரங்கப் பயிற்சியாளனாகவும் இயங்கினார்.

தாசிசியஸ் மாஸ்டரின் பொறுத்தது போதும், பேராசிரியர் மௌனகுருவின் சங்காரம், சுந்தரலிங்கத்தின் எழுத்துருவில் அமைந்த அபசுரம் போன்ற நாடகங்களில் அவர் நடித்துள்ளார்.

பொறுத்தது போதும் நாடகத்துக்காக 1976 ஆம் ஆண்டு சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றவர். (ற-5)

# கிராமத்தின் பெயர் மாற்றப்பட்டது எனும் தகவலில் உண்மையில்லை

## ஞானம் பவுண்டேசன் இணைப்பாளர் கூறுகிறார்

வவுனியா, ஏப்.30

சின்ன அடம்பன், இராசபுரத்தில் லைக்கா நிறுவனத்தால் வீடுகள் அமைக்கப்பட்ட பகுதி ஞானம் கிராமம் என்று பெயர் மாற்றப்பட்டது என்று வெளியான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என்று ஞானம் பவுண்டேசனின் தேசிய இணைப்பாளர் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற நெடுங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. கிராமத்தின் பாரம்பரியப் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது என்று கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே ஞானம் பவுண்டேசனின் தேசிய இணைப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

"எம்மால் அமைக்கப்பட்ட வீடுகளுக்கே ஞானம் கிராமம் என்று பெயர் வைத்துள்ளோம். ஒரு கிராமத்தின் பெயரை மாற்றி எனது நிறுவனத்தின் பெயரை வைக்க நாங்கள் முன்வரவில்லை. இந்த விடயம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டமை தொடர்பாக மாவட்ட செயலருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். எமது நிறுவனத்தால் அந்தப் பகுதியில் வீடுகள் அமைக்கப்படும்போது அவற்றுக்கு ஞானம் கிராமம் என்று பெயரிடுவோம் என்று மாவட்ட செயலருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளோம். அதற்கு அவர்களின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. என்றார். (ற-21)

# வயலுக்கு இட்ட தீயால் தல விருட்சம் நாசம்

காரைநகர், ஏப்.30

காரைநகர், சுப்பரமணியம் வீதியில் உள்ள சுமார் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தல விருட்சத்துடன் கூடிய முதலியார் ஆலயம் நேற்றுமுன்தினம் முற்றாக தீயில் எரிந்தது.



இந்த ஆலயத்தைச் சூழ உள்ள வயல்கள் ஒன்றில் பற்ற வைக்கப்பட்ட தீயே அந்தப் பிரதேசம் எங்கும் பற்றிக் கொண்டது. ஆலயத்தின் பழைமை வாய்ந்த தல விருட்சத்திலும் பற்றிக் கொண்டது.

தீயணைப்புப் படையினர் அழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தபோதும் தல விருட்சம் முற்றாக எரிந்து கருகியது. சுமார் 3 மைல் தூரத்துக்குப் பற்றிக் கொண்ட தீ இரவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பற்றைகள், பனைமரங்கள் எனப் பல இடங்களுக்கும் பரவிய தீயை தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச செயலக, பிரதேச சபை ஊழியர்கள் விளையாட்டுக் கழக இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பிரதேச செயலரும் அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தார். (ற-250)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி சதாசிவம்

(காரைநகர்)



காரைநகர் கோவளம், நட்டுப்பாளியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை இல 15, இராஜசிங்க வீதி மற்றும் இல.08, மாவடி வீதி, ஐந்து சந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சதாசிவம் அவர்கள் நேற்று முன்தினம் (28.04.2017) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 08, மாவடி வீதி, ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்
077 7732 893, 077 7111 025

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சபாபதிப்பிள்ளை



சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சபாபதிப்பிள்ளை நேற்று (29.04.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னையா, சின்னத்தம்பி, முத்தாச்சி, வள்ளியம்மை, பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும் பாலகிருஸ்ணன் (ஜேர்மன்), ச.இராமநாதன் (ஜேர்மன்), சரோஜினிதேவி(கனடா), காலஞ்சென்ற சற்குணராஜா, சி.லலிதாதேவி மற்றும் சிறிதேவி (கனடா). புஸ்பதேவி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வருடாந்தத் திருவிழா

வவுனியா வெளிவட்டவீதி சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி மு.ப.8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 10ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-4)

## தமிழ் பேசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ப்பு செய்வதற்கான அறிவிப்பை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது. ஜூன் 2ஆம் திகதி வரை இந்த ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளவர்கள், வடக்கு கிழக்கு உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களில் நியமிக்கப்படவுள்ள னர்.

தமிழ் பேசும் விண்ணப்பதாரிகள் வடக்கு, கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் விண்ணப்பிக்க முடியும். அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்" என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்



### வைரவன் சிவலிங்கம்

**(அம்பிகாபதி புகழ்.தாகூர், கலைமன்ற ஸ்தாபகர்)**

பருத்தித்துறை , புலோலி வடகிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரவன் சிவலிங்கம் 25.04.2017 செவ்வாய்க்கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னராசா மற்றும் சந்திரபோஸ், சுதந்திரபோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சசிபாஸ்கரன் மற்றும் சசிதா, சசிதானந்த் (ஹொலன்ட்), சசிந்தா (பிரான்ஸ்), சசிதாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபவன், ரவி (பிரான்ஸ்), சுதா (ஹொலன்ட்), ராஜஸ்ரீ (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2017) திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நெதர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தா தோட்டம்,
புலோலி வடகிழக்கு, புலோலி.

தகவல்:
திருமதி ஸ்ரீபவன் சசிதா (மகள்)

**076 625 7520** (ane cs/0145)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் பாலகிருஷ்ணதாசன்

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Toulouse ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலகிருஷ்ணதாசன் 26.04.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், நன்னிக்குட்டி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபதி (லலிதா) அவர்களின் அன்புக் கணவரும், சிவபாலினி, சிவறாயினி, சிவாஜினி, சிவேந்திரன், சிவந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆ. மகேஸ்வரன், மகேஸ்வரன், உருத்திரன், சிறிதரா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், வனிஷா, லவன், ஸ்ரிபன், கெவின், மதுஷான், மாஜன், ஜெயப்பிரகாஸ், சிவானி, அபிஷன், பிரகாசினி, பிரவீன், பிரணவன், பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.05.2017 புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் Toulouse இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கெளளளவும்.

தகவல் :
சிவபாலினி (மகள்)

(ஜே.8372) (13)

**+ 33 624 892 317**

## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராசா தில்லைநடராசா (தவம்)



சுதுமலை மானிப்பாயை பிறப்பிடமாகவும் தட்டாமலை ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா தில்லைநடராசா 2017.04.29 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சேனாதிராசா - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வரும் சிதம்பரப் பிள்ளை - அழகம்மா தம்பதியரின் மருமகனும் தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம், விக்கினேஸ்வரி, தர்மகுலசிங்கம், ஜெயபாலன், கிருஸ்ணபாலன், காலஞ் சென்ற தங்கராணி ஆகியோரின் சகோதரனும் நேசதுரை (ஆயுள்வேத வைத்தியர்), சிறிகாந்(யோகன்), சிறிதரன், சிறிவித்தியா காலஞ்சென்ற சிறிமுருகன், சிறிகுமார், சிறிபிரியா, சுகிர்தா, ரின்சியா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தட்டாமலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தட்டாமலை,
ஒட்டுசுட்டான்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பூமலர் இராசலிங்கம்



யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமலர் இராசலிங்கம் 28.04.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளையின் அன்புப் பெறாமகளும் இராசலிங்கத்தின் பாசமிகு மனைவியும் ஸ்ரீகாந்தன்(கனடா), சகுந்தலாதேவி(ஜேர்மனி), உதயகுமாரி(ஜேர்மனி), உதயகுமார் (சுவிஸ்), சிவகுமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசலிங்கம், பரமேஸ்வரி(பூசனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாவதி (கனடா) , காலஞ்சென்ற ஜேசுதாஸ் (ஜேர்மனி), றவீந்திரன் (ஜேர்மனி), சிவமதி(சுவிஸ்), தனுஷா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஈசன் கஜனா(லண்டன்), றஜீப் (ஜேர்மனி), கோபிரமணன், ஜீவநந்தினி (கனடா), சத்தியரமணன் அஜனிறா (கனடா), ஜெனிற்றன், ஜெனிற்றா, மொகன், டெனிலா (ஜேர்மனி), றஜீத்தா (லண்டன்), சுரேன் (ஜேர்மனி), சகானா (சுவிஸ்), கெவின் (ஜேர்மனி), சர்மி (சுவிஸ்), லவுறா(ஜேர்மனி), கோகிலறமணன்(கனடா), சர்வின் (சுவிஸ்), சிந்துஜா, சந்தியா, சச்சின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் சஜேய், சஜீத்தா, சஜிகா, யஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

**076 413 2497/ 021 490 5197**

தோற்றம்
09 . 03 . 1941



மறைவு
29 . 04 . 2017

### அல்பிரட் பிரான்சிஸ் ஜெனம்

யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும், 425, நாவலர்வீதியை(கலைச்சோலை)வதிவிடமாகவும்தற்போதுகொழும்பை வசிப்பிடமாகவும்கொண்ட அல்பிரட் பிரான்சிஸ் ஜெனம் (முன்னாள், லங்கா சம சமாய கூட்டுறவுச் சங்கச் செய லாளரும், முன்னாள் திருமறைக் கலாமன்றச் செயலாளரும்) நேற்று (29.04.2017) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிரட் - மரியம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - ராசம்மா தம்பதிகளின் மருமகனும், மேரி வயலட் ராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வினித்தா யேசுரெட்ணம் ( உப அதிபர், வத்தளை அன்னாள் கல்லூரி, தமிழ் பிரிவு) மற்றும் விக்னராஜா (விக்கி - கனடா) பாசமிகு தகப்பனாரும், யேசுரெட்ணம் (அதிபர் - வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி, தமிழ்ப்பிரிவு), யூஜினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரான்சிஸ்காவின் மைத்துனரும், காலஞ்சென்ற யோக்கீம்பிள்ளை போலின் சகலனும், சாந்தி, ராஜன் (லண்டன்), ஜெயந்தி, வசந்தி, அன்ரன் கமிலஸ், காலஞ்சென்ற எட்மன் ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும், சாரங்கி, கலாஞ்சலி, ஹரிணி, கீர்த் ஆகாஷ் (கனடா), எட்மன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (01.05.2017) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இறுதி ஆராதனைக்காக வத்தளை புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வத்தளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

795(425), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அன்ரன் கமிலஸ்

(ajn cs/29371)(11.17)



### திருமதி விறிசிற்றம்மா அந்தோனிப்பிள்ளை

இளவாலை பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், ஊர்காவற்றுறை புனித மரியாள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விறிசிற்றம்மா அந்தோனிப்பிள்ளை நேற்று (29.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பத்திநாதன்(G.S), அல்வீனம்மா, அருட்சகோதரி ஞானசீலி (ஜெயா) மட்டக்களப்பு கல்லடி, அருட்சகோதரி மேரிமாகிறேற் (யோகம்) மட்டக்களப்பு கல்லடி, சிந்தாத்துரை (பொது முகாமையாளர், ப.தெ.வ.அ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை), மேரிடொறின் (பொதுமுகாமையாளர், ஊர்.ப.நோ.கூ.சங்கம்), ஜெபநேசன் (போதகர், தேவசபை, மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயும், சந்திராதேவி, யோகநாதன், தேவராசா, தவரஞ்சிதம், சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், தேனுகா, தேவதர்சன், தேவதயாளன், டிலோஜன், றெஜிராஜேஸ்வரன், ஜொனிஜான்சன், இன்பென்ரா எலஸ்ற், இப்சன்பினே, கெயின்ஸ், றொசின்ரன், டிலக்சன், ஜெனிபர்சாரா, ஜொனத்தன் ஸ்ரீவ், ஜொயல் செரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.05.2017) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனிதமரியாள் வீதி,
ஊர்காவற்றுறை.

தகவல் :
குடும்பத்தினர்.

(ஜே.8372) (13)

**077 514 1168**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய இராஜகோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை



### ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



குப்பிளான் வீரமனை பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் கன்னிமார் கௌரி அம்பிகைக்கு இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெற்று அவ்விழாவை நிதர்சனமாக்குவதற்கும் 05.09.2001 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை பிரதமகுருவாக இருந்து செய்து அம்பிகையின் ஆலயம் வளர்ச்சி அடைந்து கொண்டு வந்து மீண்டும் 08.07.2012 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை பிரதமகுருவாக இருந்து செய்த பாக்கியம் கிடைத்தது. மேலும் இவ் ஆலயத்தில் 2015 ஆம் ஆண்டில் புதிய சித்திர தேரில் அம்பிகை பவனி வந்தார். 2016 ஆம் ஆண்டு புதிய சப்பைரதத்தில் எழுந்தருளி அருளாட்சி கொடுத்தார். இன்று 30.04.2017 புதிய இராஜ கோபுரத்திற்கு மகா கும்பாபிஷேகம் செய்யும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இத் திருப்பணிகளிற்கு வெளிநாடுகளில் வசிக்கும் அடியவர்களும் குப்பிளான் வாழ் அடியவர்களும் மற்றும் அயலூர் அடியவர்களும் உதவிகள் புரிந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் எல்லோருக்கும் அம்பிகையின் திருவருளும் குருவருளும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து கொள்கிறேன்.

சுபமஸ்து

**ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.சி.கிருஷ்ணசாமிக்குருக்கள்.**

### குப்பிளான் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயம்

இன்று 30.04.2017 எமது ஆலய கோபுர கும்பாபிஷேக பெருவிழாவில் பெரு மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் எமது அடியவர்கள் உள்ளம் பூரிப்படைகின்றது. இதன் வரலாறும் வளர்ச்சியும் சிறப்பம்சங்களாக நோக்கத்தக்கது. 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை சித்தரிக்கும் ஆலயத்தின் படிமுறை வளர்ச்சியானது 2010ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக மலரில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதற்குப் பின்னர் காணப்படுகின்ற பல்வேறு பரிணாமங்களைக் கொண்டு தேரோட்டம் முடியுமுன்னே சப்பைரதம், மூன்று தளவாசல் கோபுரம், ஷப்த கன்னிகள் எனப் பல்வேறு வளர்ச்சிகளை கண்டுள்ளதுடன் வறுமைக்கோட்டின் கீழ் காணப்படும் மாணவர்களுக்கும் மாற்று வலுவுடையவர்கள் என்போருக்கும் மாதாந்த உதவு தொகையை வழங்கும் சிறப்பம்சங்கள் இங்கு நோக்கத்தக்கது. கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பதோடு இக்கோபுரத்தை சோதியே சுடரே, சூழொலி விளக்கே, தூண்டு சுடர் அணையாத சோதியே, கற்பனை கடந்த சோதியே எனப் புராணங்கள், திருமுறைகள் போற்றுகின்றன.

இந்தவகையில் இக்கோபுர பெருவிழாவானது எமது குப்பிளான் வாழ் உள்நாடு, வெளிநாடு சார்ந்த அனைத்து அடியவர்கள் உள்ளத்திலும் எழுந்த பக்தி அலையின் ஒளி வீச்சே மூலகாரணமாகும். இதற்கெல்லாம் கருணைக் கடல் கன்னிமா தாயின் பெரும் கருணையேயாகும்.

**ஆலய நிர்வாக சபை.**

### வாழ்த்துச்செய்தி



சிவபூமி எனச்சித்தர்களால் சிறப்பிக்கப்படும் ஈழ மணித்திருநாட்டில் விளங்கும் வலிகாமம் தெற்கு பிரதேசம் சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நிறைவாகக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேச பண்பாட்டின் நிலைக்களமாக ஆலயங்கள் விளங்குகின்றன. எமது பிரிவிற்குட்பட்ட குப்பிளான் கிராமமும் இத்தகைய சிறப்பு நிறைந்த செம்மண் கிராமமாகும். இயற்கை எழில் நிறைந்த இவ்வழகிய ஊரில் இந்து ஆலயங்களுக்குக் குறைவில்லை. இவற்றுள் நடுநாயகமாக விளங்குகின்ற வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலயம் வரலாற்றுச் சிறப்புடையது. இவ்வாலயத் தில் இன்று 2017.04.30 இல் நடைபெறுகின்ற பஞ்சகுண்டபக்ஷ நூதன இராஜகோபுர மகாகும்பாபிஷேக கிரியை சிறப்பானது. இந்நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகுந்த மனநிறைவடைகின்றேன்.

கற்பனை கடந்த சோதியாகக் கருணையே உருவமாக எங்கும் நிறைந்து விளங்குகின்ற இறைவனின் திருவருளைச் சாதாரண மனிதனும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக எம் முன்னோர் ஆலயங்களை அமைத்தனர். அவ்வாலயத்தின் தூல லிங்கமாக வானளாவிய கோபுரத்தை அமைத்தனர். ஆலயத்திற்கு வழிபாட்டிற்குச் செல்கின்ற அடியவனின் முதற்தரிசனமாக திருக்கோபுரம் அமைகின்றது. இதனை "கோலக் கோபுர கோகரணஞ்சூழாக் கால்க ளாற்பயனென் " என அப்பர் சுவாமிகள் திருவங்கமாலையில் குறிப்பிடுகின்றார். உடலும் உள்ளமும் தூய்மை பெற்று பிறவிப்பயனை அடை வதற்கு இத்தகைய ஆலய வழிபாடு உதவுகின்றது எனலாம். முன்னைய காலங்களில் ஆலயங்கள் சமூக நிறுவனங்களாகச் செயற்பட்டு தனிமனித சமூக ஆரோக்கியத்தின் அத்திவாரமாக இருந்தன. அத்தகைய நிலை மீண்டும் உருவாக வேண்டும். ஆலய நிர்வாகிகள் ஆன் மீகப் பணிகளுடன் அறப்பணிகளையஸம் ஆற்ற வேண்டும் என்பது இன்றைய சமூகத்தின் எதிர்பார்ப்பாகும். குப்பிளான் கிராம மக்களின் கூட்டு முயற்சியாக கூட்டுப் பொறுப்பாக நடைபெறும் கன்னிமார் கௌரி யம்பாளின் இராஜகோபுர மகா கும்பாபிஷேகக் கிரியைகள் எல்லாம் பூரணமாக நிறைவேறி அம்பாளின் அருட்கடாட்சம் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துவதுடன் இவ்வான் மீகப்பணியில் ஈடுபட்ட குப்பிளான் வாழ் புலம்பெயர் அடியவர்கள், சிவாச் சாரியார்கள், பரிபாலனசபையினர், வழிபடுவோர் அனைவரையும் பாராட்டுவதோடு அவர்களின் பணிகள் மென்மேலும் வளர வேண்டும் என அம்பாளின் திருப்பாதங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

*" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "*

**திருமதி வ.மதுமதி**
**பிரதேசசெயலாளர், வலி.தெற்கு.**

### வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும், தமிழும், கலை களும் சிறப்பாகப் பேணப்பட்டு வரும் கிராமமாக குப்பிளான் கிராமம் மிளிர்கின்றது. கோயில் கிராமம் என்று கூறக்கூடிய வகையில் இச்சிறிய கிராமத்தில் பத்துக்கு மேற்பட்ட சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. குப்பிளான் தெற்கில் அருள் ஒளி வீசும் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயம் உள்ளது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு மிகச் சிறிய ஆலயமாக இருந்த கன்னிமார் அம்பாள் ஆலயம் இன்று அபரிமிதமான வளர்ச்சியை அடைந் துள்ளது. ஆலயச் சூழலில் வாழ்ந்த பலர் இன்று உலகின் பல நாடு களிலும் குடியேறி அம்பாளின் அருட்பார்வையினால் மிகச் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தாங்கள் சிறிய வயதில் அன்போடும் ஆராமையோடும் வணங்கிய கன்னிமார் அம்பாளை அகத்திலே இருத்தி வழிபட்டு வருகின்றார்கள். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக அம் பாளுடைய ஆலயத்தில் சித்திரைப் பறுவத்தை தீர்த்தமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இங்கு பரிவார தெய்வங்களுடன் ஷப்த கன்னிகையர களுக்கும் தனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அன்னதான மண்டபம், சித்திரத் தேர், சப்பைரதம், தீர்த்தத்தொட்டி போன்ற அனைத் தையும் அடியார்கள் ஆலயத்துக்கு அமைத்துக் கொடுத்துள்ளார்கள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற வாக்கினை மனதில் கொண்ட அம்பாள் அடியவர்களின் கூட்டுமுயற்சியினால் மூன்று தளங்களை உடைய இராஜ கோபுரம் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டு இன்று கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஆலயத்துக்கு வரும் அடியார்கள் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கிவிட்டு மன ஒருமைப்பாட்டுடன் ஆலயத்துக்கு உள்ளே சென்று அம்பாளைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசை வகுப்பு, அறநெறிப் பாடசாலை என்பவற்றின் ஊடாக சிறுவர்களிடமும் பொதுமக்களிடமும் ஆன்மீக உணர்வை ஏற்படுத்தும் பல நிகழ்வுகள் ஆலயத்தில் இடம்பெற்று வருகின்றன.

பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கேதார கௌரி விரதத்தினை ஒரு தவமாகவே நினைந்து இவ் ஆலயத்திலே அனுஷ்டித்து அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்று வருகின்றார்கள். தாய்த் தெய்வமாகிய கன்னிமார் அம்பாள் தன்னை நாடிவரும் அடியவர்களின் துன்ப துயரங்களை எல்லாம் நீக்கித் தாயுள்ளத்துடன் அவர்களுக்குக் கருணை மழையைப் பொழிந்து வருகின்றாள். கோபுர கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நாளை முதல் நடைபெற இருக்கின்ற மகோற்சவப் பெருவிழாவையும் தரிசித்து அடியார்கள் அனைவரும் அஷ்டலட்சுமி கடாட்சத்தைப் பெற்று வாழ அம்பாளின் திருவருள் துணை பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**சிவத்தமிழ் வித்தகர்**
**சிவ.மகாலிங்கம்.**


# நொதேண் சென்றல் வைத்தியசாலை

**யாழ்ப்பாணத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரே ஒரு வைத்தியசாலை**

### லப்பராஸ்கோபி (Laparoscopy) என்றால் என்ன?

வயிற்று உட்பகுதியுறுப்புக்களை வயிற்றில் சிறிய துளைகளிட்டு மெல்லிய குழாயினை உட்செலுத்தி பரிசோதிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.

**வழமையான சத்திரசிகிச்சையிலிருந்து லாப்ரோஸ்கோபி எவ்வாறு வேறுபடுகின்றது ?**

- பெரிய வெட்டுகாயங்கள் வராது.
- சத்திர சிகிச்சையின் பின்னர் விரைவில் இயல்பு நிலைக்குச் செல்ல முடியும்.
- கிருமித் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் மிகக் குறைவு.
- நீண்ட நாள்களாக வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை.

பின்வரும் உடற்பரிசோதனைகளுடன் சத்திர சிகிச்சைகளையும் இத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி செய்து கொள்ளலாம்.

- Appendicectomy
- Diagnostic laparoscopy
- Cholecystectomy
- Hernia
- Hydrocele
- Paraumblical hernia
- Inguinal hernia
- Endometriosis
- Laparoscopic Radical Trachelectomy (LRT)
- Ovarian cyst



### வெரிகோஸ் வெயின் (Varicose vein) பிரச்சினையில் இருந்து உடனடித் தீர்வு !

- உங்களுக்கு அவ்வப்போது கால் பகுதியில் வலியும், வேதனையும், குடைச்சல் போன்ற உணர் வும் ஏற்படுகின்றதா ?
- இதனை நீங்கள் அலட்சியப்படுத்துபவரா ?
- உங்களுக்கு இவ்வறிகுறிகள் இருப்பின் அது வெரிக்கோஸ் வெயின் (**Varicose vein**) என்ற நோய்நிலையாகவும் இருக்கலாம்.




வெரிக்கோஸ் வெயின் பிரச்சினையிலிருந்து உடனடித் தீர்வு !

**நொதேண் சென்றல் வைத்தியசாலையில் இப்பொழுது அதி நவீன லேசர் தொழில்நுட்பம் !**

வெட்டுக்காயங்களின்றி, குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதுடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை.

### நொதேண் சென்றல் கண் சிகிச்சை மையம்
### Northern Central Hospital EYE CARE

- வடக்கின் முன்னணி கண் சத்திரசிகிச்சை வல்லுனர்களின் ஆலோசனைகள்.
- இலவச கண் பரிசோதனைகள் (Vision testing)
- பார்வைச்சக்திக்குரிய சோதனை (Optical biometry)
- காலதாமதமின்றிய சத்திரசிகிச்சை முற் பதிவுகள்.
- Cataract சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர்தர லென்ஸ் மற்றும் அனைத்து பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே இடம்.
- நவீன லேசர் முறையில் மிகக் குறுகிய நேர சத்திரசிகிச்சை.
- சத்திரசிகிச்சையின் பின் வைத்தியரின் ஆலோசனை தவிர விடுதியில் தங்கியிருக் கத் தேவையில்லை.





**Northern Central Hospital**
**342, Palaly Road, Thirunelvely, Jaffna.**
**T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677**
**e-mail: nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com**

(CS 29478) (14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவில் மேற்கு காளியாமூலை பேச்சி முத்துமாரி அம்மன் ஆலய பொதுச்சபைக்கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 13.05.2017 சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து அடியார்களாகிய உறுப்பினர்கள் தங்களது வருடாந்த சந்தாப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் இதனை அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்வண்ணம் அன்பாக அறியத்தருகின்றேன்.

சி. சுந்தரலிங்கம் தலைவர்.
நுணாவில் மேற்கு. காளியாமூலை பேச்சி முத்துமாரிஅம்மன் ஆலய பரிபாலனசபை.

நுணாவில்,
சாவகச்சேரி.

## Jobdubai 2017 வேலைவாய்ப்பு

Driver [Srilanka License]
Hotel Work
Airport Work
Security
Car Service
Restaurant
Super Market

உடனடியாக பணியாளர்கள் தேவை
உணவு, தங்குமிடம், போக்குவரத்து இலவசம் மற்றும் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப வேலைகள் பெற்றுத் தரப்படும்.

உடனடி தொடர்புகளுக்கு,
இலங்கை - 076 400 9649, 075 425 1849
டுபாய் - 0097 158 265 1043, 0097 155 254 8955
Mail ID : Jobdubai301@gmail.com
Web ID : www. Jobdubai.com

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி **சோதிறூபன் சுபதர்சினி** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு .நாகமுத்து சோமலிங்கம்**

அவர்கள் 25.04.2017 .இறைபதமடைந்துவிட்டார். அவரது மறைவை யொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப்பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா /வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை AJA CS 3608

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
03.07.1954
மறைவு
31.03.2017

அமரர் **புவனேஸ்வரி தனபாலசிங்கம்**

அன்பின் உருவான எங்கள்
அம்மாவே நாள்கள் பல ஆகியும்
ஆறவில்லை எம் இதயம்
உருவம் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் எங்களுடன் இரண்டறக்
கலந்திருக்கும் உங்கள் காலடிக்கு
எங்கள் கண்ணீர் பூக்கள்

கடந்த 31.03.2017 இறைவனடி சேர்ந்த எமது குடும்பதலைவியின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 61, பிறவுண் வீதி,
நீராவியடி யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் அன்ரனி யோசப் (அன்ரன்)

( உரிமையாளர், அனுசியா நகைப்பூங்கா)



தோற்றம் 06.06.1953
மறைவு 29.04.2017

மன்னார் விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும், முருகமூர்த்தி கோவில் நவாலி கிழக்கு, மானிப் பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் அன்ரனி யோசப் (29.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான இரத்தினசிங்கம் - மேரிபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும் அமுத மலரின் (ரதி) அன்புக் கணவரும் ஜெனி, ஜடா, ஜெயி னோல்ட், அனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் S.E. ஜெனிவீதாஸ் (பொறியியலாளர் மொறட்டுவ பல்கலைக் கழகம்) வசந்தராஜன் (UK), நிதீஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜமிசன், மெலிசா, வருண், வர்சா, அனக்சியா, அக்சிகா ஆகியோரின் பேரனும் றொபேட் யோசப், மேரி சாந்தினி, சாள்ஸ் யோசப் (ராஜன்), மேரி சறோயினி (சறோ), யோகராயன் யோசப் (யோகன்), யேசுராயன் யோசப் (ரஞ்சன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.05.2017) திங்கள் பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப. 3.30 மணிக்கு நவாலி சென்பீற்றேஸ் ஆலயத்தில் ஆராதனை நடைபெற்று அவரது பூதவுடல் நவாலி சென்பீற்றேஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயில் வீதி
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.
071 4900 212

## தேவை

சிற்றுண்டி தயாரிக்க தெரிந்தவர்
உடன் தேவை.
தொடர்பு.0771751495
AJACS3605

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய
அனுபவமுள்ள படித்த பெண் பிள்ளைகள்
தேவை.
தொடர்பு - 077 159 5826

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (சாமியார்)

(யாழ்ப்பாணம் பழைய வர்த்தக சங்க தலைவரும், பிரபல பாக்கு வியாபாரியும், சிவதொண்டனும்)



மண்ணில் 12.11.1928
விண்ணில் 29.04.2017

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் திருநாவுக்கரசு நேற்று (29.04.2017) சனிக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்
சாரங்கா நகை மாடம்,
யாழ்ப்பணாம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
07 . 02 . 1945



இறப்பு
27 . 04 . 2017

### திருமதி கமலாதேவி இராசசிங்கம்

யாழ்ப்பாணம், இல.128, அம்பலவாணர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி இராசசிங்கம் 27.04.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வே. கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி -சின்னம்மா (சோமு) தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி இராசசிங்கத்தின்அன்பு மனைவியும் தர்சிகாவின் அன்புத் தாயும் ரகுராமின் அன்புமாமியும்லொசியின்பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கமலராஜ் மற்றும் விமலாதேவி (பிரான்ஸ்), அமிர்தராஜா (அமெரிக்கா), உருத்திரா (அமெரிக்கா), பாஸ்கரன்(அமெரிக்கா), கலாரஞ்சினி, நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2017) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 128, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் குகமூர்த்தி



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம், குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குகமூர்த்தி (29.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் டில்லிமலரின் (ரதி) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் குகானந்தமூர்த்தி, குகதாசன், குகதீஸ்வரன் காலஞ்சென்ற குகனேசன் ஆகி யோரின் அன்புத்தந்தையும் கலாவாணி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும் கணேசமூர்த்தி, கமலாம்பிகை, யோகாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் அனோஜ், குழலிசை, ஜோனந்தன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
077 603 2422, 077 198 3961
தகவல்:
குடும்பத்தினர்

## IPS

இலவச ஆங்கில, கணினிவகுப்புக்கள் - பிரிவு VI

ஆரம்பம் - 06.05.2017
சனிக்கிழமை காலை 9 மணி

மாணவர்களுக்கான வசதிகள்
1) குறுகிய காலம் - 3 மாதங்கள்
02) அடிப்படையிலிருந்து
03) வெளிநாடு செல்வோர்க்கு தனிப்பிரிவு
04) அரச அங்கீகாரமுடைய சான்றிதழ்
05) Diploma பிரிவுகள்

IPS
Thirunelvely
(பல்கலைக்கழகத்திற்கு அருகில்).
Hot line - 076 685 2529
Email : studiesips@gmail.com

## காணி விற்பனைக்கு

வசாவிளான் கிழக்கு பிரிவில் கலப்பனாவுடை என்னும் பெயருடைய கற்காணி 26 பரப்பு விற்பனைக்குண்டு. போக்குவரத்து, மின்சார வசதிகள் உண்டு. 1 பரப்பு 75,000 ரூபா
தொடர்பு - 071 856 2098

## கார் விற்பனைக்கு

K.F. XXXX மாருதி சுசுகி அல்ரோ AC LXI கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு.0767299261
3614

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் 04 அறைகள் வீடு. ஒன்பது பரப்பில் உடனடி விற்பனைக்குண்டு. வியாபாரம் மற்றும் வசிப்பிடத்திற்கேற்ற சிறந்த சூழல். விலை பேசித்தீர்மானிக்கலாம்.
077 340 4101
c29387

## தேவை

கொக்குவில் மேற்கு,கொக்குவில் .அலுவலகமாகக் கொண்டதும் கட்டட நிர்மாணப்பணி களை மேற்கொண்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கு கணக்கியல் உதவியாளர்(Account clerk) தேவை. க.பொ.த சா/த / க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறை சார்ந்தவர்கள் விரும்பத் தக்கது.
0773614638,0763165730 AJA003616

## Mobile Phone Repairing Course



Smart & All Mobile Phones
Hardware , Software and unlocking

12th Batch start on 06.05.2017
Weekend Batches

- செயல்முறையுடன் கூடிய வகுப்புக்கள்.
- மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்.
- குறைந்த செலவு.... நிறைந்த பயன்.....

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## பணிநிலை வேண்டுகை

- முகாமையாளர்கள் (அரச ஓய்வுநிலையாளர்கள்)
- கணக்காளர் (பெண்)
- வரவேற்பாளர்கள் (பெண்)
- அலுவலக உதவியாளர்கள் (ஆண்)
- கணினி இயக்குனர்கள் (பெண்) (CorelDRAW, Photoshop)
- பெனர் மெசின் இயக்குனர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும் தமது சுயவிபரக்கோவையுடன் 02,03-05-2017 செவ்வாய், புதன் கிழமைகளில் நேரில் வரவும்.

திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

ஷாம்பவி பதிப்பகம்,
267, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கிருபா லேணர்ஸ் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைத் தேவைகளையே நிறைவேற்ற முடியாத நிலையில் குடும்பத்தலைவிகள்

## வவுனியா மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, ஏப். 30
"வவுனியா மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்ய முடியாத நிலையில் வாழ்கின்றார்கள். அவர்களில் பலர் போரால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு உதவி வழங்க முன்வருவோர் மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டலுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் நேரடியாகவே உங்கள் உதவிகளை வழங்குங்கள்"
இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலாளர் ரோஹண புஸ்ப குமார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் போரால் வாழ்க்கைத் துணைவரை இழந்த நிலையில் 994 பெண்களும் ஏனைய வழிகளால் தமது வாழ்க்கைத் துணையை இழந்த நிலையில் 4 ஆயிரத்து 985 பெண்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 979 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதார ரீதியாக தொழில் வாய்ப்புக்களின்றியும் வாழ்கின்றனர். வவுனியா நகரப் பகுதி பிரதேச செயலக பிரிவில் அதிகூடிய பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.
பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கான தொழில் வாய்ப்புக்கள் போதியளவில் இல்லாதுவிடினும் முடிந்தவரையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. எனினும் இவர்களில் பலர் தமது குடும்ப அங்கத்தவர்களின் கல்வி, மருத்துவம், உணவு, உடை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளையே நிறைவேற்றிக் கொடுக்க முடியாமல் பெரும் அவல நிலைக்கும் மற்றும் மன உளைச்சலுக்கும் உள்ளாகி வருகின்றனர். அவர்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றோம்.
இவ்வாறான குடும்பங்களுக்கு சில நிறுவனங்களும் கொடை வள்ளல்களும் உதவுகின்றனர். அவ்வாறு உதவி புரிபவர்களும் எம்மால் உதவிய குடும்பங்களுக்கே உதவும் நிலைமையும் கண்டறியப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்க விரும்புவோர் வவுனியா மாவட்டச் செயலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும். எமது செயலக உத்தியோகத்தர்களின் வழிகாட்டலுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமே நேரடியாக உதவித் திட்டங்களை கையளிக்க முடியும். அதனால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் உதவும் வாய்ப்பு ஏற்படும் என்றார். (வ -101)

# மாங்குளத்தில் மேதினக் கூட்டம்

வவுனியா, ஏப். 30
முல்லைத்தீவு, மாங்குளத்தில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் மேதினக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.
மங்குளம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு முன்பாக பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3 மணிக்கு நிறைவடைந்து அங்கு ஒருங்கிணைப்பாளர் நா.தேவகிருஸ்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினக் கூட்டம் வவுனியாவில் நாளை நடைபெறவுள்ளது. மே தின ஊர்வலம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பஜார் வீதியூடாக நகர சபை மண்டபத்தை வந்தடைந்து, அங்கு கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ந. பிரதீபன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# 70ஆவது நாளில்

## அரசோ பாராமுகம்; உறவுகளோ தெருவில்



கிளிநொச்சி, ஏப்.30
அரசு பாராமுகமாக இருப்பதால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுக்கும் தொடர் போராட்டம் வடக்கு - கிழக்கில் தொடர்கின்றன.
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய கவனவீர்ப்புப் போராட்டம் இன்று 70ஆவது நாளாகவும் தொடரவுள்ளது.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி இரவு பகலாக வடக்கில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடர் போராட்டங்கள் கிளிநொச்சியில் 69ஆவது நாளாகவும், வவுனியாவில் 65ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 54ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 47ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 57ஆவது நாளாகவும் நேற்றுத்தொடர்ந்தன. (வ-21,35)

> கடத்தப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி இரவு பகலாக வடக்கில் போராட் டங்கள். இடம்பெற்று வருகின்றன.

# சீரான குடிதண்ணீர் விநியோகத்துக்கு உதவிகள்வேண்டும்

## மாந்தை கிழக்குப் பிரதேச சபை பொது அமைப்புக்களிடம் கோரிக்கை

மன்னார், ஏப். 30
"மன்னார், மாந்தை கிழக்குப் பிரதேசம் கடும் வறட்சியை எதிர்கொண்டுள்ளது. அதனால் மக்களுக்குச் சீரான குடிதண்ணீர் விநியோகத்தை முன்னெடுக்க பிரதேச சபைக்கு 20 கொள்கலன்கள் மற்றும் 25 கொள்கலன் தாங்கிகள் தேவையாக உள்ளன. இதனை பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கி உதவ வேண்டும்"
இவ்வாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பாஸ்கரமுர்த்தி சிவபாலராஜா கேட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் கடும் வறட்சி நிலைகாணப்படுகிறது. இதனால் கிராமங்களில் உள்ள நீர் நிலைகள் வற்றி வருவதால், பொது மக்களின் குடிதண்ணீர் தேவைகளை நிறைவு செய்யும் கிணறுகள், நீர் வழங்கல் அதிகார சபையால் குடிதண்ணீர் விநியோ கத்துக்காகப் பயன்படுத்தும் கிணற்று நீரும் வற்றிவருகின்றன. இதனால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.
மக்களின் குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும் சிரமம் பல கிராமங்களில் ஏற்பட்டுள்ளது. எமது பிரதேச சபையின் மூலம் குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் எமது சபையின் பயன்பாட்டுக்கு உழவு இயந்திரங்களுடன் கூடிய 2 பவுசர் வண்டிகளை வழங்கி உதவியதுடன் ஒரு தொகுதி கொள்கலன்களையும் வழங்கியுள்ளார்.
இவற்றின் மூலம் எமக்கு பவுசர் வண்டிகளின் பற்றாக்குறை நிறைவு செய்யப்பட்டது. பாலி நகர், அம்பாள்புரம், பாண்டியன் குளம் 50 வீட்டுத்திட்டம் போன்ற கிராமங்களில் குடிதண்ணீர் தேவையென பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைத்த 350 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம் தேவையாயின் கோரிக்கைக் கடிதத்தைப் பிரதேச சபையில் கையளிப்பதன் மூலம் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (வ-101)

# மேதினக் கூட்டங்களுக்கு 7,600 பொலிஸார் கடமையில்

கொழும்பு, ஏப். 30
நாளை நடைபெறவுள்ள மே தினக் கூட்டங்களுக்கும் பேரணிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்காக 7 ஆயிரத்து 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
கொழும்பில் 4 ஆயிரத்து 100 பேரும், கண்டியில் 3 ஆயிரத்து 500 பேரும் பணியில் அமர்த்தப்படவுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக நாட்டின் ஏனைய பாகங்களில் நடக்கவுள்ள அரசியல் கட்சிப் பேரணிகளுக்கும் கூட்டங்களுக்கும் பாதுகாப்பு வழங்கவும் பொலி ஸார்களமிறக்கப்படவுள்ளனர் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (வ-5)

# எமது மண்ணைச் சேர்ந்தோரின் முதலீடுகள் வடக்குக்கு வேண்டும்

## யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் வலியுறுத்து

"வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்ட முதலீட்டாளர்கள் கால் பதிப்பதற்கு முன்னர் எமது பிரதேசத்திலுள்ள செல்வந்தர்கள் முதலீடுகளைச் செய்ய வேண்டும்"
இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம், கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் புதிதாக அமைக்கபட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"போருக்குப் பின்னர் பொருளாதாரத்தில் நாம் படிப்படியாக முன்னேறி வருகின்றோம். எம்மிடத்தில் உள்ள பணம் படைத்தவர்கள்- எமது முதலீட்டாளர்கள் வடக்கில் இன்னமும் அதிகமாக முதலீடுகளைச் செய்து தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
வெளிமாவட்டத்தில் இருந்து முதலீட்டாளர்கள் வந்து முதலீடு செய்ய முன்னர் எமது முதலீட்டாளர்கள் தொழில்களை - தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். எம்மவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து செயற்பட்டால் எமது [illegible] வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும்" என்று வணிகர் கழகத் தலைவர் மேலும் தெரிவித்தார்.




"இன்று மிகப்பெரிய சவாலாக இருப்பது இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினையாகும். எமது அலுவலகத்தில் வேலை வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இளையோர்கள் எம்மிடம் வருவார்கள். அவர்களுடைய ஏக்கம் எமக்குப் புரிகின்றது.
எரிபொருள், அலைபேசிப் பாவனை, மதுசாராயம் ஆகிய மூன்று வழிகளிலும் எமது பொருளாதாரம் வெளியேறுகின்றது. ஆகவே எமது மக்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு எமது முதலீட்டாளர்கள் முன்வரவேண்டும்" என்று வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார். (வ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை விபத்தில் இருவர் படுகாயம்

வவுனியா, ஏப். 30
வவுனியா பட்டானிச்சூர் பாடசாலைக்கு அருகே மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது.
"வவுனியாவிலிருந்து மன்னார் வீதியூடாக பயணித்த கனரக வாகனத்தை பட்டானிச்சூர் பாடசாலைக்கு அருகே அதே பாதையில் பயணித்த மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்ட போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் கனரக வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டனர். (வ-21)




## அடிப்படை வசதிகள் வழங்கப்படாமையால்
# சின்னடம்பன் வீடுகளில் குடியமர மக்கள் மறுப்பு




வவுனியா, ஏப்.30
"வவுனியா, நெடுங்கேணி சின்னடம்பன் பகுதியில் லைக்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழமுடியாது. அங்கு அடிப்படை வசதிகள் செய்து வழங்கப்படவில்லை. புளியங்குளத்தில் அமைக்கப்பட்ட வீடுகளைத் தந்தால் அங்கு சென்று வாழ்வோம்"
இவ்வாறு பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தை சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
வழங்கப்பட்ட வீடுகளில் சென்று மக்கள் அமர்ந்ததால் தான், அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று வவுனியா மாவட்ட செயலகம் தெரிவித்தது.
வவுனியா மாவட்டத்தில் காணி, வீடுகள் அற்ற மக்களுக்கு வழங்குவதற்கு என லைக்கா நிறுவனத்தால் வவுனியா புளியங்குளம் பரசங்குளம் பகுதியில் 67 வீடுகளும் நெடுங்கேணி சின்னடம்பன் பகுதியில் 83 வீடுகளும் அமைக்கப்பட்டன. அவற்றைலைக்காநிறுவனம் அண்மையில் மாவட்ட செயலகத்திடம் கையளித்தது.
பூந்தோட்டம்நலன்புரிநிலையத்தில் உள்ள 97 குடும்பங்கள் இந்த வீட்டுத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் குலுக்கல் முறையின் மூலம் இரு கிராமங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த வியாழக்கிழமை அந்த வீடுகளை உத்தியோக பூர்வமாக கையளிப்பதற்கு மாவட்ட செயலகம் அழைப்பு விடுத்திருந்தது. எனினும் சின்னடம்பன் பகுதியில் உள்ள வீடுகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தவர்கள் வீடுகளுக்கான சாவிகளைப் பெற்று கொள்ள மறுப்புத் தெரிவித்தனர்.
"சின்னடம்பன் பகுதியில் போக்குவரத்துக்கள், பாடசாலை, வைத்தியசாலை உட்பட அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப் படாமையால்தான் தாம் அங்கு குடியமர மறுப்பதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.
"வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவருமான கே. மஸ்தானிடம் இந்த விடயம் கொண்டு வரப்பட்டது. அது தொடர்பில் அவரால் ஆராயப்பட்டது. புளியங்குளத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை தந்தால் அங்கு சென்று குடியமரத் தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் தெரிவித்தனர். இந்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினரால் மாவட்ட செயலாளரிடம் தெரிவிக்கப் பட்டது. மாவட்ட செயலாளர் அதற்கு ஒப்புக்கொண்டார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தானின் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.
" நெடுங்கேணி, சின்னடம்பன் பகுதியில் மக்கள் சென்று குடியமர்ந்தால் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக் கப்படும். அதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டு ள்ளது. மக்கள் தங்களுடைய வீடுகளில் நின்மதியாக வாழ வேண்டும் என்பதற்காகவே தற்போதுஅமைக்கப்பட்டபுதிய வீடுகளுக்கு ஆயிரக்கணக்கானபணத்தைசெலவுசெய்து சாந்திசெய்துள்ளோம்" என்று மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-21)

# வடக்கில் பஸ் சேவைகளுக்கான இணைந்த நேர அட்டவணை விரைவில் வர்த்தமானியில்
## போக்குவரத்து அதிகார சபையின் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஏப். 30
வடக்கு மாகாணத்தில் தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகளுக்கு இடையே அறுபதுக்கு நாற்பது என்ற அடிப்படையில் இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.
அமைச்சு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 8ஆவது அமர்வு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் சபையின் கௌரவ உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் மான்னரிலுள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துகளுக்கான நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். பற்றிக் நிரஞ்சன் தலைமையில் மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டது. எந்தவிதத்தில் குறித்த விடயத்தை ஆராய்ந்து யோசனைகளை முன்வைப்பது தொடர்பாக அந்தக் குழுவுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.
வவுனியா மையப் பேருந்து நிலையம் மீள இயங்க வைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. வடக்கில் அறுபதுக்கு நாற்பது என்ற விகிதாசார அடிப்படையில் பேருந்து சேவைகளை வழங்குவதற்கான இணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டு, அதற்கான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
முச்சக்கரவண்டிகளை வடக்கு மாகாண வீதிப் பயணிகள் சேவை அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்வதற்கான ஒழுங்குவிதிகளை விரைவாக தயாரிக்குமாறு அதிகாரசபையின் தலைவருக்கு அமைச்சர் பா. டெனிஸ்வரன் பணிப்புரை வழங்கினார்.
இந்த அமர்வில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அதிகாரசபையின் தலைவர் ஏ.நிக்கொலஸ்ப்பிள்ளை, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கே.பிரபாகரமூர்த்தி, சட்டத்தரணி இ.கய ஸ்பெல்டானோ, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வி.வி.இந்திரஜித், உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடவடிக்கை இயக்குனர் பி.எம். இப்திகார், இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு பிராந்திய முகாமையாளர் உபாலி கிருபத்தொடுவ, வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளர் எம்.ரவீந்திரன் குரூஸ், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியம் தலைவர் சி.சிவபரன் ஆகியோர் கலந்துகொண்டனர் என்றுள்ளது. (வ-21)

# சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க வவுனியாவில் நடமாடும் சேவை
## 219 பேர் பயனடைந்தனர்



வவுனியா, ஏப். 30
வவுனியா பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடமாடும் சேவையில் 219 பேர் பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் ஆரம்பமான நடமாடும் சேவை மாலை 4 மணி வரை நடைபெற்றது. சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவப் பரிசோதனையில் 219 பேர் மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கான எழுத்துப்பரீட்சை வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# நாட்டின் மூவின மக்களுமே போரால் பாதிக்கப்பட்டனர்
## வடமாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் கூறுகிறார்

போரால் தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாணசபைஉறுப்பினர்ஜிரி லிங்கநாதன் தெரிவித்தார்.
வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கான அரச தலைவர் நடமாடும் சேவை காமினி மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களுக்கு உள்ள பல பிரச்சினைகள் சிங்கள மக்களுக்கும் உள்ளன என்பதை எமது சமூகத்தினர் மறந்துவிட்டனர். நான் சிங்களவர்களுக்கு எதிரானவன் அல்ல. கடந்த ஆண்டுகளில் வவுனியா மாவட்டச் செயலாளர் பந்துல ஹரிச்சந்திரவுக்கும் எனக்கும் முரண்பாடு ஏற்பட்டது. அந்த முரண்பாட்டின் பின்பு அவர் இடம்மாற்றம் பெற்று செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் தற்போது கடமையாற்றும் புதிய மாவட்டச் செயலர் றோகண புஷ்பகுமார வருகை தந்தார். இந்த விடயத்தில் வடக்கு மாகாண சபை பொறுப்புடன் செயற்பட்டது. நான் மயிளங்குளம் அலகல்ல, கல்குடா கிராம சிங்கள மக்களுக்கு பல உதவி புரிந்துள்ளேன். போர்க் காலத்தில் அவர்களுக்கு நான் பாதுகாப்பும் அளித்துள்ளேன் .
வவுனியா மாவட்டத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. அதே போல் வடக்கு மாகாண சபையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர் இல்லை என்றார்.
இந்த நடமாடும் சேவையில் 700க்கு மேற்பட்ட மக்கள் பயன்பெற்றனர். சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரங்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்கள், மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள் உள்ளிட்டவை பயனாளிகளுக்கு வழங்கப் பட்டன.
நடமாடும் சேவையில் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஹரிசன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, ஜெயதிலக, செ.மயூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-402)

# ஈபிஆர்எல்எப்பின் மேதின ஊர்வலம் வவுனியாவில்

வவுனியா, ஏப்.30
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் (ஈபிஆர்எல்எப்) மேதின ஊர்வலம் வவுனியா வீரபுரம் விளையாட்டு மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.
வீரபுரம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நாளை காலை 9 மணிக்கு மேதின ஊர்வலம் ஆரம்பமாகி வீரபுரம் விளையாட்டு மைதானத்தை அடைந்து அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், எனப் பலரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுக்கு மகிந்த அணி சவால்

முப்படைத் தளபதி பதவியை ஏற்று முடிந்தால் தங்களை அடக்கட்டாம்

கொழும்பு, ஏப்.30

"இலங்கையை ஆட்டிப் படைத்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கே எமது தலைவர் மகிந்த அஞ்சவில்லை. இந்த சரத் பொன்சேகாவுக்கா அவர் அஞ்சப் போகிறார். முடிந்தால்முப்படைத்தளபதிப்பதவியைஏற்று எம்மை அடக்கிக் காட்டுங்கள்"

இவ்வாறுபொன்சேகாவுக்குசவால்விடுகிறார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபயகுணவர்தன.

அமைச்சர் சரத் பொன்சேகா முப்படைகளின் தளபதியாக பதவி ஏற்கப் போவதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசடிஜனநாயகவிரோதஆட்சிக்குஎதிரான எமது நடவடிக்கைகளை எப்படியாவது முடக்கிவிடவேண்டும்என்றுஅரசுதிட்டமிட்டுள்ளது. அரசைக் கவிழ்க்கும் எமது போராட்டம் இவர்களுக்குப் பெரும் தலையிடியாகப் போய்விட்டது. இந்தப்போராட்டங்கள்இப்படியேதொடர்ந்தால்அரசுகவிழ்வதுநிச்சயம்என்பதைஆட்சியாளர்கள்தெளிவாகப்புரிந்துவைத்துள்ளனர். அண்மையதொழிற்சங்கப்போராட்டம்இந்த நாட்டை முடங்கச் செய்தது. அரசை உலுக்கியுள்ளது. எமதுபோராட்டம்இத்தோடுநின்றுவிடப்போவதில்லை. அரசைவீட்டுக்குஅனுப்பும் வரை தொடரும்.

இதனால் இராணுவத்தை இறக்கி எம்மை அடக்குவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. சரத் பொன்சேகாவின்தலைமையில்இந்தஜனநாயக விரோத செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. எமது தலைவர் மகிந்த இந்த நாட்டையேஆட்டுவித்தபிரபாகரனுக்கேபயப்படாதவர். இந்த சரத் பொன்சேகாவுக்காவா அவர் பயப்படப் போகிறார். நாம் பொன்சேகாவுக்கு சவால் விடுக்கின்றோம். முடிந்தால் அந்தப் பதவியை ஏற்று எம்மை அடக்கிக் காட்டட்டும். நாம் அதற்கு முகம் கொடுக்கத் தயார். அரசை கவிழ்க்கும் எமது போராட்டம் அன்றிலிருந்து தான் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் என்பதை ஆட்சியாளர்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன். என்றார். (வ-3)

# அமைச்சர் பொன்சேகா இராணுவ சேவைக்குள் மீண்டும் வரக்கூடாது

ஜேவிபி வலியுறுத்து

இராணுவத் தளபதியாகவோ அல்லது முப்படைகளின்தளபதியாகவோசரத்பொன்சேகா மீண்டும் ராணுவ சேவைக்கு வரக்கூடாது என்று ஜேவிபி வலியுறுத்துகிறது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்ததாவது:

நல்லாட்சி என்ற பெயரில் இந்த அரசு செய்து வரும்ஊழல், மோசடிகளுக்குஎதிராகஇன்று முழுநாடும்போராடிவருகின்றது. திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்குவழங்குவதற்குஎதிராகதொழிற்சங்கங்கள் நடத்திய வேலை நிறுத்தம் காரணமாக முழு நாடும் முடங்கியது.

இந்தவேலைநிறுத்தத்தைஅடுத்துஇனிவருகின்றஅனைத்துவேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும்முடக்குவதற்குஅரசு திட்டமிடுகின்றது. முப்படைகளையும்இறக்கி இந்த அமைதிவழிப் போராட்டங்களை நசுக்குவதற்கு அரசு சதி செய்வதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

அமைச்சராக இருக்கின்ற சரத் பொன்சேகாவை அந்தப் பதவியில் இருந்து விலக்கி, மீண்டும் இராணுவத் தளபதியாக அல்லது முப்படைகளின் தளபதியாக நியமித்து அவரிடமே இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படவுள்ளது. இது மகிந்த ஆட்சியில் இடம்பெற்றதை விடவும் மிக மோசமானதாகும்.

போரை வென்றவர் என்ற கௌரவத்துடன் பொன்சேகாஇதுவரையும்வாழ்ந்துவருகின்றார். நாட்டு மக்கள் அனைவரும் அவர் மீது மதிப்புவைத்துள்ளனர்-என்றார். (வ-3)

பாதுகாப்பைவிட

# வருமானத்திலும் உல்லாசத்திலுமே படையினருக்கு அதிக கரிசனை

சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



மன்னார், ஏப். 30

"வடக்கு கிழக்கில் படையினர் ஆக்கிரமித்துள்ள இடங்கள் இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தபகுதிகளாகக் காணப்படவில்லை. மாறாகபொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகவேகாணப்படுகின்றன. அவர்கள்நாட்டின்பாதுகாப்பைக்கவனிப்பதைவிடவருமானத்திலும் ஆடம்பரத்திலும் கரிசனை கொள்வதே அதிகம் என்றே எண்ணத்தோன்றுகின்றது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்இ.சாள்ஸ்நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் முள்ளிக்குளம் கடற்படைத் தளத்துக்காக ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகளை விடுவிப்பதுதொடர்பானகலந்துரையாடல்கடற்படைத்தளத்துக்குள்நேற்றுஇடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்து கொண்டார். கூட்டத்தின் நிறைவில் கருத்து தெரிவிக்கும் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிக்குளம் கடற்கடை முகாமுக்காக600ஏக்கர்காணிகடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. இதில் மக்களுடையது 300 ஏக்கர் காணி மட்டுமே. ஏனையவைஅரசகாணிகளே. 300 ஏக்கர் காணிகளையே மக்கள் கோருகின்றனர்.

அவற்றைவிடுவித்தால்எஞ்சிய 300 ஏக்கர் நிலப்பரப்பு கடற்படையினருக்கு போதுமான பிரதேசமாகவே காணப்படும்.

அரசகாணியைமேலதிகமாகப் பெற்று கடற்படைத்தளத்தை விரிவாக்கும் வசதிகள் கடற்படையினருக்கு உண்டு.

ஆனால்அவர்கள்தற்போதைய பிரதேசத்தை விடுவிக்க ஏன் மறுக்கின்றனர்? என்றே கேட்டுக்கொண்டோம்.

மக்களின் வாழ்விடங்களில் அவர்கள் நீண்டகாலமாக வாழ்ந்து அந்தப் பிரதேசத்தை வளமான பகுதிகளாக மாற்றியமைத்துள்ளனர். அங்கு பயன் தருமரங்கள், வாழ்விடவீடுகள் என்பனவற்றைஅமைத்துள்ளனர். இவ்வாறு காணப்படும் மக்களின் வீடுகளை உருமாற்றியே கடற்படையினர் தமது குடும்பங்களைஅழைத்துவந்து முகாமின் அருகில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறுஉல்லாசமாகவாழ்வதற்காகவே படையினர் எமது பகுதியில் தொடர்ந்தும் குடியிருக்க விரும்புவதாகவே நாம் சந்தேகிக்கின்றோம். இது முள்ளிக்குளத்தில் மட்டுமல்ல கேப்பாபிலவிலும் இதே நிலை தான். அது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் தளமாகக் காணப்படவில்லை. மாறாக ஆடம்பர விடுதிகளாகவே காணப்படுகின்றது. அதே போல் யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கிலும் உல்லாச விடுதிகளும்பண்ணைவருமானமும் கால்நடைவளர்ப்பிலும்படையினர் ஈடுபட்டுவருமானம்ஈட்டுவதோடு மயிலிட்டி துறை முகத்தைக்கூட தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அனுமதித்து அந்தப் பணத்தை கடற்படையினர் சுருட்டுகின்றனர்.

எனவே வடக்கு கிழக்கில் தற்போது நிலை கொண்டுள்ள படையினர் நாட்டின் பாதுகாப்பை கவனிப்பதைவிட வருமானத்தையும் ஆடம்பரத்திலும் கரிசனை கொள்வதே அதிகம்என்றேஎண்ணத்தோன்றுகின்றது. இந்த பழிச் சொல்லை சுமக்கும்படையினர்அவ்வாறு அன்றிதாம்பாதுகாப்புப்படையினர்தான் என நிரூபணம் செய்யவேண்டிய நிலையிலேயே உள்ளனர். அதனை வாய்மொழியில் அல்லாது செயலில் காண்பிக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பா கவுள்ளது என்றார். (வ-101)

# கேள்விக்குறியானநிலையிலேயே தற்கால விவசாயிகளின் வாழ்வு

வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் அவதானிப்பு

வவுனியா, ஏப். 30

"எங்களுடையவாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உணவைத்தருகின்றவிவசாயிகள்தற்போதையசூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களுடையவாழ்க்கை ஒருகேள்விக்குறியானநிலையிலேயே உள்ளது. தற்போதைய காலநிலை அவர்கள் மீதுபெரியளவில்சுமைகளை ஏற்படுத்தியுள்ளது"

இவ்வாறு வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் திரேஸ் குமார் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையால்ஏற்பாடுசெய்யப்பட்ட தமிழ் சிங்கள சித்திரைப் புதுவருட நிகழ்வு வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்கின்ற விவசாயிகளுக்குமகிழ்ச்சியானஒருநாளை வழங்குவதற்காக இன்று (நேற்று) இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். வவுனியா மாவட்டத்தில் இது இரண்டாவது நிகழ்வு. முதல் முறை இடம்பெற்ற நிகழ்விலும் நான் கலந்து கொண்டிருந்தேன். விவசாயிகளை மகிழ்ச்சியாகவைத்திருப்பதற்கும், அவர்களிடையே ஒரு ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு மற்றும்புரிந்துணர்வுஎன்பனவற்றை எற்படுத்துவதற்கும் இந்தநிகழ்வுஇன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

இதுவிளையாட்டுமட்டுமல்ல. அவர்கள் தங்களைப் புரிந்து கொள்ளவதற்கும், மற்றவர்களுடன் அவர்கள் இணைந்து வாழ்வதற்கும் இந்த செயல்முறை உறுதுணையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கின்ற விவசாயிகளைப்பார்க்கும் போது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது-என்றார். (வ-21)



# கரைச்சிப் பிரதேச சபையின் சிற்றூழியர்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஏப். 29

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் சிற்றூழியர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

கரைச்சி பிரதேச சபைச் செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டும். செயலாளரின் நடவடிக்கைகளை கண்டித்துமே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக சிற்றூழியர்கள் தெரிவித்தனர்.

சிற்றூழியர்களை பழிவாங்காதே, பழிவாங்கலின் அடிப்படையில் பணி நீக்கம் செய்த பணியாளரை உடன் அதே பணியில் அமர்த்து போன்ற பதாதைகளைத்தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"கரைச்சிப் பிரதேச செயலாளரின்செயற்பாடுகள்தொடர்பாக விசாரணைசெய்யவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுனருக்கு தெரியப்படுத்தப்பட்டது. எனினும் இதுவரைசெயலாளர்மீதுஎந்த நடவடிக்கையையும்அவர்கள் எடுக்காதகாரணத்தால்த்தான் நேற்றுமுன்தினம் தொடக்கம் பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்து இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படுகிறது" என்று கரைச்சி பிரதேச சபையின்சிற்றூழியர்கள்தெரிவித்தனர்

"ஒரு கோரிக்கையும் உத்தியோகபூர்வமாக தரப்படவில்லை. என்ன காரணத்துக்காக இந்த போராட்டதைதை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள் என்பதைச் சொல்ல முடியவில்லை. எனினும் சில குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பொய்யானவை" என்று கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (வ-6)

# ஐ.ம.சு. முன்னணிக்குள் புதிய கட்சிகளை இணைக்கத் திட்டம்

கொழும்பு, ஏப். 30

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மேலும் விரிவாக்குவதற்கான திட்டமொன்றுமுன்னெடுக்கப்படவுள்ளது. அதன் முதற்கட்டமாக தற்போதுள்ள கட்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசியல்கட்சிகளாகப்பதிவு செய்து கொள்வதற்கு தேர்தல் ஆணையகத்துக்கு விண்ணப்பித்திருக்கும் கட்சிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று முன்னணியின் பொதுச் செயலாளர்மகிந்தஅமரவீரதெரிவித்தார்.

தம்முடன் இணைய விருப்பம் தெரிவிக்கும் புதிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுள் பொருத்தமான பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் கூறினார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளத்தில் மே தினப்பேரணி

யாழ்ப்பாணம்,ஏப். 30
சமூக விழிப்புணர்வுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் மே தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை வடக்கின் மைய நகரமான மாங்குளம் பகுதியில் இடம்பெறும் என்று அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நா.தேவகிருஸ்ணன் தெரிவித்தார்.
"ஆளும்தேசிய கூட்டரசே பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதில் கூறு ,அரசியல் கைதிகளை விடுதலைசெய், வடக்குமாகாணத்தின் மையப்பகுதியான மாங்குளத்தில் மாகாணசபையின் அதிகாரமையத்தை நிறுவு , பெண்களின் வாழ்க்கையைச் சிதைக்கும் நுண் கடன் நிறுவனங்களை வன்னி மண்ணில் இருந்து உடனே இழுத்து மூடு. மலையக மக்களுக்கான காணி உரிமையை வழங்கி அவர்களுக்கு அடிப்படையில் உரிமைகளை ஏற்படுத்தி கொடு" போன்ற கோரிக்கைகள் முன்வைக் கப்படவுள்ளன.
அதேவேளை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள் இணைந்து நடத்தும் புரட்சிகர மேதினப் பேரணி மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்துக்கு முன்பாக நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.
பேரணி மாங்குளம் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் சென்றடைந்தவுடன், மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ - 10, 101)

## சுவர் சரிந்து விழுந்து 7 வயதுச் சிறுமி சாவு

மட்டக்களப்பு,ஏப்.30
ஏறாவூர் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட ஏறாவூர் 4 ஆம் குறிச்சியிலுள்ள வீடொன்றின் சுவர் சரிந்து வீழ்ந்தது. அதில் சிக்குண்ட ஏழு வயதுச் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் சண்முகராசா ஷாறுக்கா (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்தவராவர்.
குறித்த சிறுமியும், அவரது சகோதரனும் வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும் போது இந்த விபத்து இடம் பெற்றது. வீட்டின் சுவர் கடந்த 4 நாள்களுக்கு முன்னர் தான் கட்டி முடிக்க ப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
படுகாயமடைந்த சிறுமியை ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும், அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார். ஏறாவூர் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# மீதொட்டமுல்ல இடர் இயற்கையானதல்ல

### அனைவரும் பொறுப்புப் கூறவேண்டும் என்கிறார் ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, ஏப். 30
கொலன்னாவ மீதொட்டமுல்ல இடருக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றில் மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"மீதொட்ட முல்ல இடருக்கு ஒரு வகையில் நானும் பொறுப்புக் கூற வேண்டும். ஆகையால் நான் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன். இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர்கள் அனைவரும் பொறுப்புக்கூறவேண்டும். முன்னைய ஆட்சியும் தற்போதைய ஆட்சியும் நடந்த இடருக்குப் பொறுப்புக் கூறவேண்டும். இது இயற்கை இடர் அல்ல. இது ஒரு கொலையாகும்.
இது தொடர்பாக நாட்டின் அரச தலைவர், தலைமை அமைச்சர் பொறுப்பு கூற வேண்டும். குறிப்பாக மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர் விடுதிக் குப்பைகளும் மீதொட்டமுல்லவுக்கே செல்கின்றன. எனவே அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும். குப்பை கொட்டுவதற்கு சம்பந்தபட்ட அனைவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதற்கு அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் - என்றார். (ஐ - 10)

# அரசின் மீது பழிபோடும் பொது எதிரணியினர்

கொழும்பு, ஏப். 30
பொது எதிரணியினர் நாள்தோறும் அரசின் மீது குற்றம் சுமத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். பொறுமைக்கும் எல்லையொன்று உள்ளது. அந்தப் பொறுமை எல்லை மீறிய நிலையிலேயே சரத் பொன்சேகாவுக்கு பதவி வழங்க வேண்டிதேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் திருமதி தலதா அத்துகோரள தெரிவித்தார்.



வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
எந்தவிதமான அர்த்தமும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன வேலைநிறுத்தத்தால் முழுநாடும் ஒருநாள் ஸ்தம்பித்துப்போய் விட்டது. இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.
எவ்வாறாயினும், மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் எமது நடவடிக்கைகளிலுள்ள நியாய அநியாயங்களைப் பொதுமக்கள் நிச்சயம் புரிந்துகொள்வார்கள் - என்றார். (ஐ - 10)

## மருத்துவச்சொல் அகராதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.30
ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி விரிவாக்கங்களுடன் கூடிய மருத்துவச்சொல் அகராதி நூலை வட இலங்கை மருந்தியலாளர் சங்கம் வெளியிட்டுள்ளது என்று வட இலங்கை மருந்தியலாளர் சங்கத்தின் செயலாளர் ப.ஆர்த்திக் தெரிவித்தார்.
மருத்துவச் துறையைச் சாந்தவர்களுக்கு இந்த நூல் மிகவும் பயன் உள்ளதாக அமையும். யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைத்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் வெளி வார பட்டப் படிப்பு பிரிவில் இந்த நூலைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ - ரி)




## சங்கிலியன் பூங்காவில் மே தினக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30
முற்போக்கு தமிழ்த்தேசியக் கட்சியின் மேதின நிகழ்வு நாளை திங்கட்கிழமை யாழ். சங்கிலியன் பூங்கா மைதானத்தில் நடைபெறும் என்று கட்சியின் பொதுச் செயலர் எஸ். விஜயகாந் தெரிவித்தார்.
"வடக்கும் தெற்கும் சங்கமிக்கும் மனிதநேய மேதினம்" எனும் தொனிப்பொருளில் ஜனநாயக தேசிய முன்னணியுடன் இணைந்து இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.
முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஜனநாயக தேசிய முன்னணியின் போசகரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்னவும், நாடாளுமன்ற உறுப்பினர் சத்துரு சேனாரத்னவும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ - 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு ரூ.7 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி,ஏப்.30

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 4 கிலோ கிராம் மான் இறைச்சியை உடமையில் வைத்திருந்த நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில் அரிய வகை மான் ஒன்றை வேட்டையாடி அதன் இறைச்சியை உடைமையில் வைத்திருப்பதாகத் தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் 4 கிலோ கிராம் மான் இறைச்சியைக் கைப்பற்றியதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த சந்தேகநபரையும் கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்திய போது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு 7 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-6)

# கசிப்பை உடைமையில் வைத்திருந்த பெண் கைது

கிளிநொச்சி,ஏப்.30

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஒரு போத்தல் கசிப்பைத் தனது உடமையில் வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, தருமபுரம் 10 ஆம் யுனிற் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை உடைமையில் வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)


## கட்டார் ஏயாபோட் இல் கிளீனர்ஸ் வேலைவாய்ப்பு

**கிளீனர்ஸ் - 50 ( ஆண்)**

1300Qrs / சம்பளம் : Rs.53,300/-

நியந்தனைகள் & சலுகைகள் :

- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் • வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் / வாரத்தில் 48 மணிநேரம் • ஒரு நாள் லீவு வழங்கப்படும்.
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர். • உணவு வழங்கப்படமாட்டாது
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

1 QRS = Rs.41.00

வயது : 45 வயதிற்கு கீழ்

**INTERVIEW 02,03,04 MAY**

max adz

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.

Hot Line : 072 720 0005
0112552598 / 0773074744
0726999886

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000



ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

## உடனடி வேலைவாய்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வடமாகாணத்தில் இயங்கும் Alien Tech (Pvt)Ltd. நிறுவனத்துக்கு Marketing & Sale Executives தேவைப்படுகின்றனர். யாழ், முல்லை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படை கல்வி தகைமை G.C.E(O/L), (A/L) ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை atjob2017@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

**076 699 4273**

## யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முதன் முறையாக e-Money கற்கைநெறி ஆரம்பம்

**வீட்டில் இருந்தவாறே இணையம் மூலம் மாதாந்தம் 25000 ரூபாய்க்கு மேல் சம்பாதியுங்கள்**

**வழிமுறைகள்**

Data Entry, Copy Paste, Online Sales, AdSense Click,
Visit Web Pages Typing, Spread sheet Editing, Data Collection Face book, multimedia
Web site Design, Accounts, programming, Software Development, Auto CAD Drawing, Graphic Designing, photoshop, Web Development, Word, Excel, CMS
Share Market
Forex Trading



**யாருக்காக**

பல்கலைக்கழக மாணவர்கள், பகுதிநேர வேலை எதிர்பார்ப்பவர்கள், இல்லதரிசிகள், இளைஞர் யுவதிகள், அலுவலக பணியாளர்கள், ஓய்வு பெற்றோர் மற்றும் ஆர்வம் உள்ள அனைவருக்கும்.

Teamode (Pvt) Ltd
No: 179A, Station Road, Vairavapuliyankulam, Vavuniya
T.P: 077 51 97 574

## Be Come a Beautician?

Dip.in Beauty Therapy



- Make-up
- Threding
- Facial
- Cleanup
- Skin Care
- Manicure & Pedicure Treatment
- Waxing Techniques
- Saloon reception duties
- Nail Arts
- Health & Safety Practice

1 Year part time
6 Months full time

Free Herbal Items

Practical 100%

Special 1 day workshop on May 2017 Certificate Issue

NEW WAY SKY LINE INSTITUTE
No. 2C, IBC Road, Colombo -06.
(Near by Arpico Wellawatte - sea side)
Tel : 0114 575 043 / 077 334 7332

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேலு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குன்றகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஒளடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களின் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

**(விலை - 3500, 5500, 9000)**

பதிவு இல : 16168
077 2106 155
221, நாவலர் றோட், யாழ்.

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா?
*முடி கொட்டுகிறதா ?
*தலையிடியா ?
*பேன் பொடுகு தொல்லையா?
*இள நரையா ?
*முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய**

பதிவு இல : 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்.

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா ?

*எடை கூட வேண்டுமா ?
*ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா ?
*கணச்சூடா ? *பலகீனமா ?
*மார்பு கூட்ட வேண்டுமா ?
*உடல் குறைபாடுகளா ?

**விலை 5500/= - 9000/=**

**100 % பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஒளடதம் உங்கள் அழகிய தோற்றத்தைப் பெற**

பதிவு இல : 16168
077 3149 386
221, நாவலர் றோட், யாழ்.

உ
சிவமயம்







அரியாலை

## ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையம்

## மைதான திறப்புவிழா வாழ்த்துச் செய்தி

நிலைய மக்களின் பங்களிப்புடன் கொள்வனவு செய்த காணியில் **விளையாட்டு மைதானத்தை அமைத்து**

**இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை**

சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கும் நிலையத் தலைவர்:

**உயர்திரு. க.சண்முகலிங்கம்**

அவர்களையும் அவரோடிணைந்த

**நிர்வாகத்தினரையும்**

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் 8

செல்வர் தச்சுத் தொழிலகம் மரக்காலை நிறுவனத்தினர்.
பலாலி வீதி, திருநெல்வேலி.

C/23484(13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### காணி விற்பனைக்குண்டு
திருநெல்வேலியில் கிட்டத்தட்ட ¾ பரப்பு நிலம் களஞ்சிய (Stores) அறைகள் கட்ட ஏற்ற இடம்.பெரிய லொறிகள் வந்து செல்லக்கூடிய வீதியமைப்பு
22/1, பழங்கிணத்தடி பிள்ளையார் வீதி.
077 251 7640

### காணி விற்பனைக்குண்டு
A9 அரியாலை, சிவியா தெருவில் 2பரப்பு 26.25 குளி காணி விற்பனைக்குண்டு.
(CS 3530) (14)
077 308 8999/ 077 494 1750

### காணி விற்பனைக்கு
ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் மானிப்பாய் வீதியில் மூன்று பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
077 352 6891

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய Lion German Sheperd இன ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
077 129 5008

### விற்பனைக்கு
Ruling,Cutter இயந்திரம், தொழிற்சாலைப் பொருள்கள் மற்றும் காகிதம் முதலிய எழுது பொருள்கள்
தொடர்பு: 011 268 6585

### கார் விற்பனைக்கு
A 40 பரீனா நல்ல நிலைமையில்-
55, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.
(குகன் பெற்றோல் நிலையத்துக்கு அருகில்)
077 667 5080

### காணி விற்பனைக்கு
கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து 100 யார் தூரத்தில் A9 வீதியில் காணி விற்பனைக்கு உண்டு.
(AJA CS 3477) (14)
077 460 5329

### காணி விற்பனைக்கு
பழைய பூங்காவீதி சுண்டுக்குழியில் 2பரப்புக் காணி, கிணறு, புதிய மதில்கள், புதிய 2சோடி கேற்றுடன் விற்பனைக்குண்டு.
(CS 3567) (14)
077 923 5508

### இறைச்சிக்கோழி விற்பனை
புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது.
1Kg 450/= மட்டும்
கூடுதல் கொள்வனவுக்கு 430/= மட்டும்.
U.S.A பாம்
குளப்பிட்டிறோட், ஆனைக்கோட்டை.
077 868 9500

### வாடகைத்தாய் தேவை
வாடகைத்தாய் ஒருவர் தேவை. IUF மூலம் செய்வ-தற்கு 30 வயதிற்குக் குறைவான பெண் வாடகைத் தாயாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். இரகசியம் கண்டிப்பாகப் பேணப்படும்.
077 637 3804

### சாரதி தேவை
கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாகன சாரதி (Driver) தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 25.000/=
தொடர்பு: 077 772 7654

### காணி தேவை
சாவகச்சேரிப் பகுதியில் நல்ல சுற்றுச்சூழலுடன் கூடிய 4 பரப்புக் காணி தேவை.
075 070 7595, 076 827 1977

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிறந்த ரேவதி நட்சத்திரம் 7 இல் சூரிய, செவ் 53 ½ கிரகபாவம் கொண்ட அரச தொழில் பார்க்கும் மணமகனுக்கு அரச/தனியார் தொழில் புரியும் மணமகள் தேவை. (வலிகாமம் வலயத்துக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
077 906 2476, 077 163 3931

### மணமகள் தேவை
யாழ்.வடமராட்சி கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நியூசிலாந்து பிரஜாவுரிமை உடைய 39 வயது பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. கிரகபாவம் 24.
077 323 2618

### தேவை
கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் (Office Assistant) தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் - 20.000/=
தொடர்பு: 077 772 7654

### தேவை
யாழ்.நகரிலுள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு முன் அனுபவமுள்ள
- ✓ கணினி மூலம் சிட்டை எழுதுநர் – ஆண் / பெண்.
- ✓ விற்பனையாளர்.
- ✓ வான் விற்பனைக்கு உதவியாளர்.

தேவை.
077 459 8248

### காணி தேவை
தெல்லிப்பழை சந்திக்கும் மல்லாகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 150 மீற்றரிற்குள் வீடு கட்டக் கூடிய 3 - 6 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: mpiraveenan@yahoo.com
அல்லது 077 960 6133

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம், மிருசுவிலில் இயங்கும் தும்பு ஆலைக்கு பணியாள்கள் தேவை. பெண்களுக்கு உகந்த வேலை. தங்குமிட வசதி செய்து தரப்படும்.
(CS 3578) (14)
077 220 8455

### வீடு வாடகைக்கு தேவை
கொக்குவில், கோண்டாவில், தாவடி, திருநெல்வேலி பகுதிகளில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
076 524 4756

## ஏனையவை

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, விதானையார் வீதியில் வீடு வாடகைக்கு விடப்படும். அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 614 6434

### வாடகைக்குண்டு
குறைந்த விலையில் நாள் வாடகைக்கு Rooms Rs.600/=, Rs.3900 வரை. A/C, TV, Attach bathroom வசதிகளுடன் உண்டு. Hotel Villa City 422/ 1 Galle Road Wellawatta இராமகிருஷ்ண Shed இற்கு அருகில்.
077 796 7878

### வீடு வாடகைக்கு
155ஆம் கட்டை, R.D.A இற்கு முன்பாக கனகாம்பிகைக்குளம் பிரதான வீதியில் 6 அறைகள் மற்றும் இணைந்த குளியலறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள், அலுவலகங்களுக்குப் பொருத்தமானது)
077 968 7139

### காணி விற்பனைக்கு
தெல்லிப்பழைப் பிரதேசத்தில் கே.கே.எஸ் வீதியோரத்தில் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 614 6451

### வீடு வாடகைக்குண்டு
சிறுப்பிட்டி வடக்கில், பருத்தித்துறை வீதிக்கு சமீபமாக சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
077 163 1812

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம், 4 இல் சூரியன், செவ்வாய், 27 கிரகபாவம் கொண்ட அரச உத்தியோகம் உடைய மணமகனுக்கு உள்நாடு அல்லது வெளிநாடு மணமகள் தேவை.
077 968 7705/076 693 9596(Viber)

### அறை வாடகைக்கு
17, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணத்தில் சமையல் வசதியற்ற அறைகள் படிக்கும், வேலை பார்க்கும் பெண்களுக்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 694 1679

### அறை வாடகைக்கு
கொழும்பு கல்கிசையில் இணைந்த குளியலறையுடன் ஓர் அறை வாடகைக்குண்டு.
070 259 7659

### வீடு வாடகைக்கு
நீராவியடி, கல்லூரி வீதியில் புதிய மேல்மாடி 1500 Sqft தனிவழிப்பாதை கௌரவமான குடும்பத்திற்கு வாடகைக்குண்டு.
077 392 7955

### தேவை
பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் PLESSERE or SCOOTY POP உடன் தேவை.
076 326 9990

### வாடகைக்கு
Racca Road / Temple Road } சந்தியில் சகல வசதியுடன்
- ✓ மேல்மாடி வீடும்
- ✓ Hall அமைப்பில் வாடகைக்கு வழங்கப்படும்.
- ✓ வகுப்புக்கள் எடுக்கக் கூடிய வகையில் அறை.
- ✓ அரச நிறுவனம், தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது.

077 282 6267

### OFFICE / Show Room Space Available in Jaffna
JUBILEE BAZAAR
POWER HOUSE ROAD
077 784 7[illegible] / 077 109 2500

### வீடு வாடகைக்கு உண்டு
789,785 Bus மார்க்கத்தில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் Carpet வீதி முகப்புடன் இணைந்த குளியலறை, சமையலறை, சாப்பாட்டறை அடங்கலான 6 அறைகளுடன் வசதியான வீடு வாடகைக்கு உண்டு. June மாதம் முதலாம் திகதியளவில் குடிபுகலாம்.
077 203 5419

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### வீடு வாடகைக்குண்டு
யாழ். மாநகர சபை எல்லைக்குள், A9 வீதிக்கு கச்சேரிக்கு அண்மையாக 3 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய அண்மையில் புதுப்பிக்கப்பட்ட வீடு. போதிய வாகன தரிப்பிட வசதியும் உண்டு.
077 484 2578, 077 306 8993

## விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளையில் கைக்குண்டு மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 30
முள்ளியவளையில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது.
முள்ளியவளை கிழக்கு 3ஆம் வட்டாரத்தில் உள்ள தனது வயல் நிலைத்தை நேற்றுக் காலை 10 மணியவில் உரிமையாளர் உழ வியந்திரத்தால் உழுதுள்ளார். அப்போது கைக்குண்டு ஒன்று அவரால் கண்டு பிடிக்கப் பட்டது. உடனடியாக முள்ளியவளை பொலி ஸாருக்கு அவரால் அறிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வெடி பொருள் இருந்த இடத்தை அடையாளப்படுத் தியதுடன் அகற்றுவதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டது. (வ-7)

# வாள்வெட்டு காயங்களுடன் குடும்பத்தலைவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப். 30
இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகியதாகத் தெரிவித்து குடும்பத்தலை வர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.
"யாழ்ப்பாணம், மானிப்பாய், கூழாவடி பகுதி யைச்சேர்ந்த ரங்கராஜா செல்வகுமார் (வயது 48) என்ற குடும்பத்தலைவர் மீதே வாள் வெட்டு மேற்கொள்ளப்பட்டது. நேற்றுமுன்தி னம் வெள்ளிக்கிழமை இரவு வேளையில் அவரது வீட்டுக்கு அருகே வைத்து இனந்தெ ரியாத நபர்கள் அவர் மீது வாளால் வெட்டிவிட் டுத் தப்பிச் சென்றனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்த னர். (வ-106)

இந்திய விபூதி விற்பனைக்கு
எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்மாகவும் (ரூபா. 100), சில்லறையாக வும் (ரூபா.110) பெற்றுக்கொள்ளலாம்.
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்)

இன்றே அழையுங்கள் நாளை வேலை
யாழ்.மாவட்டத்தின் முன்னணி நிறுவனமான Ds.MAX அமெரிக்க நிதி அனுசரணையுடன் நிரந்தர வேலை வாய்ப்புக்கள். இதில் வரவேற்பாளர், கணக்காளர், விற்பனையாளர், முகாமையாளர் உள்வாங்கப்படவுள்ளனர்.
O/L, A/L படித்த மாணவர்களும் அழைக்கலாம்.
இதற்கு முன் அனுபவம் அவசியமற்றது.
வயதெல்லை (18 - 30)
பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 15.000/= +
பயிற்சியின் பின் நிரந்தர வேலை வருமானம் 50.000/= +
ETF,EPF உட்பட
077 700 9820/ 076 572 7243

வைரஸ் பிறிண்டேர்ஸ்
VIRUS PRINTERS
பணிநிலை வேண்டுகை
1. முகாமையாளர் (பெண்கள்)
உயர்தரம் வர்த்தகம் , ஆங்கிலம், கணினி அறிவு
முன்அனுபவம் விரும்பத்தக்கது
2. கணினி வடிவமைப்பாளர் (ஆண்கள், பெண்கள்)
முன்அனுபவம் விரும்பத்தக்கது
3. கணினித் தட்டெழுத்தாளர் (பெண்கள்)
தமிழ் ஆங்கில தட்டச்சு முன் அனுபவம் விரும்பத்தக்கது
ஆகிய பணிநிலைகளுக்கு எமது நிறுவனத்தில் உள்ள வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:-
#568 K.K.S Road,
Inuvil.
T.P: 021 224 1815
077 592 5096

## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்
## கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் - 2016

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு 2016 | 2015 |
|---|---|---|
| வருமானம் | | |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்தான வருமானம் | 6,895,459 | 5,572,336 |
| நிதியியல் கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் | 2,697,048 | 1,800,326 |
| மொத்த வருமானம் | **9,592,507** | **7,372,662** |
| செலவீனங்கள் | | |
| வாடகை மற்றும் நிர்வாகச்செலவுகள் | 9,992 | 7,575 |
| வெளியீடுகளுக்கான செலவுகள் | 592 | 464 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கட்டணங்கள் | 8 | 4 |
| கோரப்படாத தேசிய வரிக்கழிவு | 718,564 | 333,408 |
| பொருளாதாரப் பணிகள் விதிப்பு | 23,979 | 18,432 |
| பெறுமதி இழப்புச் செலவுகள் | - | 144,251 |
| மொத்தச் செலவீனம் | **753,135** | **504,134** |
| **காலப்பகுதிக்கான வருமான வரிக்கு முந்திய மிகை** | **8,839,372** | **6,868,528** |
| கழி: வருமான வரிக்கான ஏற்பாடுகள் | - | - |
| **காலப்பகுதிக்கான வருமான வரிக்கு பிந்திய வருமான மிகை** | **8,839,372** | **6,868,528** |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் மீள்மதிப்பீடு மூலமான இலாபங்கள்/(நட்டங்கள்) | (928,886) | (877,295) |
| **கழி**: ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானக்கூறுகள் தொடர்பான வரி | - | - |
| **ஆண்டுக்கான வரிக்கு பிந்திய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **(928,886)** | **(877,295)** |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **7,910,486** | **5,991,233** |

நிதியியல் நிலமைக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | டிசெம்பர் 31இல் உள்ளவாறு 2016 | 2015 |
|---|---|---|
| சொத்துக்கள் | | |
| வங்கியிலுள்ள பணம் | 0 | - |
| அங்கத்துவ நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவை | 1,641,201 | 1,313,830 |
| முதலீடுகளில் செலுத்தப்பட்ட ஒன்று சேர்ந்த வட்டி | 71,834 | 18,900 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள நிதியியல் சொத்துக்கள் | 25,700,430 | 18,122,923 |
| கடன்களும் பெறத்தக்கவைகளும் | 6,178,989 | 6,227,433 |
| பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரி | 8,325 | - |
| மொத்த சொத்துக்கள் | **33,600,780** | **25,683,086** |
| பொறுப்புக்கள் | | |
| சில்லறை கடன்கொடுநர்கள் | 1,725 | 805 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை | 6,576 | 4,973 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **8,301** | **5,778** |
| பங்குரிமை மூலதனம் | | |
| இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம் | 34,257,301 | 25,417,929 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்கு | (664,823) | 259,379 |
| மொத்த பங்குரிமை மூலதனம் | **33,592,479** | **25,677,309** |
| மொத்த பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **33,600,780** | **25,683,086** |

மேற்காணப்படும் நிதித் தகவல் 2017 மார்ச் 23 திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைப்படி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளதுடன் நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி, ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
ஏ ஏ எம் தாசிம், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்
(திருமதி) எஸ் செற்றவல, தலைவர், வைப்புக் காப்புறுதி அலகு
23.03.2017


சிவன் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 075 787 3073
துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்
மெய்யன்பர்களே !
இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச் சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது: வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.
100% உத்தரவாதம்
இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

Vacancy Office Assistant
Applications are invited to the post of office assistant. The applicant should be able to maintain cash, accounts and inventory and correspond in Tamil and English. Basic computer literacy is essential.
Applicants should send their applications in their own handwriting, with testimonials of experience and qualifications.
An efficient person will have good promotional prospects.
Salary : Start at Rs. 15,000.00 per month (Negotiable based on qualifications and experience)
Applications close on : May 12 2017
Association for Rehabilitation of Disabled (AROD)
47/2, Adiyapatham Road,
Thirunelvely North, Jaffna.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
யாழில் 40 வருடங்களாக AFஇன் பயணம்
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCHEMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTI FICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.

(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)
International Diploma A I பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4200/= ஏனையோருக்கு 10800/= யாழில் எங்கு படித்தாலும்இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்

ஆரம்பம் சில தினங்களில், உடன் அழைத்து பதியவும்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

வீடு வாடகைக்குத் தேவை
சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் உளவிருத்தி நிலைகளில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பிள்ளை களுக்கான உளவியல்சார் சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் " மாதவம் " என்னும் நிலையத்திற்கு ஒரு வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.
இந்த வீடு யாழ். நகரப்பகுதிக்குள் அல்லது அதனை அண்மித்ததாக ஆகக் குறைந்தது நான்கு அறைகளுடன் வரவேற்புக் கூடம், விலாசமான ஹோல் , விளையாடு வதற்கான முற்றம் மற்றும் வாகனம் தரிக்கக்கூடிய வசதிகள் உடையதாக அமைதியான சூழலில் பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தி இலகுவில் வந்து போகக் கூடிய இடத்தில் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்த வீடு யாழ். சுகாதாரத் திணைக்களகத்தினால் அரசாங்க நியமனங்களினடிப்படையில் வாடகைக்குப் பெறப்படும்.
தொடர்புகளுக்கு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.
572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 221 2662(மாதவம்),
021 222 3725 (சுகாதாரசேவைப் பணிப்பாளர்)
ஈமெயில்: mathavam.jfn@gmail.com, rdhsjaffna15@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.03.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்


# செல்லத்துரை தில்லைநடராசா
(DIT)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 28.04.2017 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**முதலாம் வாய்க்கால்,**
**3 ஆம் கட்டை, வில்சன் வீதி,**
**கிளிநொச்சி.** (AJA/2879) (22,17) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் மேற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட

**பச்சமுத்து சுப்பிரமணியம்**

28.04.2017 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறப்புச்செய்தி கேட்டு நாம் பெரும் துயருற்றிருப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேனாதிராஜா சாந்தா**
**மானிப்பாய். குடும்பத்தினர்.**

**பாம்பு தீண்டியவர் மருத்துவமனையில்**


தென்மராட்சி,ஏப்.30 இரவு வேளையில் காணிக்குள் நடமாடிய வரைபுடையன் பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தனங்களப்பில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கனகசபை சபேசன் (வயது 25 ) என்பவர் காணியொன்றின் ஊடாக தனதுவீட்டுக்குநந்து வந்து கொண்டிருந்த வேளையிலேயே பாம்பு தீண்டியது. (ஐ-9)

## முதலாம் ஆண்டு நினைவும் நன்றி செலுத்தும் ஆராதனையும்

**போதகர் இ.ஏபிரகாம்**

**(இணைஸ்தாபகர் - கானான் ஐக்கிய சர்வதேச சபை)**

**"நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"**
2 தீமோ 4:7



நாளை (01.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கானான் ஜெப ஆலயத்தில் நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும். இவ்வாராதனையில் பங்குகொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**"நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்**
**நீதி 10:09**

**சபை தலைவர்களும்**
**குடும்பத்தினரும்.**
(ஜே/ 8379)

## மரண அறிவித்தல்



# சின்னையா நாகராசா

சாவகச்சேரி, அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகவும், நோர்வே OSLO வை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நாகராசா கடந்த (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னையா (சுப்பையா) மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற குலசேகரம் - கனகமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஜனியின் அன்புக் கணவரும், கோபிராஜ், சஜீதா, அனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஷ்ணன், பாலச்சந்திரன், ஞானச்சந்திரன், சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேவியின் (அனு) பாசமிகு மாமனாரும், விஜிதா, பிறேமகலா, பிரபாலினி, பரமானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராகினி, ரவிச்சந்திரன், உதயகுமார், பவானி, நிர்மலா ஆகியோரின் அத்தானும், தில்லைநாதன், மீனலோஜினி, சிவசக்தி ஜெயராசு, பிரகலாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.05.2017) செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 3.00 - பிற்பகல் 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Online இல் பார்வையிடலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**சின்னையா பாலச்சந்திரன்.**
**(சகோதரர்)**

**கச்சாய் வீதி,**
**அல்லாரை தெற்கு,**
**மீசாலை.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
1951
.
08
.
29



இறப்பு
2017
.
04
.
24

# திருமதி தேவகி மயில்வாகனம்

யாழ்.கல்வத்தை, வதிரி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவகி மயில்வாகனம் 24.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் முருகேசு மயில்வாகனத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் ராசகுலசிங்கம்(வவுனியா), சரஸ்வதி, மகேஸ்வரி, தர்மகுலசிங்கம்(லண்டன்), தனபாலசிங்கம்(பிரான்ஸ்), புவனேஸ்வரி (லண்டன்), ராஜேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதர்ஸன்(லண்டன்), குகநேசன்(லண்டன்), சிவநேசன், சிவரஞ்சன், இந்துஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் அருள்செல்வி(லண்டன்), பிரதீபா(லண்டன்), தர்மினி காலஞ்சென்ற சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜிந், மிதுஷா, அனிஷ்கா, டனிஸ், கஜிநாத், டிருசிகா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 7மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிவேரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

# முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மூவரிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஏப்.30

தூய குடிதண்ணீர் கோரி கம்பகா, ரத்துபஸ்வெல பிரதேசவாசிகள் வெலிவேரியவில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் கம்பஹா மாவட்டத்தில் பணிபுரிந்த முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மூவரின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று புலனாய்வுப் பொலிஸார் கம்பஹா நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சமயம் குறிப்பிட்ட மூன்று பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் சம்பவ இடத்தில் கடமையில் இருந்ததாலேயே அவர்களின் வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்று புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சமயத்தில் வெலிவேரிய, தொம்பே மற்றும் பூகொட பொலிஸ் நிலையங்களில் பணியாற்றிய பொறுப்பதிகாரிகளிடமே வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் தற்சமயம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சிப்பாய்களான லலித் கிரே, டிங்கிரி அருணகே சிறிசேன, ஜயசுந்தர முதியான்சலாகே திலகரத்ன ஆகிய மூவரும் சிறைச்சாலை அதிகாரிகளால் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (ஐ-10)

நீதிமன்றக் கட்டளை விவகாரம்

# பொலிஸாருக்கு திருமலை நீதிமன்று அழைப்பாணை

திருகோணமலை நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையைக் கிழித்து காலுக்குக் கீழ் போட்டு மிதித்தது, தகாத வார்த்தைகளால் பேசிய சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு திருகோணமலை நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் கடந்த 25ஆம் திகதி வேலை தேடும் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலை தலைமையகப் பொலிஸார் ஆர்ப்பாட்டத்துக்குத் தற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தனர்.

அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்த திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச். எம்.ஹம்ஸா அமைதியான முறையில் பொதுமக்களுக்கும் பொதுச்சொத்துக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு வேலை தேடும் பட்டதாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார்.

திருகோணமலை நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையைத் தலைமையகப் பொலிஸாருக்கு முன்னால், வேலை தேடும் பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்த பௌத்த பிக்கு உட்பட மூவர் கிழித்தெறிந்தனர். அவ்வேளையில் அந்தச் செயற்பாட்டைப் பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டித்து திருகோணமலை மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தால் நீதிமன்றுக்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமைகவனயீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தால்தலைமையகப்பொலிஸாரால் கோவையிடப்பட்ட வழக்கை நகர்த்தல் பிரேரணை (மோசம் போடுதல்) மூலம்நீதிமன்றுக்கு அழைத்துவிசாரணை செய்த போதே திருகோணமலை முதன்மை நீதிவான் எம். எச்.எம்.ஹம்ஸா மே மாதம் 2 ஆம் திகதி உதவி பொலிஸ் அத்தியட்சகர், தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் அவ்விடத்தில் கடமையாற்றிய பொலிஸ் பொறுப்பதிகாரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்டார். (ஐ)



# கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 30

அம்பலாங்கொடை, பொல்வத்தைப் பிரதேசத்தில் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“அம்பலாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட, பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# கொள்கையின் அடிப்படையிலேயே அமைப்பாளர்களின் பதவிகள் நீக்கம்

கொழும்பு, ஏப். 30

சிறிலங்கா சுதந்திர கட்சியின் சில அமைப்பாளர்களை நியாயமான கொள்கையின் அடிப்படையில்நீக்குவதற்கே கட்சித் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டது என்று அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படாத பெரும்பாலான அமைப்பாளர்களே அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். கட்சியின் பொறுப்புகளை ஏற்றிருந்த போதும் கடந்த காலங்களில் தமது பொறுப்புக்களில் இருந்து அவர்கள் விலகியிருந்தனர்.



கட்சியின் பொறுப்புக்களில் இருந்து விலகியிருந்த மக்கள் பிரதிநிதிகள் சிலர் தொடர்பாக எதிர்காலத்திலும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ1-0)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிகர மக்கள் ஐக்கிய மே தினம் காவத்தையில்

யாழ்ப்பாணம், ஏப். 30

"பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்போம் " எனும் தொனிப் பொருளில் புரட்சிகர மக்கள் ஐக்கிய மே தினக் கூட்டம் காவத்தை கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம், மக்கள் தொழிலாளர் சங்கம், மக்கள் ஆசிரியர் சங்கம், மக்கள் பாண்பாட்டுக் கழகம், மலையக சமூக நடவடிக்கைக் குழு ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளன.

இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரத்தின் பொதுச் செயலாளர் இ.தம்பையாவின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், "அனைத்து மக்களினதும் வாழ்கைச்செலவைக் குறை, உள்நாட்டு வளங்களையும் உழைப்பையும் ஏகாதிபத்திய சக்திகள் சூறையாட இடமளிக்காதே, சகலருக்கும் தொழில்வாய்ப்பை வழங்கி வேலையில்லாப் பிரச்சினையை நீக்கு, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீளளி, அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி இயல்பு வாழ்கையை உறுதி செய், தேசிய இனப்பிரச்சினைக்குச் சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ண அடிப்படையில் அரசியல் தீர்வு காண், நடைமுறையில் உள்ள பெருந்தோட்டக் கூட்டு ஒப்பந்தத்தை நீக்கம் செய்து நியாயமான மாதாந்த சம்பள உயர் மற்றும் ஏனைய தொழில் உரிமைகளை உறுதி செய், மலையக மக்கள் வாழும் பிரதேசங்களைக் குடியிருப்புகளாகப் பிரகடப்படுத்தி வீட்டுரிமையை உறுதி செய், ஆசிரியர் சேவையைப் புலமைசார் சேவையாக அங்கீகரி, இலவசக் கல்வியை மேம்படுத்தி அனைவருக்கும் கல்வியில் சம வாயப்பை ஏற்படுத்து, விவசாயத் தொழிற்துறையை மேம்படுத்தி உள்நாட்டுப் பொருளாதாரத்தை பலப்படுத்து, இயற்கை, செயற்கை இடர்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடு, தரமான இலவச சுகாதார சேவையை உறுதி செய்" ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்படவுள்ளன.

(ஐ - 10)

# சாவகச்சேரியிலும் நாளை தொழிலாளர் தினம்

தென்மராட்சி ஏப். 30

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை இணைந்து நடாத்தும் தொழிலாளர் தின எழுச்சி நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் முன்றலில் இடம் பெறும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரித் தொகுதி அமைப்பாளர் யோ.ஜெயக்குமார் தலைமையில் தொழிலாளர் தினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை , காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிதலை வலியுறுத்தல், தமிழ்த் தொழிலாளர்கள் தமிழ் விவசாயிகள் தமிழ் மீனவர்கள் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக காணி அபகரிப்புக்கு எதிராக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக இராணுவ மயமாக்கலுக்கு எதிராக குரல் கொடுத்தல், மீள் குடியமர்வை வலியுறுத்தல், கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தல், வேலை தேடும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வலியுறுத்தல். இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனவழிப்புப் போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டுப் பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்தல், தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தை வலியுறுத்தல், ஆகியவற்றுக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் அணி திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

(ஐ -9)

# பு.ஜ.மா.லெ. கட்சியின் மே தினப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

புதிய ஜனநாயக மாச்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மே தினப் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் வடபிரதேச செயலாளர் கா. செல்வம் கதிர் காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் பொதுக்கூட்டத்தில் சிறப்புரைகளை பு.ஜ.மா.லெ. கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர்களான க. தணிகாசலம், சோ. தேவராஜா ஆகியோரும், வன்னி மாவட்டங்களின் செயலாளர் என். பிரதீபன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியின் பிரதிநிதி த. ஸ்ரீபிரகாஸ், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இ. தவராஜா,கா. பஞ்சலிங்கம், விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி பொ. முருகேசு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயலாளர் ச. தனுஜன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

கட்சியின் மே தினப் பேரணி பிற்பகல் 3 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 10)







ஸ்ப்ளிட் ரக வளிச்சீராக்கிகள்

| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| சாதாரண விலை | ரூ.74,990 | ரூ.84,990 | ரூ.102,990 | ரூ.122,990 |
| விசேட விலை | ரூ.64,490 | ரூ.74,990 | ரூ.90,990 | ரூ.112,990 |

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனை வெட்டிக் கொன்ற மனைவி பொலிஸில் சரண்

## கணவரின் அந்தரங்க உறுப்பும் துண்டாடப்பட்ட கொடூரம்

கொழும்பு, ஏப். 30

28 வயதான தனது கணவரின் கழுத்தை வெட்டி அவரைக் கொலை செய்ததுடன், அவரது அந்தரங்க உறுப்பையும் வெட்டியதாக் குற்றஞ்சாட்டப்படும் 33 வயது மனைவி மீகஹாவத்த பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக் கிழமை சரணடைந்தார்.

தெல்கொட, அக்குருமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மகேஷ் பிரியந்த என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் தனது மனைவியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். அதன் பின்னர் உறங்கச் சென்றார். ஏற்கனவே ஆத்திரமடைந்திருந்த மனைவி உறங்கிக்கொண்டிருந்த கணவரின் கழுத்தையும் , அந்தரங்க உறுப்பையும் வெட்டி அவரைக் கொலை செய்த பின்னர் பொலிஸில் சரணடைந்தார் என்று மீகஹாவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை நடந்த இடத்தில் மகர நீதிவான் திருமதி தனுஷா லக்மாலி ஜயசுந்தர விசாரணை நடத்தி பின்னர் சடலப்பரிசோதனைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீகஹாவத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மீகஹாவத்த பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக்க விக்கிரமசிங்கவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-4)

# பென்சேகாவுக்கு பதவி வழங்க மைத்திரி கனவு காணவில்லை

## அமைச்சர் ஜோன் செனிவிரத்ன விளக்கம்

கொழும்பு, ஏப். 30

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவதற்கோ, தொழிற்சங்க நடவடிக்கைகளால் அத்தியாவசிய சேவைகள் தடைப்படும் போது, நிலைமையைக் கையாள்வதற்கான குழுவுக்குப் பொறுப்பாக அவரை நியமிப்பதற்கோ அரச தலைவர் கனவு காணவில்லை. இவ்வாறு அமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நகைச்சுவையாகக் குறிப்பிட்ட கருத்துக்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. வேலை நிறுத்தப் போராட்டங்கள் தொடர்பாகப் பேசிய போது, இந்த நிலைமைகளை அமைச்சர் பொன்சேகாவால் கட்டுப்படுத்த முடியுமா என்று தான் அசர தலைவர் நகைச்சுவையாகக் கேட்டார் - என்றார். (ஐ-10)

## கரதியானவில் குப்பை கொட்டுவதற்குத் தடை

கொழும்பு, ஏப்.30

கொழும்பு நகரில் சேரும் குப்பைகளை பிலியந்தலை, கரதியான கழிவுக் கூடங்களில் கொட்டுவதற்கு கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் நேற்று முதல் தடைவிதித்தது.

கடந்த 17ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் நாளொன்றுக்கு 350 மெற்றிக்தொன் குப்பைகளை பிலியந்தலை, கரதியான கழிவுக் கூடங்களில் கொட்டுவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

இந்த கால அளவை நீடிக்குமாறு நகரசபை அதிகாரிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுக்காததை அடுத்து பிலியந்தலை, கரதியான கழிவுக் கூடங்களில் குப்பைகளைக் கொட்டுவதற்கு நீதிமன்று நேற்று முதல் தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ- 10)

## மீதொட்டமுல்லவில் குப்பைகளைக் கொட்ட சுற்றாடல் அதிகார சபை அனுமதிக்கவில்லை

கொழும்பு, ஏப். 30

மீதொட்டமுல்ல, புளுமெண்டோல், கரதியான உட்பட எந்த இடத்திலும் குப்பைகளைக் கொட்டுவதற்கு கொழும்பு சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை என்று அதன் பணிப்பாளர் நாயகம் கே.எச். முத்துகுடஆராச்சி தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்ததற்கு மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையும் பொறுப்பேற்க வேண்டுமென ஊடகமொன்றில் வெளியான செய்திக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்தமைக்கு, அதனுடன் தொடர்பே இல்லாதவர்கள் மீது குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கும் ஒருசிலர் மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாமல் குப்பைகளை அகற்றுவதற்கான பொறுப்பு அரசையே சாரும். அதற்கான சரியான முகாமைத்துவம் இல்லாவிட்டால் எதிர்காலத்திலும் இத்தகைய இடர்கள் நிச்சயம் நிகழும் - என்றார். (ஐ-10)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வேலியே பயிரை மேய்ந்தால்...

திருட்டுநகைவியாபாரத்தில்பங்குகேட்டார்கள்,அதற்கு நீதிவானின் பெயரையும் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுப்பொலிஸார்மீதுசுமத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்பான விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வேலியே பயிரை மேயும் இந்தக் கலாசாரத்தால்தான்வடக்கில்குற்றங்கள்குறையாமல்அதிகரிக்கின்றன என்பதில்ஐயமில்லை. இதில்இன்னும்கவலைப்படவேண்டிய விடயம் இந்தக் குற்றத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் தமிழ்ப் பொலிஸாரும் அடக்கம் என்பதுதான்.

போர்நடந்துகொண்டிருந்தபோதும்சரி,போரின்பின்னரும் சரி திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களும் தங்க நகை வழிப்பறியும் வடக்கில் மிகப் பெருமளவில் அதிகரித்துள்ளன. சமூகஅச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக்கூடிய அளவுக்கு இதன் பாதிப்பு உள்ளது.

திருட்டு, கொள்ளை குறித்துப் பொலிஸாரிடம் முறையிட்டால் அவர்கள் அதில் அக்கறையுடன் நடவடிக்கைக எடுப்பதில்லை என்பது பொதுவாகவே பொதுமக்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டு. எப்போதாவது ஒரு சில சமயங்களில் கொள்ளைக் கும்பல் கைது செய்யப்பட்டதாகவும் அதனிடமிருந்து ஒரு தொகை நகைகள் கைப்பற்றப்பட்டதாகவும் செய்திகள் வெளிவருவதுண்டு. ஆளணிப்பற்றாக்குறையால் எல்லா முறைப்பாடுகளின் மீதும் விரைந்து நடவடிக்கை எடுக்க முடிவதில்லை என்று பொலிஸாரின் தரப்பில் விளக்கமளிக் கப்படுவதும் வழமை.

ஆனால்,திருடர்களையும்கொள்ளையர்களையும்பிடிக்காமல் இருந்ததற்கு அது மட்டுமே காரணம் இல்லை என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. திருட்டு நகை வியாபாரத்தில் ஈடுபடுபவர்களை இலக்கு வைத்து அவர்களிடம் இருந்துதங்கத்தைப்பொலிஸார்கப்பமாகப்பெற்றார்கள்என்பதே இப்போது எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டு. எனில், திருட்டுக்கும்பல்எதுவென்பதும்,திருட்டுநகைவியாபாரம் எப்படி, எந்தெந்த வழிகளில்நடக்கின்றது என்பதும் பொலிஸாருக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றது என்பதும்தான் அர்த்தம். எனினும் திருட்டு நகைகளில் தமக்கும் பங்கு கேட்டுப்பெற்றுக்கொண்டுதிருடர்களையும்கொள்ளையர்களையும் கண்டும் காணாமலும் இருந்திருக்கிறார்கள்.

இதில் சில வருடங்களுக்கு முன்னரே பொலிஸ் படையில் இணைந்து கொண்ட தமிழ் இளைஞர்களும் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்பதுதான் மிக மிக மோசமான நிலமை, சோகம். பொலிஸ் படையில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும்என்றுவலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதமிழ்ச்சமூகத்தை மேலும் அதளபாதாளத்தில்தள்ளுவதற்கு ஒப்பானது.

போரின் பாதிப்பில் இருந்து மீண்டுவரும் ஒரு சமூகத்தில் இருந்து வந்தவர்களும் இத்தகைய கீழான வேலைகளைச் செய்யத்துணிந்திருப்பது அவர்கள்தமது இனத்துக்குச்செய்யும் பச்சைத் துரோகம். ஏற்கனவே தமிழ் இளைஞனைச் சித்திரவதை செய்து கொலை செய்த குற்றச்சாட்டின் கீழும் தமிழ்ப் பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொறுப்போடு காவல் காத்து தமது மக்களைக் கைதூக்கி விடவேண்டியவர்கள், அவர்களை எட்டியுதைத்து அவர்களின் உழைப்பை இப்படி உறிஞ்சுவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

பொலிஸ் படைக்கு ஆள்கள் சேர்க்கப்பட்ட முன்னைய காலத்தில், அவர்களின் பின்னணி கொழும்பு அரசுக்கு எதிரானதா இல்லையா என்பதை ஆராய்ந்தார்களே தவிர அவர்களின்நடத்தைப்போக்கு,ஒழுக்கம்குறித்து ஆராயவில்லை என்பதும் இப்படி வேலியே பயிரை மேற்வதற்கான காரணமாயிற்று.

இந்தப்போக்கைஇப்படியேதொடர அனுமதிக்கமுடியாது. முறையான பக்கச்சார்பற்றவிசாரணைகள்முன்னெடுக்கப்படவேண்டும். அதற்காகஇந்தவழக்குகொழும்பைச்சேர்ந்த குற் றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கவேண்டும். முழுமையானவிசாரணைகளின்பின்னர்குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு ஆகக் கூடுதலான தண்டனையும் வழங்கப்படவேண்டும். இனிவரும் காலங்களில் சட்டம் ஒழுங்குக்காவலர்கள்சட்டமீறல்களில் ஈடுபடாமல் இருப்பதற்கான படிப்பினையாக அது அமையவேண்டும்.

---



# நத்தை வேகத்தில் நகரும் நல்லாட்சி அரசின் நிர்வாகம்

மு.ஈழத்தமிழ்மணி

இருபெரும் தேசியக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து நடத்திவருகின்ற நல்லாட்சி அரசில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்தின் அடிப்படையில் அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. ஆயினும் இந்த அரசின் நடவடிக்கைகளில் தற்போது தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

கடந்த அரச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலின்போது மகிந்தவைத் தோற்கடிக்கவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தமிழ் மக்கள், எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு அமோக ஆதரவையளித்து அரசதலைவராக வெற்றிபெற வைத்தனர். மகிந்த ஆட்சியில் தமிழ்மக்கள் தொடர்ந்து பல தரப்பட்ட துன்ப துயரங்களை அனுபவித்ததைக் கருத்தில் எடுத்தே தமிழ் மக்கள் மகிந்தவை தேர்தலின்போது தூக்கியெறிந்தனர்.

புதிய அரச தலைவராக மைத்திரிபால பதவியேற்றுஇரண்டாண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையில் தமிழ் மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கை நலிவடைந்து வருகின்றது. ஆனால் மைத்திரிபாலவோ வடக்கு மாகாண மக்கள் என்மீது வைத்த நம்பிக்கையை நிச்சயமாக நான் காப்பாற்றுவேன்; வடக்கு மக்களின் உதவியை மறக்கமாட்டேன் எனப் பல தடவைகள்கூறியிருந்தார்.

### காற்றில் கலந்து காணாமல் போய்விட்ட அரசின் வாக்குறுதிகள்

மைத்திரிபால சிறிசேனவின் தலைலமையிலான நல்லாட்சியில் தமிழ் மக்களால் அறவழிப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காத வரையில் தமது போராட்டத்தைத் தாம் கைவிடப்போவதில்லை என போராட்டத்தில் ஈடுபடுவோர் தெரிவித்து வருகின்றனர்.

போர் முடிவடைந்து எதிர்வரும் மேமாதம் எட்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ளன.

நிலவிடுவிப்பு மற்றும் காணாமற்போனோர்களைக் கண்டுபிடித்துத் தருமாறான போராட்டம் என்பவை தொடர்பில் அரச தலைவர் மைத்திரியும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து இந்தப்பிரச்சினைகளுக்கு முடிவைக் காணவேண்டும். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சி அரசுக்கு



குக்கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது. படைத்தரப்பினர் போர் முடிந்தபின்னர் தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கையகப்படுத்தி வைத்துக்கொண்டு அவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்க மறுத்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் உட்பட இராணுவத்தினரிடமுள்ள நான்காயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளில் ஓர் அங்குலத்தைத்தானும் எக்காரணம் கொண்டும் கையளிக்க மாட்டோம் என யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதியாயிருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கா ஓர் சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். அதே வேளை வலி.வடக்கில் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும்4000 ஏக்கர் காணிகளில் ஆயிரம் ஏக்கர் காணிகளை தாங்கள் நிரந்தரமாக வைத்திருக்க வேண்டுமென்பதில் இராணுவத்தினர் உறுதியாக இருக்கின்றனர் எனயாழ்.மாவட்ட அரச அதிபரினாலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்மக்கள் தமது சொந்த நிலங்களை படையினரிடம் இழந்துவிட்ட நிலையில், அவற்றை மீட்டெடுப்பதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் போராடி வந்தனர். ஆனால் படையினரோ தமிழ் மக்களின் நிலங்களை மக்களிடம் திருப்பிக் கையளிக்க மறுக்கின்றனர்.

எங்கள் நிலமே எமக்கு வேண்டும்; அதுவரை தளராது போராடுவோம்; நட்ட ஈடும் வேண்டாம்; மாற்றுக்காணியும் வேண்டாம்; எங்கள் சொந்த இடங்களே எங்களுக்கு வேண்டும். அண்மையில் யாழ்ப் பாணத்துக்கு வந்திருந்த முன்னாள் அரச தலைவரும், தேசிய ஒருமைப் பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்காவிடம் வலிவடக்கு வீமன்காமம் மக்கள் மேற்கண்டவாறு உருக்கமான தொரு வேண்டுகோள் விடுத்திருந்த னர்.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் நிறுவப்பட்டதால் இடம்பெயர்ந்த மக்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளையே திருப்பித் தருமாறு கேட்கின்றனர். அவர்களது எதிர்பார்ப்பை நாங்கள் நிச்சயமாக நிறைவேற்றுவோம். அனைவரது காணிகளும் யூன் மாதத்துக்கு முன்னர் மீள ஒப்படைக்கப்படும் என கடந்த ஆண்டு மார்ச் மாதம் அரசதலைவர் மைத்திரிபால தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவட்டங்களில் உள்ள மக்களும் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது சொந்த நிலங்களை மீட்பதற்காக போராட்டங்களைத் தொடர்ச்சியாக பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இடைவிடாது நடத்திய போது, மக்கள் போராட்டமாக அது பரிணமித்திருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிலக்குடியிருப்பு மக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரவிப்பஞ்சான் பகுதி மக்களும் தொடர்ச்சியாக நடத்திய போராட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் வேறு வழியின்றி தம்மால் அபகரிக்கப்பட்ட தமிழ்மக்களின் நிலங்களைவிட்டுவெளியேறினர்.

**மைத்திரிபால சிறிசேனவின் தலைலமையிலான நல்லாட்சியில் தமிழ் மக்களால் அறவழிப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காதவரையில் தமது போராட்டத்தைத் தாம் கைவிடப்போவதில்லை என போராட்டத்தில் குதித்துள்ளனர்.**

**மக்களது காணிகள் விடுவிப்புக் குறித்த படைத்தரப்பின் விடாப்பிடித்தனம்**

மக்களின் நிலமீட்புப் போராட்டம் இன்றுவரையில் நீண்டு செல்கின்றது. ஏறக்குறைய மூன்று தசாப்தகால அகதிவாழ்க்கைக்கு என்றுதான் முடிவு வருமென சிறுவர் தொடக்கம் வயோதிபர்கள் வரை ஏக்கத்தோடு பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், வடக்கு மக்களில் ஒருசாரார்கடந்தவருடம் ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான பதில் பொறுப்பதிகாரி அன்ற்மாரி டில்கனிடம் மருதனார்மடத்தில் உள்ள அகதிமுகாமில் வைத்து தங்களது அவல நிலையைத் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் இருபது ஆயிரம் ஏக்கர் காணிகள் தமது படைத்தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டு ள்ளதாகவும் அவற்றில் ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் மேலும் நான்காயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுமெனவும் யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் கட்டளைத்தளபதியாக இருந்தவரான மேஜர் ஜெனரல் மகேஸ்சேன நாயக்கா கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் குறிப்பிட்ட அளவு நிலங்கள் பாதுகாப்புத் தரப்புக்களுக்காக சுவீகரிக்கப்படும்.

அதற்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்ற யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளை தளபதியின் பணிப்புக்கு அமைவாக யாழ் மாவட்ட அரச அதிபர் காணி உரிமையாளர்களுக்கு கடிதம் எழுதியிருந்ததாகவும் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

சென்ற வருடம் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 60ஆவது அமர்வின்போது காணிகளைத் தருவோம் தரமாட்டோம் எனக் கூறுவதற்கு இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தவர்கள் யார்? இந்த நாட்டில் நடப்பது நல்லாட்சியா? இராணுவ ஆட்சியா? என்ற கேள்வியையும் உறுப்பினர்கள் எழுப்பியிருந்தனர்.

கிளிநொச்சி இரணைதீவில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் தம்மை மீண்டும் அங்கு குடியேற்றக் கோரி கடந்த மாதம் பூநகரி பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மீள்குடியேற்றவேண்டும் என்ற பேரவாக்கொண்டு இருக்கின்ற இரணை தீவு மக்கள் தாங்கள் எப்போது தமது சொந்த இடத்துக்குச் செல்வோம் என்ற கேள்விக்குறியோடு இருக்கின்றனர்.

இரணைதீவு மக்கள் காலம் காலமாகத் தாம் வாழ்ந்த பூர்வீக நிலங்களில் இருந்து இடம்பெயர்ந்து தமது வீடுகள், வழிபாட்டிடங்கள், மக்களது பிரதான தொழில்கள், வளங்கள் யாவற்றையுமிழந்து மன்னார் வீதி முழங்காவில் பகுதிக்கண்மையிலுள்ள ஒதுக்குப்புறமான ஒருபகுதி நிலத்தில் நீண்ட காலமாக அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இரணைதீவு மக்களின் பிரதான தொழில் கடற்றொழிலே.

நல்லாட்சி அரசு இரணைதீவைத் தம்மிடம் கையளிக்க விரைந்துநடவடிக்கை எடுக்கவேண்டுமெனஅந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**முடிவே இல்லாது தொடரும் பிலக்குடியிருப்பு நில மீட்புப் போராட்டம்**

முல்லைத்தீவுகேப்பாப்பிலவு குடியிருப்பில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது சொந்த நிலங்களை விடுவிக்க அந்தப்பகுதி மக்கள் நடத்திவரும் கவனவீர்ப்புப் போராட்டம் அதிகாரத் தரப்புகளால் கண்டுகொள்ளப்படவேயில்லை. கேப்பாப்பிலவு இராணுவ முகாம்முன்பாக சாலையை மறித்து நிலமீட்புப் போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

மார்ச் மாதம் முதலாம் திகதி பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நிறைவுக்கு வந்ததையடுத்து கோப்பாபுலவு மக்கள் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அத்துடன் இராணுவத்தினர் அச்சுறுத்தல் நடவடிக்கையிலீடுபட்டும் வருகின்றனர்

**ஏமாற்றி வெளியேற்றப்பட்ட முள்ளிக்குள மக்கள் இன்னமும் நடுவீதியில்**

மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் கிராம மக்களும் தங்களது சொந்த நிலத்தை மீட்பதற்கு கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதியிலிருந்துபோராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். 08.09.2007 அன்று இலங்கை இராணுவத்தினரின் உத்தரவுக்கமைய மீண்டும் மூன்று நாள்களில் கிராமத்துக்குத் திரும்பலாம் என்று நம்பிக்கையூட்டி அந்தக் கிராம மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். ஆனால் பத்து ஆண்டுகளாகியும் அந்தக் கிராமத்துமக்கள்தமதுசொந்த இடத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்க இராணுவத் தரப்பு மறுத்து வருகின்றது.

இந்தக் கிராமத்தை எடுத்து வடமேற்கு மாகாணங்களுக்கான கடற்படை கட்டளைத் தலைமையகம் அமைக்கப்பட்டு கடற்படையினர் அதனை நிரந்தரமாக்கிக் கொண்டுள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் கடந்த பத்தாண்டுகளாக தமது சொந்தக்கிராமத்தில் சென்று குடியமரத் தம்மை அனுமதிக்கக் கோரி பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். மறிச்சுக்கட்டி, மலன்காடு, சேர்ந்த முள்ளிக்குளம் மக்களின் அடிப்படைத் தொழில்கள் விவசாயம், மீன்பிடி என்பனவாகும். இவற்றைஇழந்த நிலையில் பல தடைகளுக்கு மத்தியில் தங்களது வாழ்வாதாரத்துக்காக அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமித்துத் தொடர்ந்தும் தம் வசம் வைத்துக்கொண்டிருக்கின்றனர் அவர்களது காணிகளை அவர்களிடம் மீள வழங்குவதற்கு மைத்திரியின் நல்லாட்சி அரசு எதற்காகத் தயங்க வேண்டும் என்ற கேள்வி நியாய மானதாகும்.

தென்பகுதியிலிருந்து பல அமைச்சர்கள், சிங்கள அமைப்புக்களின் பிரதி நிதிகள், புத்திஜீவிகள், மதத்தலைவர்கள் என பலர் அடிக்கடி வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு வந்து செல்கின்றனர். தமிழ் மக்கள் தற்போது நடத்துகின்ற போராட்டங்களை நேரடியாகப் பார்வையிடும் இவர்கள், தங்களது இடங்களுக்குச் சென்று தமது மக்களுக்குதமிழ்மக்களது பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு ஏன் முடியாது? வெறுமனே ஒரு சில சிங்கள மக்கள் போராட்டக்காரர்களோடு ஒரு அடையாளத்துக்காக குந்தியிருந்து விட்டுப்போனால் மட்டும் அது போதுமானதாகுமா?

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களிலிருந்து படையினர் வெளியேறும் வரை தமிழ்மக்கள் மேலும் மேலும் கிளர்ந்தெழுந்து இரவு பகலாக போராடவே செய்வர். காணிகளைப்படையினரிடமிருந்து நல்லாட்சி அரசு தமிழ் மக்களுக்கு மீட்டெடுத்துக் கொடுக்க வேண்டுமே தவிர போராடுபவர்களை மோதி மிதிக்கக் கூடாது.






## ஆசிரியருக்கான கடிதம்

# நியமனம் வழங்கலில் முறைகேடு இடம்பெறவில்லை

2017.04.10ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 5ஆம் பக்கத்தில் "அஞ்சல் உதவியாளர் நியமனம் வழங்கலில் முறைகேடு" எனத் தலைப்பிட்டுக் கொடிகாமம் அஞ்சல் அலுவலக ஆளணி விடயம் தொடர்பாக செய்தி பிரசுரமாகியிருந்தது. அது தொடர்பாக கீழ்காணும் தகவல்களைத் தெரிவிக்கின்றேன். கொடிகாமம் அஞ்சல் அலுவலகம், தபால் தரம் பிரிப்பாளர் ஒருவரைத் தருமாறு கேட்டிருந்தது. தற்போது புதிய ஆளணி உருவாக்கத்துக்கு அனுமதி இல்லையாயினும், ஏற்கனவே அத்தகைய ஆளணி இருந்து, இடைநிறுத்தப்பட்டிருந்தால் அவற்றைத் தலைமை அலுவலக அனுமதியுடன் ஈடுபடுத்த முடியும். எனவே முன்னர் கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு தந்தித் தூதுவர் ஆளணிகளை மீளச் செயற்படுத்துவதற்கு அனுமதிகோரப்பட்டிருந்தது. முன்னர் தபால் திணைக்களத்தில் தபால் தரம்பிரிப்பாளர், அஞ்சலர், காரியாலய உதவியாளர், தந்தித் தூதுவர், துப்புரவுத் தொழிலாளி எனப் பலதரப்பட்ட பதவிநிலைகள் காணப்பட்டன. ஆனால் பின்னர் திணைக்களத்தால் இவ்வாறான தரங்கள் நீக்கப்பட்டு "அஞ்சல் உதவியாளர் என்ற ஒரு பதவி மட்டுமே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. சேவை மூப்பின் அடிப்படையில்அவர்களுக்கான கடமைகள் ஒதுக்கப்படும். இடைநிறுத்தப்பட்ட இரண்டு ஆளணிகளையும் மீளவும் செயற்படுத்த தலைமை அலுவலகத்தால் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில், அதில் ஒரு ஆளணியை கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்துக்கு வழங்கி, சேவையில் மூத்த உத்தியோத்தரைத் தபால் தரம் பிரிப்பதற்கு ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது . மற்றைய ஆளணி வரணி உப அஞ்சலகத்துக்கு வழங்கப்பட்டது. எனவே இந்த நியமனம் வழங்கலில் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா.கனகசுந்தரம்
பிரதி அஞ்சல்மா அதிபதி
(வடமாகாணம்)
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கருப்பைக்கழுத்துப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தவிர்ப்போம்


திருமதி சாந்தலோஜினி

உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் பெண்களைத் தாக்கும் புற்றுநோய்களில் முக்கியமானவையாக மார்பகப்புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் என்பன காணப்படுகின்றது. இலங்கையில் புற்றுநோயின் தாக்கத்தால் ஆண்களைவிட பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் புள்ளிவிவரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மேலும் இலங்கையில் ஒட்டுமொத்த புற்றுநோய்களின் தாக்கத்தில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் என்பது மூன்றாவது இடத்திலும் பெண்களைத் தாக்கும் புற்றுநோய்களில் இந்தப்புற்றுநோய் இரண்டாவது இடத்திலும் இருப்பதாகவும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றது. இது சுகாதாரத் துறையினருக்குப் பெரிய சவாலையும், சுமையையும்ஏற்படுத்துகின்றது.

உலகசுகாதார நிறுவனத்தின் கணிப்பின் படி இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஆயிரம் புதிய கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாளிகளை அடையாளம் காண்பதாகவும் 800 பெண்கள் இந்த நோயால் இறப்பதாகவும் கணிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாப்புற்றுநோய்களையும்விட கருப்பைக்கழுத்துப்புற்றுநோயை இலகுவாகஆரம்பத்திலேயேகண்டறிந்து முற்றாகக் குணப்படுத்த முடியும் அல்லது தீவிர நிலைக்குச் செல்லாமல் தடுக்க முடியும். அப்படியிருந்தும் இந்த நோயால் அதிகளவானோர்கள்பாதிக்கப்படுவதும் இறப்புஏற்படுகின்றமையும் வருத்தத்திற்குரியதாகும். எனவேதான் இதுபற்றிய விழிப்புணர்வைப் பெண்கள் மத்தியில் ஏற்படுத்துவது அவசியமாகிறது.






### கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் எவ்வாறு தோன்றுகிறது?

இது பரம்பரையாகத் தோன்றும் ஒரு நோய் அல்ல. மனித பபிலோமா வைரஸ் (Human Papiloma Virus) என்ற நுண்கிருமி பெண்களின் கருப்பைக் கழுத்தில் நீண்ட நாள்களாக இருப்பதால் இந்தப் புற்றுநோய்க்கு வழிகோலுவதாக அமைகின்றது. ஒரு பெண் தனது வாழ்க்கையில் பாலியல் ரீதியான உறவில் ஈடுபட ஆரம்பிக்கும் போது இத்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியமுள்ளதாகவும் இளவயதுப்பெண்களைஅதிகளவில்தாக்குவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கிருமித் தொற்றே பிற்காலத்தில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படப் பெரும் சாத்தியமாக விளங்குகின்றது. ஆனாலும் வயது வித்தியாசமின்றிஎல்லாப்பெண்களுக்கும்கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது. அதனாலேயே பெண்கள் இது பற்றிய விழிப்புணர்வுடன் கூடுதலான வரை பாதுகாப்பாக இருப்பது சிறந்தது.

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் அறிகுறிகள்

நோயின்முதற்கட்டநிலையில்எதுவிதஅறிகுறிகளும் காணப்படமாட்டாது. முதற்கட்ட நிலையைத் தாண்டிய பின்னர் பின்வரும் நோய் அறிகுறிகள் காணப்படும்.

1. உடலுறவின் பின்னர் யோனி வழியினூடாக குருதி வெளியேறல்
2. யோனிவழியினூடாகஒழுங்கற்றகுருதிப் பெருக்கு 2மாதவிடாய்களுக்கு இடைப்பட்டகாலப்பகுதியில்ஏற்படும்.
3. யோனி வழியினூடாக க் குருதி கலந்த இளஞ்சிவப்புவர்ணத்தில்கசிவுவெளியேறல் பின்னர் இது குருதிப் பெருக்காக மாறல்.
4. துர்நாற்றமான யோனிவழிக் கசிவு வெளியேறல்.
5. மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னரும் அசாதாரணமான குருதிப் பெருக்கம் ஏற்படல்.

இவ்வறிகுறிகள் புற்றுநோய் தவிர ஏனைய பெண்நோயியலுக்கும்பொதுவான அறிகுறிகளாக இருந்தபோதும் அசட்டை செய்வது நன்றன்று

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் அதிகமாகத் தாக்கப்படும் அபாய நிலையில் உள்ளவர்கள்

1. மிகஇளவயதிலேயே பாலியல்நடவடிக்கைகளை ஆரம்பித்தவர்கள்.
2. மனித பபிலோமா வைரஸ் தொற்றுடைய பெண்கள்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் துணைகளைக் கொண்டுள்ளவாகள்.
4. புகைப்பழக்கம் உள்ள பெண்கள் அல்லது புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்கள்.
5. சில நோய்களுக்காக நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும் மருந்து வகைகளை உள்ளெடுப்பவர்கள்.
6. கடந்த காலங்களில் பாலியல் ரீதியான தொற்றுநோய் வரலாறு உடையவர்கள்.


இது தவிர உடற்பருமன் கூடிய நிலை மாதவிடாய் சாதரணமாக நிற்க வேண்டிய காலத்தைவிடகாலந்தாழ்த்தி மாதவிடாய் நிற்றல். முதலாவதுபிரசவம்30வயதுக்கு மேற்பட்டிருத்தல் போன்ற காரணங்களும் அடங்கும்.

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கக் கூடியதா?

ஏற்கனவே கூறியது போன்று இந்தப் புற்றுநோயானது தடுக்கப்படக்கூடியது. எப்போதெனில் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கக் கூடுமாயின் ஆம்...! இந்தப்புற்றுநோயானது மிக மெதுவாகவேபுற்றுநோயாகபரிணமிக்கிறது. புற்றுநோயாக பரிணமிப்பதற்கு முன்னர் இந்த நோயைக் கண்டறிய முடியுமாயின் முழுமையாக கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாக உள்நோக்கிப் பரவி உருவெடுப்பதை முற்றாகத் தவிர்க்கலாம்.

### நீங்கள் எதிர்காலத்தில் இந்தப் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்துக்காரணிகளைக் கொண்டவரா என எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?

"பப் (Pap) பரிசோதைனை என்றழைக்கப்படும் "கருப்பைக் கழுத்துப் பாயப் பூச்சுப் பரிசோதனையின் மூலம்நீங்கள்எதிர்காலத்தில் இந்தப் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்துக் காரணிகளைக் கொண்டவரா என்பதனைத் தெரிந்து கொள்ளலாம். இந்தப்பரிசோதனை மூலம்கருப்பைக்கழுத்துப் புற்றுநோயாக உருவெடுக்கக் கூடிய மிக



மிகஆரம்பநிலையிலுள்ளகருப்பைக்கழுத்து இழைய மாற்றங்களை கண்டறிய முடியும். இந்தப் "பப்" பரிசோதனையானது, யோனி மார்க்கத்தினுள் ஒரு சிறிய உபகரணத்தை (Spatula) உட்செலுத்தி எடுக்கப்படும் ஓர் சிறு பரிசோதனையாகும். உட்செலுத்தப்படும் உபகரணத்தின் உதவியுடன் கருப்பைக் கழுத்துப்பகுதியிலுள்ளபாயம்போன்றதிரவம் மெல்லியதடவல்மூலம்எடுக்கப்பட்டுபரிசோதிக்கப்படுகிறது. இது புற்றுநோய்க்கு முந்திய நிலையை அடையாளம் காண உதவுகிறது.

இந்தப் பரிசோதனையைச் செய்து கொள்ளுமாறு அதிகம் பரிந்துரை செய்யப்படுவோர் "பப்" பரிசோதனையானது ஆரோக்கியமாக வாழும் பெண்களுக்கு மேலும் ஆரோக்கியத்தைஉறுதிப்படுத்தி மேம்படுத்தசெய்யப்படும்பரிசோதனையாகும்.

இந்தப்பரிசோதனையானது பொதுவாக முதலாவது தாம்பத்திய பாலியல் நடவடிக்கைகளை ஆரம்பித்து 5 வருடங்களின் பின்னர் எல்லாப்பெண்களுக்கும்பரிந்துரைசெய்யப்படுகிறது. எமது நாட்டின் சுகாதார சேவையினரால்நாடளாவியரீதியில்சுகாதாரவைத்திய அதிகாரிபணிமனையினூடாகநடத்தப்படும்" சுகவனிதை யர் மருத்துவச் சிகிச்சையில் (Well Women Clinic) இந்தப் பரிசோதனை செய்யப்படுதல் ஒரு முக்கிய செயற்பாடு ஆகும். இங்கு 35 வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பெண்களும் இந்தப் பரிசோதனையை செய்துகொள்ளலாம். நாட்டிலுள்ளஒவ்வொரு பெண்களும் இந்தப் பரிசோதனையை செய்துகொள்ளலாம். நாட்டிலுள்ளஒவ்வொரு பெண்களும்அவர்களது 35 ஆவது வயதிலிருந்து ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது இந்தப்பரிசோதனையைசெய்திருத்தல் வேண்டும் என்பது எமது சுகாதார சேவையின் இலக்காகும்.

நீங்கள் உங்கள் அருகாமையிலுள்ள சுகவனிதையர் மருத்துவ சிகிச்சை பற்றிய தகவல்களை உங்கள் பிரதேச மருத்துவ மாது/ குடும்பநல சேவை உத்தியோகத்தர் மூலம் அறிந்து கொள்ளலாம். இதனைத் தவிர அரச வைத்தியசாலைகளில் நடைபெறும் எல்லா சுகவனிதயர் கிளினிக்குகளிலும் பெண்நோயில் கிளினிக்குகளிலும் செய்து கொள்ளலாம்.

பரிசோதனையின் முடிவுகள் உங்கள் பகுதி மருத்துவ மாது மூலமாகவே அறிந்து கொள்ளலாம். பரிசோதனைமுடிவுகள் "சாதாரணமானது" எனில் இதுவே மிகவும் வேண்டப்படும் செய்தியும் இன்பமான செய்தியுமாகும். நீங்கள்5வருடங்களின்பின் இந்தப்பரிசோதனையைமீளசெய்து கொள்ளலாம். பரிசோதனை முடிவு "அசாதாரணமானது" எனில் கண்டறியப்பட்டமாற்றத்தைஉறுதிப்படுத்த நீங்கள் மேலதிகபரிசோதனைக்கும் வைத்தியஆலோசனைக்கும்பரிந்துரைக்கப்படுவீர்கள்.

இந்தப் பரிசோதனையை சுகவனிதையர் மருவ சிகிச்சை மூலம் கடந்த சில ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் நாடளாவிய ரீதியில் மிகக் குறைந்த பெண்களே இதன்மூலம்பயன்பெறுகிறார்கள். அதிலும் குறிப்பாக அண்மைக் கால புள்ளிவிவரங்களின்படி வடமாகாணத்தில் இப் "பப்" பரிசோதனை மூலம் பயன்பெறு வீதமானது இலங்கையின் ஏனைய மாகாணங்களில் பயன்பெறு வீதத்தை விடகுறைவாகவே உள்ளது.

"நோய் வந்த ஒருவரே வைத்திய சாலையையோ வைத்திய உதவியையோ நாடு வார் "என்றதவாறான அபிப்பிராயம் எம்மவர்கள் மத்தியில் வேரூன்றி இருகின்றது. இதனால்இப்"பப்"பரிசோதனை போன்ற பல்வேறு நோய் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் (Preventive Measures) பயன்பாட்டை முழுமையடையச் செய்யாது தள்ளிநிற்கின்றது. அத்துடன்பெண்கள் இயல்பாகவே பயந்த சுபாவமும் கூச்ச சுபாவமும் உள்ளவர்களாகக்காணப்படுவதாலும்இந்தப் பரிசோதனையின் தேவைபற்றி அறிந்திருந்தும் அதன் பயன்பாட்டைத் தவிர்க்கிறார்கள்.

உண்மையில்இந்தப்பரிசோதனையைசெய்வதற்கு 5தொடக்கம் 10 நிமிடங்கள் மட்டும் போதுமானது மாதவிடாய் பெருக்கு அல்லாத ஒரு நாளில் இந்தப் பரிசோதனையைச் செய்யலாம். வலி ஏற்படுத்தப்படும் விதத்திலோ பயப்படத்தக்கவிதத்திலோ எந்தச் செயற்பாடுகளும்இல்லை. உங்கள்அந்தரங்கம்பேணப்படும்எப்போதும்உங்கள்நலனில்உங்களைவிட அக்கறையுள்ள உங்கள் பகுதி மருத்துவ மாதுமற்றும்பொதுச்சுகாதாரதாதியசகோதரி போன்றோர் உங்களுக்குப் பக்கபலமாக பரிசோதனை நடைபெறும் வேளையில் இருப்பார்கள்.

எனவேஇந்தப்பரிசோதனைபற்றியஉங்கள் எதிர்மறையான எண்ணக்கருக்கள் நிலைப்பாடுகள் ஏதேனுமிருப்பின் அவற்றை மாற்றுங்கள். ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுக்கக் கூடிய ஒரு நோயான இந்தக் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை வருமுன் தடுப்பதற்குத் தயாராகுங்கள். ஆரோக்கியமான பெண்களேநாட்டினதும், வீட்டினதும்ஆரோக்கியத்தின் மூலதனமாகும்.

தற்போதுகருப்பைக்கழுத்துப்புற்றுநோய்க்கு ஏதுவான மனித பப்பிலோமா வைரஸ் இற்குரியதடுப்பூசியானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத்தற்போது தனியார் வைத்தியசாலைகளிலேயே பெற்றுக் கொள்ளலாம். எனினும் இது பாலியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராகவே பெற்றுக் கொள்வதன் மூலமாகவே இதன் உச்சபயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் அறிகுறிகள் தோன்றும் வரை காத்திராது எமக்குஇலவசமாகவும்இலகுவாகவும்ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள "பப்" பரிசோதனை சேவையை நேரத்தோடு பயன்படுத்தி உங்கள்ஆரோக்கியமானவாழ்வைஉறுதிசெய்து கொள்ளுங்கள்.

கட்டுரையாளர்:
PHNS Trainee
Post Basic School of Nursing, Colombo




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜாதி ராஜர்!
ராஜகுலோத்துங்கர்!
ராஜமார்த்தாண்டர்!
ராஜகம்பீரர்...!
வேட்டையராஜா!!!
வருகிறார்
பராக்

பக். 23

அரைத்த
மாவை
அரைக்க
வேண்டாம்

பக். 35



ஒருபோதும்
பிளாஸ்ரிக்
வேண்டாம்

பக். 26




முகப்புத்தகத்தில்
பதிவிடாமல்...

பக். 29

30.04.2017

சூரியகாந்தி
உதயன்




# தமிழர் தாயக முடக்கம்

## முழு உலகுக்கும் உறைக்கட்டும்

தவ பாரதி

எனது மோட்டார் சைக்கிள் பயணம் வழமைபோலவே அன்றும் ஆரம்பமாயிற்று. வீட்டில் ஆரம்பித்து யாழ். நகரை அண்மித்துவிட்டேன். இன்னமும் வீதியில் ஒரு தலைக்கறுப்பையும் காணவில்லை. வழமையாகப் பயணித்திருக்கும் ஏராளம் ஏராளம் வாகனங்களும் இன்று எங்கோ மாயமாகி விட்டன...! வேலைக்குப் புறப்படும்போதுகூடக் கவனித்திருக்கிறேன். குக்கிராமமான எனது ஊரிலுள்ள ஒன்றிரண்டு கடைகள்கூட இன்றைக்குத் திறந்திருக்கவில்லை. என்னைப் போலவே சங்கதி அறியாத ஐந்தாறு காக்கைகள் வீதியிலிருக்கும் மின்சாரக் கம்பிகளில் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருக்கின்றன. நேரே அவற்றுக்கு முன்னால் இருக்கும் அந்த முஸ்லிம் உணவகமும் இன்று திறக்காது என்பதன் உள்ளார்ந்தம் அவற்றுக்குப் புரிந்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் முற்றுமுழுதாகவே நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகள்- தமிழர் தாயகம் இப்பொதுதான் முதல் தடவையாக இவ்வாறு ஸ்தம்பித்திருக்கின்றன. அதைத் தமிழ்-முஸ்லிம் மக்கள் இணைந்து சாத்தியப்படுத்தியிருக்கின்றார்கள். ஆம் எந்தவொரு அரசியல் கட்சிகளின் தலையீடுகளும் இன்றி, எந்தப் பொது அமைப்புக்களின் அறைகூவலுமின்றி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான சாதாரண மனிதர்களால் விடுக்கப்பட்ட வேண்டுதலுக்கு அமைவாக குறித்த போராட்டம் அரங்கேறியிருக்கின்றது. அதுவும் மிகப் பரந்தளவில், பெரியளவுடனான வெற்றியுடன்.

■ ■ ■

ஆம் இப்போது வெறிச்சோடிப்போய் இருப்பது நான் பயணித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண நகரம் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் அனைத்து மூலை முடுக்குகளும் இவ்வாறுதான் முடங்கிப்போயிருக்கின்றன. இந்தப் போராட்டத்தின் மையப்புள்ளியாகத் திகழும் கிளிநொச்சி இதனால் இன்னமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதையடுத்து முல்லைத்தீவு, வவுனியா, அத்துடன் நாட்டின் கிழக்கு மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் ஆதரவால் அந்தப்பகுதிகளும் முற்றிலுமாய் முடங்கியிருக்கின்றன. இப்போதாவது உலகமும் இந்த நாட்டு அரசும் தொடர்ந்தும் நீதி கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் தமது உறவுகளைத் தொலைத்த மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தாம் விரைந்து தீர்வளிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருப்பார்கள்.

■ ■ ■

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு முன்னேடுத்திருந்த போர் நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டமை ஒருபுறம் நிகழ்ந்திருந்தாலும் மறுபுறம் கண்மூடித்தனமாக ஏராளம் ஏராளம் அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். 2009களில் இடம்பெற்றிருந்த இறுதிப் போரின்போது இது மிகவும் அதிக அளவில் இலங்கை இராணுவத்தால் கையாளப்பட்ட கொடூரமாயிற்று. அத்துடன் இறுதிப் போரில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் தவிர உறவுகளால் நேரடியாக இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டிருந்தவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், மற்றும் இன்றுவரை முடிவின்றி அரசியல் கைதிகள் எனும்பெயரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகள், விசாரித்து விடுவதாகச் சக உறவுகளுக்கு மத்தியிலிருந்து பிரித்துக் கூட்டிச்சென்ற இளைஞர்கள், யுவதிகள். குறித்த தமது உறவுகளின் நிலை என்ன என்று கேட்டும் தமக்கு நீதி தரக்கோரியும் உறவுகளைப் பறிகொடுத்த பாதிக்கப்பட்ட மக்கள் பல நாட்களாகப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர், தொடர்ந்தும் வருகின்றனர்.

■ ■ ■


வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் நீதி தரக்கோரி வீதி ஓரங்களில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அவர்களை இந்த அரசோ, உலக நாடுகளோ கண்டுகொள்வதாக இல்லை. அவர்களின் தொடர் போராட்டங்கள் ஊதாசீனம் செய்யப்பட்டு வந்தன. கிளிநெச்சியில் அந்தப் போராட்டங்கள் அன்றுடன் 67நாள்களையும், வவுனியாவில் 63நாள்களையும் முல்லைத்தீவில் 51 நாள்களையும் கடந்தும் நீண்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலையில்தான் கையில் அகிம்சை எனும் மிகவும் உயரிய ஆயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்ட அந்த மக்கள் தமது உறுதியிலிருந்து சோர்ந்துவிடாமல் தமக்கு ஆதரவாக அனைத்து மக்களையும் ஒன்றுதிரட்டியிருக்கின்றனர். அதுவே இன்று முழு முடக்கமான போராட்டமாகப் பரிணமித்திருக்கின்றது. இப்போது அந்த மக்கள் போராட்டத்தின் மிகப்பெரும் சக்தியையும் இந்த உலகம் உணர்ந்திருக்கும்.

■ ■ ■

இத்தகைய பேராட்டங்களில் தனியார் சேவைகள் அனைத்தும் முடக்கப்படுவது வழமையானதாயினும் அவை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. ஆனால் இம்முறையே தனியார் சேவைகள் அனைத்தும் முற்றுமுழுதாகவே முடக்கப்பட்டன. இத்தகைய தனியார் சேவைகளை முடக்கிக் கொள்வதைவிட அரச சேவைகளை முடக்குவதாலேயே அரசுக்கு அதிகளவான அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும். அதற்கமையவே குறித்த போராட்டத்தின்போது அரசசேவைகளும் முற்று முழுதாகச் செயலிழந்தன. பல வழிகளிலும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்த கவனிக்கப்படாத மக்களின் போராட்டம், இவ்வாறாகப் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவே இன்று தனது வீரியத்தை, தனக்கு நீதி வழங்கப்படுவது அவசியம் என்பதை அது முழு உலகுக்கும் செவிகளில் உறைக்கும்படியாக உரத்துக் கூறியி ருக்கின்றது. அரச, தனியார் சேவைகள் முடக்கப்பட்டிருந்தமைக்கு மறுபுறமாக அனைத்துத் தமிழ் மக்களும் புலிகளுக்குப் பின்னரான காலப்பகுதியில் ஒருமித்து, ஒன்று திரண்டு ஒரு பெரிய போராட்டத்துக்கு ஆதரவளித்திருந்தனர் என்ற வரலாற்றுப் மதிப்பையும் இந்தப் போராட்டம் உலகுக்கு உணர்த்தியிருக்கின்றது. அத்துடன் தமிழ் அரசியல் கட்சிகளுடன் சகோதர முஸ்லிம் கட்சிகளும் இணைந்து செயற்பட்டு இந்தப் போராட்டத்தைக் கனதியடையச் செய்திருக்கின்றன. தமிழ் மக்களின் இத்தகைய கோரிக்கைகளை ஊதாசீனம் செய்யாது அவர்களுக்கு நீதி கிடைக்கும் வழிவகைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்பதை இடித்துரைத்துச் சென்றிருக்கின்றது இந்தப் போராட்டம்.

இத்தகைய பேராட்டங்களில் தனியார் சேவைகள் அனைத்தும் முடக்கப்படுவது வழமையானதாயினும் அவை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. ஆனால் இம்முறையே தனியார் சேவைகள் அனைத்தும் முற்றுமுழுதாகவே முடக்கப்பட்டன. இத்தகைய தனியார் சேவைகளை முடக்கிக் கொள்வதைவிட அரச சேவைகளை முடக்குவதாலேயே அரசுக்கு அதிகளவான அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும்





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜாதி ராஜர்! ராஜகுலோத்துங்கர்! ராஜமார்த்தாண்டர்! ராஜகம்பீரர்...! வேட்டையராஜா!!! வருகிறார் பராக்!




யாதுமாகி

வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் ஒன்றும் இலேசுப்பட்டவரல்ல. மிகவும் கொடூரமானவர்! அங்குள்ள இதர மனிதர்களுக்கு அவரைக் கண்டால் சிறுநீர் பீறிட்டுப் பாய்கின்றது.

உகாண்டாவின் சர்வதிகாரியாகவிருந்த இடிஅமீனைப் போன்று இவரும் மனிதர்களைத் தின்னும் அனைத்துமுண்ணியோ...! என்கின்ற சந்தேகம் இப்போது பலரிடத்தும் ஏற்பட்டிருக்கின்றது. அவர் எவற்றையெல்லாம் உணவாகக் கொள்வார்? கல், மண் எனக் கட்டடங்களையா...? அல்லது நாய்க்குட்டிகள், கார், கணினிகளையா...? எனப் பலர் கேலி செய்கின்றார்கள்.

மனிதர்கள், அழகிய பெண்கள், மனைவிமார்கூட இவருக்கு உணவுதான்...! இவை ஆச்சரியமாகவும் கேலியாகவுமே நாமக்குப்படுகின்றன. ஆனால் இவைதான் உண்மை என்பதாய் ஆங்காங்கே கதைகள் பல பரவிக்கிடக்கின்றன.

சில பருவங்களில் அவருடன் கைகோர்க்கும் இளம் பெண்களைச் சில காலங்களின்பின்னர் காணக்கிடைப்பதில்லை. அவர்கள் பற்றிய எந்தச் செய்திகளும் வெளிவருவதில்லை. இப்போது சில காலங்களாக மனைவி என்று கிம்மோடு உலாவிய அந்தப் பெண் பற்றிய தகவல்கள்கூடப் பொதுவெளியில் கோள்விகளைக் குவித்துள்ளதாகச் சொல்கின்றார்கள்.

**எச்சரிக்கை**

இவர் பிறந்த காலம், படித்த படிப்பு என்பன பற்றிய தகவல்களில் கூகுளும் குழம்பிப் போயுள்ளது. வெறும் 32வயதுகளை மாத்திரமே உடைய இளம் அரச தலைவரான இவர், தன்னைப் போலவே அனைவரும் தலைமுடி வெட்டியிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டு அதன்படி ஒழுகாதவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை அளித்திருக்கின்றார். மறுபுறம் தன்னைப்போல தலைமுடி வெட்டியவர்களையும் தனது பெயரைக் கொண்டுள்ளவர்களையும்கூட அவர் வதைத்துள்ளார். இதனால் அவருக்குப் பிடித்தமான எதைச் செய்வது எதைச் செய்யக்கூடாது என்று தெரியாமல் அந்த நாட்டுவாசிகள் திணறிப்போய் உள்ளனர்.

ஆண், பெண் என நிறைந்த தொகையிலிருக்கும் வடகொரியப் படைவீரர்களுக்கு இவருடைய அடாவடித்தனங்களால் எந்த நேரமும் நடுக்கம். இவரால் ஏராளம் அந்தரிப்புக்களை வடகொரிய மனிதர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். வடகொரியாவினர் மாத்திரமல்ல முழு உலகத்தினருமே இப்போது இவரால் நடுங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர். அமெரிக்காவுக்கும் தனது அயல் நாடுகளுக்கும் அணுகுண்டுப் பீதியை இலவசமாக அளித்துவரும் இவர் மூன்றே குண்டுகளில் முழு உலகமக்களின் மூச்சையும் நிறுத்திவிடுவேன் என்று இப்போது எச்சரிக்கை வேறு விடுத்திருக்கின்றார்...!

**அதிரடி நடவடிக்கை**

கிம் இப்படித்தான் சில வன்மங்களைச் சர்வசாதாரணமாக நிகழ்த்திச் செல்கின்றார். ஆனால் ஏனையவர்களோ பதறியடிக்கின்றனர். அணு ஆயுதம் என்பதை வடகொரியா தயாரித்து விட்டாதோ இல்லையோ தெரியவில்லை. இப்போது அமெரிக்காகூடப் பதறிப்போய்த் தனது போர்த்தளவாடங்களை வடகொரியா நோக்கி நகர்த்தியிருக்கின்றது. ஆனால் உள்ளூரில் அணு ஆயுதமா...? வடகொரியாவிடமா...? அப்பிடியிருந்தாலும் அது அரை குறையாகத் தான் வேலை செய்யும் என்பதாகவே கதையடிபடுகின்றதாம்...! ஆனாலும் கிம் மிகவும் கோபக்காரரும் கடுமையானவரும் என்பது உறுதி. அவருக்கு அதைவிட்டால் அந்த நாட்டை ஆள்வதற்கு வேறெந்தத் தகுதிப்பாடுகளும் இல்லை என்பதும் அடுத்த பிரச்சினை. இப்போது அவரைக் கண்டு உள்ளூர்வாசிகளும் உலக வாசிகளும் பயந்து சாவது மட்டும் உண்மையாகவுள்ளது. சிலரை அவர் கொடூரமாகக் கொன்றிருக்கின்றார். இவர் தன்னுடைய முன்னாள் காதலி என்று கருதப்படும் பெண் ஒருவரைச் சுட்டும், உறவினர் ஒருவரை நாய்களுக்கு இரையாக்கியும் தனது அணு ஆயுதத் திட்டங்களை எதிர்த்த தன் சக அதிகாரிகள் சிலரது கதையை முடித்துமிருக்கின்றார்.

ஒருதடவை(கடந்த ஒலிம்பிக்) தனது பரம எதிரியாகவிருக்கும் அயல் நாடான தென்கொரியாவை விடத் தனது நாட்டு வீர, வீராங்கனைகள் விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்களைப் பெறவில்லை என்ற காரணத்தால் அவர்களைத் தனது நாட்டில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுத்தப்போவதாகக் கர்ச்சித்திருந்தார். அத்துடன் தென்கொரிய வீராங்கனை ஒருவருடன் இணைந்து போஸ் கொடுத்துச் செல்பி எடுத்திருந்த இன்னுமொரு வடகொரிய வீராங்கனை, நாட்டுக்கு வந்தவுடன் சிறைப்படுத்தப்படுவார் எனவும் கிம் குமுறியிருந்தார். அதன் பின்னர் அந்த வீராங்கனையின் நிலை என்னவாயிற்று என்ற தகவல்கள் இல்லை. அத்துடன் அரசின் கொள்கைகளுடன் சார்ந்து பேசாதவர்களுக்கும் அரசுக்கு எதிராக அசையும் அங்குள்ள அரசியல் வாதிகளையும் உடனடியாகச் சிறைப்பிடிக்கும் இவர் சிலருக்குக் கடுமையான தண்டனைகளைக் கொடுத்திருக்கின்றார். அதிலும் சிலரின் நிலை இன்றைக்கு என்ன என்பதை எப்படித் தேடினாலும் அங்கு அறிந்துகொள்ள முடியாமலேயே இருக்கின்றது.

**போதையும் பெண்களும்**

குடும்ப ஆட்சியைக் கொண்ட வடகொரியாவில் தனது தந்தைக்கு அடுத்ததாக ஆட்சிக்கு வந்தவரே இந்தக் கிம் ஜோங் உன். மறைந்த அவருடைய தந்தை கிம் ஜோங் இல்லின் மூன்றாவது மற்றும் கடைசி மகனான இவர் 2010ஆம் ஆண்டின் கடைசிக்காலங்களில் இருந்து, நாட்டுத் தலைமையை ஏற்பதற்காகத் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தவர். தந்தையினுடைய ஒரு வழி மனைவிக்குரித்தான வாரிசான இவருடைய ஆட்சிக்கு மறுதாரத்தின் வாரிசுகளால் போட்டியில்லாவிடினும் அவர்கள் இவருக்குப் பயந்து தலைமறைவாகவே வாழ்கின்றனர். அதில் ஒருவரைத்தான் கிம் தேடிப்பிடித்து மலேசியாவில் வைத்துக் கடைசியாகக் கொன்றிருந்தாகச் சந்தேகம்.

ஏனைய கிம்மின் உறவுகள் சிலர்கூட இவருக்குப் பயந்து இன்றுவரை ஒளிந்தே வாழ்கின்றனர். ஏன் கிம்மைக்கூடச் சில காலங்களுக்கு ஒருதடவை தான் வட கொரியர்களே கண்டுகொள்கின்றார்களாம். ஆனால் கிம்மோ முழு உலகத்தையும் பீதிக்குள்ளாக்கி விட்டுப் போதையும் பெண்களும் நித்திரையுமாகச் சுகபோக வாழ்க்கையை வாழும் ஒரு சர்வதிகார மன்னராகவே வடகொரியாவை ஆண்டு வருகின்றார்.



முழு உலகமும் அவர் எப்போது விழித்துக் கொள்வார், அடுத்து என்ன குண்டைப் பரிசோதிப்பார் என அறிய இப்பேதேல்லாம் ஆவலுடன் காத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் எனும் அடையாளம்!



ஜெ.ரித்திக்கா

இந்த நாட்டில் இன, மத வெறி பிடித்து அலையும் சிங்களத்தின் உக்கிரத்தால் தமிழர்களின் இருப்புக் கேள்விக்குறியாகியது. தமிழ் மக்களைக் கொன்று குவிக்கப் பல கலவரங்களைச் சிங்கள அரசு நிகழ்த்தியது. இதனால் இந்த நாட்டுக்குள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ முடியாது என்பதை உணர்ந்த தமிழர்கள் புகலிடம் தேடி மேலை நாடுகளுக்கும் வேறுபல நாடுகளுக்கும் புலம்பெயரத் தொடங்கினர். தமிழர்களின் புலப்பெயர்வு என்பது உள்நாட்டு நிலவரத்துக்கேற்ப காலங்களுக்குக் காலம் மாறுபட்டிருந்தாலும் முற்றுப் பெறாமல் இன்றுவரை அது தொடரவே செய்கின்றது.

நேரடியாகவே சிங்கள அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட பலர் இதன்போது நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினாலும், எந்தவொரு பாதிப்பையும் அனுபவிக்காத பலரும்கூட இதன்போது தங்களுக்கும் பாதிப்பு எனும் போர்வையுடன் மெல்ல வெளித்தேசங்களுக்கு நகர்ந்தனர். இந்த நிலை ஆரம்ப கலவரத் தோற்றகாலமான 1958களில் தொடங்கியது. இறுதிப்போர் நிகழ்ந்து முடிந்தாலும் அது இன்று வரைத் தொடர்ந்தேயுள்ளது. இதன் மூலம் அன்றிலிருந்து இன்றுவரை சிங்களவர்களின் தமிழர்கள் மீதான அடக்குமுறை ஓயவில்லை என்ற உண்மை ஒருபுறம் ஓங்கி ஒலித்தாலும், மறுபுறம் மௌனமாய் நழுவுகின்றது இதன் பாதிப்பைக் காரணமாக்கி நாட்டை விட்டு வெளியேறும் சில தமிழர்களின் பிழைப்பு.

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்ற, சென்றுகொண்டிருக்கும் எமது உறவுகளான குறித்த புலம்பெயர் தமிழர்களின் வாழ்க்கை அந்த நாட்டில் எவ்வாறு அமைகின்றது?

அங்கு அவர்கள் மிகவும் மகிழ்வான சூழலில் தமது குடும்பங்களுடன் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள நம்மவர்களுடன் ஒப்பிடுகையில் பணம், வாழ்க்கை வசதி போன்றன அவர்களிடத்தே அதிகமாகவே கையிருப்பிலுள்ளன. அங்கு அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கள், அவர்களுடைய நலன் பேணுவதற்காக அந்த நாட்டு அரசு செய்து கொடுக்கும் வசதிகள் என்று இன்னும் ஏராளம் ஏராளம் வாழ்க்கை அணுகுமுறைகளை இங்குள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் நமது புலம்பெயர் உறவுகள் மேற்சொன்ன வசதிகளை அங்கு கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் அங்கு அவர்கள் மத்தியில் புதியதொரு மலினமான கலாசாரம் தோன்றியுள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் கலை மற்றும் எழுத்துச் செயற்பாடுகள் தான் அவை.

குறித்த புலம்பெயர் தமிழர்கள் அங்கு தொடர்ந்து பல காலங்களாகத் தங்கிவிட்டவர்களாகவும் தமக்கான நிரந்தர தொழில்பீடத்தை அங்கு நிறுவியவர்களுமாகவே அதிகம் காணப்படுவர். அவர்களுக்குரிய அனுபவ அறிவு என்பதோ உலக அறிவு என்பதோ கல்வி மற்றும் வாசித்தறியும் திறன் என்பதோ இங்கு உள்ளூரிலுள்ள சாதாரண ஒரு தொழிலாளியைக் காட்டிலும் அவர்களிடத்தே குறைவாகவே காணப்படும். அதை விருத்தி செய்துகொள்ளக்கூட அவர்கள் முயற்சி செய்திருக்க மாட்டார்கள். ஆனால் தொழில்நுட்பவசதி, அவற்றைக்கையாளும்திறன் உள்ளிட்ட சில கடப்பாடுகளை அறிந்துகொண்ட அவர்கள் தம்மிடம் மேல் மிகுதியாகவுள்ள டொலர்ஸ், மற்றும் பவுண்ட்களையும் எஞ்சியுள்ள ஒருதொகை நேரத்தையும் போக்கவேண்டித் தம்மைப் பிரபல்யப்படுத்த முற்படுகின்றனர். இதன்வழி எழுத்துத்துறைக்குள் இலகுவாகப் புகுந்து கொள்ளும் இவர்கள் கனதியற்ற, சுவை குறைந்த எழுத்துக்களை உள்ளடக்கி படைப்பு எனும் போர்வையில் சில வெளியீடுகளை நிகழ்த்தித் தம்மைப் பிரபல்யப்படுத்தும் கைங்காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

சில காலங்களில் விடுமுறையின்போது சொந்த ஊருக்குள் வருகை புரியும் அவர்கள் இங்குள்ள சிலருடன் இணைந்து அங்கு தாம் செய்த இத்தகைய விடயங்களை இங்கும் மேடையேற்றுகின்றனர். அவர்களின் பொருளாதார நலன்களை ஏந்திக்கொள்ளும் இங்குள்ள ஒரு சிலரால் இது அவர்களுக்குச் சாத்தியமாகின்றது.

அத்துடன் உள்ளூர்களில் மவுசு கிடைக்கும் வேறு சில பண்பாடு, கலாசார செயற்பாடுகளுக்கு இவர்கள் பணத்தை வாரி இறைத்து இங்குள்ளவர்களுடன் கொண்டாடி மகிழ்ந்து கொள்வதன் மூலம் தமக்கு ஆளணியைச் சேர்த்துக் கொள்கின்றனர். மேலதிகமாகக் குறித்த எழுத்துத் துறைசார்ந்து ஏராளம்பேரை ஒருங்கிணைத்துக் கொண்டு தமது தரங்குறைந்த வெளியீட்டை இங்கும் நிகழ்த்திச் செல்கின்றனர். அவர்கள் வெளியிடும் அந்தக் குறிப்புகளுக்கு இங்குள்ள ஒருசில படைப்பாளிகளின் ஆசீர்வாதங்கள் கிடைக்கலாம்.

ஆனால் சாதாரண கூலிவேலை செய்து பிழைக்கும் உள்ளூர்க் கலைஞன் ஒருவனிடத்தே உயர்ந்திருக்கும் எழுத்தாழுமை, சுவையுடன் தனது படைப்பைப் பார்வையாளனுக்குக் கடத்தும் திறன் போன்ற பன்முக ஆற்றலில் ஏதாவது ஒன்றுகூட பணம்கொண்டு படைக்கப்படும் குறித்த புலம்பெயர் வாசிகளின் வெளியீடுகளில் இருக்காது. அவை காலம் காலமாகப் பேசப்படும் எனும் அவாவில் பணம் கொண்டு படைக்கப்பட்டாலும் அந்த நொடியிலயே உயிர் நீத்து விடுகின்றன.



# தெருக்கூத்து... 2

சாரா

வீதிகள் எங்கும் மனிதர்கள் வேகமாக நகர்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமது வெவ்வேறு தேவைகளுக்காக அதில் பயணிக்கத் தலைப்பட்டுள்ளவர்கள். இதனால் வீதிகள் மனிதர்களால் நிறைகின்றன. அந்த மனிதர்கள் தத்தமக்குச் சுயமாக அமையப்பெற்ற தமது மூளையின் கட்டளைக்கு அமைய அங்கு செயற்படுகின்றனர். தமது கட்டுப்பாட்டிலேயே வீதிகளில் தத்தமது வாகனங்களைச் செலுத்தும் வேலையை மனிதர்கள் செய்கின்றார்கள். ஒரு மனிதனின் மூளை வீதியில் அடுத்துச் செய்யப்போகும் வேலை என்ன என்பது அங்கு பயணிக்கும் மற்றைய மனிதர் அறிய வாய்ப்பில்லை. இதனால் தான் தமது வெவ்வேறு தேவைகளுக்காகப் பயணிக்கும் வெவ்வேறு சிந்தனைகள் கொண்ட மனிதர்கள் நிறையும் இடமாகத் திகழும் குறித்த வீதிகளில் இறங்கிவிட்டால் மனிதர்கள் அனைவரும் பொதுவான நடைமுறை ஒன்றை – வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவைக்கு ஆளாகின்றனர். இதனாலேயே குறித்த வீதிகளில் பயணிக்கும் மனிதர்கள் தத்தமக்கேற்றபடி சிதறியடித்துச் சென்று ஒருவருக்கொருவர் விபத்துக்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் அனைவருக்கும் பொதுவானவை என்று வகுக்கப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதுவே சட்டமாக்கவும்பட்டுள்ளது.

மனிதரைப் பொறுத்தவரை வீதி என்பது தனக்கு மட்டுமுரியதல்ல. அது மனிதர்கள் அனைவருக்கும் உரியது. அதில் மற்றவருக்கு இடையூறளிக்காமல் தாமும் பயணித்து மற்றவர்களும் பயணிக்க வழிவகை செய்ய வேண்டும். அது ஒரு தர்மீகக் கடமையுணர்வும்கூட.

அது யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பிரதான வீதி. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை அடுத்து சில மீற்றர்களுக்குள் செங்குத்தான வளைவுடன் கூடியதாக யாழ். நகரத்துக்குள் பிரவேசிக்கின்றது. அங்கிருந்தும் மனிதர்கள் இங்கிருந்தும் மனிதர்கள். அவர்களுள் யாழ்ப்பாண மாவட்ட செயலக, அதன் அயலிலுள்ள பிரதேச செயலக மற்றும் பாடசாலையினர் சார்ந்த ஏராளம் ஊழியர்கள் பயணிக்கும் நேரமும் கூடுகின்றது. அந்தப் பிரதான வீதி வழியாக யாழ்ப்பாண நகரத்துக்குள் நுழையவேண்டிய திசையில் பயணித்தக் கொண்டிருக்கும் குறித்த அரச ஊழியர்கள் அனைவரும் நகரை நோக்கி வந்தவர்களாய்த் தாம் இயக்கிக் கொண்டிருக்கும் வாகனங்களின் வலப்புறச் சமிக்ஞைகளை நகருக்குள் நுழைவதன் பொருட்டு வலப்புறமாகத் திரும்பவேண்டி ஒளிர விடுவர். ஆனால் அவர்கள் தமது வாகனங்களுடன் வீதியின் மறுகரையில் (இடது பக்கம்) சென்று ஒதுங்கிக் கொள்வர். இப்போது இவர்கள் நகருக்குள் பிரவேசிப்பதானால் இங்கிருந்தும் அங்கிருந்துமாக அந்த வீதியில் பயணித்துக் கொண்டிருக்கும் அனைவரும் தமது பயணத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது அந்தப் பகுதிக்குள் பயணித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் வீதி ஒழுங்கு அறியாமல் வாகனத்தைக் கையிலெடுத்துக்கொண்ட குறித்த நபர்களால் பெரும் இடையூறு, பதற்றம். யாருடன் யாரும் எந்தநேரமும் முட்டிக் கொள்ளும் அபாயம்.

இதற்கு மத்தியில் அவர்களுக்குள் ஓரிருவர் வீதி ஒழுங்கைச் சரிவரக் கடைப்பிடித்து வலதுபுறம் தாம் திரும்ப வேண்டிச் சில மீற்றர்களுக்கு முன்னாலேயே அதற்கான சமிக்ஞையையும் வெளிப்படுத்தி அவதானத்துடன் வீதியின் மத்திய பகுதிக்கு வந்து எதிர்த்திசையினரை அவதானித்துக் காத்திருக்கின்றனர். ஆனால் முன்னர்கூறிய வலப்புறம் செல்ல வேண்டி இடப்புறம் திரும்பிக் காத்திருக்கும் வீதி விதி அறியாத ஊழியர் ஒருவர் வீதியின் நடுப்பகுதிக்கு வந்து முறையாகக் காத்திருக்கும் இவர்களை மோதித் தள்ளிவிடுகின்றார். ஆக வீதி ஒழுங்குகள் பற்றிய அறிவில்லாமல் அந்தப் பகுதிக்குள் நடமாடும் ஒருசிலரால் அவருக்கு மட்டும் ஆபத்து அல்ல முறையாக வீதி ஒழுங்கைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் ஆபத்தே. ஏன் இப்போது யாழ்ப்பாணத்தின் ஒன்றிரண்டு சந்திகளில் பொருத்தப்பட்டுவிட்ட சமிக்ஞைக் கட்டுப்பாடுகளில் மக்கள் காத்திருக்கின்றனர்? முன்னால் ஒருவர் வலப்பக்கமாகத் திரும்பிக் கொள்ளும் நோக்… இடப்பக்கத்தில் காத்திருக்கின்றார். குறித்த நேரத்துக்குள் சமிக்ஞைக்கு ஏற்ப வீதி… வாகனங்கள் முண்டியடிக்கின்றன. அவர் மாத்திரம் யாரையும் நகரவிடாமல் த… வழக்கத்துக்குமாறாகப் போய் நின்றுவிட்ட இடப்பக்கமிருந்து அனைவரையும் இடைமறித்… வலப்பக்கம் வந்து கொள்வார். பின்னால் காத்திருக்கும் அனைவரும் இப்போது சமிக்ஞை குறிக்கு… நேரத்துக்குள் வீதியைக் கடக்க முடியாமல் குறித்த ஒரு நபரால் திக்குமுக்காடும் அவலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் குறிப்பு

## ஈழத்தமிழ் சினிமாவில் குறித்து வைக்கவேண்டிய படைப்பு

சி.ப.வேந்தன்



கதைகள், கவிதைகள், சம்பவங்கள், நாடகங்கள், திரைப்படங்கள் இவற்றில் சில படைப்புக்களே மனதுக்கு மிக நெருக்கமாக வந்து அதிர்வுகளை நிகழ்த்தி விட்டுப்போகின்றன. அவை தந்துபோகும் உணர்வையும் அதுகொண்டுள்ள பெறுமானத்தையும்நாம்காலங்காலமாக அனுபவித்தும் கொண்டாடியும் வருவதில்தான் அவை மேன்மை பெறுகின்றன.மேலும்உருவாகின்றன. பொதுவாகப் பெரிய திரையில் பேசமுடியாத அல்லது பேசுவதற்குரிய இடமல்லாத சில சமூக யதார்த்தங்களையும் அவைபேசுகின்ற கதைகளையும் கொண்டுசெல்லக் கையாளுகின்ற சாதனங்களாகவே குறும்படங்களை நோக்கலாம். (இது மட்டுமே குறும்படத்துக்கான இலக்கணமல்ல) இப்போது தென்னிந்திய சினிமாவில் பெரிய திரையில் காலடி எடுத்துவைக்க பயன்படுத்தப்படும் அடையாள அட்டையாகவும் குறும்படங்கள் இருக்கின்றன.

எவ்வாறாயினும் பெரியதிரைகளில் இரண்டரை மணித்தியாலங்களுக்கும் மேலாக வலிந்துபிரயத்தனப்பட்டுபாடி,ஆடி,சண்டைபோட்டு நீளமாகப் பயணித்தும் கொடுக்கமுடியாதஅதிர்வை குறும்படங்கள்சர்வசாதாரணமாக நிகழ்த்திவிடுகின்றன. இன்றைய தொழிநுட்பஉலகில்அனைத்தும்கைசவப்பட்டதன் விளைவு ஏராளம் படைப்புக்கள் எவருடை தூண்டுதலுமின்றி எவருடைய கட்டுப்பாடுகளுக்குள்ளும் அகப்படாமல்புதியசிந்தனைகளோடு உருவாக்கப்பட்டுவருகின்றன. புதியவர்களும்வகைமாற்றுசிந்தனைகளில் வியப்பிலாழ்த்தும்வண்ணம்படைப்புக்களை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

என்னதான்நாம்புதியசிந்தனைகள்,மாற்றங்கள் எனப் பேசினாலும் தென்னிந்திய தமிழ் சினிமாவின் அடையாளங்களாக இன்னமும் மகேந்திரனையும், பாலுமகேந்திராவையும் இன்னும் ஒன்றிரண்டு பேர்களையும்தான் பேசவேண்டியிருக்கின்றது. யதார்த்த சினிமா வேறு வணிக சினிமா வேறு என நாம் பிரித்துப்பார்த்துசமாதானப்படுத்திக்கொண்டாலும்,அனைத்துமாகஎங்களுடையசினிமா எனப்பெருமையோடுமற்றவர்களுக்குக்காட்ட இப்படியானவர்களுடைய சினிமாக்களே இருக்கின்றனஎன்பதுதான்உண்மை. ஜோக்கர், ஆரண்யகாண்டம் போன்ற இன்றைய தலைமுறைப் படங்களில்லையா?என்றுகேட்பவர்களுக்கு, அவைகளும் கொண்டாடப்பட வேண்டிய , பெருமையுடன் சுட்டிக்காட்டப்படக் கூடிய படங்கள்தான் என்பதைஏற்றுக்கொண்டாலும் இவ்வகைப்படங்களின் வரவுகள் முன்போலவே இப்போதும் குறைவாக இருக்கின்றனஎன்றுதான்சொல்ல முடியும். அதேபோன்றுதான் ஈழத் தமிழ் சினிமாவிலும் யதார்த்த அழகியலோடான படங்கள் பெரியளவில் இன்னும் வெளிவரவில்லை என்பதும் நோக்கத்தக்கது. இதுவரைஉருவாக்கப்பட்டவற்றில் இங்கேநாங்கள்ஈழத்தமிழ்சினிமாவில்"இது எங்களது சினிமா" என பெருமையோடு(முழுமையாகஅல்ல) சுட்டிக்காட்டுவதாயின் ஞானரதன்,பொ.தாசன்ஆகியோரின்படங்களையே காட்டலாம்.

அவர்கள்தவிர இங்கு இன்னும்பலபடைப்பாளிகள் மிக அற்புதமான படைப்புக்களைத் தந்திருந்தாலும் அழகியலோடும் கருத்தியலோடும்பேசமிகக்குறைந்தளவிலானபடைப்பாளர்களே இங்கு இருக்கின்றனர். அவர்களில் ஒருவர்தான் முல்லை யேசுதாசன்.

விடுதலைப்புலிகள் காலத்து ஈழ தமிழ் சினிமாவில்கவனிக்கத்தக்ககாட்சிக்கதைகளைப் பேசிய் இயக்குநர்முல்லையேசுதாசின்நல்ல படைப்புக்கள் சிலதின் வரிசையில் 'ஒருநாள் குறிப்பு' திரைப்படமும் ஒன்று.

ஒரு வேளை உணவென்பது ஏழை மனிதனுக்குக் கனவாகவும், ஆசையாகவும், ஏக்கமாகவும், பிரச்சனையாகவும் இருக்கும் அதே இடத்தில் பிறிதொரு மனிதனுக்கு அது எந்தவொரு சிக்கலையும் தந்துவிடாத வாழ்க்கைச் சமநிலையின் தவிர்க்கவும் ஏற்கவும் முடியாத நிஜத்தைக் காட்டுகிறது படம்.



நிதர்சனம் வெளியீடாக வெளிவந்த 18நிமிடங்களைக் கொண்ட இந்தப்படம் மிகமிகச் சின்னதாகநாம்நினைத்துக்கொண்டிருக்கும், செய்துகொண்டிருக்கும்அன்றாடவாழ்வியல் போக்கைப்படம்பிடித்துக்காட்டுகிறது. வாழ்க்கையை மிக அருகில் கூட்டிச்சென்று அறிமுகப்படுத்துகிறது. அதனால்தான் இந்தப்படத்தால் ஒரு மன அதிர்வைச் சட்டென்று நிகழ்த்திவிடவும் முடிகிறது. இதனை திரைக்கதை, வசனம் எழுதி இயக்கிருக்கிறார் முல்லை யேசுதாசன்.

போருக்கு இடைவேளைகொடுத்திருந்தசமாதான காலப்பகுதியில் கதை நிகழ்கிறது. 'வன்னிநிலம் வரவேற்கின்றது' எனும் நுழைவாசல்பலகைக்கதைநிகழ்களத்துக்குநம்மை அழைத்துச்செல்கின்றது. வன்னியின் பிரதானபாதைத்தலைநகர்வாகனங்கள், போக்குவரத்து, மக்கள் என்பவற்றால் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது.சந்தைக்கூட்டத்தில் பத்திரிகை விற்றுக்கொண்டிருக்கிறான் சிறுவன் மணி.

ஒரு தங்கை, இரண்டு தம்பி, விதவைத்தாய் இத்தனை பேரையும் தனது பத்திரிகை விற்கும் சீவியத்தில் காப்பாற்றப்போராடும் ஒருசிறுவனின்பிரச்சினையையும்சமாதான பூரிப்பில்தமதுசுற்றுலாத்தளமாய்வன்னியை உருவகித்துப்புளித்துப்போனபூங்காக்களையும்தலைநகரைச்சுற்றியுள்ளபிரதேசங்களையும் எவ்வளவு காலம்தான் பார்ப்பது எனும் மாற்றுக்காய் வன்னியைச் சுற்றிப்பார்க்க வரும் ஒரு தமிழ்க்குடும்பத்தைப் பற்றியும் பேசுகிறது இந்த ஒரு நாள் குறிப்பு.

சூழ்நிலைவறுமையைப்பரிசளிக்கஎப்படியாவது ஒருவேளைப் பசி தீராதா எனும் ஏக்கத்தோடு அலையும் வன்னிநிலத்தின் சிறுவன் ஒரு புள்ளி. வறுமையும் பசியும் அறிமுகமாகாத சோற்றை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாத ஒரு குடும்பம் மற்றப்புள்ளி இந்த இரண்டு புள்ளிகளில் காலங்காலமாக உலகில் இருந்துவரும் மாபெரும் பிரச்சினையை எந்தவித அரசியலுமின்றி வெறும் உணர்வுகளோடு பேசுகிறார் இயக்குநர்.

எந்தவொரு இடத்திலும் போரும் போர்சார்ந்தும் பேசாமல் ஒரு போர்க்கள தேசத்தில் போரைவிட அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பிரச்சினையை முன்வைக்கிறார் அவர்.

ஒரு வேளை உணவென்பது ஏழை மனிதனுக்குக் கனவாகவும், ஆசையாகவும், ஏக்கமாகவும், பிரச்சினையாகவும் இருக்கும் அதே இடத்தில் பிறிதொரு மனிதனுக்கு அது எந்தவொரு சிக்கலையும் தந்துவிடாத வாழ்க்கைச்சமநிலையின்தவிர்க்கவும் ஏற்கவும் முடியாது என்ற நிஜத்தைக் காட்டுகிறது படம்.

சோற்றுப்பொதியைநாயிடமிருந்து காப்பாற்றும்போதும் அது கைக்குக் கிடைத்தவுடன்அதைஒருபூங்கொத்தைப்போல அள்ளி எடுப்பதிலும் பசியின் கனத்தை அனைவரையும் உணரவைக்கிறான்கதைநாயகன். படம் முழுக்க நல்ல மனிதர்களே உலவுகின்றனர். சோற்றை எறியும் மனிதன்கூட வாயில்லாத ஜீவன் என்றுநாய்க்காகபரிந்துபேசும்இடத்தில் ஒரு முழுமையான மனிதனாகவே தெரிகிறான் இங்கே வில்லனாக எல்லோரதும் அறியாமையும் பழகிப்போன வாழ்க்கை முறையும்தான் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

கடை முதலாளி 'இனி என்னிடம் எதுவும் கேட்காதே' எனும்போது அந்த வார்த்தையிலும் தொனியிலும் இன்னொருமுறை கேட்டால் நான்கொடுத்துவிடுவேன்எனும்நிலையைப் பார்வையாளனுக்குக் கடத்தியது வாழ்க்கையினதும் உணர்வினதும் உச்சம்.

மணியின் நண்பன் சந்தையில் அரிசிவாங்க வேணும் எனக்கேட்காமல் 'உன்னட்டை 26ரூபா இருக்கா' எனக்கேட்பதும். வேறொரு காட்சியில்மணிபணப்பையைப்பத்திரமாகத் திருப்பிக் கொடுத்ததற்குச் சன்மானமாகக் கொடுத்த 200ரூபாவைவாங்கமறுத்ததிலும் வறுமைக்கும் சுயகௌரவத்துக்குமிடையில் போராடும்மனநிலையை இதைவிட அழகாக எப்படி சொல்லமுடியும்.

சோடாவையும், சோற்றுப் பொதியையும் வீணாக்கும்போது அவர்கள்மேல்கோபத்துக்குப்பதில்வேதனையேவருகிறது. வாழ்க்கை ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வகையில் கையாளுகின்றது. யாரை யாரால் நோகமுடியும்எனும்மனநிலையைப்பார்வையாளனுக்குத் தந்துவிடுகிறது.

படத்தில் அடுத்து மிக அருமையாகக் கையாளப்பட்டிருப்பது பிண்ணணி இசை. போக்குவரத்து நெரிசல் சந்தைக்கூச்சல், பொலிஸ் நிலையத்தில்பின்னணியில்வந்துகொண்டிருக்கும் தட்டச்சு எந்திரத்தின் சத்தம், சிறுவர்கள் எட்டுக்கோடு விளையாடுதல் இவைகளோடுசோற்றுப்பொதியைப்பிரிக்கும்காட்சி எனபின்னணி இசைதானும்ஒருபாத்திரமாக உலவுகின்றது.


ஆரம்பத்திலிருந்துமுடிவுவரைக்கும்பார்வையாளனைதானாய்உணரவைத்திருக்கிறான் சிறுவனாக நடித்திருக்கும் லிலோனிட். ஒரே ஒருகாட்சியில்வந்துபோகும்கிரிபாத்திரமும் அந்தக்கண்களும்படம்முடிந்தபின்னும்மனதில் நிற்கின்றன.

தவநீதனுடைய ஒளிப்பதிவு, இசைத்தென்றலுடைய இசை, க.சிவாவின் படத்தொகுப்பு என்பவை படத்துக்கு எந்தக்குறையையும் ஏற்படுத்தவில்லை. ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றைக்கடந்துபோதல்,கடைசிவரைக்கும் காயத்துக்கு நெற்றியில் ஒட்டப்பட்டிருக்கும் கடதாசிஎன்பவைவாழ்க்கையைஎதிர்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான குறியீடாகவே தோன்றுகின்றன.

ஒரு நாள் குறிப்பு குறும்படம் உலக வாழ்வின் கட்டமைப்பின் மீதும் உணர்வின் படைமீதும் மெல்லியதாய்உரசிப்பார்க்கிறது. சமநிலைப் பொருளாதாரத்தை யதார்த்தத்தோடு அணுகும் இதை எமது சினிமா எனச் சொல்வதில் நாம் பெருமை கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் ச.முருகானந்தன்.



இனிமேலாவது மக்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களைப் பாவிப்பதை இயன்றளவு தவிர்க்க வேண்டும். இதன் மூலம் கொடிய புற்றுநோய் உட்பட பல நோய்கள் ஏற்படுவதைக் குறைக்க முடியும்.






# ஒருபோதும் பிளாஸ்ரிக் வேண்டாம்

கடந்த நூற்றாண்டில் தோற்றம்பெற்ற உலகமயமாதல் மனிதர்களுக்கு அபிவிருத்தி சார்ந்து பல நல்ல விடயங்களை ஏற்படுத்தியிருந்தாலும் அது பல்வேறு ஆரோக்கியக் குறைபாடுகளையும் மறுபுறம் ஏற்படுத்துவது உறுதியாகியுள்ளது. குறித்த உலகமயமாதலுக்குப்பிறகே பல்வேறு தொற்றாநோய்கள் மனிதர்களைத் தாக்கும் வேகமும் அவற்றின் பரிமாணங்களும் அதிகரித்துள்ளன என்பது இப்போது யாவருக்கும் தெளிவாகிவிட்டது. நவீன உலகின் வாழ்க்கை முறை ஏற்படுத்தும் தீமையால் தொற்றா நோய்கள் மாத்திரமன்றி மனித உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதால் இன்னும்சில தொற்று நோய்களும் ஏற்படுவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சமச்சீரற்ற உணவுமுறை, உடலுழைப்பின்மை, உணவுப் பொருள்களில் இரசாயனப் பொருள்களின் சேர்க்கை, சூழல் மாசின் தாக்கங்கள் எனப் பலகாரணங்கள் இத்தகைய நோய்களுக்கு வித்திடுகின்றன.

### சுற்றிச் சுற்றி மனிதர்களுக்கே ஆபத்து

இன்றைய உலகில் மனிதரின் நாளாந்த வாழ்க்கையில் பிளாஸ்ரிக்குகளின் பாவனை இன்றியமையாததாக மாறியுள்ள நிலையில் அவற்றால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். பெரிய நீர்த்தாங்கிகள் முதல் தண்ணீர், குளிர் பானங்கள் உள்ளடக்கியுள்ள போத்தல்கள், உணவுப்பொதிகள் செய்யப் பயன்படுத்தும் பொலித்தீன்கள், பிளாஸ்ரிக்குகள் என நீண்டு செல்லும் அவற்றின் நீண்ட காலப் பாவனை உடலுக்கு ஒவ்வாத, தேவையற்ற, ஆபத்தான இரசாயனப் பொருள்களை மெல்ல மெல்ல உடலுக்குள் சேர்க்கின்றன. அத்துடன் பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் பைகள் உக்கும் தன்மையற்றவை என்பதால் அவை நிலத்தையும் நீரையும் கடலையும் மாசுபடுத்துகின்றன. மனிதர்கள் அவற்றிலும் தங்கியிருப்பதால் பின்னர் அதன் விளைவுகளும் மனிதர்களையே சென்றடைகின்றன. மனிதர்கள் பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனைகள் பற்றிய ஆபத்தை உணராது இருப்பதால் அவற்றின் பாவனை பொதுவான விடயமாக மாறியுள்ளமையால் சுற்றுச் சூழலுக்கும், மக்களின் உடல் நலனுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல தீமைகள் ஏற்பட்டுள்ளன.

### போத்தல் நீர் அருந்தும் நாகரிகம்

எமது நாட்டில் பலபகுதிகளில் சுத்தமான நீர்கிடைக்கின்றது. நீர்வழங்கல் சபையும் சுத்திகரிக்கப்பட்ட நீரையே குழாய்கள் மூலம் வழங்குகின்றது. இருந்தும் பிளாஸ்ரிக் போத்தல் நீரைப் பாவிப்பது தற்கால மனிதர்கள் மத்தியில் ஒரு புதிய நாகரிகம் போல் வளர்ந்துள்ளது. உண்மையில் குடி நீரில்லாத நாடுகளில் தான் போத்தல் நீர் தேவை. நீண்ட பயணங்களின்போது மட்டும் பிளாஸ்ரிக் போத்தல் நீரைப் பாவித்தால் பரவாயில்லை. இன்று எந்த நேரமும் பிளாஸ்ரிக் போத்தல் நீரையே நமது மக்கள் பாவிக்கின்றனர். இதைக் கட்டுப்படுத்த அரசும் தவறியுள்ளது. பிளாஸ்ரிக் பொருள்களின் இறக்குமதி, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகள் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் போன்றவற்றையும் அரசு கட்டுப்படுத்தலாம். மதுவகைகள், போதைப்பொருள்கள் விவகாரம் போலவே எமது நாட்டில் இதுவும் முடிவில்லாத தொடர்கதையாகத் தொடர்கின்றது.

### எவ்வழியும் ஆபத்தே...

பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களிலுள்ள இரசாயனப் பொருள்கள் உணவிலும், நீரிலும் கசிவதனால் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவைகழிவாக மண்ணில் சேரும் போது உக்காமல் மண்ணின் இயற்கைத் தன்மையையும் பாதித்து விவசாயத்தையும் பாதிக்கின்றன. இந்தக்கழிவுப் பிளாஸ்ரிக்குகளை எரித்தாலும் கூட ஆபத்தான டயொக்சீன், பியுரான், காபன் மொனொக்சைட் உள்ளிட்ட வாயுக்கள் வெளிவருவதுடன் எஞ்சுகின்ற படிவுகள் நிலத்தின் வளத்தையும் பாதிக்கின்றன. பிளாஸ்ரிக் போத்தல்களை மீண்டும் மீண்டும் பாவித்தால் இன்னும் ஆபத்து அதிகரிக்கின்றது. அத்துடன் பொலித்தீன்களில் சுடச்சுட உணவைச் சுற்றிப் பொதி செய்யும் போதும் அந்த உணவுடன் குறித்த பொலித்தீனில் உள்ள இரசாயனப் பொருள்கள் சேர்வது அதிகமாகின்றது.

### பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனையால் ஏற்படும்நோய்கள்

மெல்ல மெல்ல உடலில் சேர்ந்து மிக ஆபத்தான பல நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருள்கள். இவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிப் பலரும் அறிந்திருப்பதில்லை. அறிந்தாலும் உடனடிப் பதிப்பு இல்லாததால் அறிந்தவர்கள்கூட அதிக அக்கறை செலுத்துவதில்லை. தற்காலத்தில் அதிக சாவுகளைத் தோற்றுவிப்பதில் முன்னிலைவகிக்கும் பலவித புற்றுநோய்களை ஏற்படுத்துவதில் இவற்றுக்கு முக்கிய பங்குண்டு. அத்துடன் பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகளில் இருந்து கசியும் இரசாயனப்பொருள்கள் பல்வேறு நாளமில்லாச் சுரப்பிகளைப் பாதித்து அவற்றின் தொழிற்பாடுகளைச் சீர்குலைக்கின்றன. இதனால் உடலில் நடைபெறும் பல்வேறு செயற்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. அத்துடன் உடலின் வளர்ச்சி மற்றும் சேதமுறும் உறுப்புகளின் மீளுருவாக்கம் என்பனவும் பாதிக்கப்படுகின்றன. சிறிது காலத்தில் பல்வேறு தொற்றாநோய்கள் ஏற்படுவதுடன் உடலுறுப்புகளுக்குச் சேதங்களும் ஏற்படுகின்றன. அண்மைய ஆய்வுகள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கசிவுகள் உடலில் சேர்வதால் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைகின்றது என்று கண்டறிந்துள்ளன. இனிமேலாவது மக்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களைப் பாவிப்பதை இயன்றளவு தவிர்க்கவேண்டும். இதன் மூலம் கொடிய புற்றுநோய் உட்பட பல நோய்கள் ஏற்படுவதைக் குறைக்க முடியும். நாம் முன்னோர் பாவித்த இயற்கையான மட்பாண்டங்கள், பீங்கான், கண்ணாடிப் பாத்திரங்கள், பனம் மூலப் பொருள்களால் ஆன பைகள், இயற்கையில் தயாரித்த பாத்திரங்கள், உணவு பொதியிட வாழையிலை, தாமரையிலை முதலானவை என முடியுமானளவு இயற்கையைப் பயன்படுத்த வேண்டும்.

உதயன்க்கு எழுதுங்கள்...!

சகல கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கும்...

உங்களுடைய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் இதர எழுத்துக்கள் பலவும் உதயனில் பிரசுரமாக வேண்டுமா...? உதயன் பத்திரிகை, இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இன்றே எழுதுங்கள். தயவு செய்து நீங்கள் அனுப்பும் சகல கலை, இலக்கியப் படைப்புக்களுடனும் உங்கள் தொலைபேசி இலக்கம், முகவரி போன்றவற்றையும் தவறாது குறிப்பிட்டு அனுப்புங் கள். இத்தகைய விவரங்கள் இணைக்கப்படாத படைப்புக்கள் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ எஸ். [illegible]

# பெண்ணே...!

## இலக்கை நோக்கிய பயணத்தில் எதுவுமே தடையில்லை

தன்னம்பிக்கை இருந்தால், வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை என்று நிரூபித்துக் காட்டியவர் ஹெலன் கெல்லர். 'வாழ்க்கை என்பது ஒரு விசித்திர விளையாட்டு. அது முடியும்வரை நான் சளைக்கமாட்டேன். தைரியமே எந்தத் துன்பத்துக்கும் மருந்து' என்று அவர் தன்னம்பிக்கையோடு தனது குறைபாடுகளிலிருந்து மீள்வதற்கு விதியோடு போராடி வெற்றி பெற்றார். ஊனமுற்றவர்களுக்கு மட்டுமன்றி, ஐம்புலன்களும் குறைவுறப் பெற்றவர்களுக்கும் அவரது தன்னம்பிக்கை மிகுந்த வாழ்க்கை, வழிகாட்டியாகத் திகழ்கிறது. அவருடனான ஒரு நேர்காணலின்போது, அவரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு அவர் பதில்கள் கூறியிருந்தார் அதில் குறித்த கேள்வியும் பதிலும் அமைந்திருந்தது.



கேள்வி :
உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?

பதில்: இந்த உலகத்தை என்னால் பார்க்க முடியவில்லை என்பது ஒரு குறைதான். ஆனால், அந்தக் குறையை நான் போக்கிக் கொள்ள வேண்டுமானால், இந்த உலகமே என்னைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காகவே எனது முழு நேரத்தையும் செலவிட்டேன். இலக்கை நோக்கிய பயணத்தில், எதுவுமே தடையில்லை' என்றார் கட்புலனும் செவிப்புலனும் இழந்த ஹெலன் கெல்லர். பெண்களே! என்னைப் போல் கஷ்டம் உலகில் வேறு யாருக்கும் இல்லை என்பவர்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஹெலன் ஹெல்லரை விடவா உங்களுக்கு கஷ்டங்கள், இழப்புகள்? முக்கிய புலன்களை இழந்த ஹெலன் ஹெல்லராலேயே இவ்வளவு சாதிக்க முடிந்ததென்றால், எல்லாப் புலனும் நன்கு செயற்பட்டுக் கொண்டிருக்கும் உங்களால் ஏன் சாதிக்க முடியாது?

✦✦✦

உலகில் அரசியல் கொள்கை, அரசியல் என்பன அனுதினம் பேசப்படும் மிக முக்கியமான விடயங்கள் என்பதைப் பெண்கள் எப்போதும் உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது. அவர்கள் எதிர்த்தல் என்பதையும் வெளிப்படுத்துவதோடு, துணிவுடன் செயற்படுத்தும் ஆளுமைத்திறனையும் வளர்த்தல் என்பதும் அவசியமாகும்.

அத்தகைய ஆளுமைகளை வெளிப்படுத்துவதற்கு அவளின் அரசியல் ஞானமும் அனுபவமும் அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் அதனோடுகூடிய மக்களின் ஆதரவுகளும் அவசியமாகின்றன.

புதுமையான விடயங்களைச் முன்வைத்தல், புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தல், புரட்சிகரமான கருத்துக்கள், சமூக நலனுக்கானமாற்றம் தொடர்பில் உள்ள ஆளுமைகளில்தான் பெண்களின் அரசியலினூடான புத்திசாலித்தனம் அடக்கியிருக்கின்றது.

ஆனாலும், அது பெண் சார்ந்ததாக மட்டுமல்ல சமூக அரசியல் சார்ந்த அனைவரின் வெற்றிக்கும் விடுதலைக்கும் வித்திடச் செய்யும்.

பெண்கள் தமது வாழ்வியலில் அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து தமக்குள் சரியான முற்போக்குத்தனமான அறிவுசார்ந்த ஆளுமைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன், சமூக நிலைக்கேற்ப பெண்கள் தங்களின் ஆளுமையைநெறிப்படுத்திக் கொள்வதென்பதும் முக்கியமானது.

✦✦✦

வாழ்க்கையின் பல கட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளை நாம் கடந்துவரவேண்டியுள்ளது. நடக்கும் என்று நாம் எதிர்பார்க்கும் செயல் நடக்கவில்லை என்றால், அங்கு தடை உள்ளது. இந்தத் தடையைக் கண்டு அநேகமானோர் கலங்குவர். சோர்ந்துவிடுவர். ஆனால், இந்தத் தடை வரக்காரணம் என்ன? என்றுஅதற்கானவிடைகளைத் தேடுவோர் குறைவு. இதிலும், தடைகளைமுட்டிமோதித் தகர்க்கும் பெண்கள் ஆகக்குறைவு என்று கூறவேண்டும்.

தடைகள் என்று நாம் நினைக்கும் எந்த விடயமும் கடினமானதல்ல. தடைகள் வாழ்க்கையில் குறுக்கிடுவது இயல்பு. அந்தத் தடைகளை நாம் எதிர்நோக்கவில்லை என்றால், வாழ மறுக்கின்றோம் என்று பொருள். நமது வாழ்க்கையை நாம் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தோம் என்றால், எந்தக் காலகட்டங்களை எல்லாம் நாம் கடினமானவை என்று அவற்றை எதிர்நோக்கியிருந்தோமோ அந்தக் காலகட்டங்கள் மட்டும் தான் நம் நினைவில் இருக்கும். நாம் இன்பமான காலங்கள் என்று நினைத்த காலகட்டங்கள் எல்லாம், கால ஓட்டத்தில் மறந்து போகும். நாம் தடைகள் என்று எதை நினைக்கின்றோமோ, அங்கேதான் நமது வெற்றி இருக்கிறது என்பதை நாம் முதலில் உறுதியாக நம்ப வேண்டும். ஏனென்றால், இதுதான் உறுதியான பிரபஞ்ச விதி. தடைகள் ஒருவிடயத்தில் இருக்கின்றன என்றால், அப்பாலுள்ள வெற்றியை அடைய நாம் நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தைரியமாகத் தடைகளை எதிர்த்து நிற்கவேண்டும்.

அந்தத் தடை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், நம்மிடம் அதனை எதிர்கொள்ளும் தைரியம் இல்லாவிட்டாலும்கூட நாம் அதை எதிர்கொள்ளவேண்டும். இப்போது அது எமக்குத் தோல்வியையும்கூடவே ஒரு அனுபவத்தையும் தந்து செல்லும். ஆனால் இதேபோன்று நிகழும் மறுதடவை நிச்சயமாக நமக்கு வெற்றி மட்டுமே கிட்டும்.



# இந்த நேரத்தில்...

■ வேலணையூர்தாஸ்

இந்த நேரத்தில்
புத்தாண்டின் பின் நாள் விருந்தொன்றில்
யாரோ இருவர் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.
இன்னோர் இடத்தில்
இம்முறையாவது
உயிர்த்த ஞாயிறின் பரவசத்தை
கொண்டாடக் கணவன் வருவான் என
காத்திருக்கிறாள் அவன் மனைவி.

இந்த நேரத்தில்
இறுதி முத்தத்தைப் பகிர்ந்து
விடை பெறுகிறது ஓர் காதல்.
அது இன்னோரிடத்தில்
கண்களின் [illegible]

இந்த நேரத்தில் விண்மீன்களின் ஒளியில்
இரவுப் பாடலை இரசிக்கிறது ஓர் உயிரி.
அதேநேரம் சூரியத் தகிப்பால்
வியர்வை நதியில் வெப்பம் குறைக்கிறது
ஓர் மானிடம்.

இந்த நேரத்தில்
காரணமின்றிக் காணமலாக்கப்பட்ட
மகனுக்காகக் கதறுகிறாள் ஒருதாய்.
விடுதலைப் பாடலை பாடி
உயிர் விதைக்கிறான் ஓர் போராளி.
சிலர் கனவுகளில் இன்பம் துய்கிறார்கள்.
பலர் சாவுக்கனவுகள் கண்டுவிழித்து
[illegible] எழுகிறார்கள்.

இந்த நேரத்தில் ஏதோ ஓர்முலையில்
இனிய சங்கீதம் ஒலிக்கிறது.
இன்னுமோரிடத்தில் பேரழிவுக் குண்டொன்று
விழுந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில்
போருக்குப் பின்னான தீர்வின் வரைபை
சிலர் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.
சிலர் அமைதியை அழித்தெழுதும் ஆவணத்தை
மீளத் தயாரிக்கிறார்கள்.

இவையெல்லாம் நிகழ்கின்ற
இந்த நேரத்தில் இன்னும் சிலர்
இந்தக் கவிதையைப்
படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவசி

## நகைச்சுவை தொடர் 12

■ மிருசுவில் தமிழ்தாசன்

'ஏனோ எனை எழுப்பலானாய் மடமாதே...!' இன்னும்நாடகமேதொடங்கவில்லை. தேவன் போதை தலைக்கேறிய நிலையில், அந்தப் பாடலைப் பாடி ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தான். இனியும் அந்தச் சாக்குப்படங்குக்குள்ளிருந்து மூச்சுமுட்ட அவிந்து கொண்டிருக்க முடியாது. சற்று வெளியிலே காற்று வாங்கப் புறப்பட்டான் ஓவசி.

'சரி வெளிக்கிட்டது தான் வெளிக்கிட்டாச்சு, கையோடை ஒருபீடியைமூட்டிநாலுதரம் தம்மிழுத்துவிட்டுட்டுவருவம்' எனநினைத்துக்கொண்டுமேடைக்குப்பின்புறம்சென்று மெல்ல மெல்ல அந்தப் பற்றைக்கருகில் அமர்ந்து பீடிப் புகையிழுத்துவிட ஆரம்பித்தான். சற்று முன்னால் ஏதோ சளசளவென்றுவித்தியாசமானஓசைகேட்டது. என்னவாயிருக்கும்! ஓவசிசற்றுப்பயந்துபோய்விட்டான். இருந்தும், அவனுடைய அனுபவத்தின்படி எருமை மாடு ஒன்று சளசளவெனச்சலம்விடுகின்றதுபோலும்! எனஎண்ணிக் கொண்டு பீடிப்புகையை ஊன்றி இழுத்துச் சுவாரஷ்யமாகத் தள்ளினான்.

'எட அது எருமை மாடில்லை. ஒரு பெம்பிளை! உந்தப் பெம்பிளையே இவ்வளவுநேரமும்சளசளவென்றுசத்தம் போட்டுப்பயப்புடுத்தினது. என்ன சத்தமப்பா அது! ஏதோ சுனாமியோ கினாமியோ வாறதுக்குக் கடல் தான் பொங்குதோ எண்டு நான் நினைச்சிட்டன்'

இவ்வாறு ஓவசியும் நினைத்துக் கொண்டிருக்கத் தனது இயற்கை உபாதையைத் தீர்த்துவிட்டுப் பின்பக்கத்தால் தனது சேலையை உயர்த்தி எதையோ எடுத்துக் கவனமாகக்கட்டிச்சொருகியபடிகிட்டத்தட்ட ஓவசியிருக்குமிடத்தை அடைந்தாலும் ஓவசியை அவள் கண்டுவிடவில்லை. ஆனால் ஓவசி அவளைக்கண்டுவிட்டான். ஐயோ அது அவளில்லை அவன்! அவனேதான். இன்னும் சற்று நேரத்தில்சாவித்திரிபாத்திரத்தில்நடிக்கப்போகும் குஞ்சுராசன். ஆளுக்கு நிலை தெரியாத மப்பு 'ஒன்றுக்கென்று வந்து ஒன்றும் தெரியாத நிலையில் தொடை கால்கள்எல்லாவற்றையும்நனைத்துக்கேவலப்படுத்திச் சின்னாபின்னப்பட்டுவந்துநின்றான். மீண்டுமொருதடவை பின்புறச் சேலையை உயர்த்தித் தனது உள்ளங்கி யான கோவணத்தைச் சரிபார்த்துத் திருப்திப்பட்டு மேடையின் பின்புறத்தை நோக்கித் தள்ளாடிய நிலையில் போய்க் கொண்டிருந்தான் சாவித்திரியாகப்போகும் குஞ்சுராசன். மேக்கப்பில் அசல் பெண்ணாகவே தெரிந்தான்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் மேடையிலே தோன்றி இருவரும் சாவித்திரியும் எமனுமாக வாதாட்டாங்கள் செய்து நடிக்கவேண்டும். நல்ல வேளை ஓவசிக்கு இவர்களைப்போல் போதை இல்லை. அப்படி இருக்குமாயிருந்தால் மேடையில் நடித்து வாதாடிச் சம்பாதிக்கும் போது இப்போது குஞ்சு ராசன் வெளியிலே செய்துவிட்ட வெட்கம் கெட்ட வேலைகளையெல்லாம் பகிரங்கமாக்கியிருப்பான். அத்தனை கோபம் குஞ்சு ராசன் மீது. அவன் மீது மட்டுமென்று கூற முடியாது அந்த நாடகக்குழுவின் முழு உறுப்பினர்கள் மீதும் கோபம் தான்.

இப்போதும்மேடையில்பேச்சுக்காரர்கள்பேசிக்கொண்டு தானிருந்தார்கள். இப்போதைக்குப் பேச்சு முடிவதாகத் தெரியவில்லை. ஓவசியின் மனதில் ஒருபொறிதட்டியது. ஆம்! சரிதான்... ஆம்! அப்படித்தான் செய்யவேண்டும்.

அந்தக் கிராமசபைக் கிணற்றடி ஒழுங்கை. அதிலிருந்து ஐந்நூறு, அறுநூறு மீற்றர்கள் வரை போனால் ஒரு சந்தி. வலது பக்கம்திரும்பினால்ஒருதகரக்கொட்டகை. அதற்குப்பின்னால் ஒரு சிறிய வீடு. முன்னாலே கிடுகுப்படலை. கிராமசபைக் கிணற்றடி ஒழுங்கையிலிருந்து இந்தச் சிறிய வீட்டுக்கிடுகுப் படலைவரை நாய்களின் குரைப்பொலிகள் வகை தொகையின்றிக் காணப்பட்டன. சில இடங்களில் நாய்கள் எதையோ கண்டு பயந்தோடி ஓடி, ஓடிக்குரைத்தன. இன்னும் சில இடங்களில் இதோ கடித்துக்குதறுகின்றோம் என ஆக்ரோசமாகக் குரைத்தபடி நின்றன.

தெருப்படலையில் யாரோ அழைப்பது போன்றிருந்தது. மீண்டும் அழைப்புக்குரல். இன்னுமொரு தடவை கூப்பிட்டால் படலையடிக்குப் போகலாம். நிச்சயமாகப் பேய், பிசாசாக இருக்காது. நான்காவது தடவையும் குரல் கேட்க எழுந்து தான் விட்டாள். நேரம் இரவு பத்தரையைத் தொட்டுநின்றது. அவளைப் பொறுத்தவரையில் இந்தப் பத்தரையொன்றும் வில்லங்கமான நேரமில்லை. இன்னும் சொல்லப் போனால் பாறி என்னுமிந்த பாறுப்பிள்ளைக்கு இரவு பத்து மணிக்குப் பின்புதான் தொழிலேகளைகட்டிக்கொள்ளும். பாறிக்குவயது ஐம்பதுக்குமேல். யாருக்கும் பயப்படுமளவுக்கு அவளில்லை. அப்படிப்பயந்தாங்கொள்ளியாக இருந்திருந்தால் இத்தனை வருடமாக அவளிந்தத் தொழிலைச் செய்ய முடியுமா? அவளுடைய நாற்பதாவது வயதில் கணவனைப் பறிகொடுத்த பாறி, இன்றுவரைஇங்குள்ளகுடிகாரர்களையெல்லாம்திருப்திப்படுத்தித் தனது தொழிலைச் செய்து வருகின்றாள். எதற்குமே அஞ்சமாட்டாத நெஞ்சுரம் கொண்டவள் பாறியென்பதை அவளின் வாடிக்கையாளர்கள் அனைவருமறிவர்.

படலையை நோக்கி வந்த பாறி,

"ஐயோ! கடவுளே ஐயோ" என்றபடி பாறி விழுந்த ஒரு மரமாக விழ்ந்து மூர்ச்சையடைந்தாள். அட! இந்தத் துணிச்சற்காரியே இப்படியென்றால்...!

"எடிபாறி! பயப்பிடாதை. எழும்பு. அது நான் ஓவசியடியாத்தை! எழும்பணை! எனக்கு ஒரு அரைப்போத்தில் தா. நான் டக்கொண்டுகுடிச்சிட்டுப்போகவேணும். நாடகம்நடிக்கப்போக வேணும். எழும்பு எழும்பு! எழும்பணை! நேரம் போச்சுது! ஒரு அரை ஊத்து இந்தா காசு!"

ஓவசிஎவ்வளவுசொல்லியும்பயன் இல்லை. பாறிஎழுந்திருக்கவேயில்லை.

"ஆரடாஅது! ஆரடா! வந்தது" உட்படலையைப்பிய்த்துக்கொண்டு ஓடிவந்தஅயல்வீட்டுக்காரன்தறுமனும்ஓவசியைக்கண்டதும் மயங்கி வீழ்ந்தான்.

"ஐயோ பேய்! பேய்!"

என்றபடி அங்கே வந்து நின்றவர்களனைவரும் வீரிட்டுக் கத்தினர் பீதியோ! பீதி! உடல் முழுவதும் பயங்கரமான அந்த ஆடைகளால் மறைக்கப்பட்டுக் கையில் கனமான குண்டு போன்ற ஆயுதம், மறுகையில் இருபது முழத்தில் ஒரு பாசக்கயிறு. காதுகளில் நீண்டு தொங்கிக் கொண்டிருக்கும் கடுக்கன்கள், கால்களில்சலங்கை ஒலிக்க ஓவசி, எமதர்மராஜனின் வேடத்தில்வந்து நின்றான். பாறியிடம் அரைப்போத்தல் கசிப்புவாங்கிப்பருகலாமென்று மேக்கப்புடன்அப்படியேவந்து விட்டதால்தான் இத்தனை விபரீதங்களும். ஓவசி எப்போது திருந்தப் போகின்றானோ!

(தொடரும்)

# 2 கதைகள்

■ கை. சரவணன்



## பரவல்

செழித்திருக்கிறது கிளை விரித்து, விழுதூன்றி ஆலமரம். ஊடே உயிர் நெரிந்துநிற்கிறது ஒற்றைப்பனை இறுதி மூச்சுடன் வான்தொட்டு.

பட்சிகள் பாடவும் உயிரினம் நிழல் ஆறவும் புலவர் பாடவும் இறுமாந்திருந்த ஆலமரம் ஆர்ப்பரித்து ஆர்ப்பாட்டம் போடுகிறது.

தன் வீரியம் தானே கூறி ஆவணமிடுக்குடன் நிற்கிறது. தன் குலப் பெருமை பேசி, திறன்பேசி ஆணவம் பெருக்குகிறது.

உயிர் நெரியும் பனை வேதனை சூடி அமைதியிலுறைந்திருக்கிறது.

கடுகிலுஞ்சிற்றளவுசிறுவிதைபனைவட்டில் வேர் கொண்டதை நினைவில் கொண்ட காற்று கால நகர்வைக் கணக்கிட்டுப் பொருமுகிறது...

**தாங்கலில் முளைத்தவன் தன்னையறியான்.**

## புரிதல்

காட்டிலொரு ஓவியப்போட்டி. அத்தனை உயிரிகளும் தீட்டிய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒருமித்த குரலில் தீர்ப்பிட்டன.

முதலாமிடம் 'நண்பகல்' குரங்கார் பெற்றார். ஆட்சேபித்து அலறிற்று ஆந்தை. "புதிரெல்லாம் ஓவியமாகுமா? சிறப்பாகுமா??' மீண்டும்மீண்டுமாய் அலறித் தனக்கு ஆதரவு கேட்டது.

வௌவால் 'இலுப்பைகள் பழுக்கத் தொடங்கியுள்ளதால்வேலைகூட. நேர மொதுக்கி ஆறியிருந்து ஆராயமுடியாதிருக்கின்றது" என்றுகீரிச்சிட்டுப் போனது. ஆந்தை தனது ஆட்சேப அலறலை தனித்தே வலுவாக்கியது. கூகையும் கூடச் சேர்ந்தது. "அறிவாளி ஆந்தையின் கருத்துச் சரியாயிருக்கலாமல்லவா?" அங்கலாய்ப்புக்குள் அனேகர் ஆட்பட்டனர்.

ஓய்ந்திருந்த காற்று சிரித்தபடிபுலம்பிற்று.



**தான் புரியாச் சங்கதி பிழையென்றாகுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தூரன்

இந்தியாவில் கடந்த காலங்களில் நிகழ்ந்திருந்த போராட்டங்களுக்குள் மிகப்பெரும் அளவில் எழுச்சி கண்டு ஓய்ந்த ஒன்றுதான் ஏறு தழுவுதலுக்கு விதிக்கப்பட்டிருந்த நீதிமன்றத் தடையை நீக்கக் கோரிய போராட்டம். அது ஈழத்தையும் பாதித்திருந்தது. சமூக ஊடகப் போராளிகளே அதன்பால் அதிகம் ஈர்க்கப்பட்டிருந்தனர். தமிழர் தாயகத்தில் அண்மைக்காலங்களில் இதுபோன்ற எழுச்சியின் வடிவம் என்பது சமூக ஊடகங்கள் வாயிலாகவே பரிணமித்து வருகின்றது. ஈழத்தமிழருக்கு அது முதல் அனுபவம். முற்றுமுழுதாக நேரடியான அரசியல் கலப்பற்ற இளைஞர்களின் ஒன்று திரண்ட மனோ ஓர்மத்தின் வடிவமாக அந்தப் போராட்டம் பரிணமித்திருந்தது. பெரும்பாலும் மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர்களின் பங்கு பற்றுதலுடன் முன்னெடுக்கப்பட்ட அந்தப் போராட்




ஈழத்தில் எமது நிலைமை இருக்க இந்தியப் போராட்ட அடிவருடிகளாகிய நம்மவரின் வாய்கள் மரபுரிமை பற்றி அதிகம் பேசிச் சென்றிருக்கின்றன. போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் தங்களது சொந்த நலன்களை முன்னெடுக்காமல் கொஞ்சமாவது உயிர்களை இழந்து சிதையும் எமது சகமக்களின் வாழ்வை ஒரு கணம் சிந்தியுங்கள். இல்லையேல் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் துன்பத்தை அனுபவிக்க நேரிடும்.

போது யமுனா ஏரியில் எமது மக்கள் குழாய்கள் பொருத்தித் தண்ணீர் எடுப்பதையும் ஒரு சிலர் யமுனா ஏரி தங்களுக்குச் சொந்தமானது எனச் சொந்தங் கொண்டாடியதையும் பார்க்க நேர்ந்தது. அதேவளை பூதவராயர் குளம் மாசடைந்து போய் இருந்தது. அவ்வாறே மந்திரிமனையும் பார ஊர்திகள் தரிக்கும் தரிப்பிடமாகவும், யாழ்ப்பாணத் தனவந்தர்கள் மந்திரிமனை தமக்குச் சொந்தமானது என நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து உரிமை கொண்டாடுதல் நிகழ்வதையும் அவதானிக்க முடிகிறது.

இப்படியாக ஈழத்தில் எமது மரபுசார் கட்டமைப்புக்களின் நிலைமை இருக்க இந்தியப் போராட்ட அடிவருடிகளாகிவிட்ட நம்மவர்கள் மத்தியில் வாய்கள் மரபுரிமை பற்றி அதிகம் பேசிச் சென்றிருக்கின்றன. போராட்டங்களை முன்னெடுப்ப வர்கள் தங்களது சொந்த நலன்களை முன்னெடுக்காமல் கொஞ்சமாவது உயிர்களை இழந்து சிதையும் எமது சக மக்களின் வாழ்வை ஒரு கணம் சிந்தியுங்கள். இல்லையேல் நீங்

# முகப்புத்தகத்தில் பதிவிடாமல் ஒரு போராட்டத்தை...








டத்திலிருந்து அவர்களின் - இளைஞர்களின் உளவியலை வாசித்தல் அல்லது கண்டு கொள்ளல் என்பது வெளிப்பட்டிருந்தது. கடந்த வருடம், ஐப்பசி மாதம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன் மற்றும் கஜன் சுட்டுக்கொல்லப்பட்டபோது பல்கலைக்கழக சமூகம் முன்னெடுத்த போராட்டங்களில் பல்கலைக்கழக சமூகம் தவிர்ந்த ஏனைய இளைஞர்களும் எமது மக்களும் என அனேகமானோர் கலந்து கொள்ளாத வரலாற்றுப்பதிவுடன் தான் நாம் இந்த விடயத்தை அணுக வேண்டியிருக்கின்றது.

இராணுவப்புலனாய்வாளர்களால் அணுகத் தேவையில்லாத போராட்டம் என்பதால் ஏறுதழுவுதலை எமது இளைஞர்கள் ஒருவித கொண்டாட்ட மன நிலையுடன் போராடி முடிந்திருந்தனர். இதனாலேயே சடுதியாக முகநூல் வாயிலாக ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டம் எவரது உரிமை கோரலுமின்றி யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, தென்னிலங்கை எனப் பரிணமித்தும் இருந்தது. ஒரு குறிக்கப்பட்ட மணி நேர இடைவெளிக்குள் தங்களது கோசங்களை எழுப்பியவர்கள் தங்களது ஒளிப்படங்களைச் சமூக ஊடகங்களில் பதிவேற்றி ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் முகங்களைப் பிரபல்யப்படுத்தி, அதன் பின் கலைந்து சென்றிருந்தனர்.

ஒரு வகையில் இளையவர்கள் சமூகப் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள், கேள்வி கேட்க ஆரம்பிக்கிறார்கள் என உள்ளூர் பெருமிதப்பட வைக்கும் மனநிலை ஏற்பட்டாலும் அடுத்து வந்த நாட்களில் நல்லூரில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டோருக்காக இதே உத்தி முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அந்த மனநிலையை நீர்த்துப்போகச்செய்திருந்தது. வவுனியாவின்; இடம்பெற்ற போராட்டத்துக்கு அனுசரணையாக நடத்தப்பட்ட குறித்த போராட்டத்தில் காணாமலாக்கப்பட்டவர்களில் உறவுகள் அழுத வண்ணம் தமது உறவுகளின் ஒளிப்படங்களைத் தாங்கியவாறு இருந்தனர்.

மாலை 4மணியளவில் ஒன்றுகூடிய இளைஞர்கள் ஊடகங்களுக்கு முன்னால் நல்லாட்சியை வெழுத்து வாங்கியதுடன் ஒரு சில நிமிட இடைவேளையில் கலைந்தும் சென்றிருந்தனர். இவ்வாறான நிகழ்வோட்ட ஒழுங்கு முறைக்குள் வைத்து இவ்விடயத்தை அணுகும் போது ஜல்லிக்கட்டை ஒழுங்கு செய்தவர்கள் எவ்வாறாகத் தங்களை முன்னிலைப்படுத்தும் நோக்கத்துடன் அதனை ஒழுங்கு செய்தார்களோ அதைப்போலவே இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டத்திலும் தம்மை முன்னிலைப்படுத்திச் சென்றிருப்பதைப் பார்க்கின்றோம்.

ஆயுதப்பேராட்டக் களத்தில் இருந்து அகன்று ஏழு வருடங்கள் கடந்த நிலையில் விடுதலைப்புலிகளையும் அவர்களின் போராட்டத்தையும் வாசிப்பின் மூலமாகவும் காணொலிகள் வாயிலாகவும் அறிந்துகொள்ளக்கூடிய இன்றைய இளைய தலைமுறைக்குத் தங்களது இளம் குருதித் துடிப்பை வெளிப்படுத்த ஒரு களம் தேவைப்பட்டது.

ஆனால் அந்தக்களம் அர்ப்பணிப்புடன் தங்களை ஒறுக்காத அல்லது வருத்தாத களமாகவே தேவைப்பட்டது. அது தான் ஜல்லிக்கட்டு. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை உழைப்பின்றிய அல்லது வெளிநாட்டு பணத்தில் வளரும் இளைய தலைமுறை உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது. இந்தத் தலைமுறைப் போராட்டங்களை எதிர்கொள்வது முகப்புத்தகக் களத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. சமூகவியல் நோக்கில் நாம் இதை அவதானித்தால், ஒரு இனம், ஆதிக்கசமூகமாக இருக்கும் அதன் ஆரம்ப தளத்தில் எவ்வித உசாவலின்றிய பரிசோதனையூடாகவே தன்து கலாசாரமொன்றைக் கட்டியமைக்கின்றது.

ஈழத்தின் மரபு சார் இடங்கள் அழிந்தொழிந்து போவது இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் கட்டுரையொன்றுக்காக யமுனா ஏரி, பூதவராயர் குளம், மந்திரி மனை போன்ற இடங்களுக்குச் சென்ற

களும் உங்கள் பிள்ளைகளும் இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் துன்பத்தையே தொடர்ந்து அனுபவிக்க நேரிடும்...


பிரச்சினையையே வாழ்வாகக் கொண்டெழுந்த தமிழ் இனம் விச வாயுக்களாலும் நச்சுக் குண்டுக்களாலும் முள்ளிவாய்க்காலில் சிதைத்தழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும்வேளையில் நல்லூரில் கோலாகலமாகத் திருவிழா கொண்டாடி மகிழ்ந்த நமது சமூகம் ஜல்லிக்கட்டுக்கு குரல் எழுப்பியது ஒன்றும்; நகைப்புக்குரிய விடயம் அல்லத்தான். நல்லூரில் இடம் பெற்று ஓய்ந்த போராட்டத்தில் மகனை இழந்து தவிக்கும் தாய் ஒருவர்தான் மிகுந்த வறுமையால் துயரப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதைச் செவிமடுத்த எத்தனை பேர் அவருக்குச் சென்று உதவி செய்தார்கள்...? தங்களது முகம் தெரியாமல் இவ்வாறான காரியங்களைச் செய்வார்களா? முடிந்தால் செல்பி அல்லது ஒளிப்படங்கள் எடுக்காது இத்தகைய போராட்டத்தில் பங்கு கொள்வதை முகப்புத்தகத்தில் பதிவிடாமல் ஒரு போராட்டத்தை தமிழர் தாயகத்தில் நம்மவர்கள் முன்னெடுத்துக் காட்டட்டும். இனவுணர்வு, இன ஓர்மம் உள்ளவர்கள் எனத் தங்களை அடையாளம் காட்டுபவர்கள் சுயநலமின்றி மக்களுக்காக இவ்வாறு போராட ஒருபோதும் முன்வரமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை

# இலக்கியத்தில் கொய்தலும், கொழித்தலும்



"சென்னைப் பல்கலை கழக பவள விழாக் கலையரங்கில் 26.04. 2013களில் நிகழ்ந்த விளக்கு விருது வழங்கும் வைபவத்தில் எம். ஏ. நுஃமான் ஆற்றிய ஏற்புரையின் சில் பகுதிகள்"

தி. இராஜநாயகி

இது எனக்கொரு புது அனுபவம். இதுவரை இத்தகைய விருது விழாக்களில் விருதுபெறும் ஒருவனாக நான் இருந்ததில்லை. விருதுகளுக்கு எதிரான மனநிலையில் இவ்வளவு காலமும் இருந்துவிட்டேன். இன்று இவ்விருதினைப் பெற்றுக்கொண்டு ஏற்புரையாக என்ன பேசுவது என்று யோசித்தேன். எழுத்தாளர்கள், பரிசுகள், விருதுகள், பாராட்டுகள் பற்றியே பேசலாம் என்று நினைத்தேன்.
சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் 'காத்திருங்கள்' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன். எனக்கு அறுபது வயது பூர்த்தியாவதை முன்னிட்டு எனது சில நண்பர்களும் மாணவர்களும் எனக்கு ஒரு விழா எடுக்கும் நோக்கில் என்னை அணுகியபோது அதை மறுதலித்த மனநிலையில் பரிசுகள், விருதுகள், பாராட்டுகளுக்கு எதிராக எழுதிய கவிதை அது. கவிதை இதுதான்.

மன்னிக்க வேண்டும்
எனக்கு எதற்கு இப்போது பாராட்டு,
பட்டம், பரிசு, விருதுகள்,
விழாக்கள் எல்லாம்...?

காத்திருங்கள்
நான் இறந்து நூற்றாண்டுகள் ஆகட்டும்
நான் புதைக்கப்பட்ட இடத்தில்
புல் முளைக்கட்டும்
இன்னும் நூறாயிரம் பேர் புதையுண்டு போகட்டும்

அதன் பின்பும்
எபன் புதைகுழியின் அடையாளத்தை
உங்களால் கண்டுகொள்ள முடிந்தால்,
என் எச்சங்களில் எதாவது ஒரு துணுக்கு
எஞ்சியிருந்தால்,
மின் மினிபோல் அது சற்றேனும் ஒளி உமிழ்ந்தால்
என்னை நினைவுகூருங்கள்
அதுவரை காத்திருங்கள்
தயவுசெய்து காத்திருங்கள்.

இப்போதும் அதே மனநிலையில்தான் நான் இருக்கின்றேன். இந்த விருதைப் பெறுவதற்கு இவ்வளவு தூரம் வருவதில் ஏதாவது அர்த்தம் உண்டா என கடைசி நிமிடம் வரை நான் யோசித்ததுண்டு.
பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள் எல்லாம் தமிழ்ச் சூழலில் மலினப்படுத்தப்பட்டிருப்பதுபோல வேறு எங்கும் மலினப்படுத்தப்பட்டிருக்காது என்பது என் எண்ணம். பாராட்டு விழாக்களும் கௌரவிப்புக்களும் அவற்றுக்குரிய அர்த்தத்தையும் மதிப்பையும் இழந்துவிட்டன. பொன்னாடைகள் பன்னாடைகளுக்குச் சமனாகிவிட்டன. அபத்தமான அலங்காரமான பட்டங்கள் வழங்கப்படுவதும், அவற்றை நம் படைப்பாளிகள் பலர் ஆவலுடனும், ஆர்ப்பாட்டத்துடனும் சுமந்து திரிவதும் சுயமதிப்பீட்டின் வீழ்ச்சியையே நமக்கு உணர்த்துகின்றன. பரிசுகள், விருதுகளுக்காக நம் படைப்பாளிகள் பலர் படும் பாடுகளும், ஒவ்வொரு முறையும் இவை தொடர்பாக எழும் சர்ச்சைகளும் இவற்றை மதிப்பிறக்கம் செய்துவிட்டன.

இத்தகைய சூழலில் விருதுகள் எவையும் பெறாது இருப்பதே ஒரு எழுத்தாளனுக்குக் கௌரவம் என்கின்ற கருத்து

**எழுத்தாளர்கள், பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள்.**

எனக்குள் உறுதியாகி விட்டது. இந்த உறுதியுடனேயே, தவிர்க்க முடியாத இரண்டோரு சந்தர்ப்பங்களைத் தவிர, இவற்றை நான் புறக்கணித்து வந்திருக்கின்றேன். இலங்கை அரசு வழங்கிய கலாசூரி விருது, கலாசார அமைச்சு விருது, வடகிழக்கு மாகாண கவர்ணர் விருது ஆகியவற்றை இவ்வாறு நான் நிராகரித்திருக்கின்றேன். இலக்கிய விழாக்களில் கௌரவிப்புக்கான அனேக அழைப்புக்களை மறுதலித்திருக்கின்றேன். அரச அல்லது தனியார் நிறுவனங்களின் பரிசுத் தேர்வுக்காக இதுவரை எனது நூல்கள் எவற்றையும் நான் அனுப்பியதில்லை.

எனக்குள் ஒளித்து வாழும் எனது மன அமைப்பும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்ல வேண்டும்.
இத்தகைய மன அமைப்புடைய ஒருவனுக்குத்தான் இவ்வாண்டு விளக்கு விருது அறிவிக்கப்பட்டது. பல வகையில் இது என்னை மிகுந்த சங்கடத்துள் ஆழ்த்திய அறிவிப்பு. இதை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பல நாட்கள் யோசித்தேன்.
ஏற்கனவே நான் நிராகரித்த விருதுகள்போல் அத்தனை எளிதாக நிராகரிக்கக் கூடிய ஒன்றல்ல இது. 'தீவிர எழுத்தாளர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் நோக்கில்' விளக்கு இலக்கிய அமைப்பு புதுமைப்பித்தன் நினைவாக நிறுவிய விருது இது. இதுவரை விளக்கு விருது பெற்றவர்கள் எல்லோரும், சி.சு.செல்லப்பா முதல் திலீப் குமார் வரை, நவீன தமிழ் இலக்கிய உருவாக்கத்தில் வெவ்வேறு வகையில் முக்கியத்துவம் பெற்ற ஆளுமைகள். விளக்கு விருது தன்னை மலினப்படுத்திக் கொள்ளவில்லை என்பதற்கு இவர்கள் சாட்சி. இந்த விருதை ஏற்க மறுத்தால் இதுவரை விருதுபெற்ற இப்படைப்பாளிகளை அவமதித்து விடுவேனோ என்ற தயக்கம் எனக்கு இருந்தது. அதேவேளை விருதுகள் பெறாதிருப்பதே ஒரு எழுத்தாளனுக்குக் கௌரவம் என்ற என் நிலைப்பாட்டை விட்டுக் கொடுப்பதும் சங்கடமாக இருந்தது. இதை ஏற்றுக் கொள்வதனால் கிடைக்கும் பாராட்டு சங்கோசத்தை ஏற்படுத்தியது. இத்தகைய உணர்வு பூர்வமான தடுமாற்றங்களுக்கு மத்தியில், இறுதியில் தயக்கத்துடனும் சங்கோசத்துடனும், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன் ஆகிய நம் காலத்துப் பெரும் சாதனையாளர்கள் பெறாத விருதை நான் பெறுகின்றேன் என்ற குற்ற உணர்வுடனும் இந்த விருதை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானித்து அமைப்பாளர்களுக்கு அறிவித்தேன்.

ஒரு விருதின் மதிப்பு அதை வழங்குபவர் யார், அதைப் பெறுபவர் யார் என்ற இரண்டு அம்சங்களில் தங்கியிருக்கின்றது. இரண்டுக்கும் இடையிலான சமன்பாட்டிலேயே ஒரு விருதின் பெறுமதி உயர்கின்றது. இவற்றுக்கிடையே முரண்பாடு காணப்படும் போதே விருது பற்றிய சர்ச்சைகள் எழுகின்றன. 'விருதுகளால் ஒரு படைப்பாளியின் மதிப்பு உயர்வதில்லை, பதிலாக விருது பெறும் ஆளுமைகளைப் பொறுத்தே ஒரு விருது மதிப்புப் பெறுகிறது' எனச் சில ஆண்டுகளுக்கு முன் இயல் விருது' தொடர்பான ஒரு சர்ச்சையின்போது நான் எழுதியதாக ஞாபகம். நோபல் இலக்கியப் பரிசின் அரசியல் பற்றிப் பல விமர்சனங்கள் இருந்தாலும், மூன்றாம் தரப் படைப்பாளிகள் யாருக்கும் அப்பரிசுகள் வழங்கப்படவில்லை என்பதாலேயே உலகளாவிய நிலையில் நோபல் பரிசு மதிக்கப்படுகின்றது. தமிழில் இத்தகைய மதிப்பீட்டைத் தொடர்ச்சியாகப் பேணுகின்ற இலக்கிய அமைப்புக்கள் மிகச் சிலவே உள்ளன. விளக்கு இலக்கிய அமைப்பு அவற்றுள் ஒன்று என்பது என் கருத்து.

(காலச்சுவடு 162)

## புள்ளி நோக்கிய பறப்பு



அந்தகார இருட்டில்
ஆழ்மனக் குகையினின்றும்
வீழ்ந்து கிடக்கும்
முடியாத நினைவுகள்
ஒளிச் சிறகு விரிக்கும்
மின் மினியின் வருகைக்காய்
தவம் கிடந்து
சுடுகிறது கண்கள்

அந்தோ...!
சதிராடும் கனவுகளிலும்
வர்ணனைகள் அதிகம்தான்
வெளுத்தெடுக்கப்பட்ட வேட்டிகளிலும்
கறைகள் வெளித் தெரிகின்றன
நீட்டிய கரங்களில்
நிர்வாணம் பரிசாக்கப்படுகின்றது
முடிதரித்து நிற்கிறது முடிக்கப்படாத பிரச்சினைகள்

இராம.இராகவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கரி நாக்கு

மானிப்பாய் சுதன்

ஒவ்வொரு விநாடியும் பல ஆச்சரியங்களையும் விசித்திரங்களையும் தன்னுள்ளே வைத்திருக்கும் இந்த உலகு, எங்கோ ஒரு மூலையில் இருக்கும் தன்னையும் விட்டுவைக்காது என்பதைக் கேதீஸ் அறிந்திருக்க நியாயமில்லை. எம்மவரின் வாய்களிலிருந்து எழும் சிறு அசைவு - வார்த்தை குடும்பத்தில், அவரவர் வாழ்க்கைகளில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பலரின் பட்டறிவாக இருக்கும்.

இந்தப் பட்டறிவு கேதீசின் வாழ்க்கையிலும் ஏற்பட்டது. ஆனால் அநியாயத்துக்கும் அற்ப விடயத்துக்காகவும் ஏற்பட்டதுதான் கேதீசின் இந்தப் பிரச்சினை. கேதீஸ் திருமணம் முடித்த நாளில் இருந்தே தனது மனைவிவழி உறவுக்காரரைச் சற்று இளக்காரமாகவே நக்கலடித்து வந்தான். இதனால் அவனுக்கும் அவன் மனைவிக்கும் இடையில் பல சண்டைகள் வந்து போய்க்கொண்டிருந்தன.

விடுமுறை நாள்களில் காரைநகரில் உள்ள தனது தாய் வீட்டுக்குப் போய்த் தங்கிநின்று வரவேண்டும் என்பது கேதீசின் மனைவி நந்தினியின் விருப்பம். தகப்பனும் வயதான தாயுமே வீட்டில் தனியாக இருக்கின்றனர். மற்றப் பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில். நந்தினியிடம் போனில் அடிக்கடி அம்மா , அப்பாவை ஒருதரம் போய்ப்பார்த்துவரச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவள் இதைக் கேதீசிடம் கேட்கப்போனால், குண்டக்கமண்டக்கவாகப் பதில் சொல்லுவான். "போய்வரப் பெற்றோலுக்குக் காசு அனுப்பச் சொல்" என்பான். எதுவானாலும் பரவாயில்லை என்று கேதீசிடம் சொல்லி இந்தச் சனி, ஞாயிறு காரைநகர் வந்து சேர்ந்தார்கள் இருவரும். தனியே இருந்த மாமன் மாமிக்கோ எல்லைமீறிய சந்தோசம் கேதீஸ் அவர்களது வீட்டையும் அது அமைந்துள்ள வளவின் பெருப்பத்தையும் பார்த்து வியந்து போனான்.

மதியம் சாப்பிட்டுவிட்டு எஞ்சியதை நாய்க்கு வைக்கப்போன கேதீஸ் மேலும் மிரண்டு போனான். சுமாரான ஒரு நாய்க்குட்டி தான் வைத்த உணவை ஒரே வாயில் சாப்பிட்டதைப் பார்த்து. நிச்சயமாக நாயின் வாயின் எந்தப்பகுதியிலும் தான்வைத்த சாப்பாடு பட்டிருக்காது என்பது அவனுக்கு விளங்கியது. ஏனேன்றால், அது சாப்பாட்டை விழுங்கிய விதம் அப்படி.

மனைவியிடம் வந்த கேதீஸ்

"இதென்னப்பா நாயோ? பேயோ? இப்படிச் சாப்பிடுது, சாப்பாடு வைக்கிறதில்லையோ அதுக்கு..." என்றவனின் கதையைக் கேட்டுக்கொண்டு வந்த மாமனார் "அதுவோ தம்பி, எங்களிட்ட நின்ற நாய் வயதுவந்து செத்துப்போச்சுது, நாங்க தனிய இருக்கிறனாங்கள், பெரிய வளவு எப்படியும் ஒருநாய் நிற்க வேணும். அது தான் போனகிழமை மீன்சந்தையடியில் உதைப்பிடிச்சந்தனான். ஆள் சூரன் சின்னச்சத்தம் கேட்டாலும் விடாது குரைத்துக் கொண்டிருக்கும்" என்றார்.

கேதீஸ் வாய்திறக்கும்போது தனது நாக்கசைவு ஏற்படுத்தப்போகும் விளைவுகளைத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் போகப்போகத் தெரிந்து கொண்டான். எலும்பில்லாத அங்கங்களின் தன்னிச்சையான அசைவுகளின் தாக்கங்கள் மிகவும் மோசமானவை என்பதைப்புரிந்து கொண்டான். அந்த நாய்க்குட்டி தன்னைப்பார்த்து குரைத்ததையும், சாப்பாட்டை உண்டவிதத்தையும் கொண்டு "உப்பிடிச் சாப்பிட்டால் நாய் பிரக்கடிச்சுச் செத்துப்போகும் கெதியாக" என்றான் கேதீஸ். தொடர்ந்து நாய்களைப் பற்றியும் அவற்றின் விசுவாசத்தைப் பற்றியும் கதைத்துக் கொண்டு நித்திரைக்குப்போனார்கள்.

காலைப்பொழுதில் வெளியில் கேட்ட சத்தத்தால் விழித்துக்கொண்ட கேதீஸ், சோம்பலை முறித்துக் கொண்டு வெளியில் வந்தான். பார்த்த சிலையாய் நின்றான். "அவற்ற நாக்கு என்ன கரிநாக்கே பிள்ளை" என்று மாமியார்



கேட்பது மட்டும் தெளிவாகக் கேட்டது. மனைவியின் பார்வை வீச்சு சுட்டெரிக்க "நான் ஒன்றும் செய்யவில்லை" என்று கண்களாலேயே பதில் சொன்னான்.

நாய்க்குட்டி இரவே செத்துவிட்டிருந்ததை அதன் மேல் ஊர்ந்து கொண்டிருக்கும் எறும்புகள் உறுதிப்படுத்தின. மாமா, மாமியின் கண்ணீர்களுடன் நாய்க்குட்டியின் இறுதிக்கிரியைகள் நடந்து கொண்டிருந்தன. தொலைபேசி அடிக்க அதை எடுத்த மாமியார் "ஓம்! பிள்ளை, உனக்கார் சொன்னது? சிங்கத்தாற்ற மனிசியே? ஆ... அருமந்த நாய்க்குட்டி நந்தினியும் அவரும் வந்து நிற்கிறபடியால் உதவி..."

கேதீசுக்குப் பயமாக இருந்தது இரவு தான் சொன்னதை மாமியார்க் கிழவி லண்டனில் இருக்கிற மக்களுக்குப் போட்டுக்குடுக்கப் போகுதோ? என்று. நல்லகாலத்துக்குக் கிழவி எதுவும் சொல்லவில்லை. நன்றியுடன் மாமியைப்பார்க்க, "தம்பியோட கதைக்கப் போறியே இஞ்சதான் நிற்கிறார் கதை" என்றவாறு தொலைபேசியை கேதீசிடம் கொடுத்தார். கேதீஸ் எல்லாவற்றுக்கும் ஓம் போட்டுக் கொண்டவன் "எனக்கே இப்பதான் தெரியும் எனக்கு முதலே லண்டனில இருக்கிற உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு" என்றான் சும்மாயிராமல். "ஓ... அம்மா இராத்திரியும் சொன்னவா நீங்கள் நாய் செத்துப்போயிடும் போல கிடக்கு என்று சொன்னீங்கள் என்று..." மகள் சொல்லச் சொல்ல கேதீஸ் வடிவேலுவின் பாணியில் "அடி நாறல் கிழவி..." என்று மனதில் திட்டிக்கொண்டான். 'சரி நாங்க பிறகு கதைக்கிறம், நல்லதொரு நாய்க்குட்டியைப் பார்த்துக் குடுங்கோ. நாய்க்குட்டி கிடைக்கும் வரை நீங்கள் வீட்டில நிண்டுட்டுப் போங்கோ' என்றவாறு வைத்தார் தொலைபேசியை . கேதீஸ் மனைவியிடம் விடயத்தைச் சொன்னான் "அடி நாய்க்குட்டி கிடைக்கும் வரை எங்களை நிக்கட்டாம். அப்ப நாங்க என்ன

நாய்களோ? இல்லாட்டி உன்ர மாமனார் செத்தே போனார்..." அவசர அவசரமாக ஓடிவந்து வாயைப்பொத்தினாள் நந்தினி. "உங்கட வாயை மூடிக்கொண்டு இருங்கோ! எனக்கு இனி விடியும்வரை நிம்மதி இராது' என்றாள். "அடிபாவி அப்ப என்ர வாயாலதான் நாய் செத்தது என்று முடிவே பண்ணிட்டியோ?"

"முதல்ல போய் நல்ல நாய்க்குட்டியாப் பிடிச்சுக்கொண்டு வாங்கோ... இல்லாட்டி வீட்டுக்குப்போக ஏலாது" மிரட்டினாள் பின் விரட்டினாள் நந்தினி. தன்னை நொந்தவாறே மோட்டார் சைக்கிளை எடுத்தான் கேதீஸ் நாய்க்குட்டி பிடிக்க.

வலந்தலை மின்சந்தையடி, பொன்னாலை மீன்சந்தையடி, காக்கைதீவு மீன்சந்தையடி, இப்படி நீண்டுகொண்டு போனது நாய்க்குட்டி தேடும் படலம். எல்லா இடமும் பெட்டை நாய்க்குட்டிகளே நின்றன. கடுவன் குட்டிகளைக் கடுகளவும் காணவில்லை.


பெரிய கடையையும் தாண்டி திருநெல்வேலிச் சந்தையடியில் நாய்க்குட்டிகளைப் பூந்து பூந்து பார்த்தவாறே மோட்டார் சைக்கிளை மெதுவாகச் செலுத்தி வந்தவனைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்காரன் மோதிவிட்டான். காலில் வலி ஏற்பட்டது. அதை விட அவன்

43

இதென்னப்பா நாயோ? பேயோ? இப்படிச் சாப்பிடுது, சாப்பாடு வைக்கிறதில்லையோ அதுக்கு... என்றவனின் கதையைக் கேட்டுக்கொண்டு வந்த மாமனார் அதுவோ தம்பி, எங்களிட்ட நின்ற நாய் வயது வந்து செத்துப்போச்சுது, நாங்க தனிய இருக்கிறனாங்கள், பெரிய வளவு எப்படியும் ஒருநாய் நிற்க வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருந்தும் புறாவும்


ஒரு காட்டில் புறாக்கூட்டம் வசித்து வந்தது. ஒரு நாள் எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த பருந்தின் கண்களில் புறாக்கூட்டம் தென்பட்டது. புறாக்களைப் பார்த்தவுடன் பருந்துக்கு வாயில் எச்சில் ஊறியது. ஏதாவது ஒரு புறா வரும். அதனைப் பிடித்து உண்ணலாம் என்ற திட்டத்துடன் அது மறைந்து நின்றது. ஆனால், ஒரு புறா கூட கூட்டத்தை விட்டுத் தனியாகப் பிரிந்து செல்லவில்லை. இரை தேடும்போது கூட அவை ஒன்றாகவே சென்றன. ஆதலால், தந்திரத்தால் மட்டுமே இவற்றை வெல்ல முடியும் என நினைத்த பருந்து அதனைச் செயற்படுத்த ஆரம்பித்தது.

ஒருநாள் இரை தேடிக்கொண்டிருந்த புறாக்களிடம் சென்ற பருந்து, "அழகான புறாக்களே! நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், என்னைப் போல் வலிமை மிகுந்த ஒருவர் உங்களுக்குத் தலைவனாக இருந்தால் உங்களை எவராலும் எதுவும் செய்ய முடியாது" எனக் கூறியது. பருந்தின் பேச்சில் மயங்கிய புறாக்கள், அதனைத் தமது தலைவனாக ஏற்றுக் கொண்டன.

அன்று முதல் தினமும் ஒவ்வொரு புறாவாகக் காணாமல் போய்க்கொண்டிருந்தன. இதனால், மற்றைய புறாக்கள் கவலைப்பட ஆரம்பித்தன. பருந்தும் அவர்களோடு சேர்ந்து கவலைப்படுவதாக நடித்தது. ஆனால், சொற்ப நாள்களிலேயே புறாக்கள் காணாமல் போவதற்குக் காரணம் பருந்துதான் என்பதை அவை கண்டுபிடித்துவிட்டன. எல்லாப் புறாக்களும் ஒன்று சேர்ந்து அதை அடித்துத் துரத்தின.

***நீதி : எதிரியைக் கூடவே வைத்திருந்தால், இழப்புக்கள்தான் எஞ்சும்.***

# சிரி சிரி...



**ஆசிரியர்:** ஏன்டா உன் புத்தகங்களை எல்லாம் பக்கத்து மேசையில வைச்சிட்டு நீ மட்டும் இங்க உட்கார்ந்திருக்காய்?

**மாணவன்:** நீங்க தானே சேர் பிரச்சினைகளைத் தள்ளி வைக்கணும் என்று சொன்னீங்க?

**ஆசிரியர்:** !!!

# என் பிரியமான தோழி!

டி.அதிசயா



என் முதலும் முடிவுமான தோழி, புத்தகம் மட்டும்தான். நான் செய்யும் தவறுகளைக் கண்டு அவள் கிண்டல் செய்வதில்லை. அதைக் கண்டு ஆர்ப்பரிப்பதில்லை. மௌனமாக இருந்து என்னைத் திருத்துகின்றாள். மலையளவு உயரம் செல்ல அறிவுறுத்து கின்றாள். தன்னைத் தழுவும் போதெல்லாம் என்னை விழிக்கச் செய்கின்றாள். எனக்குள் ஆயிரம் அறிவு விதைகள் முளைக்க வைக்கின்றாள். அவளை நீங்களும் நேசித்துப் பாருங்கள்..உங்களுக்குள்ளும் ஏராளமாக அறிவு பெருகும்.



## சிந்தனை

எதிரியைக்களையெடுத்தால் மட்டுமே, வாழ்க்கையில் சந்தோசம் நீடிக்கும்...

# கத்தரி வெருளி



கத்தரித் தோட்டத்து மத்தியில் நின்று
காவல் புரிகின்ற சேவகா – நன்று
காவல் புரிகின்ற சேவகா
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் – உன்னைப் போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா – என்றும்
காவல் புரிகின்ற சேவகா
எண்ணி உன்னைப் போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? – என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசனிக் காய்போல்
மஞ்சள் நிற உறுமாலைப்பார் – தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப்பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார் – இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார் – கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார் – கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார் – ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையும் கண்டதோ? – உன்றன்
பொல்லாத பார்வையும் கண்டதோ?
வாட்ட மில்லாப் பயிர் மேய வந்த பசு
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே – வெடி
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே – கூடிக்
கத்திக் கத்திக் கரைந் தோடுமே
நள்ளிரவில் வரும் கள்வனுனைக் கண்டு
நடு நடுங்கி மனம் வாடுமே – ஏங்கி
நடு நடுங்கி மனம் வாடுமே

ஏழைக் கமக்காரன் வேலைக் குதவி செய்
ஏவற்காரன் நீயே யென்னினும் – நல்ல
ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப் போலப் போலி வேடக்காரன் நீயே
ஆவதறிந்தன் னுண்மையே – போலி
ஆவதறிந்தன் னுண்மையே


தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
துண்ணென் றிடித்தென் நெஞ்சகம் – மிகத்
துண்ணென் றிடித்த தென் நெஞ்சகம்
சேரச் சேரப் போலி வேடக்காரனென்று
தெரிய வந்ததுன் வஞ்சகம் – நன்று
தெரிய வந்ததுன் வஞ்சகம்

சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதை போல்
தேசத்திலே பலர் உண்டுகாண் – இந்தத்
தேச்த்திலே பலர் உண்டு காண்
அங்கவர் தம்மைக்கண் யேமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்று நான் – உன்னில்
அறிவு படைத்தனன் இன்று நான்.

*-நவாலியூர் சோமசுந்தரப் புலவர்*



ந.கவிப்பிரியா,
வட்டு இந்து கல்லூரி.



ஆர்.முகிலினி,
முன்பள்ளி.

# காளான்

காளான் என்பது மண்ணின் மீது வளரும் ஒரு பூஞ்சைத் தாவர உயிரினம். காளான்களுக்கு மற்றத் தாவரங்களைப்போல இலை, பூ, காய் என்று எதுவும் இல்லை. எனவே, விதைத்தூள் மூலம் மட்டுமே காளான்கள் இனப்பெருக்கம் செய்கின்றன. பல நாட்டவரால் விரும்பி உண்ணப்படும் உணவாகக் காளான் காணப்படுகிறது. இவை பலதரப்பட்ட சூழல்களிலும் வளரக்கூடியவை. இயற்கையாக வளரும் காளான்களையே அதிகம் உணவுக்குப் பயன்படுத்துகின்றனர். பல நாடுகளில் காளான் முறையாகப் பயிர் செய்து உற்பத்தி செய்யப்படுகிறது.

மற்றக் காய்கறிகளில் பெற முடியாத உயிர்ச்சத்து 'டி'யை காளானில் அதிகமாகவும் எளிதாகவும் பெறலாம். பென்சிலின் என்ற மருந்து செய்ய பென்சிலியம் (Penicillium) எனப்படும் நுண்ணிய பூஞ்சைக்காளான் பயன்படுகின்றது.

*ஞா.கார்த்திகா, வட்டு. மத்திய கல்லூரி.*





# தைப் புதிர்கள்

ஊர்ந்து செல்லும் தை - நத்தை
பொருள்களை வாங்கும் தை - சந்தை
படுக்க உதவும் தை - மெத்தை
அப்பாவைக் குறிக்கும் தை - தந்தை
அப்பாவின் சகோதரியைக் குறிக்கும் தை - அத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை என்பது மிகக் கொடிய பாவம்

ஸ்ரீ.நதிபரன்

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்கிறது வள்ளுவம்.

இற்றைக்கு சுமார் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து மறைந்த நமது மூதாதையரது உன்னதமான வாழ்வியலை அக நேர்த்தியாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது மேற் சொல்லப் பட்ட குறள். கவரி மானானது தன் உடலிலிருந்து ஒரு உரோமம் உதிர்ந்தால்கூட தொடர்ந்து உயிர் வாழ விரும்பமாட்டாது. அந்தக் கவரிமானை ஒத்த குணத்தையுடையோரே மேலோர். செயற்கரிய செயல்களைச் செய்யும் இவர்கள் தமது செயலொழுங்குக்கு இயைபுபடாத, இழுக்கான செயலை அறியாமற் செய்தால்கூட தமது உயிரையே துறக்கத் துணியும் நெஞ்சுரம் கொண்டவர்கள் என்பதே இந்தக் குறள் வெளிப்படுத்தி நிற்கும் பொருள். இதிலிருந்து தற்கொலைகளானவை முற்கால தமிழரின் பண்பாட்டியலுடன் நெருக்கமாக இருந்ததனை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படுகின்ற மடலேறுதல் மற்றும் உடன்கட்டை ஏறுதல் முதலிய வழக்காறுகள் ஒருவரிடத்தில் வைத்துள்ள அன்பு மிகுதியால் புரியப்படுகின்ற தற்சார்புடைய கொலைகளாகவும் அமைகின்றன.



**முன்னேற்றங்களால் விபரீதங்கள்**

மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே தற்கொலைகளும் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்தவையாகக் காணப்படுகின்றன. மனிதப் பெறுமானத்தைச் சரிவர உணர முடியாமலும் குறுகிய மனப்பான்மையுடனும் அவசரமாக எடுக்கப்படும் முடிவுகளானவை தற்கொலைகளாகப் பரிணமிக்கின்றன. தற்காலத் தகவல் தொழிநுட்ப புரட்சியின் விளைவாக நமது வாழ்வியல் கூறுகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலைத்தேய கலாசார அடிமைகளாக மாற்றமுற்று எப்படியும் வாழலாம் என்ற மனப்போக்கு மக்கள் மனங்களில் முளைவிட்டு வருகின்றது. கைபேசிகள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பயன்பாடுகள் வேகமெடுத்து வருகின்றமையானது தற்கொலைகளின் அதிகரிப்புக்குத் தூபமிடுகின்றன எனலாம். அது மாத்திரமன்றி இன்று நாட்டில் அதிகரித்திருக்கின்ற இளையோர்களின் தற்கொலைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பவையும் இவையே.

**பன்முகப்பட்ட பிரச்சினைகள்**

தற்கொலை போன்ற பாரதூரமான விளைவுகளை இவர்களிடத்தில் ஏற்படுத்திவருகின்ற விடயங்களின் அடித்தளமாக மது, போதைப்பொருட் பாவனைகளால் ஏற்படுகின்ற உளப் பாதிப்புக்களே காரணம். அத்துடன் வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, கடன் தொல்லை, கொடிய நோய்களின் தாக்கம், காதல் விவகாரங்கள், குடும்பப் பிரச்சினைகள், சமூகத்தில் களங்கமேற்படல் மற்றும் பரீட்சைத் தோல்விகள் போன்றவற்றையும் குறிப்பிடலாம். சமகாலத்தில் இளையவர்களின் தற்கொலை செய்யும் வீதம் அதிகரித்து வருகின்றமை நாட்டின் அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையில் தற்கொலையானது ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. கொலை என்பது எத்துணை பாவகரமான செயலாக நோக்கப்படுகின்றதோ அதேபோல தற்கொலையும் மிகவும் கொடிய பாவச்செயலாகவே நோக்கப்படுகிறது. எனவே பிரச்சினைகளுக்கு வடிகாலாக தற்கொலையை நாடுவதென்பது அறிவற்ற செயல் மட்டுமல்ல மிகப் பாவகரமான மூடத்தனமான செயலுமாகும்.

**இளம் சந்ததியினரில் கவனம் தேவை**

புள்ளிவிபரத்தரவுகளின்படி இளவயதினரிடையே தற்கொலைகளின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்படுகின்றது. அகபுறக் காரணிகளின் தூண்டுதல் காரணமாக ஒருவருக்கு உளப்பாதிப்புகள் ஏற்படுமிடத்து அவசரமாக அவர் அதிலிருந்து விடுபடுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுதல் அவசியமானதாகும். இல்லாதுவிடில் அவை தற்கொலைகளாகப் பரிணமிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டு விடுகின்றன. தற்போது பெரும் பிரச்சினையாக உருவெடுத்திக்கின்ற தற்கொலைகளானவை உள, உணர்வைச்சிதைக்கும் உளநெருக்கீட்டின் தாக்க மேலீட்டால் நிகழ்பவையாகும். பொதுவாக ஒருவருக்கு உளரீதியான அழுத்தங்கள் நெருக்கீடுகள் காணப்படுகையில் சாதாரணமான உடலியல்சார் நோய்கள் போல் அறிகுறிகள் இலகுவில் வெளித்தெரியமாட்டாது.

குறித்த நபர் சுயமாக ஏனையவர்களுக்கு தனது நிலையை வெளிப்படுத்தினாலன்றி வெளிப்படையாக இனங்காண முடியாத அறிகுறிகள் அவர் மனதுள் மௌனமாக அமிழ்ந்திருந்து உள வலியை ஏற்படுத்தியவாறிருக்கும். தற்கொலை செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் தாம் தற்கொலை செய்யும் இறுதிக் கணம்வரையிலும் தமது முடிவை எவருக்குமே கூறமாட்டார்கள் என்பதனையும் கருத்திலெடுக்க வேண்டும். இந்தநிலையில் பிரச்சினைகளுக்குத் தற்கொலையானது தீர்வல்ல என்பதைத் தெளிவுபடுத்தி அதனைத் தடுப்பதற்கான கருத்துருவாக்கச் சிந்தனையானது அனைவரது மனங்களிலும் முகிழ்ப்புக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.




**சிதைந்துவிட்ட தமிழர் வாழ்வியல்**

மேலைத்தேச நாகரிக மோகம் எமது கூட்டுக் குடும்ப வாழ்வியலை கலைத்து உறவுகளையும் பந்த பாசங்களையும் சிதைத்து குடும்பம் என்ற கட்டமைப்பை சீரழிக்கலாயிற்று. ஒருவருக்கொருவர் ஆறுதல் எனும் நிலைமாறி யாரை யார் நம்புவது? என்ற கேள்வி ஆற்றாமையுடன் எழுகின்றது. எமது கிராமியப் பண்பாட்டு மரபியலில் பிறரிடத்தில் அன்பு சொரிதல் என்ற உயர் பண்பு காணப்பட்டது. நாகரிக மாற்றம் மற்றும் நகர வாழ்வியல் மோகம் என்பவற்றால் உறவுகளிடையேயான பரஸ்பர தொடர்பானது புரிந்துணர்வானது இன்று அருகிவருகிறது. மக்களிடத்தே பெருகிவரும் உளவியல் சார் பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் உறவுகளிடையேயான அன்புக்குலைவெனலாம்.

ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முற்படாமை, ஏனையவர்கள் மீதிருக்கும் தவறான அபிப்பிராயம், மற்றவர்களில் தங்கிவாழ்தல், ஒருவரது கருத்துக்கு மதிப்பளிக்கத் தவறுதல், சமூக நாட்டம் குறைதல், உறவுச்சிக்கல்கள், முரண்பாடுகள், தனிமையில் ஒதுங்கியிருத்தல், முடிவெடுக்கும் திறன் குறைதல், தன்னம்பிக்கையின்மை, அதீத மனவெழுச்சி மாறுதல்கள் (பதகளிப்பு, கோபம், பயம்) என்பவையே அதிகரித்துள்ள தற்கொலைகளுக்கு தனிமனிதன் சார்ந்து செல்வாக்குச் செலுத்துகின்றன. இன்றைய சினிமாக்கள் மற்றும் சின்னத்திரைகளின் தாக்கமானது அதிகரித்து வருகின்றமை கண்கூடு. இவை மக்களின் பெருமளவு நேரத்தை விழுங்கியும் ஒளிமயமான எதிர்காலத்தைப் பாழடித்தும் வருகின்றன. இதனால் குடும்ப அங்கத்தவர்களிடையே இயல்பாக இருக்கவேண்டிய உறவு நிலையானது அறுபட்டுப் போய் குடும்ப வன்முறைகளுக்கும் மணமுறிவுகளுக்கும் பிரிவுகளுக்கும் ஏதுவாகிறது. இவை போன்ற இன்னபிற காரணங்களும் தற்கொலைகளுக்கு தூண்டுகோலாக விளங்குகின்றன.

பொதுப்படையில் தற்கொலைகளை இருவகைப்படுத்தி நோக்க முடியும். ஒன்று குறித்த நேரக்கத்திற்குட்பட்டவை அதாவது பொது நலம்சார்ந்தவை மற்றையது குறித்த நோக்கத்திற்கப்பாற்பட்டவை அதாவது சுயநலம் சார்ந்தவை. இங்கு குறித்த நோக்கத்திற்குட்பட்ட தற்கொலைகள் என்பது போர்க்களங்களில் பிரயோகிக்கப்படுகின்ற கெரில்லாப் போர்முறை உபாயங்களில் ஒன்றான மனிதனை வெடிகுண்டாகப் பயன்படுத்தப்படுவதைப் போன்றது. இன்று உலகில் நடைபெற்றுவருகின்ற தீவிரவாதத் தாக்குதல்கள் பெரும்பாலும் தற்கொலைத் தாக்குதலாகவே காணப்படுகின்றன. ஆனால் சாதாரணமாக உள ரீதியான பிரச்சினைகளால் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்கும் செயன்முறைகளே குறித்த நோக்கத்திற்கப்பாற்பட்டு புரியப்படும் தற்கொலைகளாக அமைகின்றன.

**உயிர்களைக் காப்பது அனைவரதும் கடமை**

உலகில் வருடாந்தம் 8 இலட்சம் மக்கள் தற்கொலைகளால் உயிர் விடுவதாக உலக சுகாதார அமைப்பு தனது அறிக்கையில் கூறுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் சுமார் 4000 பேர்வரை சாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொதுவாக தற்கொலை புரிவோர் தூக்கில் தொங்குதல், நச்சுத்திராவகம் அருந்துதல், நீர் நிலைகளில் மூழ்குதல், நெருப்பில் எரிதல், மற்றும் கட்டடங்களில் இருந்து குதித்தல், பயணிக்கும் வாகனங்களுடன் மோதுதல் போன்றவாறே அதிகமாகத் தற்கொலைகளைப் புரிகின்றனர். எனவே இவ்வாறான அநியாயமான தேவையற்ற தற்கொலைகளைத் தவிர்த்துக் கொள்வது ஒவ்வொரு தனி மனிதர்களுக்குமுரிய கடப்பாடாகும்.

சமூக ரீதியிலும் கல்வி, சுகாதார மட்டங்களிலும் சிறப்பு உளநலநோம்பும் திட்டங்களை துறைசார்ந்த ரீதியாக வகுத்து செயலாற்ற வேண்டியது அரசுக்குக்கட்டாயமானதாகும். இதற்கு நன்கு பயிற்சிபெற்ற உள சமூகப் பணியாளர்களின் சேவை கட்டாயமானது. அத்துடன் ஆன்மிகவாதிகள் மற்றும் சமயத்துறவிகளின் பங்கும் மிகவும் வேண்டியது. இவர்கள் பணம், புகழுக்காகத் தமது பணியை மேற்கொள்ளாது சமூகத்தில் மக்களோடு மக்களாக நின்று ஆன்மிகப்பணியாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதன்மூலம் தற்கொலைகள் அதிகரிப்பு வீதத்தை தாழ்வான மட்டத்துக்குக் கொண்டுவர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்தவார முகநூலில்...

■ உசிலமணி

கொஞ்ச நாளாய் ஓய்ஞ்சிருந்த பெடியள் இப்பதான் தீயா வேலை செய்யத் தொடங்கியிருக்கிறாங்கள். பேஸ்புக்கில விசயங்கள் சூடாய் வரத் தொடங்கியிருக்கின்றன. முள்ளிவாய்க்கால் நினைவு கால்பந்தாட்டத் தொடர் நடக்கின்றது. இதைப் பற்றி ஒரு தொகுதிப் பேர் பேஸ்புக்கில போராட்டம் நடத்தினாங்கள். அந்தப் பேஸ்புக் போராட்டத்தால சில அணிகள் தொடரிலிருந்து விலகிட்டுது. இந்தப் பெயரில் தொடர் நடத்துறதுதான் பிரச்சினை என்று, அதைக் கிளப்பி விட்டவங்கள் சொல்லுறாங்கள். ஆனா, இதைப் போய்த் தொடக்கினது மாவை. எம்.பி. என்றதாலதான் இந்தப் பிரச்சினையே கிளப்பப்பட்டதாக மற்றொரு கூட்டம் கூவுது. இயக்கம் இருக்கேக்க, சாவடைந்த தளபதிகளின் பெயரில இப்படியான விளையாட்டுத் தொடருகள் நடந்ததுதானே என்றும் இதற்கு நியாயம் கற்பிக்கிறவங்கள் இருக்கிறாங்கள். எது எப்படியோ முள்ளிவாய்க்கால் இப்ப அரசியலுக்கான பெயராக மாறிப்போச்சுது.

Like Comment Share

'வரும்... ஆனா வராது...' என்ற வடிவேலுவின் வசனம் மாதிரி, இவங்கள் போர் தொடங்குவாங்களா? மாட்டாங்களா? என்று ஒரு கூட்டம் அமெரிக்காவையும், வடகொரியாவையும் பார்த்துக் கொண்டிருக்குது. மூன்றாம் உலகப் போரைப் பாக்குறதில அவங்கள் ஆசையா இருக்கிறாங்கள். இஞ்ச நடந்த போரின்ர அழிவைப் பார்த்துணர்ந்த பிறகும், இவங்களுக்கு என்னெண்டுதான் இப்பிடியான நினைப்பு வருகுதென்டு தெரியவில்லை.

Like Comment Share



காணாமல் ஆக்கப்பட்டோருக்காகக் கடையடைப்பு நடந்தது. போருக்குப் பிறகு நடந்த மூன்றாவது பெரிய கடையடைப்பு. இதுக்கு முதல் கடையடைப்பு நடக்கேக்க வராத எதிர்ப்பு இந்த ஹர்தாலுக்குப் பேஸ்புக்கில வந்தது. இதை நடத்திறதால என்ன பிரயோசனம் ? அரச அலுவலகங்களை முடக்காட்டி எப்பிடி அரசுக்கு எதிர்பை வெளிக்காட்டுறதாக அமையும் என்று, நியாயமா கேக்கிற மாதிரி, உள்ளுக்க புகுந்து ஒரு கூட்டம் குழப்பம் விளைவிக்க முயன்றது. கேள்வி நியாயம்தான். அரச அலுவலகத்தை முடக்க, பேஸ்புக்கில 'பேமஸாகிறதுக்காக' எழுதுற எத்தனை பேர் களத்துக்கு வருவினம். மக்களின் அதி உச்ச அகிம்சைப் போராட்டம்தான் இந்தக் கடையடைப்பு. அதைச் சீண்டி வன்முறையாக்கி இனியொரு போராட்டமும் நடக்கக் கூடாது என்றதுதான் இந்த உசுப்பேத்திற பேஸ்புக் போராளிகளின்ர நோக்கம் எண்டும் அதில ஒரு கதை.

Like Comment Share

கடைசியா கொஞ்சம் 'ஹிட்டான' விசயம், சுமந்திரனை ஜனாதிபதி சட்டதரணியாய் நியமிச்சது. ஏற்கனவே சுமந்திரனைப் பற்றி ஏதாவது விசயம் கிடைச்சாலே போட்டு வாங்குவாங்கள். அதுவும் ஜனாதிபதி சட்டத்தரணியாய் நியமிச்சதை விடுவாங்களா? அரச விசுவாசத்துக்கு அந்தாளுக்குக் கிடைச்ச பதவி என்று ஒரு பக்கம் வசை. இந்த நியமனம் எப்படிக் கொடுக்கிறது? ஏன் கொடுக்கிறது? இதுக்கு முதல்ல ஜனாதிபதி சட்டத்தரணியாய் வேற யார் தமிழாக்கள் இருக்கினம்? என்றெல்லாம் ஆராய்ஞ்சு பாக்கச் செல்லியும் எதிர்வாதம். சுமந்திரனோட, தமிழ் மக்கள் பேரவையின்ர முக்கியஸ்தர் புவிதரனுக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி கௌரவம் கிடைச்சது. அதைப் பற்றி பேஸ்புக் போராளிகள் வாய் திறக்க மாட்டாங்கள். என்றும் ஒரு பகுதி பொருமியிருக்கு.

பேஸ்புக்கில லைக் வாங்குறதுக்கும், பிரபலமாய் வாறதுக்கும் இப்ப இலகுவான வழி எதுக்கெடுத்தாலும் விமர்சிச்சாப் போதும் என்றதுதான். பார்ப்பம் இந்த வாரம் எதை வைச்சுப் பொங்கப் போறாங்கள் எண்டு.







# அட்சய திருதியையும் அடித்தட்டு மக்களும்

■ சிவ.பரமேஸ்வரி

அட்சய திருதியை இப்போது யாழ்ப்பாண சமூகத்தில் பரவலாகக் கொண்டாடப்பட்டுவரும் ஒரு முக்கிய சடங்காகி விட்டது. இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் பெரியளவில் எழுச்சி பெறாதிருந்த இந்த விழா கடந்த பத்தாண்டுகளுக்குள் எப்படி அவ்வளவு முக்கியத்துவமடைந்தது என்பது ஆச்சரியப்படவைக்கின்றது.

அட்சயதிருதியை என்பது இந்து மதத்தினரின் ஒரு புனித சடங்காகக் கருதப்பட்டுவருகின்றது. இது சித்திரைமாத வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்து வரும் மூன்றாம் நாளில் கொண்டாடப்படுகின்றது.

கிருதயுகத்தில் பிரம்மனால் உலகம் தோற்றுவித்த நாளென்றும், கங்கை நதி சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்தநாளென்றும், பரசுராமரின் பிறந்தநாளென்றும், சிவபெருமான் அன்னபூரணித்தாயிடமிருந்து உணவைப் பெற்றது, கண்ணன் மகாபாரதத்தில் பாஞ்சாலிக்கு சேலைகொடுத்தது, மணிமேகலைக்கு அட்சயபாத்திரம் கிடைத்தது, சந்திரன் சாப நிவர்த்திபெற்று வளரத்தொடங்கியது, பாஞ்சால நாட்டு மன்னன் நீர்த்தானம் செய்தது என்று பல ஐதீகக்கதைகள் இந்த நாளுக்குள் நிரம்பிக்கிடக்கின்றன.


இதில் எது உண்மை? எது பொய்? நம்பலாமா? வேண்டாமா? என்பவைகளுக்கு அப்பால் இந்தப் புனித நாள் குறிப்பிட்ட சில வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதன் நோக்கம் என்ன என ஆராய்ந்தால் உலக பொருளாதாரமயமாக்கலின் இன்னொரு 'மாஸ்ரர் பிளான்' என்றே இதைக் கொள்ள வேண்டியிருக்கின்றது. எப்படித் தமது வியாபாரத்தை அதிகரிக்கச் செய்வது எனச் சிந்தித்தித்துவிட்ட வணிகர்களின் புத்திசாலித்தனமான ஏற்பாடே மத நம்பிக்கை முலாம் பூசப்பட்ட இந்த விளம்பரச் சடங்கு. புனித நாள்.

அட்சய என்றால் குறைவில்லாதது என்று பொருள். இந்த நாளில் தங்கம் வாங்குவது மட்டுன்றி அன்னதானம் செய்தல், நடவு செய்தல், மற்றவருக்கு உதவுதல் எனப் புண்ணியம் தரக்கூடிய செயல்களையும் செய்யலாம். இந்தநாளில் ஒரு கருமம் செய்தால் அது வளர்ந்து கொண்டும் பெருகிக்கொண்டும் செல்லும் என்பதுதான் ஐதீகம். முன்னோர்கள் வீட்டுக்குத் தேவையான அரிசி, உப்பு போன்ற உணவுப்பொருட்களைத்தான் இந்த நாளிலே வாங்கினார்கள். காரணம் உணவுப் பஞ்சம் வராது. எப்போதும் யாருக்காவது வயிறார உண்ணக் கொடுத்துக்கொண்டிருக்கலாம் என்ற நல்லெண்ணத்தில்தான். மணிமேகலையின் பாத்திரத்தில் குறைவில்லாது அன்னம் பெருகியதும், சந்திரன் வளர்ந்ததும், பாஞ்சாலிக்குச் சேலை நீண்டு சென்றதையும் ஒப்புநோக்கினால் தானம்தான் இந்தநாளில் முக்கியமாகப்படுகிறது.

சரி பொருள் வாங்கினாலும் இங்கே தங்கம் மாத்திரமே வாங்கவேண்டுமென்று இந்த மக்களை பழக்கப்படுத்தியதும் அவர்களும் அதையே பின்பற்றுவதும்தான் யாழ்ப்பாணத்தில் வேடிக்கையாகவுள்ளது. ஏன் இந்த வெய்யி மாதத்தில் வீதியோரங்களில் தண்ணீர் பந்தல்கள் அமைத்து நீர் தானம் செய்தும் புண்ணிய செல்வத்தைப் பெருக்கலாமே? நாம் அவைகளைச் செய்வதில்லை. இப்படியாவது எங்களிடம் செல்வம் பெருகிவிடாதா என்ற அடித்தட்டு மக்களின் ஏக்கமும் நம்பிக்கையும்(மூடநம்பிக்கை என்பது அவரவரைப் பொறுத்தது) தான் இதன் மிகப்பெரிய பலம்.

அட்சய திருதியை பற்றி எழுத்தாளர் ஞானி தன்னுடைய பத்தியில் "வணிகர்களின் புத்திசாலித்தனம்தானே இப்போதைய மாற்றத்துக்கு காரணம்? கிராமப்பொருளாதாரத்தில் பொங்கலுக்குப் பிறகு குறுகியகாலப் பயிர்களாக அமையும் உளுந்தும் கடலையும் சித்திரை, வைகாசி மாதத்தில் பெற்றுத்தரும் இலாபத்தில் தங்கம் வாங்குவது பழைய வழக்கம். சில ஆண்டுகளாகத் தொடர்ந்து மோசமான மழையும் பனியும் உளுந்து, கடலையை பாதிக்கும்போதெல்லாம் தங்க விற்பனையும் பாதித்தது. அதைச்சரிக்கட்ட புதிய நடுத்தரவர்க்கத்தின் உபரி சேமிப்பை அதே சீசனில் வரும் அக்ஷயை திருதியை பயன்படுத்தித் தங்கம் விற்க வணிகர்கள் ஒன்றுபட்டு எடுத்த முயற்சி வெற்றிபெற்றுவிட்டது" (தீம்தரிகிட மே16 - 31.2005) எனக் குறிப்பிடுகிறார்.

அவர் தன்னுடைய பத்தியில் மேலும் "இதே போல விஜயதசமியையும் புத்தக விற்பனைத் திருவிழாவாக ஆக்கிவிட முடியாதா?" எனக் கேள்வி எழுப்புகிறார். சில நகை வியாபாரிகளால் ஒரு சடங்கை மிகப்பெரிய அளவில் இப்படிக் கொண்டுவரத் தெரிந்திருக்கிறதென்றால் ஏன் புத்தக வியாபாரிகளால் இந்நாளில் புத்தகம் விற்கும் சடங்கை உருவாக்க முடியாது. அது அட்சய திருதியை விட மேலானது தானே ஏன் இவை பற்றி நாம் சிந்திப்பதில்லை.



இருக்கும் நகையை அடகு வைத்தென்றாலும் அட்சயதிருதியை அன்று புது நகை வாங்க வேண்டுமென்று நகைக்கடை வாசல்களில் முண்டியடிக்கும் நாம் ஏன் இவைகளைப்பற்றி சிந்திக்கப்போகிறோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரைத்த மாவை அரைக்கவேண்டாம்

அழலாடிக்குட்டன்

சிறுகதையோ, கவிதையோ, நாவலோ இவற்றை உள்ளடக்கிய கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கும் பணியும் என்ன? இவை யாருக்காகப் படைக்கப்படுகின்றன.

மனித வாழ்வு என்பது ஒரு ஒழுங்கின் மீதுதான் கட்டப்படுகின்றது. பிறப்பில் இருந்து இறப்புவரை இந்த ஒழுங்கமைப்பு கட்டமைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான ஒழுங்கு பிழைத்தால் எல்லாமே பிழைத்து விடும். ஒருவர் உரியவயதில் திருமணம் செய்து கொள்வது, பிள்ளைகள் பெற்றுக் கொள்வது, அவர்களை வளர்ப்பது, நல்ல கல்வி புகட்டுவது, சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு அளிப்பது என்பது எல்லாமே முன்னர் குறிப்பிட்ட ஒழுங்கமைப்பின்படியே நடைபெறுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் நோக்கம் ஒன்றுதான்.

இதில் தகப்பன் தண்ணியடித்தோ வேறு வழிகளில் தடம்புரண்டால், தாய் தவறு இழைத்தால், குடும்பம் சீர்கெட்டுப் போகும். பிள்ளைகள் நிலை என்ன? அந்தக் குடும்பத்தின் முடிவு தான் என்ன?

ஏற்கனவே இவ்வாறான குடும்ப ஒழுங்கு முறை உள்ள எமது பாரம்பரிய வாழ்வு முறையில் தற்போது எமது பிள்ளைகளின் நிலை என்ன? போதை வஸ்து பாவனையும் சிறுவர் துஷ்பிரயோகமும் வாள்வெட்டுக் கோஷ்டிகளும் தலைவிரித்தாடும் நிலை எப்படி வந்தது.

இவ்வாறு தறிகெட்டுத் திரியும் பிள்ளைகளின் குடும்பப் பின்னனி என்ன? சமகால நிகழ்வுகளை அவதானிக்கும்போது இதிலீடுபடுவோரின் கணிசமானோர் படிப்பறிவுள்ள, நல்ல வாழ்க்கை வசதியுள்ள உயர் பதவிகளில் உள்ளவர்களின் பிள்ளைகளும் உள்ளனர். அப்படியானால் இதற்கு பிழையை யாரின் மேல் சுமத்த முடியும்.

இந்தப் பின்னனியிலேதான் கலை இலக்கியப் படைப்பாளிகளையும் பார்க்க வேண்டும். இவர்கள் தேவர்களோ முனிவர்களோ அல்ல. சாகாவரம் பெற்றுக் கொம்பு முளைத்தவர்களோ அல்ல. இந்தச் சமூகத்தில் மக்கள் கூட்டத்தில் வாழும் சாதாரண மனிதப் பிறவிகள். இதனால் தான் தண்ணி அடித்தால், கஞ்சா அடித்தால் என்ன நடக்கும் என்று கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்குத் தெரிய வேண்டும். ஆகவே தண்ணி அடிக்கப் பழகாதவர், கஞ்சா அடிக்காதவர் எல்லாம் படைப்பாளிகளாக முடியாது என்று சொல்ல முடியாது. தனி மனிதருக்குரிய தார்மிகக் கடமைகள் அவர்களுக்கும் இருக்கவேண்டும்.

கலை இலக்கியக் கோட்பாடுகள், தத்துவங்கள் எல்லாம் காலத்துக்குக் காலம் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதில் ஒன்றும் பிழையில்லை. ஒரு புதிய நுட்பத்தையும் புதிய விடயங்களையும் நாங்கள் வரவேற்க வேண்டும்.

ஆனால் அவை எமக்குப் பொருத்தமானதா? ஏற்றுக் கொள்ளக் கூடியதா எனப் பார்க்க வேண்டும். எங்கள் வெம்மையான காலநிலைக்கு எத்தகைய உடைகள் பொருத்தமானவை. எத்தகைய உணவு முறைகள் சரியானவை. வெக்கை காலத்தில் வெள்ளரிப்பழம், ஜம்பு நாவல் இதுபோன்றவை உள்ளன.

அப்படி இருக்கும்போது எங்களுக்குப் பொருத்தமில்லாத தெரிவுகளை நாங்கள் ஏன் தெரிவு செய்ய வேண்டும். எங்கள் கலை இலக்கிய முயற்சிகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.

அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி இன்றைக்கு மீண்டும் ஆரம்ப புள்ளிக்கே வந்துள்ள எங்கள் மக்களின் நிலை என்ன? எல்லோருக்கும் அரச வேலைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு வசதிகள் கிடைப்பதில்லை. பாவப்பட்ட மக்கள் அப்படியேதான் உள்ளனர். சொந்த வீடு வாசல், வாழ்வு தந்த தோட்டம் துறவுகள் இல்லாமல் அல்லல்படும் மக்களுக்கு யார் வாழ்வு கொடுக்கப் போகின்றார்கள். இவர்களைப் பற்றி யார் யோசிக்கப் போகின்றார்கள்.

ஆனால் இவைபற்றி எழுதவோ, யோசிக்கவோ எங்கள் படைப்பாளிகளுக்கு நேரம் இல்லை. இவை பற்றி எழுதினால் அரைத்த மாவை அரைப்பதாகக் கிண்டல் வேறு. நீங்கள் அரைத்த மாவை அரைக்கவேண்டாம் புதிய கோட்பாடுகளைப் பயன்படுத்தி இத்தகைய பிரச்சினைகளை எழுதுங்களேன்.

## நூல் அறிமுகம்



**நூல்: தீர்வு தேடும் நியாயங்கள்**
**(சிறுகதைத் தொகுதி)**
**தொகுப்பு : கண. மகேஸ்வரன்**
**வெளியீடு : ஜீவநதி, கலையகம், அல்வாய்.**
**விலை : 250 ரூபா**

### வாழ்வியலைப் பதிவாக்கிய நூல்

குடும்பத் தளம் மற்றும் சமூகத்தில் மனிதர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அலசி, மனித வாழ்வியலைப் பதிவாக்கியுள்ளது தீர்வு தேடும் நியாயங்கள் (சிறுகதைத் தொகுதி) நூல்.




அப்பாச்சி, ஆதிக்கம், அதிர்வுகள், ஆக்கிரமிப்பு, அவஸ்தை, தருணம், தீர்வு தேடும் நியாயங்கள், வேளை வந்த வேளை, காலச் சிதறல்கள், தனிக்குடித்தனம், மண்ணும் மனையும், அந்திமம் ஆகிய 12 சிறுகதைகளை உள்ளடக்கிய இந்நூல், ஒவ்வொரு கதையினூடாகவும் ஏதோ ஒரு வாழ்வியல் அனுபவத்தைப் பதிவாக்கியுள்ளது.

எளிய மொழிநடை, கதைக்கு ஆழம் சேர்க்கிறது. கதைக் கருவுக்கேற்ப அட்டைப்படமும் அழகாய் வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஈழத்தில் அதிகமாக எழுதாவிட்டாலும், ஆழமாக எழுதும் எழுத்தாளர்களில் கண. மகேஸ்வரனும் ஒருவர். கலை இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வமும் ஆற்றலும் உடையவர். அவரது எழுத்துலகம் மலர, வாழ்த்துக்கள்.




**நூல் - வழித்துணை**
**ஆசிரியர் -**
**செ.சிவசுப்பிரமணியம்**

### மனிதர்களுக்கு வழிகாட்டும் நூல்

செல்லும் திசையறியாது சென்று கொண்டிருக்கும் மனித வாழ்க்கைக்குத் துணை நின்று, வழிகாட்டி நிற்கிறது வழித்துணை நூல்.

மாற்றம் ஒன்றே நிரந்தரம், மாறா மனமோ இயந்திரம் என்பார்கள். ஆனால், இந்த மாற்றங்கள் ஆரோக்கியமானவையாக இருந்தால் மட்டுமே நன்மை பயக்கும். இறைநம்பிக்கை, வழிகாட்டி, எளிமை, அறிவொளி மற்றும் ஆத்மீகம் தழுவிய இந்நூல், மனிதர்கள் சிறப்பாக வாழவும் நல்ல மாற்றங்களை ஏற்கவும் வழிகாட்டுகின்றது.

ஆசுகவி சிவசுப்பிரமணியம், கலையின்பால் தீராப் பற்றுக்கொண்டவர். கவியை உயிராய் நேசிப்பவர். அதிக தேடல் உடையவர். அவரது எழுத்துலகம் மலர, வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர்வலம்

## சலிப்பூட்டும் சினிமா



தண்ணீர் லொறி ஓட்டுநராக வேலைசெய்யும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் குமாரும் (யுத்தன் பாலாஜி) பண வலுவுடைய குடும்பப் பின்னணியைக் கொண்ட பாடசாலை மாணவி ஜெனனியும் காதலிக்கின்றார்கள். காதல் வெளியே தெரிந்ததும் பெண் வீட்டாரிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்புகிறது. ஜெனனியின் சித்தப்பா அரசியல் வாதி, அவளது அண்ணன் அவரால் கொம்பு சீவி வளர்க் கப்படும் ரவுடிக்கடா. இருவரும் இணைந்து குமாரைத் தீர்த்துக்கட்ட நினைக்கும்போது, அவர்களின் தாக்குத லையும் எதிர்ப்பையும் காதலர்கள் எப்படிக் கையாள்கின் றார்கள் என்பதே கதை.

கட்சி அரசியலில் அழுக்காக இருக்கும் ஜெனனியின் சித்தப்பா கதாபாத்திரம், நாயகனின் அண்ணனை வைத்து அரங்கேற்றும் தொடக்கக் கொலை மீது இயக் குனர் பார்வையாளர்களின் முழுக் கவனத்தையும் குவிக் கின்றார். அந்தக் கொலைக்கான முஸ்தீபுகள், அதை வைத்தே படம் நகரக்கூடும் என்னும் எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் கதாபாத்திரங்களின் குணா திசயத்தை நிறுவுவதற்கான முயற்சி என்பதற்கு மேல் அந்தக் காட்சிக்கும் திரைக்கதைக்கும் வேறு எந்தத் தொடர்புமில்லை.

காதலர்கள் இணைய இருந்த நேரத்தில் நிக ழும் எதிர்பாராத திருப் பம் கடைசி 20 நிமிடங் களை விறு விறுப்பாக்கி விடுகிறது. ஆனால் அதற்கு முந்தைய முக் கால்வாசிப் படம் ஏனோ தானோவென்று தன் பாட்டில் ஓடிக்கொண்டி ருக்கின்றது. எதிர்பாராத திருப்பம் ஒன்றை மட்டும் நம்பி, அதை மட்டுமே திரைக்கதையிலுள்ள ஒரே ஒரு துருப்புச் சீட்டாகவைத்துநகரும்சம்பவங்களற்றதிரைக்கதையில் காட்சிகள் அனைத்தும் ஊகிக்கும் விதமாகவும் எதிர் பார்க்கும் வரிசையிலும் வந்துகொண்டேயிருப்பது பெரும் அயர்ச்சியை ஏற்படுத்துகின்றது. அந்த ஒரே ஒரு திருப்பத்துக்காகத் தட்டையான திரைக்கதை தரும் 2மணி நேர அவஸ்தையைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

முதல் பாதியில் கலகலப்பு, இரண்டாம் பாதியில் கதை என்று இயக்குநர் நினைத்துவிட்டார் போலும். கலகலப்புக்குக் குடிக் காட்சிகள், பாத்திரம் ஒன்றின் பேசும்திறன் குறைபாடு ஆகிய வற்றை மட்டுமே நம்பியிருக்கிறார். இது கற் பனை வறட்சி மட்டுமல்ல. பொறுப்பற்ற அணுகுமுறையும்கூட.



நாயகன், நாயகி இருவரையும் இளையராஜா வின் இசையின் மீது அதிக ஈடுபாடு கொண் டவர்களாகச் சித்தரிக்கும் இயக்குனர், அதைக் கொண்டு அமைத்திருக்கும் ஜானி படப் பாடல் காட்சி போன்ற ஒரு சிலவற்றைத் தவிர வேறு எந்தக் காதல் காட்சியும் இரசிக்கும்படி இல்லை. கதையை நகர்த்திச் செல்லவும் உதவவில்லை.

குமாராக நடித்திருக்கும் பாலாஜி, ஜெனனியாக நடித்தி ருக்கும் தீக்ஷிதா ஆகிய இருவரும் கதாபாத்திரங்களுக் குப் பொருத்தமாக இருப்பதுடன், ஈடுபாட்டுடன் நடிக்க வும் செய்திருக்கிறார்கள். பாலசரவணன், யோகி பாபு, அண்ணனாக நடித்திருக்கும் முத்துக்குமார், ரவி, ஜி.மாரிமுத்து ஆகி யோரின் நடிப்பு அவர்களைக் கதா பாத்திரங்களாகவே உணரவைத்து விடுகிறது. நமோ நாராயணன் எல்லாப் படங்களிலும் வருவதுபோல் வந்து செல்வது கவலைதான்.

சென்னை நகரத்தின் சன நெரிசலான பகுதிகளையும் அவை மழை காலங்களில் எவ்வாறு காட்சியளிக்கின் றன என்பதையும் தமிழ்த் தென்றல் தனது ஒளிப்பதிவில் பதிவுசெய்த விதம் யதார்த்தம். பவன் கார்த்திக்கின் இசை யில் பாடல்களும் பின்னணி இசையும் ஆறுதல் அளிக் கின்றன.

சென்னைக்குள் ஒளிந்திருக்கும் ஓராயிரம் கதைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டுள்ள இயக்குஉ, அதை நேர்த்தி யான திரைக்கதையின் மூலம் வெளிப்படுத்தத் தவறி விட்டார். பல்வேறு கவனச் சிதறல்களும் சமரசங்களும் கொண்ட திரைக்கதை ஏற்படுத்தும் அயர்ச்சி நகர்வலத் தைச் சலிப்பூட்டும் அனுபவமாக்குகிறது. வாழ்வின் பதி வுகள் மட்டுமே குறிப்பிடத்தக்க விதத்தில் இருக்கின்றன.




# 'ஏ டோக்ஸ் பெர்பஸ்'



மனித உயிர்கள் மறுபிறவி எடுப் பது போன்ற தமிழ்ப் படங்களை மட்டுமே பார்த்து இரசித்த நமக்கு ஒரு விலங்கின்(நாய்) மறுபிறவிப் படத்தை அளிக்கின்றார் ஆங்கில இயக்குநர் லோஸ் கால்ஸ்ட்ராம். அதுவே 'ஏ டோக்ஸ் பெர்பஸ்' என்ற ஹொலிவூட் படம். ஒரு நாயின் மறுபிறப்புப் பற்றி விவ ரிக்கின்றது கதை.

எதான் என்ற சிறுவன் ஒரு நாய்க்குட்டி யைப் பிடித்து வந்து வளர்க்கின்றான். அந்த நாயை அவனுடைய பெற்றோருக்குப் பிடிக் கவில்லை. இருந்தாலும் வீட்டின் பின்புறம் அதற்காகக் குடில் அமைத்து அதற்குப் பெய்லி என்று பெயரிட்டு அதனுடன் பழகு கின்றான்.

நாயும் சிறுவனும் ஒருவரையொருவர் பிரிந்து செல்ல முடியாத அளவுக்கு அன்பில் நெருக்கமாகின்றார்கள். சிறுவன் கொஞ்சம் பெரியவனானதும் தனது படிப்புத் தேவை நிமித்தம் நாயைப் பிரிந்து செல்கிறான். அந் தப் பிரிவால் நோய்வாய்ப்பட்ட நாய் இறக் கின்றது. பிறகு அந்த நாய் ஜேர்மன் ஷெப் பர்ட் இனப் பெண் நாயாகப் பிறக்கின்றது. எல்லி என்ற பெயரில் வளரும் அந்த நாய் பொலீஸ் தேவைக்குப் பயன்படுத்தும் நாயாக இருக்கின்றது. அதன்பின்னர் தண் ணீரில் விழுந்தவர்களை மீட்கும் பணிக்கு அமர்த்தப்படுகிறது. அங்கேயும் ஒரு சந் தர்ப்பத்தில் அது குண்டடிபட்டு சாவடைந் துபோகிறது. திரும்பவும் அந்த நாய் மறுபி றப்பு எடுக்கின்றது. இப்படி மறுபிறப்பு எடுக் கும் நாய் கடைசியில் என்னவாகின்றது என்பதுதான் 'ஏ டோக்ஸ் பெர்பஸ்' படத்தின் கதை. நாய்க்கும் மனிதர்களுக்குமான ஆத்மார்த்தமான நெருக்கத்தைச் சில காட் சிகளில் விவரித்திருக்கின்றார் இயக்குநர்.

அமெரிக்காவில் புரூஸ் கமரூன் எழுதி வெளியிட்டு அதிக அளவில் விற்பனை யாகியிருந்த 'ஏ டோக்ஸ் பெர்பஸ்' என்ற நாவலை அடிப்படையாக வைத்து இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு மணி



நேரம் 41 நிமிடங்கள் வரை பயணிக்கும் இதன் திரைக்கதை நாயைக் குடும்பத்தில் ஒரு உறுப்பினராக எண்ணி வளர்க்கும், அதை நேசிக்கும் ஒவ்வொருவரின் மன தையும் வருடிச் செல்லும் சிறந்த திரைக் காவியமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுதாய விடயங்களைக் கையாளும்போது மனிதர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இ.வாகீசன்

மனித வாழ்வின் பல அத்தியாயங்கள் மனிதர்களாலேயே வரையப்பட்டவை. அந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் மனித மனங்களின் செயற்பாடுகளைத் திருப்திப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. திருப்தியின் அடிப்படையிலே மாற்றங்கள் பரவலடைகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சில முரண்பாட்டுக் கோலங்களும் உருவாகிக்கொண்டுஇருக்கின்றன. உயிரினங்களைப் பொறுத்தவரையில்பொதுவாகஅவற்றில் இரண்டு பிரதான விடயங்களை அவதானிக்க முடியும்.

- பசி, தாகம்
- பாலியல் நடத்தைகள்

இவற்றுக்கு மேலதிகமாகக் காணப்படுகின்ற அனைத்தையும்நாமே நமக்காக உருவாக்கினோம். உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். மனிதன் என்பவன் கட்டுப்பாடுகளுடன் கூடியதான வாழ்க்கை முறையை வாழக்கூடிய ஓர் உன்னதமான சமூகப் பிராணி ஆவான். பல உயிரினங்களும் மனிதனைப் பார்த்துப் பொறாமை கொள்கின்ற அளவுக்கு நாகரீகம் மற்றும் சிந்தனை ஆற்றல் என்பன அவனிடத்தே உன்னதமாகவே காணப்படுகின்றன. ஆனாலும் தன்னைத்தானே பரீட்சித்துப் பார்க்கும் ஒவ்வொரு மனிதனும் தற்போதைய வாழ்க்கைச் சூழலில் தானும் ஒரு சிறு தவறையாவது புரிந்துவிடுகின்றான் என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

**திருமணம் எனும் படிநிலை**

சமுதாய விடயங்களைக் கையாளுகின்றபோது எவ்வாறான சவால்கள் அவனால் எதிர் கொள்ளப்படுகின்றன என்பது சார்பாக ஓர் உற்றுநோக்குதல் இன்றைய எமது சமுதாயத்தில் மிக மிக அடிப்படையானதாகவும் அத்தியவசியமானதாகவும் இருக்கின்றது. இதன் முதற்படியாக திருமணம் புரிந்து தன்னுடைய குடும்பத்தை விட்டுப் புதிதான வாழ்க்கையை ஆரம்பிக்கும் படிமுறையை உற்றுநோக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமையின்போது பொதுவாகவே திருமணம் மணமக்களுடைய குடும்ப நிலையில் ஒரு மகிழ்வான காரியமாகத் சமூகத்தவரால் நோக்கப்படுகின்றது. ஆனந்தத்தை அளிக்கின்ற ஒரு நிகழ்வாக எல்லோராலும் ஏற்கப்பட்டு முறைப்படி திருமண வாழ்வு ஆரம்பிக்கின்றது. ஆனால் அந்த வாழ்வின் ஆரம்பத்தின் பின்னர் ஏற்படுகின்ற சமுதாய விடயங்கள் அனைவரையும் ஒரு சமநிலையற்ற தன்மைக்குக் கொண்டுசென்று விடுகின்றது.

புதுவாழ்வை ஆரம்பித்த கணவனும் மனைவியும் பரஸ்பரம் விட்டுக் கொடுப்புக்களிலும் தட்டிக்கொடுப்புக்களிலும் ஆரம்பித்துப் பாசமழையில் நனைந்து உண்மையான ஓர் உறவாடலை ஆரம்பிக்க முற்படும்போது ஏற்படுகின்ற ஊடல், கூடல்கள் சில சமயம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். பல சமயம் எதிர் மறையான விளைவுகளைத் தோற்றுவிக்கும். இதனால் தான் எமது சமூகத்தில் ஏராளமான விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றன.

முதல் நாளிலேயே கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரைப் பற்றி ஆய்வு செய்யத் தொடங்கும் கலாசாரம் மன ரீதியாகக் கிளர்ந்தெழுகின்றது. இந்த நடத்தை வெளிக்காட்டப்படாது விட்டாலும் இருவரிடத்தும் பரஸ்பரம் ஏற்படுகின்றது. அவர்கள் முதலிரவை மகிழ்வுடன் கழிக்கின்றபோது ஏற்படுகின்ற உணர்வுகளும் அதனால் ஏற்படுகின்ற நடத்தை வெளிப்பாடுகளும் உண்மையில் கடவுளின் படைப்பின் இரகசியங்களே. அந்த விடயங்களை யாரும் முன்னனுபவம் பெற்றுப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. ஆனால் சமூகப் போக்கு, நவீனத்துவ முதிர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக விடயங்களைக் கேள்விப்பட்டிருக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு. அதற்காக அவை அனுபவித்துப் பார்க்கப்பட்ட விடயங்கள் என்று அர்த்தங்கள் கிடையாது. இந்த மனநிலை, புரிதல் சமூகத்திலே எண்ணப்படுவது தவறானது என்றே நான் கருதுகின்றேன்.

**புதுத் தம்பதிகளிடையே தோன்றும் சிக்கல்கள்**

சரி மணவாழ்வு தொடங்கித் தமது பயணம் ஆரம்பமான நாள் முதலாகக் கணவன் - மனைவியர் தமக்கிடையே பல விடயங்களை விட்டு விலகத் தொடங்குவார்கள். இதில் முக்கியமானது சகபாடிகளுடனான உறவாடல். நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிது. அந்த நண்பர்களைப் பலகாலம் பேணிவந்த நிலையில் அவர்களை விட்டுவிலகி வாழ்வின் அடிப்படைகளுக்குள் செல்கின்றபோது மனம் விட்டுப் பேசிப் பழகிவந்த அந்த மகிழ்வான உறவுகளை இழப்பவர்களே ஏராளம். கணவனுக்காக மனைவி தன்னுடைய சகபாடிகளையும் மனைவிக்காகக் கணவன் தன்னுடைய சகபாடிகளையும் இழந்து சில காலம் வாழ்கின்றபோது ஏற்படும் கசப்பான அனுபவங்களைத் தன்னுடைய ஆழ்மனதினுள் புதைத்துவிட்டு வாழ்வுடன் பயணிக்கின்றனர். இந்த ஆழ்மனப் புதையல் சில காலம் அடங்கி இருந்தாலும் என்றோ ஒரு நாள் சிறு முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது .பெரிய விளைவுகளுடன் வெளியேறி குழப்பத்தை உண்டுபண்ணும். இது கோபமான நடத்தையாகவோ அல்லது கவலையாகவோ அல்லது ஒதுங்கிச் செல்லும் இயல்புள்ள எதுவாகவோ வெளிப்படலாம்.

> ஆழ்மனப் புதையல் சில காலம் அடங்கி இருந்தாலும் என்றோ ஒரு நாள் சிறு முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது பெரிய விளைவுகளுடன் வெளியேறி குழப்பத்தை உண்டுபண்ணும். இது கோபமான நடத்தையாகவோ அல்லது கவலையாகவோ அல்லது ஒதுங்கிச்செல்லும் இயல்புள்ள எதுவாகவோ வெளிப்படலாம்.

சாதாரண விடயங்கள்கூட இவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தி விடலாம் என்பதே எனது கருத்து. இவற்றைச் சரிவரக் கையாள வேண்டுமானால் மனிதன் மனிதனாக எதையும் இலகுவானதாக எண்ணி முயல்வதுடன் பரஸ்பரம் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சிந்தித்து செயலாற்றுவது சிறப்பானதாக இருக்கும். இதற்காகத் தான் கட்டிளம் பருவத்தில் இளையோர்கள் தனித்து வாழத் தொடங்கும் முன்பு தினமும் செய்யவேண்டிய கடமைகளைச் சுயமாகச்செய்துகொள்ளும்திறன்பெறுதல், தங்குமிடத்தைச் சுத்தமாகப் பராமரிப்பது, வரவறிந்து செலவிடல், தன் சுத்தம் அதாவது உடல், உளத்தூய்மை சார்பான விடயங்கள், மற்றவரைக் கவரும் விதத்தில் தேற்றமளிக்கக் கற்றுக்கொள்ளல், போக்குவரத்துப் பயன்பாடு பற்றி அறிதல், மற்றவரைப் பாராட்டுதல், இன்சொல் பேசுதல், எதிர்பார்ப்புக்கேற்ப நடக்கக் கற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் பயிற்சி பெறுவது சிறப்பானதாக அமையும் இந்த விடயங்களை ஆங்கிலத்தில் junior life skills எனக் கூறுவர். இவை வருங்காலத்தில் அவர்களுக்கு நல்லதொரு வளர்ச்சிப்படிகளாகவே அமையும்.

# மெய்வருத்தும் மேன்மைகொண்டோர்...



கந்தர்மடம்
அ.அஜந்தன்

மேன்மை கண்டிடவே மெய்வருத்தி
மெய்யுடலில் வியர்வை சிந்தி
அதுவிழுந்த மண்ணடியில்
நெல்விதைகள் விளைந்திடுமோ
தாழ்பணிந்துவுடல் கூன்விழுத்தி
சேற்றில் கால்பதித்து
கதிரறுக்கும் காயப்பட்ட கைகள்
பின்நாள் பிச்சை புகலாமோ

பெண்ணுக்கும் ஆணுக்கும்
சமமான பணிவேளை எனற்பி[illegible]பும்
கொடுக்குமந்த ஊதியத்தில்
ஏற்றத்தாழ்வு காட்டலாமோ
உடலுருக உழைக்குமக்கள்
உயிர்வாழ அவர்தம்
உண்டி நிறைந்திடல் வேண்டுமன்றி
பட்டினியால் நொண்டி நடந்திடலாமோ

பாலியல் சுரண்டல்கள் பணியிடத்தில்
பாவச்செயலதென்று பணித்துமிங்கு
முதலாளி முள்வேலிகள் தினம்
தினக்கூலிப் பயிர்தனை மேய்ந்திடலாமோ
திட்டங்கள் பலவற்றில் வீடமைத்த
கொத்தடிமைக் கொத்தனார்கள்
கொட்டும்மழைதனிலே வீட்டினுள்
குண்டுச்சட்டியோடு குடைபிடித்தல் முறையோ

வர்க்கங்களே மார்க்கமாய் மாறிப்போன
மாண்டுபோன மானிடத்துள்
மாணிக்கக் கற்களாய்மிளிரும்
தொழிலாளி கரமோங்கும் ஓங்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முப்படைகளின் அதியுச்ச பொறுப்பை ஏற்பதற்குப் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. அமைச்சர் பதவியையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்து விட்டு அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் மக்களை முப்படையினரையும் காவல்துறையினரையும் ஈடுபடுத்திக் கட்டுப்படுத்துவதற்காகப் பொன்சேகா அழைக்கப்பட்டிருக்கிறார்."

# கலகம் அடக்க பொன்சேகாவுக்கு அழைப்பு!

ஸ்டோஸ்வாமி

கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கெனச் சில இடங்களை ஒதுக்கப்போவதாகச் சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. குடிமக்களுக்கு இருக்கின்ற ஒன்றுகூடுவதற்கும் கருத்தை வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் பாதுகாக்கப்படுவதைக் கருத்தில் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்படுவதாகவும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலவரங்களைத் தகுந்த வகையில் கையாளுவதற்குப் பொலிஸார் பயிற்றுவிக்கப்படுவதுடன் இது தொடர்பாகப் புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் சட்டம்–ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க நாடாளுமன்றில் மொழிந்திருந்தார்.

இதைவிட கொழும்பில் வாரத்துக்கு ஒரு ஆர்ப்பாட்டம் மட்டுமே நடத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருந்தது.

தொடர்ச்சியான போராட்டங்கள் நாட்டில் முதலிட வரும் முதலீட்டாளர்களின் ஆர்வத்தைக் குறைத்து விடுவதுடன் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்று கருதியே போராட்டங்களைக் கட்டுப்படுத்த இந்த யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் இலங்கை அரசு ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்றை எதிர்கொண்டிருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் முன்னெடுத்திருந்த எதிர்ப்புப் போராட்டம், பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகளைப் பாதித்திருந்தது. அதன் பின்னர் வியாழக்கிழமை வடக்குக் கிழக்கில் முழுஅடைப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இந்த நிலையில், கடந்த புதன்கிழமை அரசால் விடுக்கப்பட்டிருக்கும் செய்தி ஒன்று ஆர்ப்பாட்டங்கள்–போராட்டங்கள் தொடர்பில் அரசால் கடினப்போக்குக் கையாளப்படப் போவதைக் கட்டியம் கூறியிருக்கின்றது. இறுதியாக நடந்த காணாமலாக்கப்பட்டோர் போராட்டம் பெரியளவில் அரசுக்குக் கொடுத்திருந்த அழுத்தமே இதற்குப் பிரதான காரணமாகவிருக்கலாம்...!

## பொன்சேகாவுக்கு அழைப்பு!

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலகம் அடக்கும் பணிக்குப் பொன்சேகாவைக் களத்தில் இறக்கும் அரசின் யோசனை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் பிரகாரம் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தி நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவும் சந்தர்ப்பங்களையும் பன்னாடுகள் மத்தியில் இதனால் எழும் கேள்விகளையும் குறைப்பதற்கான நடவடிக்கையாகவே தற்போது பிரதேச அபிவிருத்தி அமைச்சராக உள்ள பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு உயரிய அதிகாரம் கொண்ட பதவி ஒன்றை வழங்க அரச தலைவர் மைத்திரிபால தீர்மானித்திருக்கின்றார். குறித்த தீர்மானத்தின்படி, முப்படைகளின் அதியுச்ச பொறுப்பை ஏற்பதற்குப் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. அமைச்சர் பதவியையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்து விட்டு அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் மக்களை, முப்படையினரையும் காவல்துறையினரையும் ஈடுபடுத்திக் கட்டுப்படுத்துவதற்காகப் பொன்சேகா அழைக்கப்பட்டிருக்கிறார். பொன்சேகாவுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு மற்றும் கொடுக் கப்படவிருக்கும் பொறுப்பு என்பன முன்னைய ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் வகிபாகத்துடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் புதிய பதவிநிலை இராணுவ சதிப்புரட்சி ஒன் றுக்கான பிள்ளையார் சுழியாக அமைந்து விடுமோ...! என்றும் அலசப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகப்பகுதியில் இடம்பெற்ற கலவரநிலையின்போது கடற்படைத் தளபதி, ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்கிய விவகாரம் மெல்ல மெல்ல நினைவிழந்து வரும் நிலையில் மக்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவ பலத்தைப் பிரயோகிப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கின்றது.

## பொன்சேகாவின் தெரிவு!

சட்டம்–ஒழுங்கு விவகாரங்களுக்கென்று தனியாக அமைச்சு ஒன்று இருந்தும் அதனூடாகக் கலவரங்களை அடக்க முனையாமல் அல்லது அந்த அமைச்சைஇதற்குப் பயன்படுத்தாமல் முன்னாள் இராணுவ அதிகாரியும் தோல்வியடைந்த அரசதலைவர் வேட்பாளருமான பொன்சேகாவை அரசு நாடியிருப்பதன் பின்னணியில் பொருள் பொதிந்த ஏராளம் அரசியல் புதைந்து கிடக்கின்றது. தற்போது சாகல ரத்நாயக்கவால் ஆளப்படும் சட்டம்–ஒழுங்கு விவகார அமைச்சின் அதிகாரத்தின் கீழ் காவல்துறையினர் மட்டுமே உள்ளடங்குவர்: முப்படையினர் அடங்குவதில்லை. ஆகவே ஆர்ப்பாட்டங்களை நசுக்கும் திட்டத்துக்கு ஆயுதப்படைகளை ஈடுபடுத்தும் நோக்குடனேயே பொன்சேகாவுக்கான பதவி வழங்கல் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இதைவிட தற்போதுள்ள படைகளின் பிரதானிகளைக் குறித்த பொறுப்புக்கு நாடாமல் பொன்சேகாவை மைத்திரி பிரேரித்தமையும் கவனத்துக்குரிய ஒன்றாக இருக்கின்றது. முன்னைய ஆட்சியில் வாங்கிக்கட்டிய அடிபட்ட பாம்பாக இருக்கும் பொன்சேகா, மகிந்தவை அரவணைத்து இயங்கிக்கொண்டிருக்கும் ஒன்றிணைந்த எதிரணியால் முன்னெடுக்கப்படக் கூடிய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தகுந்த பதிலடியை வழங்கக்கூடியவர் என்பதுவும் இதன் நோக்கமாக இருக்கக்கூடும்.

## பொன்சேகாவுக்கும் சம்மதம்!

அரச தலைவரின் பிரேரிப்புக் குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் பொன்சேகா, குறித்த பதவிக்கு தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். தவிரவும் அமைச்சுப் பதவியை வகித்துக்கொண்டே குறித்த பொறுப்பைக் கையாளும்படி கேட்டகப்பட்ட தாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களனித் தொகுதி அமைப்பாளராகிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை குறித்த பதவிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன முன்மொழிந்தமை தொடர்பில் கலப்பு எதிர்வினை கிளம்பியிருக்கின்றது சு.கவினுள். அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் விஜித் விஜயமுனி சொய்சா போன்றோர் குறித்த நியமனத்தை வரவேற்றிருக்கும் அதேவேளை அமைச்சர் எஸ். பி. திசநாயக்க இதை வேடிக்கைப் பேச்சு என்று வர்ணித்திருக்கின்றார். ஒன்றிணைந்த எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே பொன்சேகாவைப் பயன்படுத்தித் தொழிற்சங்க மற்றும் எட்கா, சைட்டம் போன்றவற்றுக்கு எதிரான போராட்டங்களை முடக்குவதற்கு அரசு முனைகிறதோ? என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

## வடக்கு-கிழக்கில் தொடரும் போராட்டங்கள்!

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அறவழிப் போராட்டம் இன்று 66ஆவது நாள்களையும் கடந்து நீள்கின்றது. மட்டக்களப்பில் காந்தி பூங்காவுக்கு முன்பாகவும் யாழ்ப்பாணத்தில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவும் வேலை கிடைக்காத பட்டதாரிகள் முன்னெடுத்துவரும் தொடர் போராட்டங்கள் இரண்டு மாதங்களைக் கடந்த நிலையில் தற்போதும் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. இதை விட நிலமீட்பு மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு என்பவற்றுக்கு எதிராகவும் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்த வண்ணமிருக்கின்றன.

மீதொட்டமுல்லவில் இடம்பெற்ற இடரைத் தொடர்ந்து கொழும்பில் சேரும் குப்பைகளைக் கொட்டுவதற்குத் தீர்மானிக்கப்படும் இடம் எல்லாவற்றிலுமிருந்து அந்தந்தப் பிரதேசவாசிகளால் எதிர்ப்புக் காட்டப்பட்டு வருகிறது. சைட்டம் தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகள் உறங்குநிலையில் இருக்கின்றனவே தவிர இன்னும் ஓய்வடையவில்லை. இந்தப் பின்னணியில்தான் பொன்சேகாவின் குறித்த பதவிப் பிரேரிப்பு நடைபெற்றிருக்கிறது. போராட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் அவற்றுக்கான நியாயமான தீர்வுகளைப் பற்றிச் சிந்திக்காமல் அவற்றை அடக்கமுயற்சிப்பதென்பது எண்ணையில் பற்றிய தீயை எண்ணையைக்கொண்டே அணைக்க முற்படும் செயலுக்கு ஈடானது. பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் புதிய சட்டவரைபுக்கான கொள்கைத் திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்புதல் பெற்றுள்ள நிலையிலே பொன்சேகாவின் பிரேரிப்பு அதன் கவனத்தைக் கலைத்திருக்கின்றது. அரசுக்கு எதிராக அரசியல் ரீதியில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதைக் காரணம் காட்டி மேற்கொள்ளப்படும் பொன்சேகாவுக்கான குறித்த நியமனம், திசை மாறிவிடாமல் அரசு எதிர்பார்த்த பலனை வழங்குமா? மாறாக மக்களைப் பாதிக்குமா? என்பது போகப்போகவே நமக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிகளைப் பாதுகாக்கப் பெரும்பாடு

நாளை மே முதலாம் திகதி உலகத் தொழிலாளர் தினம். ஆனால், இலங்கையில் இது அரசியல் கட்சிகளின் பலத்தை நிரூபிக்கும் தினம் என்பதே உண்மை. இந்த முறை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மகிந்த அணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் பலத்தை நிரூபிக்கும் போட்டியாக மே தினம் மாறி இருக்கின்றது.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இதில் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது. நாளை நாட்டு மக்கள் அனைவரது பார்வையும் இந்த இரண்டு கட்சிகளின் மே தினக் கூட்டங்களின் மீதுதான் திரும்பியுள்ளன. கண்டியில் இடம்பெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் மக்களை அதிகமாகக் குவிப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஓரிரு நாள்களுக்கு முன்னர் கூடி ஆராய்ந்தது. தங்களால் எத்தனை பேரைத் திரட்ட முடியும் என்று அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் ஒவ்வொருவரும் கூறியுள்ளனர்.

அந்த அடிப்படையில் நாடு முழுவதுமிருந்து 3ஆயிரம் பஸ்களில் மக்களை அழைத்துச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் யார் அதிகமான மக்களை அழைத்துச் செல்வதென்று அமைச்சர்களுக்கு இடையே கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளதாம்.

குருநாகலில் இருந்து 75பஸ்களில் மக்களை அழைத்துச் செல்வதற்கு அமைச்சர் தயாசிறி தயசேகர தீர்மானித்துள்ளார். அம்பாந்தோட்டையில் இருந்து 160பஸ்களை ஏற்பாடு செய்துள்ளார் அமைச்சர் மகிந்த அமரவீர. இதை அறிந்த ஏனைய அமைச்சர்கள் இந்த எண்ணிக்கையை மிஞ்சிவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களாம்.

இதற்கெல்லாம் ஒரேயொரு காரணம் விரைவில் அமைச்சரவை மாற்றம் ஏற்பட இருக்கின்றமைதானாம். அதிகமான மக்கள் கலந்துகொள்வதே அரச தலைவரின் தேவையாக இருப்பதால் அந்தத் தேவையை நிறைவேற்றி அரச தலைவரின் மனதில் இடம்பிடித்து இப்போது இருக்கின்ற அமைச்சுப் பதவிகள் பறிபோகாமல் பாதுகாத்துக்கொள்வதற்கான வியூகம்தான் இது என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!

எம்.ஐ.முபாறக்

## புலிகளின் கொலைப் பட்டியலில் இவருக்கு மூன்றாமிடமாம்...!

அரச வாகன துஷ்பிரயோக வழக்கில் விமல் வீரவன்ச மூன்று மாதங்கள் நீதிமன்றத் தடுப்புக் காவலில் இருந்ததை நாம் அறிவோம். அவருக்குப் பிணையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவரது கட்சிக்காரர்கள் படாதபாடுபட்டனர். இல்லாத பொல்லாத கதையெல்லாம் அவிழ்த்து விட்டனர். மக்களின் அனுதாபத்தைக் கொண்டு நீதிபதிகளின் மனங்களை இளக வைக்க நடவடிக்கை எடுத்தனர். அதற்காக அவர்கள் கையில் எடுத்தது புலிகளைத்தான்.

புலிகளின் கொலைப் பட்டியலில் விமல் மூன்றாமிடத்தில் இருந்தார் என்று கூறியே அவர்கள் மக்களின் அனுதாபத்தைப் பெற முற்பட்டனர்.

அந்தக் கொலைப் பட்டியலில் மகிந்த முதலாமிடத்திலும் கோத்தபாய இரண்டாமிடத்திலும் இருந்தனர், அடுத்த இடத்தில் விமல்தான் இருந்தார் என்றே இவர்கள் நாடுபூராகவும் கூறித் திரிகின்றனர்.



## கன்னத்தில் ஒன்று வயிற்றில் இரண்டு

அதிக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் இடம்பெற்ற ஆட்சியாக இந்த ஆட்சி பதியப்பட்டுள்ளது. இவற்றை முடக்குவதற்கு இந்த அரசு முன்னைய அரசுகளிலும் பார்க்க மென்போக்கைக் கையாள்வதுதான் இவை அதிகரிக்கக் காரணம் என்றும் ஒரு கதை.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிராக ஓரிரு நாள்களுக்கு முன்பும் தொழில் சங்கங்கள் வேலை நிறுத்தம் ஒன்றைச் செய்து நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தன. ஆனால், மகிந்த ஆட்சியில் இவ்வாறான வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று நினைத்துப் பார்த்தபோது எமக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

அவரது ஆட்சியில் வேலை நிறுத்தம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டால்போதும் சம்பந்தப்பட்ட ஏற்பாட்டாளர் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டு நன்றாகக் கவனித்து அனுப்பப்படுவார். அவ்வாறானதொரு அனுபவம் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தனவுக்கும் ஏற்பட்டிருந்தது.

பஸ் கட்டண அதிகரிப்பைக் கோரி தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் வேலை நிறுத்தமொன்றை ஏற்பாடு செய்தது. அதை நிறுத்தும் நோக்கில் மகிந்த இவரைப் பேச்சுக்கு அழைத்தார். அலரி மாளிகையில் பேச்சு இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது கெமுனு கொஞ்சம் ஓவராகவே பேசிவிட்டார்.

"நாங்கள் நினைத்தால் இந்த ஆட்சியையே கவிழ்ப்போம்" என்று கெமுனு ஆக்ரோசமாகக் கூறினார். இதனால் சூடாகிப் போன மகிந்த. பேச்சு முடிந்ததும் கெமுனுவை ஓர் அறைக்குள் தனியாக அழைத்தார் .

சற்று நேரம் கழித்துக் கண்கள் கலங்கிய நிலையில் வெளியே வந்தார் கெமுனு. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அமைச்சர் ஒருவர் எல்லோரும் கலைந்து சென்றதன்பின் மகிந்தவிடம் சென்று "ஏன் சேர் கெமுனு கண் கலங்கிச் செல்கின்றார்" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை...சும்மா கன்னத்தில் ஒன்று, வயிற்றில் ரெண்டு அவ்வளவுதான்" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் மகிந்த. இதுதான் மகிந்த ஸ்ரைல்.

## எம்.பியை 'சேர்' என அழைக்கும் அமைச்சர்

பதவி நிலையில் எம்.பியைவிட அமைச்சுப் பதவி உயர்ந்ததாகும். இதனால் எம்.பிக்கள் விரும்பினால் அமைச்சர்களைச் 'சேர்' என அழைக்கலாம். ஆனால், அமைச்சர் ஒருபோதும் தனது பதவிக்குக் கீழ் நிலையில் உள்ள எம்.பியைச் 'சேர்' என அழைக்கமாட்டார்.

ஆனால், அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி ஒருவரைச் 'சேர்' என்றுதான் அழைப்பாராம். அந்த எம்.பி வேறு யாருமல்ல மகிந்த அணியில் இருக்கும் பந்துல குணவர்தனவாகும். அடிப்படையில் பந்துல புகழ்பெற்ற ஓர் ஆசிரியர். ரஞ்சன் ராமநாயக்கா அவரிடம் கல்வி கற்றுள்ளாராம். அதனால்தான் ஓர் அமைச்சரானாலும்கூட தனக்குக் கற்பித்த ஆசிரியருக்கான மரியாதையை தவறாமல் கொடுத்து வருகின்றாராம் ரஞ்சன்.



## கலப்பையுடன் களமிறங்கிய அமைச்சர்

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைச்சரான பாலித்த தேவரப்பெரும கொஞ்சம் சண்டியர்தான். இருந்தாலும் மக்களுக்காகக் களத்தில் இறங்கி வேலை செய்யக்கூடியவர்.

பேருவளையில் முஸ்லிம்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டபோது முஸ்லிம்களைக் காப்பாற்றச் சென்று சிங்களவர்களிடம் வாங்கிக் கட்டியவர்.

களுத்துறையில் வெள்ள இடர் ஒன்று ஏற்பட்டபோது அங்கு பாதிக்கப்பட்ட பல வீடுகளைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொடுத்தவர்.

இப்படிப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அவர், கடந்த வாரம்கூட இவ்வாறான நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருக்கின்றார்.

ஹொரணையில் சித்திரைப் புது வருட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அவரே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் வயல் உழுதல் போட்டியும் ஒன்று.

யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டுச் சடாரெனச் சேற்றில் இறங்கிவிட்டார். கலப்பையைப் பிடித்து உழத் தொடங்கினார். பார்த்துக்கொண்டிருந்த அனைவருக்கும் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி.

இன்றைய தலைமுறையினர் விவசாயத்தை மறந்துவிட்டனர். விவசாயம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? என்பதை அவர்களுக்கு உணத்துவதற்காகவே இவ்வாறு சேற்றில் இறங்கினேன் என அவர் அதன் பின்னர் புகழ் பாடினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணக்க அரசியலும் தொடரும் இழப்புகளும்

சந்திரசேகர ஆசாத்

**60ஆண்டுகள் பழமை வாய்ந்த தம்புல பள்ளிவாசல் பிரதேசம் பௌத்த பூமியாக்கப்பட்டதும், மசூதியை அகற்றும் நோக்குடன் அது இடிக்கப்பட்டதும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் கொக்கரித்துப் பின் அடங்கிப் போனதும் இன்று வரை இந்தப்பிரச்சினை தீர்க்கப்படாமலிருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும்.**



அம்பாறை மாவட்டம், இறக்காமம்– மாணிக்கமடு பிரதேசத்தில், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணியில் பௌத்த விகாரை எழுப்பும் முயற்சிகள் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டபோது முஸ்லிம் மக்கள் வெளிப்படுத்திய எதிர்ப்புக் காரணமாக அந்த நடவடிக்கை நீதிமன்ற உத்தரவால் தடுத்து நிறுத்தப்பட்டது.
தற்சமயம் நிதிமன்றத்தின் கட்டளையையும் மீறி மீண்டும் விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அந்தப்பகுதி மக்களுக்கும் விகாரை அமைக்க வந்த பிக்குகள் தலைமையிலான குழுவினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிசார் தலையிட்டு குறித்த பகுதிக்குள் எவரும் உள்நுழையக் கூடாதென்ற நீதிமன்ற உத்தரவைக் கையளித்தபோது பிக்கு ஒருவர் அதை வாங்கிக் கிழித்ததுடன், காலில் போட்டு மிதித்தார். இதில் குறித்த பிக்கு நீதிமன்றை அவமதித்தபோதும் அவர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றில் நிறுத்தப்படவுமில்லை அதுமட்டுமன்றி நீதிமன்ற உத்தரவை மீறி அடாவடித்தனத்தில் ஈடுபட்டவர்கள் தடியடிப்பிரயோகம் நடத்தப்பட்டோ கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டோ அந்தப்பகுதியை விட்டு விரட்டப்படவுமில்லை.
அரசதலைவரும், தலைமை அமைச்சரும் பன்னாட்டுச் சந்திப்புக்களில் தமது ஆட்சியில் நீதிச் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதாகப் பெருமையடிக்கும் நிலையில் இங்கு நீதிமன்றம் பிக்குகளால் அவமதிக்கப் படுவதையும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குவதை கவனத்தில் எடுக்காமல்விட முடியாது.

### முஸ்லிம் தலைமைகளுக்குத் திடம் தேவை

இந்தவிடயம் தொடர்பாகக் கலகொட ஞானசார தேரர் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். அப்போது ஆளுநர் மாணிக்கமடு காணிகளின் சொந்தக்காரர்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கிவிட்டு அங்கு விகாரை அமைக்க ஏற்பாடுகள் செய்து தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.
இதனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆளுநருக்குத் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.
தொடர்ந்து அவர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுப்பாரா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இதன்போது முஸ்லிம்களிட மிருந்து அந்தக் காணிகள் பறிபோகும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்பட்டுவிட முடியாது.
60ஆண்டுகள் பழமை வாய்ந்த தம்புல பள்ளிவரசல் பிரதேசம் பௌத்த பூமியாக்கப்பட்டதும். மசூதியை அகற்றும் நோக்குடன் அது இடிக்கப்பட்டதும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் கொக்கரித்துப் பின் அடங்கிப் போனதும் இன்று வரை இந்தப்பிரச்சினை தீர்க்கப்படாமலிருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும். முஸ்லிம்களின் பிரதான இரு கட்சிகளின் தலைவர்களும் கடந்த ஆட்சியிலும், இன்றைய அரசிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிழக்கைச் சிங்கள மயப்படுத்தும் திட்டம்

அம்பாறை மாவட்டத்தை முழுமையாகச் சிங்கள மயப்படுத்தும் நோக்கம் கெண்ட ஒரு பெரும் அரசியல் பின்னணி உண்டு. தீவகாபி விகாரையின் மணியோசைகேட்குமிடமெல்லாம் பௌத்த பிரதேசமாக்கப்பட்டு ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென அதன் விகாரதிபதி அரசுக்கு அழுத்தம் கொடுத்ததுடன். அதற்கு ஆதரவாகச் சிங்கள மக்களை அணிதிரட்டினார். அந்த நிலையில் பின்னர் விகாராதிபதி இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் அந்தப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தற்சமயம் அங்கு வழிபட வருபவர்கள் தங்கி இளைப்பாற ஒரு மடமும் கட்ட உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது.
எனவே இதை முஸ்லிம் மக்களின் பிரச்சினை என்ற எல்லைக்குள் அடக்கிவிட முடியாது. இது கிழக்கைச் சிங்கள மயப்படுத்தும் நீண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி என்பதால் முஸ்லிம் மக்கள் மட்டுமன்றித் தமிழ் மக்களும் தீவிர அக்கறை காட்ட வேண்டியுள்ளது.
தமக்குத் தொடர்ந்து அநீதி இழைத்து வந்த மகிந்த ஆட்சியை விழ்த்தி இன்றைய ஆட்சியைக் கொண்டு வர ஒன்றிணைந்து செயற்பட்ட தமிழ் – முஸ்லிம் மக்கள் இன்றைய ஆட்சியிலும் தமக்கு இழைக்கப்படும்போது அவற்றுக்கெதிராக ஏன் ஒன்றாக அணி திரள முடியாது என்ற கேள்வி எழுகின்றது. அதாவது இப்படியான ஒரு திட்டமிட்ட சிங்களமயமாக்கலுக்கு எதிராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பேரவை எனச் சகல தமிழ் –முஸ்லிம் தலைமைகளும் ஒன்றிணைந்து காத்திரமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

### இணக்க அரசியலில் அவதானம் தேவை

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை சேனாதிராசா "அரசு தமிழரைக் கைவிட்டாலும் நாம் பன்னாட்டுச் சமூகத்தினூடாக எமக்கான தீர்வை அடைவதற்காகவே அவர்களோடு இணைந்து பயணிக்கிறோம். தற்போதைய அரசை நெருக்கடிக்குள்ளாக்கினால் தமிழருக்கு அநீதி இழைத்தவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார்களோ! என்ற அச்சம், குழப்பம் எமக்குண்டு.." எனக் கூறியிருந்தார். அவர் கூறிய விடயத்தில் நியாயம் இல்லாமலில்லை. இன்றைய அரசின் பதவி கவிழுமானால் மகிந்த குழுவினரே மறுபடியும் ஆட்சிக்கு வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகிந்ததான் கடந்த அரசதலைவர் தேர்தலில் தோற்றுப் போகக் காரணமாயிருந்த தமிழ் மக்களையும், முஸ்லிமக்களையும், மலையக மக்களையும் படுமோசமாகப் பழிவாங்குவார் என்பதிலும் சந்தேகமில்லை.
இன்னொருபுறம் மகிந்த ஆட்சிக்கு வரக் கூடாது என்ற காரணத்துக்காக நாம் எமது உரிமைகளை இன்றைய ஆட்சியாளர்களிடம் சமாதானமான முறையில் இழக்க வேண்டுமா? அவர்கள் அடித்துப் பறிப்பார்கள்! இவர்கள் அணைத்துப் பறிக்கிறார்கள்! எப்படிப்பார்த்தாலும் நாங்கள் இழப்பது இழப்பது தான்.
இப்போது மாவை சேனாதிராசா கூறியது போன்ற ஒரு கருத்தை தந்தை செல்வாவும் 1968 ஆம் ஆண்டில் ஒரு முறை கூறியிருந்தார்.
1965இல் ஏற்படுத்தப்பட்ட 'டட்லி செல்வா' ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழரசுக் கட்சி சார்பில் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவியேற்றார். 1968இல் மாவட்ட சபைச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதாகவும் அதனால் தனது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதுள்ள தாகவும் தான் பதவியிலிருந்து விலகப்போவதாகவும் செல்வாவிடம் அவர் தெரிவித்தார். மாவட்டசபை மசோதா நிறைவேற்றப் படாவிட்டாலும் பர்வாயில்லை பதவியிலிருந்து விலக வேண்டாமென தந்தை செல்வா அவரைக் கேட்டுக் கொண்டார்.
இது சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவித்த கட்சித் தொண்டர்களுக்குத் தந்தை செல்வா பின்வருமாறு விளக்கமளித்தார். ஆளுங்கட்சியைவிட மோசமான இனவாதத்தைக் கொண்ட எதிர்க்கட்சி ஆட்சிக்கு வராமல் தடுக்கவேண்டும் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்துவது தமிழர்களின் நலனை மேலும் மோசமாக்கும் பிரதமருக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளேன். அவரைக் கைவிட்டுவிட மாட்டேன் என நம்பிக்கையளித்துள்ளேன் என்றார்.
அன்று தமிழரசுக் கட்சியின் தொண்டர்களும் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.
ஆனால் அதன் பலனோ பெரும் பாதகமாகவே அமைந்தது. மாவட்ட சபை மசோதா கைவிடப்பட்டமைக்குப் பதிலாக திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைத்துத் தருவதாகப் பிரதமர் வாக்களித்தார். அது நிறைவேற்றப்படவில்லை. அது மட்டுமன்றி திருக்கோணேஸ்வரத்தைப் புனித பூமியாக்க அமைச்சர் திருச்செல்வம் அமைத்த குழுவை அவருடன் கலந்தாலோசிக்காமலே பிரதமர் கலைத்தார் அதன் காரணமாகத் திருச்செல்வம் அமைச்சர் பதிவியைத் துறந்தார்.
இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் அரசுக்கு நெருக்கடி கொடுக்கக்கூடாது என்பதற்காக மாவட்ட சபையை விட்டுக் கொடுத்தமையால் ஏற்பட்ட விளைவுகள் திருமலைப் பல்கலைக்கழகமும், கோணேசர் புனித பிரதேசமும் இன்றுவரைக்கிடைக்கவில்லை. மாவட்ட சபை விடயத்தில் உறுதியாக நின்றிருந்தால் தமிழர்களை எப்படியும் ஏமாற்றலாம் என்ற முடிவுக்குப் பிரதமர் வந்திருக்க முடியாது .
எனவே 1968இல் கற்ற பாடத்தை 2017இல் மறந்து மீண்டும் அதே தவறுக்குள் நுழைவது புத்திசாலித்தனமாகப்படவில்லை.
ஆனால் இன்றும் தமிழ் முஸ்லிம் தலைமைகளோ இணக்க அரசியலின் நிழலில் நின்று கொண்டு ஆக்கபூர்வமான எந்த நடடிக்கையிலும் இதுவரை இறங்கவில்லை.
எனவே இணக்க அரசியல் என்பது பொதுவான பிரச்சினைகளில் இணங்கிப் போவதுதான். ஆனால் அந்த இணக்கத்தாலோ மோசமானவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார்கள் என்பதாலோ நாம் தொடர்ந்து இழப்புகளை ஏற்றுக் கொள்வதாக அமையக்கூடாது. இது தொடர்பாகத் தமிழ், முஸ்லிம் தலைமைகள் விரைந்து முடிவெடுக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** மனக்குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி தாமதமாகும்.



**இடபம்:** குடும்பத்தினர் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சம்பள உயர்வு பெற்று மகிழ்வர். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.



**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகின்ற குளறுபடியை மாற்று உபாயத்தால் சரி செய்வீர்கள். லாபம் சீராக இருக்கும். சிக்கனம் மூலம் வீட்டுச் செலவைச் சமாளிப்பர்.



**கடகம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**சிங்கம்:** வசீகரப் பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு சரியாகும். லாபம் திருப்தி அளிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களுக்கு உடல்நிலை சீராகும்.



**கன்னி:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திருப்திகரமாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.



**துலாம்:** புத்துணர்ச்சியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். சேமிப்பு உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.



**விருச்சிகம்:** பொது இடத்தில் பிறரைப் பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு உண்டு. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**தனுசு:** யாருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழிலில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்பட நேரிடும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.



**மகரம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.



**கும்பம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். வெகுநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும்.



**மீனம்:** பெருந்தன்மையால் எதிரியைக் கூட மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமா[illegible] வெளியூர் செல்வர்.

# ரஜினி, கமல் படங்களை எதிர்பார்க்கும் இரசிகர்கள்



இரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் ரஜினிகாந்தின் '2.0', கமல்ஹாசனின் 'விஸ்வரூபம்2' ஆகிய இரண்டு படங்களுக்கான இறுதிகட்ட தொழில்நுட்ப பணிகள் முடிந்துள்ளன. ரஜினிகாந்த், கமல்ஹாசன் நடித்து முந்தைய காலங்களில் வருடத்துக்கு இரண்டு, மூன்று படங்கள் திரைக்கு வந்தன. அது ரசிகர்களுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை வருடத்துக்கு ஒரு படம், இரண்டு வருடத்துக்கு ஒரு படம் என்று குறைந்து விட்டது. அதிக பொருள் செலவுகள், உலகத்தரத்தில் தொழில்நுட்பங்களைப் புகுத்துதல், வெளிநாடுகளில் படப்பிடிப்புகளை நடத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

தீபாவளிக்கு '2.0' படம் வெளிவரும் என்று எதிர்பார்த்த நிலையில் தற்போது அடுத்த வருடம் ஜனவரி மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நாயகியாக எமிஜாக்சனும், வில்லனாக அக் ஷய்குமாரும் நடிக்கிறார்கள்.

கமல்ஹாசன் நடித்த விஸ்வரூபம் படம் 2013ஆம் ஆண்டு திரைக்கு வந்ததும், அடுத்த சில மாதங்களிலேயே 'விஸ்வரூபம்2' படமும் வெளிவரும் என்று அறிவித்தனர். விஸ்வரூபம்2 படம் எப்போது வெளிவரும் என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு வந்தன. இந்த நிலையில் கமல்ஹாசன் தனது ட்ருவிற்றர் கீச்சகத்தில், ``ஒரு மகிழ்ச்சியான அறிவிப்ப, விஸ்வரூபம்2 படத்தை 2017 ஆம் ஆண்டுக்குள் வெளிகொண்டுவருவதற்கான பொறுப்பை ராஜ்கமல் பிலிம்ஸ் ஏற்றுள்ளது. 'விஸ்வரூபம்2' படத்தை இனி நீங்கள் பார்க்க முடியும். அரசியல் குறுக்கீடுகள் இருந்த போதிலும் நான் தொடர்ந்து போராடினேன். அதுவும் நல்ல அனுபவம்தான்" என்று குறிப்பிட்டுள்ளார். நவம்பர் அல்லது டிசெம்பர் மாதம் இந்தப் படம் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு மாத இடைவெளியில் ரஜினிகாந்த், கமல்ஹாசன் படங்கள் அடுத்தடுத்துத் திரைக்கு வருவது ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டு படங்களுக்கான இறுதி கட்டப் படப்பிடிப்புகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.



## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை [illegible]ரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொ[illegible]. அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு[illegible]னமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







``அட்சய திருதியைல நகை வாங்கினா... நகையா சேரும் என்று சொல்லியிருப்பாளே...?

``சொன்னாங்க..."

``பணமா கொட்டும்.. இரண்டு பீரோ புதுசா வாங்க வேண்டி இருக்கும் என்று சொல்லியிருப்பாளே..."

``சொன்னாங்க... இதெல்லாம் உங்களுக்கு எப்படி...?"

``இதை தான்டா பல வருசமா சொல்லிட்டு இருக்காளவ...!"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு

பெண்களுக்கான கண்ணாடி வடிவிலான செருப்புகளில் பூக்கள் வைத்து நவீன வடிவில் தற்போது செருப்புகள் சந்தைக்கு வந்துள்ளன. இவை 750 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.





(நேற்றைய தொடர்ச்சி)

# கோடைக்கு இதம் தரும் தயிர்

- குறைந்த கொழுப்புச்சத்துள்ள தயிர், எடையை குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

- சளி, இருமல் இருப்பவர்கள், தயிரை இரவு நேரத்தில் சாப்பிடக்கூடாது. ஆயுர்வேத மருத்துவத்திலும், இதில் கூறப்பட்டுள்ளது. அது என்னவெனில், தயிரை, இரவில் தனியாக அப்படியே சாப்பிடுவதால் சளியின் வளர்ச்சி இன்னும் அதிகமாகும். எனவே, இரவில் தயிர் சாப்பிடுவதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டும்.

- பகல் நேரத்தில் சாப்பிடும் போது, சீனி சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்தும், இரவில் சாப்பிடும் போது சீனி அல்லது மிளகுத் தூளை சேர்த்தும் சாப்பிடலாம். இதனால், செரிமான மண்டலம் சீராக செயற்பட்டு, வயிறும் குளிர்ச்சியடையும். வெங்காயம், வெள்ளரிக்காய், தக்காளி, கொத்தமல்லி சேர்த்து கலந்து பச்சடி போன்று செய்து சாப்பிடலாம். தயிரை மோர்க் குழம்பாக சமைத்து சோறுடன் சாப்பிடலாம்.

- தயிரை, மண் பாத்திரத்தில் வைத்தால், வெயில் காலத்திலும் அது புளிக்காமல் சுவையுடன் இருக்கும். இஞ்சி, பெருங்காயம், சீரகம் தாளித்து தண்ணீர் விட்டு ஒருநாளைக்கு, சிலவேளை குடிக்கலாம். சிலர் மோரில் மிளகுத்தூள்; உப்பு சேர்த்து குடிக்கின்றனர்.



# அவல் போண்டா



**தேவையான பொருள்கள்**

அவல் ஒரு கப்
உருளைக்கிழங்கு ஒன்று
வெங்காயம் 1
பச்சை மிளகாய் 3
கொத்தமல்லி ஒரு கைப்பிடி அளவு
கரம்மசாலா தூள் தேவையான அளவு
தயிர் 2 மேசைக்கரண்டி
எண்ணெய் 200 கிராம்
உப்பு, சீரகம், பெருங்காயத்தூள் தேவையான அளவு

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்து கொள்ளவும். அவலை 10 நிமிடம் தண்ணீரில் ஊற வைத்த பின் தண்ணீர் இல்லாமல் பிழிந்து வைக்கவும். வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் ஊற வைத்த அவல், மசித்த உருளைக்கிழங்கு, கரம் மசாலா தூள், வெங்காயம், கொத்தமல்லி, ப.மிளகாய், தயிர், உப்பு, சீரகம், பெருங்காயத்தூள் சேர்த்து நன்றாக பிசைந்து கொள்ளவும். தண்ணீர் தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் தெளித்து கொள்ளலாம்.

சட்டியை அடுப்பில் வைத்து பொரிக்க தேவையான எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் மாவை போண்டா அளவில் உருட்டி, சூடான எண்ணெயில், போட்டு அடுப்பை மிதமான சூட்டில் வைத்து அதிகம் சிவந்து விடாமல் பொரித்தெடுக்கவும். சுவையான அவல் போண்டா தயார்.

# குழந்தைகளுடன் பொழுதுபோக்க

## பெற்றோருக்கு 10 வழிமுறைகள்

இன்றைக்கு பெரும்பாலான வீடுகளில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்வதால், குழந்தைகளுக்கும் நேர அட்ட வனை போட்டு நேரம் ஒதுக்கும் நிலை உண்டாகிவிட்டது. எனவே, குழந்தைகளுடன் இருக்கும் நேரத்தை தரமாக செலவிடுவது எப்படி என்று பார்க்கலாம்.

* வயிற்றில் கருவாக உருவாகி 20 வாரங்களிலேயே தாயைச் சுற்றிலும் நடக்கும் உரையாடல்கள், சத்தங்களை கரு உணர ஆரம்பிக்கிறது. எனவே, தாய், தந்தையர் இருவரும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் வயிற்றில் இருக்கும் கருவுடன் நேர்மறையாகப் பேசுங்கள்.

* குழந்தை பிறந்த பின்னர், 'அம்மா சமைக்கப் போகிறேன்; சமத்தா தூங்குங்க' என்றும், 'அம்மா வந்துட்டே இருக்கேன்; அழாதீங்க' என்றும் அடிக்கடி பேசிக் கொண்டே இருங்கள். இது, உங்கள் அருகாமையை பிஞ்சுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும்.

* தூங்கவைக்கும்போது தட்டிக்கொடுத்தும், தாலாட்டுப்பாடியும் தூங்கவையுங்கள், கதைகள் சொல்லுங்கள். இது, தாய்க்கும் சேய்க்குமான பாசத்தை அதிகரிக்கும். தந்தையும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.



* பிள்ளைகள் பாடசாலையில் இருந்து வந்ததுமே, அல்லது நீங்கள் பணி முடிந்து வந்ததுமே, அன்று பாடசாலையில் நடந்த விடயங்களை உற்சாகமாகக் கேளுங்கள். அவர்கள் சொல்வதில் இருந்து கேள்விகள் கேட்டு உங்கள் ஆர்வத்தையும் அக்கறையையும் உணர்த்துங்கள்.

* அவர்களுடன் சேர்ந்து பயணிக்கும் நேரங்கள், ஓரிடத்தில் காத்திருக்கும் நேரங்களில் விடுகதைகள் போடுவது அல்லது வார்த்தை விளையாட்டு விளையாடுங்கள். இது, அவர்களின் மொழித்திறனை வளர்க்கும்.

* வாரம் ஒருமுறையாவது பிள்ளைகளோடு இயற்கையை ரசித்தவாறு நிலாச் சோறு சாப்பிடுங்கள். வீட்டுக்குள் சாப்பிடும் நேரத்திலும் தொலைக் காட்சியை அணைத்துவிட்டுப் பேசிக்கொண்டே சாப்பிடுங்கள். அந்தப் பேச்சில் உறவுகள், நண்பர்கள் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள்.

* புத்தாண்டு மற்றும் பிள்ளைகளின் பிறந்த நாள்களில் கடந்த வருடங்களில் குழந்தைகள் கற்றுக்கொண்டதைப் பகிரச் சொல்லிக் கேளுங்கள். இந்த வருடத்துக்கான சின்னச் சின்ன இலக்குகள், புதிய நல்ல பழக்கங்களை அவர்களுக்குள் விதையுங்கள்.

* குழந்தைகளுடன் விளையாடும் சந்தர்ப்பங்களில் அலைபேசி கேம்களைத் தவிருங்கள். கேரம், செஸ் போன்ற விளையாட்டுக்களை விளையாடுங்கள். இது, அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு நன்மை அளிக்கும்.

* விசேட நாள்களில் குழந்தைகளின் நண்பர்களையும் வீட்டுக்கு அழைக்கலாம். நண்பர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து விளையாடி மகிழுங்கள். அவர்களின் நண்பர்களையும் கருத்துகளையும் நீங்கள் மதிப்பதை உணர்த்துங்கள்.

* வருடத்துக்கு ஒருமுறை அல்லது இரண்டு முறையாவது குழந்தைகள் மனதில் நினைப்பதைக் கடிதமாக பெற்றோருக்கு எழுதச் சொல்லுங்கள். ஊரில் இருக்கும் தாத்தா, பாட்டி, அத்தை, மாமா போன்ற உறவுகளுக்கும் அன்பை வெளிப்படுத்தும் கடிதத்தை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரி நாக்கு

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசியது இன்னும் வலித்தது " நாய்க்குட்டிகளையும் விடா தேயுங்கோ" அவன் ஏன் அப்படிப் பேசிவிட்டுப்போறான்? தவறாக நினைச்சிருப்பானோ? அக்கம் பக்கம் பார்த்தான் எவருமில்லை என்றவாறு நிமிர "என்ன தம்பி பார்க்கி றீங்க?" பிரதேச சபை சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் கேட்க தன் நிலைமையைச் சொன்னான் கேதீஸ்.

"கடுவன் குட்டிகளை யார் தம்பி இங்கவிடப்போகிறாங் கள்? நீங்கள் கோண்டாவில் தேத்தண்ணீக்கடையடியில போல் மணியம் என்று விசாரியுங்க. அவரிட்ட நாய்கள் இருக்கு நூறு இருநூறைக் கொடுத்தால்" என்றார். அவர் தேநீர்க்கடை என்றதும் கேதீசுக்குப் பசிக்கத்தொடங்கியது . தான் நீண்டதூரம் வந்திருப்பதும் தெரிந்தது.

பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கலாம். கடைசியாக என்ர வாயாலதான் நாய்க்குட்டி செத்தது என்று பெருமூச்சு ஒன்றுடன் தேநீர்க்கடையில் தேநீரைக்குடித்தவாறே மெதுவாக "அண்ணை மணியண்ணையை தெரி யுமோ?" எனக் கேட்டான்.

"இஞ்ச் கனக்க மணியம் இருக்கினம் நீங்க யாரைக் கேட்கிறீங்க?"

"நாய்விக்கிற மணியம்" பயந்து பயந்து மெதுவாகச் சொன்னான், கடையில் நின்ற மற்றவர்களுடன் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்த கடைக்காரர். நாய்விக்கிற மணியத்தின்ர வீட்டு விலாசத்தை சொல்ல கேதீசின் மோட்டார் சைக்கிள் மணியம் வீட்டை நோக்கிச் சென்றது.

மணியம் வீட்டுக் கேற்றடியில் நின்றுகொண்டு, ஏற்கனவே மணியத்தைத் தெரிந்தமாதிரி, "மணியண்ணை... மணியண்ணை..." என்று கூப்பிட்டான். வந்ததோ மணியண்ணையின் மனைவி "என்ன தம்பி வேணும்?" கேற்றைத் திறக்காமலேயே கேள்வி வர.

"நாய்க்குட்டியொன்று வேணும் அது தான் பார்க்கலாமோ?"

"வேண்டுறது என்று சொன்னால் பார்க்கலாம் தம்பி"



உசாரடைந்த கேதீஸ் "எவ்வளவு அக்கா ஒன்று?"என்றான்.

"எட்டாயிரம் தம்பி ஒருமாதக் குட்டி, ஜேர்மன் சப்பேட்" என்று சொல்ல திடுக்கிட்ட கேதீஸ்,"நான் பிறகு மணி யண்ணை நிற்கும்போது வருகிறேன்" என்றவாறு மோட்டார் சைக்கிளை முறுக்கினான்.

இனி ஒரு இடமும் போவதில்லை என்று நினைத்தவாறு யாழ்ப்பாணத்தில் செல்லப்பிராணிகள் விற்கும் கடை யொன்றுக்குள் நுழைந்தான். அங்கிருந்த பெண்ணிடம் "அக்கா நாய்க்குட்டி ஒன்று பார்க்கவேணும்" என்று சொல்ல அந்தப் பெண் "என்னமாதிரி அண்ணை? காவ லுக்கோ செல்லப்பிராணியாக வளர்க்கவோ" என்று கேட்க " காவலுக்குத்தான்"என்று சொல்ல "எத்தனை பரப்புக் காணி" என்று கேட்டாள் அந்தப்பெண். கேதீசும் பெருமை யாக "இருபது பரப்பு" என்று சொல்ல "இருபது என்றால் ஒன்று பத்தாது அண்ணை" என்று சொல்ல உசாரடைந்த கேதீஸ், "ஊர் நாய்தானே என்று கேட்க?" கேதீஸ் ஏதோ கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டமாதிரி அந்தப்பெண் பார்க்க கேதீஸ் தொங்கிய தலையுடன் கடைக்கு வெளியே வர நண்பனொருவன் தென்பட்டான். அவனுக்கு விடயத் தையும் தனது அலைச்சலையும் சலிப்புடன் சொல்ல.

"பக்கத்துவீட்டில நாய். குட்டி போட்டிருக்கு. பொறு கேட்டுச் சொல்கின்றேன்" என்று பக்கத்துவீட்டுக்காரருடன் தொலை பேசியில் கதைத்துவிட்டு "உனக்கு அதிஸ்டம் இரண்டு கடுவன் நிற்குதாம் தருகினமாம் இரண்டு கிழமைதானாம். இன்னும் ஒரு கிழமை போக தருகினமாம்" என்று சொல்ல அலைச்சலையும் மீறி தாங்கமுடியாத சந்தோசத்துடன் காரைநகருக்கு அடங்காப் பசியுடன் பறந்தான்.

வீட்டுக்குள் போனவுடன் நந்தினி பாய்ந்து விழுந்தாள் "எங்கேயப்பா சுத்திப்போட்டு வாறியள் உங்களப் பார்த் துக்கொண்டு நாங்களும் சாப்பிடாமல் இருக்கிறம்" என்றவளுக்குப் பதில் சொல்ல வாயெடுத்தவன் புதிதாக ஒரு கடுவன் நாய்க்குட்டியைக் கட்டி வைத்திருப்பதைக் கண்டவுடன் வாயை மூடிக்கொண்டான்.

"நாய்க்குட்டி வந்திட்டுது தானே சாப்பிட்டுட்டு நாங்க வெளிக் கிடு வம்" என்றவனுக்கு "விடியப்போவம்" என்று மனைவி சொன்னதன் அர்த்தம் விளங்கியபோது தனது வாயால் காலை யில் மாமனாரைப்பற்றிச் சொன்னதை நினைத்து நொந்து கொண்டானே அன்றி அவன் வாய் திறக்கவேயில்லை.

## சொற்சிலம்பம் போட்டி இல: 469

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | 5 | 6 |
| | | 7 | | | | | |
| 8 | 9 | | | | 10 | | |
| 11 | | | | 12 | | | 13 |
| | | | 14 | | | 15 | |
| 16 | | 17 | | | 18 | | |
| | | 19 | | 20 | | | |
| 21 | | | | 22 | | | |

**அனுப்புபவர் பெயர்:.................................................**

**முழுமையான தபால் விலாசம்: ..............................**

**..........................................................................**

**கையொப்பம்:..............................................................**

### இடமிருந்து வலம்

1. உழைத்து ஊதியம் பெறு
4. களைப்பால் வருவது
7. செல்வந்தன்
8. பத்துப் பாடல்களைக் கொண்டது
10. தங்களது / தமது என்பதை வெளிப்படுத்தும்
11. உயர்வானது
12. நெஞ்சுப் பகுதி
14. இது ஓய்வதில்லை
15. மத்தி
16. கோவில்களின் முன்புறம் அமைவது
18. நஞ்சு
19. சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன் மூலம்
21. நடுப்புள்ளி
22. சேதமுற்றபின் எஞ்சுவது

### மேலிருந்து கீழ்

1. கணவன் மனைவி
2. சாதகமானது அல்ல
3. நாள்
4. முன்னைய நிறுவை அளவையில் ஒன்று
5. இதன் நூறு மடங்கு ஒரு ரூபாய்
6. சாப்பிடு
9. சாவி
12. பிற்பகல் தாண்டி வரும் வேளை
13. தாய், தகப்பன், பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து உருவாவது
14. ஓர் சமையலறைக் கருவி
15. முன் செல்லுமாறான ஒரு பணிப்புரை
16. இறக்குமதியாகும் இந்த மாவும் உணவு தயாரிக்கப் பயன்படும்
17. சோறு உண்ணும் போது சேர்த்துக் கொள்ளும் பதார்த்த வகை
18. தங்குமிடம்
20. ஈரலிப்பான இடத்தில் வளரும்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர் கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வரு வதால்பரிசுக்கும்பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 467 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) வைதேகி (4) கலகம் (6) பசுந்தரை (8) துடியன் (10)மறு (11) பல்லி (13) கருத (14)மதி (15)தேமல் (16)காப்பகம் (18)புடம் (19)பன்றி

### மேலிருந்து கீழ்

(1) வைபவம் (2) தேசு (3) கிந்துதல் (4) கரையடை (5)கரி (7)தடி (9)ஆறுதல் (10)மருமகன் (11)பதிப்பு (12) லிங்கம் (13)கதே (14)மகா (17)பட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.469 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (10.05.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 467இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
பொ.கயிலாயபிள்ளை,
இல.77, 2ஆம் பகுதி,
விசுவமடு மேற்கு, விசுவமடு.

**2 ஆம் பரிசு**
வ.நவமணி,
"பொன்மணி வாசா"
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
செ.சந்தனராசா,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

**4 ஆம் பரிசு**
சின்னத்துரை சஞ்சிவ்,
அம்பலம்வளவு, கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி து.கீர்த்தனா,
திருநாவலூர், புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

கி.மாலதி,
உப அஞ்சல் அகம்,
ஏழாலை.

திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதி சிவம்,
இல. 18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.469இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 14.05.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 467 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் [illegible]ளது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

30.04.2017 தொடக்கம் 06.05.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது பகவான் நற்பலன்தருவர். எதிர்காலவளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். உடன்பிறந்த வர்களால்உதவிகிடைக்கும். பிள்ளைகளின் குறையை சரி செய்வதில் நிதானம் தேவை. சுபநிகழ்ச்சிகளில்அடிக்கடிபங்கேற்பீர்கள். இளமைக்கால நண்பர்களைசந்தித்துமகிழ்வீர்கள். மனைவிஉங்களின் நல்ல குணம் அறிந்து பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். லாபம் பல மடங்கு அதிகரிக்கும். வங்கியில் சேமிப்பு உயரும். பணியா ளர்களுக்கு, எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாணவர்கள், அக்க றையுடன் படித்து அதிக மதிப் பெண் பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், புதன், குரு அளப்பரிய நன்மை தரு வர். புதிய முயற்சியில் ஆர்வ முடன் ஈடுபடுவீர்கள். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்று முன்னேறுவர். உடல்நிலை சீராக இருக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்க ளால் உதவி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களை பயனறிந்து மேற் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக் கிட்டாலும் லாபத்திற்கு குறைவிருக்காது. பணி யாளர்கள், பணியிடத்தின் சூழ்நிலை உணர் ந்து செயல்படுவது நல்லது. பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.



## மிதுனம்

புதன், சனீஸ்வரர், சூரியன், ராகு ராஜயோக பலன் தர காத்திருக்கின்ற னர். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும். பணிகளில் திறமை பளிச்சிடும். உடன்பிறந்தவர்கள் உறுதுணை யாக செயற்படுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகளின் குளறுபடியான செயல்களை இனிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். கடன் பிரச்சினை தீரும். விருந்து விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவி யின் நல்ல செயல் களை மனம் திறந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், எளிதாகப் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் நன்மை அளிப்பர். செயல் களில் முன்யோசனையுடன் ஈடுபடு வது அவசியம். குடும்பத்தில் செலவு அதி கரிக்கும். வீடுவாகன வகை சார்ந்து விழிப்புடன் இருப்பது அவசியம். புத்திரரின் குறையைசரிசெய்வ தில் இதமான அணுகுமுறை தேவை. அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாகலாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் குறைவாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள், பிறருக்காக பணம், நகை பொறுப்பு ஏற்பது கூடாது.

## சிங்கம்

புதன், குரு, சுக்கிரன் சந்திரன் ஆகியோரால் ஓரளவு நன்மை உணடாகும். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். அன்றாடப் பணியில் ஆர்வம் அதிகரிக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு ஏற்படும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆடம்பர எண்ணத்தை தவிர்த்தால்செலவுகுறையும். மனைவியின்நற்செயல் குடும்பத்திற்கு பெருமை தேடித் தரும். தொழில், வியாபாரத்தில் அமோக வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறு வர்.

## கன்னி

கேது, சனீஸ்வரர், சந்தி ரனால் நன்மை அதிகரிக்கும். மனதில் அடிக்கடி குழப்பம் உண்டாகி மறையும். நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு ஏற்படலாம். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். ஆரோக்கியம் மேம்படும். இஷ்டதெய்வ வழிபாடு செய்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றுவது நல்லது. பெண்கள், சிக்க னத்தால் சேமிக்க முயல்வர். மாண வர்களுக்கு, படிப்பில் கூடுதல் அக் கறை தேவை.

## துலாம்

ராகு, புதனால் நன்மையை எதிர்பார்க்கலாம். இடம், சூழ்நிலை உணர்ந்துசெயற்படுவதுநல்லது. குடும்பத்தி னரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். உடல்நலனில் அக்கறை தேவை. ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். லாபம் குறைவாக இருக்கும் பணியாளர்கள், பணிச்சுமையை சமாளிக்க முடியாமல் கஷ்ரப்படுவர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். மாணவர்கள், பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்ல வேண்டாம்.

## விருச்சிகம்

சுக்கிரன், சூரியன், குருவால் நன்மை அதிகரிக்கும். பொது விடயங்களில்ஆர்வம்அதிகரிக்கும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு கட்டுப்பாட்டு நடப்பர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் அதிகரிக்க வாய்ப்புண்டு. விலகிச் சென்ற உறவினரும் இணக்கமுடன் நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் நல்லவளர்ச்சிஉண்டாகும். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த சலுகை விரைவில் கிடைக்கும். பெண் களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி காண்பர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து நல்ல பெறுபேறுகள் பெறுவர். உடல்நிலையில் கவனம் வேண்டும்.

## தனுசு

கேது, சுக்கிரன், செவ்வாய், புதன் நன்மை தருவர். அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தாய் வழி உறவினர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். அறிமுகம் இல் லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் அன்பை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத் தில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். மாணவர்கள், எதிர்கால கல்வி குறித்து ஆலோ சிப்பர்.



## மகரம்

குரு, சுக்கிரன், சனீஸ்வ ரனால் நற்பலன்கள் அதிகரிக்கும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். கடன் பிரச்சினை தீரும். தாய் வழி உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படலாம். பிள்ளைகளின் நற்செயல் பெருமைதேடித்தரும். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் அன்பும், ஆதரவும் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள், புத்தாடை, நகை வாங்க நல்யோகம் உண்டு. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## கும்பம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நன்மை அதி கரிக்கும். பரந்த மனப்பான்மை யுடன் செயற்படுவீர்கள். உங்களின் வளர்ச்சிகண்டுமற்றவர் வியக்கும்சூழ்நிலைஉரு வாகும். தாய் வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் செயலில் குளறுபடி ஏற்படலாம் கவனம். பூர்வீகச் சொத்தில் நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது. நோய்த் தொந்தரவு மறையும். மனைவியின் ஆலோ சனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியா பாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக் கும். பணி யாளர்கள் சுதந்திர மனப் பான்மை யுடன் பணியாற்றுவர். மாணவர்கள் படிப்பில் விடாமுயற்சி யுடன் ஈடுபடுவர்.

## மீனம்

செவ்வாய், ராகு, குரு சுக்கிரனால் அளப்பரிய நன்மை காண்பீர்கள். வளர்ச்சிக் கான வாய்ப்புக் கிடைக்கும். குடும்பத் தேவை தாராள செலவில்ப் பூர்த்தியாகும். வீடு, வாகனத்தில் தேவையான ம ாற்றம் செய்வீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகள் நற்செயல்களில் ஈடுபட்டு பெருமை சேர்ப்பர். உடல்நிலை சீராக இருக்கும். ம னைவியின் எண்ணமும், செயலும் முன்னேற்றத்தி ற்கு வழிவகுக்கும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக் கும். லாபம் பெருகும். பணியாளர்கள் கேட்ட நிதயுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் பெற்றோரின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து.....!

அனார்கலி

## சுயேச்சை நிலைப்பாடு

முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தி அணியினர் எனக் கூறப்படும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம். ரி. ஹஸனலி தலைமையிலான அணியினர் வேறு எந்த மாற்றுக் கட்சியிலும் இணையும் நோக்கத்தில் இல்லை என்றும், எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இந்த அணியினர் ஹஸனலி தலைமையில் சுயேச்சை அணியாகப் போட்டியிட்டு சில ஆசனங்களையாவது பெற்று தமது பலத்தைக் காட்டவும், கட்சியைத் தூய்மைப்படுத்தும் தமது இலக்கின் நோக்கை உறுதிப்படுத்தவும் சபதமெடுத்துள்ளனராம்...! தென்கிழக்கில் இப்படியும் பேச்சு அடிபடுகின்றது!

## கல்முனையில் லோகநாதன்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மே தின ஊர்வலமும் மே தினக்கூட்டமும் நாளை (01.05.2017) கல்முனை மாநகரில் நடைபெறவிருக்கின்றது.
வடக்குக்கிழக்கின் பல மாவட்டங்களிலும் கிளைகளைக் கொண்டு இயங்கி வரும் இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 25வருடங்கள் நிறைவு பெறுகின்றன.
சங்கத்தலைவரும், தொழிற்சங்கவாதியுமான எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் குறித்த மே தின நிகழ்வுகளுடன் இணைந்ததாக தொழிற்சங்கத்தின் 25 வருட நிறைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
புரையோடிப்போன இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, வடக்குக்கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் உட்பட பல முக்கிய விடயங்கள், தீர்மானங்கள் பல இதன்போது நிறைவேற்றப்படவுள்ளதாகத் தலைவர் லோகநாதன் தெரிவிக்கின்றார்.

## 3 பணிஸ், 3 பிளென் ரீ...!

ஹஸனலி அணியினர் ஊர், ஊராக நடத்திவரும் பொதுக்கூட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப கால கட்டங்களில் தலைவர் அஷ்ரபுடன் இணைந்து செயற்பட்ட மூத்த உறுப்பினர்கள் சிலரும் பங்கு கொள்ளத் தொடங்கியுள்ளனர்.
இறுதியாக பாலமுனையில் நடத்திய பொதுக்கூட்டத்தில் முன்னாள் வெலிமட பிரதேசசபை உபதவிசாளர் பசீர் நியாஸ்தீன் கலந்து கொண்டு ஆற்றிய உரை பலரையும் நெஞ்சு நெகிழ வைத்தது.
அன்று கட்சியில் நிதிவசதியில்லை. தலைவர் அஷ்ரபுடன் நாம் எங்கும் பயணிப்பதானால் பயணிக்கும் சகலரும் தம்மிடமிருந்த காசுகளைச் சேர்த்தே வாகனத்துக்கு எரிபொருள் நிரப்புவோம்.
இப்படித் தலைவருடன் பயணித்த ஒரு சமயம் பசிவயிற்றைக் குடைந்தது. வாகனத்தை நிறுத்தி சட்டைப் பெக்கற்றுகளைத் தடவினோம். 3 பணிசுக்கும், 3 பிளென் ரீக்குமே போதுமாகப் பணமிருந்தது. அதை வாங்கி ஐந்துபேரும் அவற்றை உண்டு, குடித்தோம்.
இப்படியெல்லாம் கட்சிவளர்க்க நம் தலைவர் அஷ்ரப் மற்றும் நாம் பட்ட கஷ்டங்களின் ஒரு சிறுதுளியைக் கூட இன்றைய தலைவர் அனுபவித்திருப்பாரா? இப்படிக் கூறி அவர் கேட்ட கேள்வி கூட்டத்துக்குத் திரண்டிருந்தோரை ஆச்சரியத்திலும், அனுதாபத்திலும் ஆழ்த்தியது!




## போராட்டம் வெடிக்கும்

அம்பாறை மாவட்டத்தில் இனமுரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் உருவெடுத்துள்ள மாயக்கல்லி மலை அடிவாரத்தில் பௌத்த விகாரை அமைக்க முற்படும் விவகாரத்துக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர், மூத்த சட்டத்தரணி ஆரிப்சம் சுடீன் கடும் கண்டனமும் விசனமும் தெரிவித்துள்ளார்.
மாயக்கல்லிமலை அடிவாரத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகளில் விகாரை அமைக்க முற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனத்தெரிவித்துள்ள அவர், முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்காவிட்டால் அம்பாறை மாவட்டம் முழுவதும் போராட்டம் வெடிக்குமென எச்சரித்துள்ளார்.
பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த புத்தர்சிலை மற்றும் விகாரை அமைப்பதற்கான அத்துமீறிய காணிசுவீகரிப்பு விடயம் தொடர்பில், ஆரிப்சம் சுடீன் அவசர பிரேரணை ஒன்றையும் முன்மொழிந் துள்ளார்.
இந்தப் பிரேரணை மீது ஏக மனதாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது
இதற்கென உடனடியாகக் குழு ஒன்று அமைக்கவும், இந்தக் குழுவில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மாகாண சபை உறுப்பினர்களுடன், மேலதிகமாக மாகாணக் கல்வி அமைச்சர், விவசாய அமைச்சர், மட்டக்களப்பு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ் சுபைர் உட்பட இறக்காமம் பிரதேச செயலர், காணிஆணையாளர், பொலிஸ் உயரதிகாரிகள் இடம்பெறவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
இந்தக் குழுவானது எதிர்வரும் மாகாணசபை அமர்வில் இதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு அந்தக் கால வரையறைக்குள் யாரும் அந்தக் காணிக்குள் எக்காரணத்துக்காகவும், உட்செல்லக்கூடாதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
எத்தகைய தடைகளிருப்பினும் அங்கு (மாயக் கல்லி மலைப்பகுதியில்) பௌத்த விகாரை ஒன்றை நிர்மானிப்பதற்கான காணி அளவீடு செய்யும் பணிகள் தீவிரமாகவே உள்ளன.



## கடையடைப்பு... முழு அடைப்பு...

காணாமலாக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் கடந்த 27ஆம் திகதி வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற முழுஅடைப்புக்கு கிழக்கின் வர்த்தக மையமான கல்முனை நகரவர்த்தகர்கள் முழு அளவில் ஆதரவு வழங்கியிருந்தனர்.
மாத இறுதிக் காலகட்டமாகவிருந்தும் அவர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவளித்தமை பலரதும் பாராட்டைப் பெற்றது.
தமிழ் - முஸ்லிம் இரு சாராரும் இதன்போது ஒருங்கிணைந்து தமது வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்துக்கு ஆதரவளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




## வேண்டாமே அரசியல்!

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் நாளை கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடத்தவிருக்கும் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவென அழைக்கப்பட்ட அதிதிகளைத் தனிப்பட்ட அரசியல் விவகாரங்களைத் தமது உரைகளில் ஆற்ற வேண்டாமெனக் கோரியுள்ளது.
வேறு என்ன? தொழிலாளர் தினத்தில் அந்தத் தின மகத்துவம், தொழிலாளர் நலன் பற்றிப் பேசாது அரசியலா பேசுவது! முடிவு சரியானது தானே...?

## அம்பாறையில் பொதுக்கூட்டம்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 30ஆம் திகதி அட்டாளைச்சேனை ஒஸ்ரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. சம்மேளனத் தலைவர் கலாபூஷணம் மீரா எஸ். இஸதீன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளது.
கூட்டத்தில் மறைந்த சம்மேளன உறுப்பினர்களுக்கான 'துஆ' பிரார்த்தனை இடம்பெறவிருப்பதுடன், அண்மையில் மறைந்த வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் செல்லையா கதிர்காமத்தம்பியின் மறைவு குறித்த அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட வுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர கட்டடமில்லாது செயற்படும் புதுக்குடியிருப்புப் ப.நோ.கூ. சங்கம்

முல்லைத்தீவு, ஏப்.30

வட பகுதியில் போர் உக்கிரமாக நடைபெற்ற காலத்தில் மிகவும் உன்னத சேவையை வழங்கிய புதுக்குடியிருப்புப் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் தற்போது குண்டுத்தாக்குதலில் சேதடைந்த கட்டடம் ஒன்றில் தற்போது சேவையை வழங்கி வருகின்றது. இவ்வாறு புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"போர் நடைபெற்ற காலத்தில் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரிசி ஆலை 1, வெதுப்பகம் 1, கோப்சிற்றி 1, மினி கோப் சிற்றி 1, கிளை சங்கம் 18, பாரஊர்தி 3, டிப்பர் 1, உழவியந்திரம் 5, நிசான் இரக் 1, கிராமிய வங்கி 1, மொத்த விற்பனை நிலையம் 2, நிரந்தரக் கட்டடம் கொண்ட தலைமைக்காரியாலயம், வாகனத்தரிப்பிடம் 1, களஞ்சியம் 1, மோட்டார் சைக்கிள் 2 என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கியது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தான் கடைசியாகப் போர் நடைபெற்றது. அக்காலத்தில் பல பாகங்களில் இருந்து வருகை தந்த அனைத்து மக்களுக்கும் தன்னுடைய சேவையை வழங்கியது புதுக்குடியிருப்புப் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம். முல்லைத்தீவு மாவட்டத்தில் கடைசியாக மக்கள் மீள்குடிமர்த்தப்பட்டதும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தான். அதனால் புதுக்குடியிருப்புப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய சில வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. மீள்குடியமர்த்தப்பட்ட காலத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கவில்லை. புதுக்குடியிருப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிரந்தரமான ஒரு கட்டடம் இல்லாத நிலையில் தன்னுடைய சேவையை வழங்கி வருகின்றது. குண்டுத்தாக்குதல்களில் சேதமடைந்த நிலையிலேயே எமது தலைமைக்காரியாலயம் காணப்படுகின்றது. வெள்ளம் ஏற்படும் காலத்தில் வெள்ளத்துக்குள் இருந்து தான் ஊழியர்கள் கடமை செய்கின்றார்கள். புதுக்குடியிருப்புப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கதின் தலைமைக்காரியாலயத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம். எதிர்காலத்தில் சங்கத்தின் செயற்பாடுகளை முழுமையாக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு எமக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று மிக அவசியம். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எம்மால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட வண்ணமே உள்ளன." - என்றார். (ஐ-7)



வடக்கு மாகாணப் புதிய உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியேற்ற எம்.பற்றிக் டிறஞ்சன் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரனிடமிருந்து வடக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் செயற்குழு உறுப்பினராக நியமனக் கடிதத்தைப் பெற்றார். (து)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் இம்முறை மே தினப்பேரணி

கிளிநொச்சி, ஏப்.30

கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள மேதினப் பேரணி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பேரணியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் சு.சுரேன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது வழமை. இந்த நிலையில் இந்த வருடம் தமிழ்தேசிய க் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. மே தினப் பேரணி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான பேரணியாக இடம்பெறும். தொழிலாளர்களான அவர்கள் இன்று தொழில்களைக் கைவிட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாக கவனவீர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். மேதினத்தன்று காலை 9 மணிக்கு கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பமாகும் பேரணி, கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள கிறீன் பார்க் வரை சென்றடையும். அங்கு மேதினக் கூட்டம் இடம்பெறும். இதில் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள், பொதுமக்கள், கிராம அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். என்றார். (ஐ-6)




# யாழ். முற்றவெளியில் மே தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர திசாநாயக்க தெரிவித்தார். வடபகுதி இடதுசாரி அமைப்புக்களின் பல்கலைக்கழக ஆசிரியர்களின், தொழிற் சங்கங்கள், மீனவ சங்கங்கள், கலைஞர்கள், மாணவ சங்கங்கள் மற்றும் ஏனைய மக்கள் சக்திகளுடன் ஒன்றிணைந்து மே தினக் கூட்டம் நடைபெறும். அன்றைய தினம் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள முலவைச் சந்தியில் பிற்பகல் 1 மணிக்கு பேரணி ஆரம்பமாகி முற்றவெளியில் கூட்டம் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

## 56ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை. கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 56ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 30.04.2017 யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சை பகுதியில் காலை 9.30 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ந.நற்குணராசா
செயலாளர்

(AJ/CS/3599(10)

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரூரண்டுக்கு சுத்திகரிப்பாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 8392107

(AKN-113)(10)



## அருள்மிகு ஸ்ரீயோகாம்பிகை சமேதயோகபுரநாதர் ஆலயம் மல்லாவி சிவன்கோயில்

எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருள் கூடியுள்ளதால் ஆலயத்திற்கான மகாகும்பர்பிஷேக பெருவிழா 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 6.46 முதல் 8.24 வரை இடம் பெற உள்ளது. இதனை ஒட்டிய கர்மாரம்பம் 01.05.2017 திங்கள் காலை 6.46 நிமிடம். தொடர்ந்து எண்ணைக்காப்பு 06.05.2017 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5 மணி வரை இடம் பெறும்.

சிவபக்த அடியவர்கள் நிகழவிருக்கும் மகாகும்பாபிசேக கருமங்களில் கலந்து கொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்று ஏகுமாறும் ஆலய நிர்மாணப் பணிகளுக்கும் கும்பாபிசேக கருமங்களுக்கும் பொருளாகவோ, பணமாகவோ உதவி வழங்க விரும்பும் பக்த வள்ளல்கள் கீழ் குறிப்பிடும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்பதுடன் நேரில் வருகை தரமுடியாத பக்தவள்ளல்கள் கீழ்குறிப்பிடப்படும் வங்கிக் க/குகளில் வைப்பிடலாம் என்றும் அதற்கான பற்றுச்சிட்டைகள் வழங்கப்படும் என்பதையும் பக்தி சிரத்தையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர் பரிபாலனசபை தொ.இல 077 390 2119
தலைவர் திருப்பணிச்சபை தொ.இல 077 612 6023

| கணக்கின்பெயர் | இல | வங்கி |
|---|---|---|
| யோகாம்பிகை சமேத | 73912081 | இலங்கை வங்கி, மாங்குளம் |
| யோகபுர நாதர் | 165200190002385 | மக்கள் வங்கி, மாங்குளம் |

பரிபாலனசபை.

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய மகோற்சவ குருவும் சுன்னாகம் மத்தி புவனேஸ்வர் அம்மன் ஆலய பிரதம குருவுமாகிய **கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்** (JP) அவர்களின் புத்திரனும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைபுரிபவரும் வவுனியா கோயில்குளம் மகாவிஷ்ணு தேவஸ்தான குருவுமாகிய விளைவேலி, சாவகச்சேரியைச் சேர்ந்த

சிவஸ்ரீ
ஜெகதீஸ்வர மயூரக்குருக்கள்
(M.A)

அவர்களுக்கு 17.04.2017 அன்று நல்லை ஆதீனத்தில் ஈழத்தின் சிரேஷ்ட சிவாச்சாரியார்களினால் சிவாச்சாரியராக அபிஷேகம் (குருப் பட்டம்) நடைபெற்றதனை வாழ்த்தி குருக்கள் அவர்களின் சிவாச்சாரிய பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

த.நந்தகுமாரன் குடும்பம்
ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மகோற்சவ
[illegible] உபயகாரரும்,
[illegible]வரி அம்மன் ஆலய தர்மகர்த்தாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம் தொடுகிறார் தர்ஜினி சிவலிங்கம்



பிரகாஸ்

## இலங்கையை ஆசியச் சம்பியனாக்காமல் ஓயப்போவதில்லை என்றும் சபதம்

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் கல்விகற்றபோது, வவுனியாவில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டத் தொடரில், நான் தேசிய அணிக்காக இனங்காணப்பட்டேன். தேசிய அணியின் பயிற்சி முகாம்களில் என்னை நிலைப்படுத்தியிருந்தேன். இதனால் விளையாடும் குழாமில் இணைக்கப் பட்டேன். 2009 ஆம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் 7 ஆவது ஆசிய வலைப்பந் தாட்டத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் அதிக கோல் போடுனராக நான் (ஆகச்சிறந்த ஆசிய வீராங் கனை) தெரிவா னேன். இதுவே எனக்குக் கிடைத்த முதலாவது பெரிய அங்கீகாரம். திருப்பு முனையும்கூட.




ஈவினை... தெல்லிப்பழையில் உள்ள ஓர் குக்கிராமம். அக்கிராமத்தில் பிறந்தவர்தான் இலங்கை வலைப்பந்தாட்ட மகளிர் அணிக்கு முன்னாள் தலைவியாகவும், ஆஸ்திரேலியக் கழகங்கள் தற்போது போட்டிபோட்டு ஒப்பந்தம் செய்யுமளவுக்கு ஜாம்பவானாகவும் உயர்ந்துள்ள தர்ஜினி சிவலிங்கம். தனது உயரத்தைவலைப்பந்தாட்டத்தில்சாதகமாகப்பயன்படுத்தி இன்றுஇமையம்தொட்டுநிற்கிறார். இலங்கைஅணியின்முன்னாள்தலைவி, 2009ஆம்ஆண்டுநடைபெற்றஆசியத்தொடரில்ஆகச்சிறந்தவீராங்கனை, ஆஸ்திரேலியக் கழகமான சென். அல்பன்ஸின் நட்சத்திர வீராங்கனை இவ்வாறுபலசாதனைகள்எண்ணற்றஅடைவுகளைதன்வசம்கட்டிப்போட்டுள்ள தர்ஜினி சிவலிங்கம் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி இதோ...

**கேள்வி:** இலங்கைகடந்தபயணத்துக்குஅடித்தளம்எங்கிருந்துகிடைத்தது?

**பதில்:** நான்கல்விகற்றதுவயாவிளான்மத்தியகல்லூரியில். அக்காலத்தில் கல்விக்கு நிகராக விளையாட்டிலும் கரிசணை காட்டிவந்தேன். பாடசாலைகளில் தடகளத் தொடரில் பங்குபற்றியுள்ளேன். ஆனால் அவற்றைவிட கிழக்குப் பல்கலைக்கழகம் சென்ற பின்னர்தான் வலைப்பந்தாட்டத்தில் ஆர்வம் அதிகரித்தது. எனது உயரத்தை வலைப்பந்தாட்டத்தில் சாதகமாகப் பயன்படுத்தினேன். அங்கேதான் எனது வலைப்பந்தாட்ட வாழ்வுக்கு அடித்தளம் இடப்பட்டது.

**கே:**– உங்கள்வலைப்பந்தாட்டவாழ்க்கையின்திரும்புமுனையாகஅமைந்த விடயம் எது?

**ப:** மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் கல்விகற்றபோது, வவுனியாவில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டத் தொடரில், நான் தேசிய அணிக்காக இனங்காணப்பட்டேன். தேசிய அணியின் பயிற்சி முகாம்களில் என்னை நிலைப்படுத்தியிருந்தேன்.இதனால்விளையாடும்குழாமில்இணைக்கப்பட்டேன். 2009 ஆம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் 7 ஆவது ஆசிய வலைப்பந்தாட்டத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் அதிக கோல் போடுனராக (ஆசியாவின்சிறந்தவீராங்கைன) நான்தெரிவானேன். இதுவே எனக்குக் கிடைத்த முதலாவது பெரிய அங்கீகாரம். திருப்புமுனையும்கூட.

**கே:** ஆஸ்திரேலிய அனுபவம் எவ்வாறு உள்ளது?

**ப:** ஆஸ்திரேலியக் கழகங்களான வல்கன்ஸ், சென். அல்பன்ஸ் போன்ற அணிகளுக்காக நான் அடுத்த ஆறு மாதங்களுக்கு விளையாடவுள்ளேன். இங்கு உயர் தரத்திலான உபகரணங்கள், வளங்கள் உள்ளன. ஆஸ்திரேலியாவின் முன்னாள் ஜாம்பவான் நிக்கோலி ரிச்சட்சன் என்னை பயிற்றுவிக்கிறார். ஒலிம்பிகில்பதக்கம்வென்றவர்கள்எம்முடன்உள்ளனர். இவ்வாறு நிபுணர்களிடமிருந்துபயிற்சியைபெறுவதுமிகச்சிறந்தவாய்ப்பு. ஏராளமான நுட்பங்களை கற்றுத் தருகிறார்கள். இந்த ஆறு மாத காலத்தில் எனது வலைப்பந்தாட்டத் திறமைகள் மேலும் மெருகேறும் என்று கருதுகிறேன்.

**கே:** – உங்களது அடுத்த திட்டம் என்ன?

**ப:** ஆஸ்திரேலியப்பயணத்தைமுடித்துக்கொண்டுஇலங்கைதிரும்பியதும், சக வீராங்கனைகளுடன் இங்கு கிடைத்துள்ள நுட்பங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அவை எமது அணிக்கு மிகவும் பெறுமதி வாய்ந்தவையாக அமையும். இதுவே எனது அடுத்த திட்டம். அது அவசியமும்கூட.

**கே:** இலங்கைவலைப்பந்தாட்டஅணியில்தமிழ்வீராங்கனைகள்எதிர்வரும் காலங்களில் இடம்பெற சாத்தியமுள்ளதா?

**ப:** நிச்சயமாக.. வலைப்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை இன்றளவும் வாய்ப்புக்கள் சமமாகவே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பக்கச்சார்புடைய வாய்ப்புக்கள் இல்லை. எனவே எமது வீராங்கனைகள் வாய்ப்புக்களை சிறப்பாகப் பயன்படுத்தி முன்னேறவேண்டும். நான் இவ்வாறே வந்தேன், ஏனைய வீராங்கனைகள் மட்டில் எனது விருப்பமும் அதுவே.

**கே:** உங்களது லட்சியம் என்ன?

**ப:** நான் 2012 ஆம் ஆண்டில் இலங்கைவலைப்பந்தாட்ட அணிக்குத்தலைவியாக இருந்தேன். அந்த வருடத்தில் நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் அணியை சம்பியனாக்கிப் பார்ப்பதில் தவறியிருந்தேன். எனவே மீண்டும் அணிக்காகவிளையாடிஆசியாவில்இலங்கையைச்சம்பியனாக்கிப்பார்க்க வேண்டும் என்பதே எனது லட்சியம். நீண்டகால லட்சியமாக உலகத் தரமான ஓர் பயிற்சிவிப்பாளராக உருவெடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐக்கியராட்சியத்தில் இயங்கிவரும் சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தினரால் ஒவ்வொன்றும் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஏழு பிறேயில் எழுது கருவிகள் சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் இயங்கி வரும் வாழ்வக நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. இவை அண்மையில் யாழ்.மாவட்டச் செயலர் தநாகலிங்கம் வேதநாயகனால் வாழ்வக நிறுவனத்தினரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் சித்திரை விழா நிகழ்வுகள் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஆச்சிரமச் சிறார்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டதுடன் , விளையாட்டு நிகழ்வுகள் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ஐ)



உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திருமதி பி.எஸ்.ஜெபரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பிரிவு பெண்கள் சிறுவர் பொலிஸ் பொறுப்பதிகாரியும் உடுவில் மகளிர் கல்லூரி பொறுப்பதிகாரியுமான சிந்துபாமினி தில்லைநாயகம் வெற்றி பெற்ற மாணவன் ர.ரிஷாந்துக்கு பரிசில் வழங்கினார். (ஐ–50)



மறுமலர்ச்சி மன்றத்தால் நடாத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் இரண்டாவது சுற்று கடந்த 18 ஆம் திகதி கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்றது. (ஐ)









தாவடி வேத விநாயகர் விளையாட்டுகழகத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியின் பரிசில் வழங்கல் நிகழ்வும், கவிஆரம் எனும் பெயரில் நூல் வெளியீட்டு விழாவும் கோவில் திறந்த வெளி அரங்கில் அண்மையில் நடை பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவரது பாரியார் யசோதை ஆகியோர் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். (ஐ)



.ஏ விளம்பி புதுவருடத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சங்க உறுப்பினர்களிடயே நடாத்திய பாரம்பரிய விளையாட்டப் பொட்டிகளில் வெற்றியீட்டிய சங்க உறுப்பினர்களுக்கு கைவிசேடத்தினையும் பரிசில்களையும் சங்க மண்டபத்தில் வைத்து வழங்கினர்.
சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி ரு. இராசரத்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியை திருமதி சா.அருந்தவபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சங்க உறுப்பினர்களுக்கு கைவிசேடத்தை வழங்கினர். (ஐ–9)



மறுமலர்ச்சி மன்றத்தால் நடாத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் முதற்சுற்று கடந்த 15,16 ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஞானாலயத்தில் இடம்பெற்றன. (ஐ)





கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் காணி அனுமதிப் பத்திரம் இல்லாதோருக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினரால் கடந்த 17 ஆம் திகதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. (ஐ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத மருந்தகங்கள், பற்சிகிச்சை நிலையங்கள் தொடர்பான விவரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தன.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட 118 மருந்தகங்கள் இயங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் 82, வவுனியாவில் 12, முல்லைத்தீவில் 11, மன்னாரில் 9, கிளிநொச்சியில் நான்குமாக மருந்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 3, வவுனியாவில் 9, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் தலா ஒரு மருந்தகங்கள் பதிவு செய்யப்படாத நிலையில் இயங்குகின்றன.

வடக்கில் ஒரே ஒரு பற்சிகிச்சை நிலையம் இயங்குகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திலேயே அது இயங்குகின்றது. 14 பதிவு செய்யப்படாத பற்சிகிச்சை நிலையங்களில், யாழ்ப்பாணத்தில் 5, வவுனியா மற்றும் கிளிநொச்சியில் தலா 3, முல்லைத்தீவில் 1, மன்னாரில் 4 பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன. (வ-5)

### மணமகன் தேவை

சொற்ப காலத்தில் விவாகரத்துப் பெற்ற பொறுப்புக்கள் அற்ற யாழ். இந்து 1979, லக்கினத்தில் செவ்வாய், சித்திரை 4 ஆம் பாதம், பாவம் 44 3/4, கொழும்பில் C.I.M.A Accountant ஆகப் பணிபுரியும் மண மகளுக்கு படித்த நற்குணமுள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புக்கு.
077 242 5460, 077 952 2118 3612

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கிருஷ்ணபுரத்தில் 01 ஏக்கர் மேட்டுக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. 077 217 4038 AJACS 3604

### தேவை

Web Site Update
செய்வதற்குரிய ஆள் தேவை.
தொடர்புகளுக்கு. 077 277 2431 3611

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவை மைந்தன் பேராசிரியர் **இ. விக்னேஸ்வரன்** அவர்கள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக பதவிஉயர்வு பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல இணுவில் கந்தப் பெருமானையும். விளாத்தியடி வைரவப் பெருமானையும் வேண்டிநிற்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்,
இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை,
இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை,
இணுவில் அறிவாலயம், இணுவில் இந்து சமய வளர்ச்சி சங்கம்,
இணுவில் அரிமா கழகம், இணுவில் கந்தசுவாமி கோயில் அன்னதான சபை

### அறிவித்தல்

அமரத்துவமடைந்த வைத்திய **கலாநிதி ச.அம்பிகைபாகன்** அவர்களின் திருவுருவச்சில்லை அவரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் வைத்தியசாலை முன்பாக அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. பொதுமக்களும் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் இப் பணிக்கு நிதி வழங்க முன்வந் துள்ளனர். திருவுருவச் சிலை அமைக்கும் பணிகள் இரண்டு மாதத்திற்குள் முடிவுறுத்தவுள்ளதால் பங்களிப்பு வழங்கவிரும்புவோர். சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கியில் எஸ். சபாரத்தினம் என்பவரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 137 020 119 794 இலக்கக் கணக்குக்கு அனுப்பிவைக்குமாறும் புலம்பெயர் நாடுகளில் உள்ளோர் கணக்கு இலக்கத்துடன் HBLILKLX என்னும் எழுத்துக்களையும் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வைத்தியசாலைச் சமூகம்
சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை

### 77 ஆவது பிறந்த நினைவலைகள்
### 4 ஆவது சிரார்த்த தினம்



## இராமலிங்கம் கந்தையா

(ஓய்வுநிலை தபால் அதிபர்)

தாயின் மடியில் 15.04.1940

ஆண்டவன் பாதத்தில் 15.04.2013

திதி : பூர்வபக்க பஞ்சமி

எங்கள் அன்பான அப்பாவே நீங்கள் எங்களை விட்டு பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்று போலுள்ளது. நீங்கள் தோன்றா துணையாக இருந்து இன்றும் நீங்கள் எங்களுடன் வாழ்கின்றீர்கள். ஆறா துயரில் வாழும் குடும்பத்தினர்.

குறிப்பு : இன்று மீசாலை வெள்ளை மாவடிபிள்ளையாரில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணியகம்
ஐயா கடையடி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

### யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீகௌசிக அகஸ்திய
நாடி சோதிட நிலையம் (pvt)Ltd
P.ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள் , தொழில்வாய்ப்புக்கள், வெளிநாட்டுப்பயணம்போன்றவற்றைக்கூறிப்புகழ்பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு.
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி,நல்லூர்.)
021 2217944.

கொழும்பு முகவரி . 19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி. 011 258 6180, 011 258 6208

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில்

Diploma in Teaching

UNIVERSITY of CAMBRIDGE
AMI
City & Guilds



நீங்களும் சர்வதேச தகைமையுடைய ஆசிரியராகுங்கள்

உலகில் எந்தவொரு நாட்டிலும் இலகுவாக வேலை வாய்ப்பினை பெறக்கூடிய

- Diploma in English Teaching
- Diploma in Primary Teaching
- Diploma in Montessori Teaching

வெற்றிகரமாக பாடநெறியினை பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவருக்கும் சர்வதேச பாடசாலைகளில் வேலை, வாய்ப்பு பெற்றுத்தரப்படும்

Duration : 8 Months
Industrials Training - 4 Months

Computerized Accounting
Accpack, Qick book, M.Y.O.B. & Tally

BRITISH COLLEGE OF EDUCATION

DIPLOMA IN / SPOKEN ENGLISH

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

முதன் முறையாக IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனம்

கல்வி கற்க மற்றும் குடியேற SPOUSE விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS | IELTS Life Skills | A1 A2 B1

சர்வதேச மொழிப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன.

ஜெர்மன் / சுவிஸ் மொழி (DEUTSCH)

French மொழி (FRENCH)

Netherlands மொழி (DUTCH)

HOT LINE : 0777-596148

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd. Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
Peradeniya Rd, Kandy. 13, 1st chepal Rd, Colombo-06.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT





இளவாலை, மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கத்தால் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையின் திறப்புவிழா கடந்த 17 ஆம் திகதி வைத்தியசாலையின் வைத்தியப்பொறுப்பதிகாரிரவீந்திரன் தலைமையில் வைத்தியசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் யாழ். பிராந்திய பிரதிசுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார், வைத்திய நிபுணர் பேரானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன், இளவாலை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி, வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் தலைவர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் வே.சண்முகநாதன் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஜ)





வட மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸின் நிதியின் மூலம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அதற்கான அனுமதி வடமாகாண அமைச்சர்களிடம் பெறப்பட்டு அதற்குரிய சான்றிதழ் பத்திரங்கள் குறிப்பிட்ட குடும்பத்தினர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஜ108)







வட்டு இந்துக் கல்லூரி மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட "போதை தருவது உபாதை போதையை ஒழிப்போம்" எனும் கருப்பொருளிலான தெரு நாடகம் சங்கானை சந்தை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுகாதாரப்பரிசோதகர்கள், மருத்துவமாதுக்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்களுடன் வலி.மேற்குப் பிரதேச செயலர் உட்பட ஊழியர்களும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். நாடகத்தின் ஓரிரு காட்சிகளைப் படங்களில் காணலாம். (ஜ28)





பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் கோம்பாவில் குணா கலைக்கல்லூரியில் சிறப்பிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து சிறப்பித்தார். (ஜ)





கந்தரோடை விளையாட்டுக் கழகமும், கந்தரோடை மக்கள் முன்னேற்ற இளைஞர் கழகமும் இணைந்து நடாத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி யாழ். கந்தரோடையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி தெற்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பிரகாஸ், யாழ் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் காமராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஜ)







வவுனியா ஆசிகுளம் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கழகத்தின் தலைவர் தி பி.ரஞ்சித்குமார் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி விளையாட்டுகழக மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகர சபையின் முன்னாள் நகர பிதாவும் வட மாகாண சபை உறுப்பினருமான லிங்கநாதன், சிறப்பு விருந்தினராக வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்களே ஆயர்கள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இலங்கை கத்தோலிக்க மக்கள் மத்தியில் மட்டுமல்லாது இந்து சமய மக்கள் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் மத்தியிலும் இன்றும்; அதிகம் பேசப்பட்டு வரும் ஒருவர் தற்போதைய மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை ஆவார்.

கடந்த 16ஆம் திகதி தனது 77 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியுள்ள ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையின் 22 ஆண்டுகள் கால மறைமாவட்டப் பணிகளைப் பதிவிடுவது இந்த ஆக்கத்தின் முக்கிய நோக்கமல்ல. அது பல இடங்களில் பல விதமாகப் பதியப்பட்டுள்ளது. மாறாக அவர் தமிழ் மக்களுக்காக, அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக, இன மத வேறுபாடின்றி, துணிவோடும் தூர நோக்கோடும் ஆற்றிய பணிகளைப் பதிவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

மன்னார் மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயராக, யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை (1992-2016) நியமிக்கப்பட்டார். இவர் தனது 75ஆவது வயதை அடைந்ததும் திருச்சபைச் சட்டம் 401 பிரிவு 1இன் பிரகாரம் தமது பணி ஓய்வு விண்ணப்பத்தை திருத்தந்தைக்கு அனுப்பினார்.

இவரது 75ஆவது வயது நிறைவு தினமான 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், கன்னியர்கள் விசேட அதிதிகள் மத்தியில் பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது.



> “ கத்தோலிக்க நாடுகளில் உள்ள ஆயர்களும் உரோமை ஆயரான பாப்பரசரின் அடிச்சுவட்டில் தமது பிரதேசங்களில் நடக்கும் அநீதிகள், அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு எதிராக இன மத நிற பேதமின்றிக் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள்.

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை பற்றிக் கூறியது**

மேற்படி விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் கலந்துகொண்டு உரையாற்றினார். “எமது மக்களின் நன்மையிலும், தீமையிலும், இறப்புத் தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின் போதும் எம் மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார். இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்குக் கொண்டு வர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்” என்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் புலம்பெயர் தமிழ்ப் பேசும் மக்கள் உள்நாட்டுத் தமிழ்ப் பேசும் மக்கள், அனைவரும் இனிவருங்காலத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது என்றார். ஆயருக்கு இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் பேசும் மக்களிடையே ஒரு பெருமதிப்பு இருக்கின்றது. அவரது தலைமைத்துவத்தின் கீழ் ஒரு தீர்வை நோக்கி நாம் நகர்ந்து செல்வதில் தவறில்லை என்று கணிக்கின்றேன் என்றார்.

**ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை திடீர் சுகவீனம்**

இந்த விழாவின் பின்னர் 2015ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை திடீர் சுகவீனமுற்றார். 3 மே 2015 அன்று உதயன் பத்திரிகை தனது கிறிஸ்தவத்துக்கான பக்கத்தில் அவரை கௌரவித்திருந்தது. குறித்த ஆக்கம் ஆயர் சுகவீனமுறுவதிற்கு முன்னர் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு எழுதப்பட்டது. 17 மே 2015இல் அவர் மேலும் சுகவினமுற்றார் அவருக்குச் சுகவீனம் அதிகரித்தது. அவரது உடல் நலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டு சிங்கப்பூர் வரை மருத்துவ உதவிக்காக அழைத்துச் செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உடல் நலத்தில் முன்னேற்றம் காணாத நிலையில் 2016ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி அன்று, திருத்தந்தை மன்னார் மறைமாவட்ட மடுப்பதியில் பாதம் பதித்த ஒரு ஆண்டு நிறைவில், திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை அனுப்பிய பணி ஓய்வு விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டார். மன்னார் மறை மாவட்டத்துக்குப் புதிய ஆயர் நியமனம் வழங்கப்பட்டு புதிய ஆயர் பொறுப்பேற்கும் வரை மன்னார் மறைமாவட்டத்தை நிர்வகிக்கும் அப்போஸ்தலிக்க பரிபாலகராக திருகோணமலையின் ஓய்வு நிலை ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையை ஜனவரி 14ஆம் திகதி 2016 முதல் நியமித்தார்.

**ஒரு ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனது பணியை நிறுத்திக் வழமை**

பொதுவாக ஒரு மறைமாவட்ட ஆயர் பணி ஓய்வு பெற்ற பின்னர் அடுத்த ஆயர் நியமனமாகும் வரை அவரே அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்படுவது வழமை. இதற்குப் இது பொதுவாக குறிப்பிட்டதொரு காலம் எடுக்கும். ஆனால் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை திடீர் சுகவீனமுற்றமையால் வேறு ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை வத்திக்கானுக்கு ஏற்பட்டது.

சிலவேளை அவர் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டிருந்தால் இன்னும் சில காலம் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்திருப்பார் என எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அவர் தமிழ் மக்களுக்காகக் கொடுத்த குரல் ஓய்ந்துபோனது.

ஒரு ஆயர் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தனது பணியை நிறுத்திக் கொள்வதே வழமை. அவர் புதிய ஆயரின் பணிகளில் எந்த விதமான குழப்பமும் ஏற்படாத வகையில் அமைதியான வகையில் நடந்து கொள்வார். ஆனபடியால் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை தொடர்ந்து பேசவேண்டும் தமிழ் மக்களுக்கான குரலாக இனியும் ஒலிக்கவேண்டும் என எதிர்பார்க்க முடியாது.

அவர் சுகவீனம் உற்றதால் மட்டும் அல்ல, அவர் ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற்றதாலும் அவர் இனி குரல் கொடுக்கமாட்டார். கத்தோலிக்க நடைமுறையை அறியாத பலருக்கு குறிப்பாக, இந்து மத சகோதரர்களுக்கு இது ஏமாற்றமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஆயர் என்ற பணியை முழுமையாகப் பயன்படுத்தி அதனைப் பணயம் வைத்து பணியாற்றவேண்டிய நிலை ஒரு ஆயருக்குரியது**

குருவானவர் ஒருவர் ஆயராகப் பணியேற்ற பின்னர் நீதிக்காக, நிம்மதியான மக்கள் வாழ்வுக்காக, அடக்கப்பட்டோருக்காக, அடிமை வாழ்வு வாழ்வோருக்காக, மனித உரிமைக்காக, முழு மனித விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டியவராகிறார். இப்படித்தான் ஒரு ஆயரின் பணி முழு வடிவம் பெற்றது எனலாம். தன்னுடைய ஆயர் என்ற பணியை முழுமையாகப் பயன்படுத்தி அதனைப் பணயம் வைத்து பணியாற்றவேண்டிய நிலை ஆயராகும் ஒவ்வொரு குருவானருக்கும் ஏற்படுகின்றது.

இயேசு தமது பணியை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தாம் வளர்ந்த ஊராகிய நசரேத்துக்கு வந்து ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்தில் இறைவாக்கினர் எசேயாவின் சுருள் ஏட்டில் வாசித்த வசனங்கள் இவை. ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது, ஏனெனில் அவர் எனக்கு அருட் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடையவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக்கா 4:18-19)

கத்தோலிக்க திருச்சபையில் ஆயர்கள் இவ் வசனங்களை தம்முடைய பணி வாழ்வுக்கான வசனங்களாக்கி அவற்றுக்காகவே வாழ்கிறார்கள். கத்தோலிக்கத் திருச்சபை ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், உரிமை வாழ்வை இழந்தோர் போன்றவர்கள் மட்டில் என்றும் கரிசனை கொண்டதாகவே இருக்கிறது.

**உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தையர்கள் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள்**

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தையர்கள் எல்லோருமே கத்தோலிக்க உலகில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் நடக்கின்ற அடக்கு முறைகள், மனித உரிமை மீறல்கள், அநீதிகள் என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். தற்போதைய பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களும் உலகின் எந்த மூலையிலாவது சண்டை தொடங்கினாலோ, இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலோ, அடக்குமுறை அரங்கேறினாலோ துணிவோடு குரல் கொடுத்துக் கொண்டே வருகிறார்.

கத்தோலிக்க நாடுகளில் உள்ள ஆயர்களும் உரோமை ஆயரான பாப்பரசரின் அடிச்சுவட்டில் தமது பிரதேசங்களில் நடக்கும் அநீதிகள், அட்டூழியங்கள் , மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு எதிராக இன மத நிற பேதமின்றி குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள்.

**அண்மையில் புனிதராக பிரான்சிஸ் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப்பட்ட எல்சல்வடோர் நாட்டின் ஆயர் ஒஸ்கா றொமேறோ**

அண்மையில் புனிதராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட எல்சல்வடோர் நாட்டின் ஆயர் ஒஸ்கா றொமேறோ, எல்சல்வடோர் நாட்டின் அரச அடக்குமுறைக்கு எதிராக துணிவோடு குரல் கொடுத்தவர். இவர் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி திருப்பலி ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்த வேளை சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சுட்டுக் கொல்லப்பட்ட தினமான மார்ச் மாதம் 24ஆம் திகதி மனித உரிமை மீறல் பற்றிய உண்மை அறியும் சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. 2015 மே 23ஆம் திகதி ஆயர் ஒஸ்கா றொமேறோ அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

**இலங்கை நாட்டில் இரு இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற இன முரண்பாடுகளுக்கு நடுவில் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை காத்திரமான பணி**

இலங்கை நாட்டில் இரு இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற இன முரண்பாடுகளின் நடுவில் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை காத்திரமான ஒரு பணியை ஆற்றிக் கொண்டே வந்திருக்கின்றது. இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திரிகோணமலை ஆகிய நான்கு தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களும் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக, அவர்களின் அமைதியான வாழ்வுக்காக துணிந்து குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள். இலங்கையில் தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள் தமது பாதுகாப்பையும் துச்சம் என மதித்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு இரண்டு காரணங்கள் துணை நிற்கின்றன எனலாம். இந்த இரண்டு காரணங்களையும், இவ்வாக்கத்தின்



தலைப்பை உருவாக்க கரு தந்த ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பணி பற்றிய ‘வாழும் நாயகன்’ என்ற கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளாரின் நூல் பற்றியும் அடுத்த வாரம் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி...

மேலும் தெரிவித்ததாவது:
சிறிய நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சகோதர உணர்வுடன் வாழ வேண்டும். இந்தச் சகோதரத்துவத்தை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகளால் மாத்திரம் முடியாது. அனைத்துத் தரப்பினருடன் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். பௌத்த, இந்து, இல்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.
நாட்டிலுள்ள மாகாணங்களில் கிழக்கு மாகாணம் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வியில் பின்நோக்கிக் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் நடைபெற்ற போதிலும் போர் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாணம் கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளது.
கொழும்பு அரசு மற்றும் மாகாண அரசு இணைந்து கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்குப் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. நாட்டை நாங்கள் முன்னேற்றுவோம். ஆனால், பிள்ளைகள் முன்னேற்றமடைய வேண்டும். சமூகம் முன்னேற வேண்டுமானால் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளின் முன்னேற்றமடைய வேண்டும் என்றார்.
இதேவேளை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், நாட்டின் முதல் 25 வலயங்களுக்குள் வடக்கு மாகாணத்தின் எந்தவொரு வலயமும் உள்ளடங்கவில்லை என்பதுடன், கிழக்கு மாகாணத்தின் இரண்டு வலயங்கள் அதில் உள்ளடங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## மேதினத்தில்...

பெறவுள்ளன எனத் தெரிய வருகின்றது.
ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் அந்தக் கட்சியில் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பொரளை கெம்பல் மைதானத்தில் நாளை மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளதுடன் பேரணி பிற்பகல் 2 மணியளவில் மாளிகாவத்தையில் ஆரம்பமாகவுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டி கெட்டம்பே மைதானத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் கன்னொருவ மற்றும் கண்டி மகளிர் உயர் கல்லூரி ஆகிய இடங்களிலிருந்து இரு பேரணிகள் கண்டிக்கு வரவுள்ளன.
பொது எதிரணியின் மே தினக் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலும், எதிர்க்கட்சியான இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் அம்பாறையிலும், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) மே தினக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் கொழும்பு பீ.ஆர்.சி. மைதானத்திலும் நடைபெறவுள்ளன.
முன்னிலை சோசலிசக் கட்சியின் மே தினப் பேரணி கோட்டை தனியார் பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகும். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக் கூட்டம் அதன் தலைவரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தின் முன்னால் நடைபெறவுள்ளது. (வ-5)

## ஓ.எல்...

நீடிக்காமல் இருக்க ஜி.சி.ஈ சாதாரணதர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடத்தி அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும்"
இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது குறித்து வடக்கு மாகாண முதலமைச்சருக்கு சங்கம் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணம் கல்வியில் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. இதற்கு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் சான்றாக உள்ளன.
ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் போட்டிப் பரீட்சையாக உள்ளது. இதில் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களே உயர்தரத்துக்குச் சென்று பரீட்சையைச் சந்திக்கின்றனர் ஆகையால் ஜி.சி.ஈ.உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் கணிப்பீட்டுக்கருவியாக அமையாது. ஆனால் ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சை என்பது அப்படியல்ல. தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரை கற்ற மாணவர்கள் அனைவரும் தோற்றிக் கிடைக்கப் பெறும் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண, மாவட்ட வலய நிலைகள் கணிக்கப்படுகின்றன. அத்தகைய நிலையில் எமது வடக்கு மாகாணம் தொடர்ந்தும் இறுதி நிலையில் இருந்து வருவது மிகுந்த வேதனையைத் தருகின்றது.
2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் இத்தகையதொரு நிலை வடக்கு மாகாணத்துக்கு இருந்ததில்லை. கொழும்பு அரசின் ஆளுகைக்கு உட்பட்டிருக்காத ஒரு கால கட்டத்தில் ஜி.சி.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த கல்வி தனி அலகுக்கு ஊடாக அரசுப் பொதுப் பரீட்சைக்கு முன்னதாக முன்னோடிப் பரீட்சை வைக்கப்பட்டது. அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வினாப்பத்திரங்கள் சரியான முறையில் திருத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. அதுமட்டுமன்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் அரச இறுதிப் பரீட்சைக்கு முன்னரே மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்தகையதொரு நிகழ்வு ஏனைய மாணவர்களை விழிப்படையச் செய்தது மட்டுமன்றி சிறந்த பெறுபேறுகள் எடுப்பதற்கு ஏதுவாகவும் இருந்தது.
தற்போது அத்தகைய முன்னோடிப் பரீட்சை நடத்தப்படுவதில்லை. இதைவிட இன்று மாணவர்களை கண்டிக்கவோ தண்டிக்கவோ முடியாத அளவுக்கு ஆசிரியர்கள் உள்ளனர். பாடங்களில் கரிசனை செலுத்தாத மாணவர்களை என்ன செய்வது. பாடசாலைக்குத் தொடர்ந்து சமுகமளிக்காத மாணவனை என்ன செய்வது, கொடுக்கப்படும் பயிற்சிகளை செய்யாத மாணவர்களை என்ன செய்வது போன்ற வினாக்களுக்கு விடை தெரியாதவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.
எமது தமிழ்ச் சமூக பண்பாட்டின் அடிப்படையில் வளர்ந்து ஆசிரியர்களாகித் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும் என எண்ணுகின்ற பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இன்று கைவிரித்துக் கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களாக உள்ளனர். அதனால் கல்வியில் பின்னடைவு மட்டுமன்றி ஒழுக்க விழுமியங்களிலும் நாம் தொடர் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றோம்.
வன்முறைக் கலாசாரமும் வாழ்வுக்கு ஒவ்வாத நடைமுறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது. ஆகவே முன்னோடிப் பரீட்சையை 2017ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (வ-10)

## முஸ்லிம்...

2012ஆம் ஆண்டு சம்பிக்க ரணவக்கவே புர்கா மற்றும் ஹலால் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தார். 2014ஆம் ஆண்டு தேர்தல் வருவதை அறிந்து கொண்டு அந்த ஆண்டு நடுப்பகுதியில் அளுத்கம கலவரத்தை திட்டமிட்டு அவர் செய்துள்ளார். நாம் இது தொடர்பில் தெளிவுபெறும்போது 'பஸ்' போய்விட்டது"
இவ்வாறு முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு விளக்கம் கொடுத்தார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் மே தினம் தொடர்பில் நேற்று நடத்திய சிறப்புச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆட்சி மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒருவரே, ஞானசார தேரரை ஏவிவிட்டு கோத்தபாயவை பொதுபலசேனாவின் காரியாலயத் திறப்புக்கு அழைத்து மாயையான தோற்றத்தை உருவாக்கி முஸ்லிம்களை எம்மிடம் இருந்து பிரித்தார். இன்று நாட்டில் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் எமது ஆட்சிக் காலத்தில் இல்லாத அளவு அதிகரித்துவிட்டன. எம் மீது ஏவிவிட்டு முஸ்லிம்களை எம்மிடம் இருந்து பிரித்த பேயை இன்று அவர்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள்.
இந்தக் கூட்டு அரசு முஸ்லிம்களிடம் எம்மை எதிரிகளாக சித்திரித்து முஸ்லிகளின் இருப்பை இன்று கேள்விக்குள்ளாக்கி வருகின்றது. எம்மை எதிரியாகப் பார்த்து முஸ்லிம்கள் தங்கள் இருப்புக்களை இழந்து விடக்கூடாது.
அளுத்கம கலவரம் தொடர்பில் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவை அமைத்து விசாரணை செய்தால் அந்தக் கலவரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது வெளிச்சத்துக்கு வரும். இல்லாவிட்டாலும்கூட உண்மை ஒரு நாள் வெளியே வரும். அதனைப் பல நாட்கள் ஒளித்து வைக்க முடியாது. உண்மை வெளி வரும் நாளில் இந்த நாட்டு முஸ்லிம்கள் தங்கள் தலையில் கையை வைப்பார்கள். உண்மையான துரோகிகள் யார் என்பதையும், அவர்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்து ஆட்சி பீடம் ஏறியவர்கள் யார் என்பதையும் அப்போது அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றார். (வ-5)

## தமிழீழத்தை...

வெசாக் தினத்தை அரசு ஏற்பாடு செய்துள்ளது"
இவ்வாறு குற்றஞ் சாட்டுகிறார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி.
அனுராதபுரத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த அரசைக் கவிழ்த்து இந்த அரசைக் கொண்டு வருவதற்கு இந்தியா அதிகமான பணத்தை செலவு செய்தது. இந்தியா மாத்திரமன்றி வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களும் புலி ஆதரவாளர்களும் இந்த அரசுக்கு அதிக உதவியைச் செய்தனர்.
இந்த நாட்டைப் பிரித்து தமிழீழத்தை உருவாக்கும் அரசமைப்பைக் கொண்டு வருவதாக இந்தத் தரப்பினருக்கு வாக்குறுதியளித்தே அவர்களின் உதவியை அரசு பெற்றுக்கொண்டது. இன்று அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளது.
பௌத்த மக்கள் எதிர்த்தாலும் அந்தப் பிரிவினைவாத அரசமைப்பைக் கொண்டு வருவது என்று அரசு உறுதியாக இருக்கின்றது. உலக வெசாக் தினத்தை இலங்கையில் கொண்டாடுதல் என்ற போர்வையில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியை இலங்கைக்கு அழைத்து வந்து அந்த அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
உலக வெசாக் தினத்தை இங்கு நடத்துவதன் மூலம் இந்த அரசு பௌத்த மதத்தை உயர்வாக மதிக்கின்றது என்று பௌத்த மக்கள் நினைக்கும்வகையில் அவர்களின் மனதை மாற்றி அந்தச் சந்தர்ப்பத்தைப் பார்த்து நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பை கொண்டு வரப்போகின்றது இந்த அரசு.
நாட்டு மக்கள் இந்தச் சூழ்ச்சிக்குள் சிக்கி விடக் கூடாது. மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அரசு எவ்வாறான நாடகத்தை நடத்தினாலும் அதற்குப் பின்னால் நாட்டுக்கு எதிரான திட்டம் ஒன்று இருக்கும் என்பதை விளங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.என்றார். (வ-3)

## வெசாக்...

வேறு எந்தவொரு உத்தியோகபூர்வ நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டார்"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மட்டக்களப்பு ஒட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் சில பகுதிகளை சொந்தமாக்கிக்கொள்ளும் வகையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு இந்திய தலைமை அமைச்சர் இலங்கை வருகிறார் என்று சில இணையத் தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு போலிப்பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை அனைத்தும் அரசுக்கு எதிரான சிலரால் முன்னெடுக்கப்படும் போலிப் பரப்புரைகளாகும்.
அனைத்து நாடுகளும் இன்று இலங்கையுடன் நட்புறவுடன் செயற்பட்டு வருகின்றன. இதன் மூலம் இலங்கையை ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாக கட்டியெழுப்ப முடியும்.
நாட்டில் மூவின மக்களும் அமைதியாக ஒற்றுமையாக வாழ்வதை விரும்பாத சிலர் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றார்கள். திடீரென புத்தர் சிலை அல்லது பௌத்த விகாரை, இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்களை அடிப்படையாக வைத்து அவர்கள் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள்.
பௌத்த, இந்து, இல்லாமிய மற்றும் கிறிஸ்தவ மத போதனைகளில் எந்தவித பிரச்சினைகளும் இல்லை. ஒவ்வொரு பிரச்சினைகள் ஏற்படும்போதும் சம்பந்தப்பட்ட எல்லோரும் முன்னே வருவதால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்றார். (வ-5)

## முள்ளிக்குளம்...

யாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு முள்ளிக்குளம் கடற்படை முகாமில் இடம் பெற்றது. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், முசலிப் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பேசப்பட்டது. கடற்படையினர் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு இணங்கினர். கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள 27 வீடுகளை உடனடியாக விடுவிப்பது சாத்தியமில்லை என்று குறிப்பிட்டுள் ளனர். அங்கிருந்து தாம் இடம்மாறிச் செல்வதற்கு 8 மாத கால அவகாசம் தேவை என்று அவர்கள் கோரியுள்ளனர். எஞ்சிய பகுதிகள் சுமார் 200 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் உடனடியாகவே விடுவிக்கப்பட்டன.
காணிகள் விடுவிக்கப்பட்ட செய்தி மக்களுக்கு, கடற்படைத் தளபதியினாலும், மக்கள் பிரதிநிதிகளினாலும் எடுத்துக் கூறப்பட்டது. விடுவிக்கப்பட்ட காணிகளுள், முள்ளிக்குளம் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்த பின்னர் மக்கள் இன்று செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-56-101)

## எவ்வாறான...

முன்னெடுத்துச் செல்வது என்பதை நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தீர்மானிக்கின்ற காலம் வந்துவிட்டது"
இவ்வாறு கிளிநொச்சியில் தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.
கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மாமனிதர் தராகி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டமைப்பு என்பது எதனை நோக்கிச் செல்கின்றது? என்ற கேள்வி இன்று எங்களிடத்தே இருக்கின்றது. விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு, தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே முனையிலிருந்து பேச வேண்டும் என்ற காரணத்தால்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் தொடச்சியாக வாக்களித்தனர்.
உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில், மாகாண சபைத் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தல்களில் அவ்வாறே மக்கள் வாக்களித்தனர். ஆனால் இன்று அவ்வாறானதொரு கூட்டமைப்பு எதனை நோக்கிச் செல்கிறது? என்ற கேள்வி எழுகின்றது. நாடாளுமன்றின் கதிரைகளை, மாகாண சபையின் கதிரைகளை நாங்கள் பிடிக்க வேண்டும் என்பதற்காக ஏற்படுகின்ற தேர்தல் கூட்டு என்பது ஒன்று. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதற்கான கூட்டு இன்னும் ஒன்று.
தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் அது இன்னும் பதிவு செய்யப்படவில்லை. அதற்கான ஒரு யாப்பு உருவாக்கப்படவில்லை. கூட்டமைப்பின் அயலுறவுக் கொள்கை என்ன? உள்நாட்டில் எவ்வாறு செயற்படுவது? அரசுடன் பேசுவது எவ்வாறு? போன்றவை இன்னும் தயாரிக்கப்படவில்லை. இன்று இந்தக் கூட்டமைப்புக்கு தலைமை தாங்குபவர்கள் எந்தளவுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் செயற்படுகிறார்கள்? அவ்வாறு அவர்கள் செயற்படவில்லை.
தமிழரசுக் கட்சியினர் எடுக்கும் முடிவுகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவுகளாக வெளிக்காட்டுவதற்கு அதன் தலைமை முற்படுகின்றது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய முடிவு என்ற மாயையை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள்.
நாங்கள் இன்று பன்னாட்டுப் பிடிக்குள் இறுகி நிற்கின்றோம். இந்தியா ஒரு புறம், சீனா ஒரு புறம், அமெரிக்கா ஒரு புறம் சுற்றியுள்ளன. எமது விடுதலைப் போராட்டம் என்பது இலங்கை அரசினுடைய கைகளிலோ, தமிழ் மக்களுடைய கைகளிலோ மாத்திரம் இல்லை. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் எவ்வாறு உலக நாடுகளின் கால்பந்தாக மாறியுள்ளதோ, அதே போன்று ஈழத் தமிழர்களின் போராட்டமும் மாறியுள்ளது என்றார். (வ)

## மதுபான...

மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள், கண்டி, கெட்டம்பே, பதுளை, நுவரெலியா உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மதுபானசாலைகள் மூடப்படும். இதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயங்கள் மூலமாக சகல மதுபான விற்பனையாளர்களுக்கும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன" என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மைத்திரி...*

றோம் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம் காணி விடுவிப்புத் தொடர்பில், மக்கள் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், கடற்படையினர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே, கடற்படையினர் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

காணிகளை விடுவிக்குமாறு மக்கள் நடத்தும் போராட்டங்கள் பற்றிக் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. இதன் போது கடற்படையினர், அரச தலைவர் தம்மிடம் தெரிவித்த கருத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். தனது படையினரின் செயற்பாடு காரணமாக தனக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்துவது வருத்தமளிப்பதாக அரச தலைவர் தம்மிடம் கூறியதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாகவே காணிகளை விடுவிக்கும் முடிவுக்கு வந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (வ-5-101)

*தமிழரசுக்...*

வகையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி முன்னெடுக்கும் செயற்பாடு தொடர்பில் ஆராய்து கட்யின் உயர் பீடத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க தமிழரசுக் கட்சியில் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மைய செயற்குழுக் கூட்டம் நேற்றைய தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி குழுவை நியமிக்கும் தீர்மானம் எட்டப்பட்டு மூவர்அடங்கியகுழுவும்நியமிக்கப்பட்டது. வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெண்டாயுதபாணி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகரன் ஆகியோர் உள்ளடங்கிய குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

"இலங்கை தமிழரசுக் கட்சி தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பில் இந்தக் குழுவினர் ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையை கட்நியின் உயர் பீடத்துக்கு சமர்ப்பிப்பர். அதேபோன்று தமிழரசுக் கட்சியில் இருந்து இடை நிறுத்தப்பட்ட இரு உறுப்பினர்களான அனந்தி சசிதரன் மற்றும் சிவகரன் போன்றோரின் நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் குழுவினர் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பர்" என்று தமிழரசுக் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

*தமிழ் அரசி...*

காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரனால் இந்த மனு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

"1999ஆம் ஆண்டு, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வேலாயுதம் வரதராஜன் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த 21ஆம் திகதி சுகயீனமுற்ற நிலையில் சிறைச்சாலை மருத்துவ அதிகாரியின் பணிப்புரைக்கு அமைய வெலிக்கடைசிறைச்சாலை மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட நிலையில் மிகவும் கொடூரமாக அவர் தாக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும்" என்று அந்தமனுவில்கோரப்பட்டுள்ளது. (வ-5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**செல்லையாபிள்ளை மீனாட்சி**

மலர்வு 01 . 06 . 1937
உதிர்வு 02 . 04 . 2017

கடந்த 02.04.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி செல்லையாபிள்ளை மீனாட்சி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.04.2017 அன்று இடம்பெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் 01.05.2017 திங்கட்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் இறுதிக்கிரியைகளின் போது பலவழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவபாலன் வீதி,**
**பிள்ளையார் கோயிலடி, முழங்காவில்.**

**குடும்பத்தினர்.**
**076 584 5623**
(akn-108) (13.17)

## மரண அறிவித்தல்

### வையித்தி இராசநாயகம்




யாழ்ப்பாணம் கிளாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வையித்தி இராசநாயகம் நேற்று (29.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளப்பு ,அல்பிறட்,செபிஸ்தியான்பிள்ளை (தங்கராசா) ,சிங்கராசா,பவுலம்மா ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017)ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக கிளாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 03 . 1951
மறைவு 27 . 04 . 2017

### கந்தையா கணபதிப்பிள்ளை

தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகவும் ஆழியவளையை வசிப்பிடமாகவும் பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை 27.04.2017 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் திலகவதி, ஜெயமனோகரி(பலநோக்கு கூட்டுறவு சங்கம்), ஜெயாகரன்(பிரான்ஸ்), காந்தமனோகரி(சுவிஸ்), சுபாஸ்கரன்(கனடா), ஜெயரூபா ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா யசிந்தி, உதயகுமார், டயாளினி, காலஞ்சென்ற டொன் பொஸ்கோ, வரதராசா ஆகியோரின் அன்பு மாமனும் குயிந்தன், அஜிந்தன், சிந்துஜா, எழிலரசன், தேனுஜன், நிதுஜா, சஜீவன், விதுசன், மதுசன், யதுசன், யஸ்மிதா, ஜனனி, கதிரவன், கிர்த்தன், பிரியந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்திரகாளி கோயில் வீதி,**
**பருத்தித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 086 8033, 077 962 9422**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நல்லதம்பி வேலாயுதம்**

தோற்றம்
04.02.1942

மறைவு
14.05.2013

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறுமோ வெந்துயர் எம் மனங்களிலே
மாண்டு விடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்.

**அளவெட்டி மத்தி,**
**அளவெட்டி.**

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினரும் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளருமான
**திரு. ம.வினோகாந்தன்**
அவர்களின் அன்புத் தந்தை



**செல்லையா மகாதேவன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

பிறப்பு 09.01.1937
இறப்பு 25.04.2017

அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. குடும்பத்தலைவனை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உரும்பிராய் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்**
**உரும்பிராய், கனடா, லண்டன்.**

## கண்ணீர் அஞ்சலி

அருள்மிகு உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை உபசெயலாளரான
**திரு. ம.வினோகாந்தன்**
அவர்களின் ஆருயிர்த் தந்தை



**செல்லையா மகாதேவன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அன்னை மடியில் 09.01.1937
அன்னை அடியில் 25.04.2017

அவர்களின் மறைவுச்செய்தி எம்மை மிகுந்த துயரில் ஆழ்த்திவிட்டது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா அன்னை அடியில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன்கோயில் பரிபாலனசபை உறுப்பினர்களும், திருப்பணிச்சபையினரும்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பகீரதி சஜிதரன்



வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பகீரதி சஜிதரன் 28.04.2017 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பரமநாதன் - சந்தானலக்சுமி தம்பதியரின் அன்புமகளும் கதிரேசன் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் சஜிதரனின் பாசமிகு மனைவியும் பகீகரன், பகிந்தன், பகீலதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் முரளிதரன், சுவர்ணா, சுதர்சனா, கௌசிகன், பிரியதர்சனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தகனகிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**சாவகச்சேரி.** ப. பகிந்தன் (சகோதரர் 075 060 4303)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கிராஸ்கொப்பர்சை வென்றது யைற்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 30
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஹாட்லி யைற்ஸ் அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யைற்ஸ் அணியை எதிர்த்து கிராஸ்கொப்பர்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லி யைற்ஸ் அணி 44.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மணிமாறன் 146 ஓட்டங்களையும், புருஸோத்தமன் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுஜீவன் 4 இலக்குகளையும், மதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

316 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிராஸ் கொப்பர்ஸ் அணி 43.1 பந்துப் பரிமாற்றங்களில் 296 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரகிம் 93 ஓட்டங்களையும், சாருயன் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரசாந் 3 இலக்குகளையும், பிரதீப் சாகித்தியன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ம-23)

# வென்றது வளர்மதி

யாழ்ப்பாணம், ஏப். 30
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பி பிரிவு ஆட்டமொன்றில் புத்தூர் வளர்மதி அணி வெற்றிபெற்றது.

பாரதி வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது.

25:22, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது வளர்மதி. (ம-23)

# அரையிறுதிக்குள் மரிய செரபோவா



ஜேர்மனி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் செரபோவாவை எதிர்த்து அனட் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் செரபோவா. அடுத்த செற்றிலும் அவர் தனது ஆதிக்கத்தை தக்கவைத்து 6:1 என்ற செற் கணக்கில் வென்றார். முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். முன்னதாக நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் செரபோவா, மகரொவாவை 7:5, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 30

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது.

**பாரதி அணியின் கரப்பந்தாட்டம்**

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி காமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் அணி மோதவுள்ளது.

**19 வயதுப்பிரிவு துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்தும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று கொழும்பு கிரிக்கெட் கழக மைதானத்தில் இன்று காலை இடம்பெறுவுள்ளது. இதில் வடமாகாகண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதவுள்ளது.

**கழகங்களின் துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# கவாஸ்கரின் தெரிவில் சுனில் நரைன் - கம்பீர்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சிறந்த ஆரம்ப இணையாக சுனில் நரைன் கம்பீரைத் தெரிவு செய்துள்ளார் இந்தத் தொடரில் விமர்சகராக பணியாற்றும் சுனில் கவாஸ்கர்.

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் - பஞ்சாப் அணிகள் மோதின. ஹைதராபாத் வெற்றி பெற்றது. ஆட்டத்துக்கு முன்பாக நடப்புவருடத் தொடரில் இதுவரையிலுமான பெறுபேறுகளின் அடிப்படையில் எந்த ஆரம்ப இணை சிறப்பாகச் செயற்படுகிறது என்று கவாஸ்கரிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதில் வழங்குகையிலேயே கவாஸ்கர் கம்பீர் - நரைனைத் தெரிவுசெய்து குறிப்பிட்டார். "ஐ.பி.எல். போன்ற தொடர்களில் இலக்குச் சரிவு மட்டுமல்லாமல் ஆரம்ப இணை ஓட்டங்களைக் குவிக்கும் வேகத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியது மிக அவசியம். இந்த இரு முனைப் போரில் சிறப்பாகச் செயற்படுவது கொக்கத்தாவின் கம்பீர் - நரைன் இணை. கம்பீர் இலக்குச் சரிவைக் காத்துநிற்க நரைன் சிறந்த முறையில் அடித்தாடுகிறார். இதனால் ஓட்டங்கள் கடுகிடுவென அதிகரிக்கின்றன. தவிர இந்த இணை மிக விரைவில் ஆட்டமிழப்பதும் இல்லை. எனவே எனது தெரிவு கம்பீர் - நரைன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேச கால்பந்தாட்டம்

கரணவாய், ஏப். 30
கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், மனோகரா விளையாட்டுக் கழகம் ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில், உடுப்பிட்டி 'யுத்' விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகமும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் 'பி' பிரிவினருக்கான ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108-422)



# கிளிநொச்சி அணி இறுதிக்குத் தகுதி

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் பெண் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மன்னார் அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி மாவட்ட அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆஸியில் சிக்கல்கள்

ஊதிய ஒப்பந்த விவகாரத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சங்கத்துக்கும் இடையில் இழுபறி நிலைமை உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சிலரின் ஒப்பந்தம் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. இதனால் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு கிடைக்கும் வருவாயில் வீரர்களுக்கு பகிர்ந்து வழங்கும் முறை கடந்த 20 வருடங்களாக கடைப்பிடிக்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், 22.5 சதவீதம் வீரர்களுக்கும், 22.5 சதவீதம் உள்ளூர் கிரிக்கெட்டுக்கும் பகிர்ந்து அளிக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பரிந்துரை செய்திருந்ததது. இது தொடர்பிலேயே தற்போது இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. (ம)

# கரவெட்டி பிரதேசம் வென்றது கிண்ணம்

கரணவாய், ஏப். 30
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலகம் மோதியது. 14:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் பாதியில் முன்னிலை பெற்றது சண்டிலிப்பாய்.

இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது கரவெட்டி அணி. ஆட்டம் அப்படியே மாறியது. முடிவில் 36:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-108-422)

# புனேயுடன் தோல்வி; பெங்களூர் வெளியே

தொடர் தோல்விகளின் எதிரொலியாக, நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து முதல் அணியாக வெளியேற்றப்பட்டது பெங்களூர்.

நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரை எதிர்த்து புனே மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 3 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சிமித் 45 ஓட்டங்களையும், திவாரி ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும், திரிபதி 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பத்ரி, நெகி, பின்னி மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

158 ஓட்டங்கள் என்பது ரி-20 ஆட்டங்களைப் பொறுத்த மட்டில் இலகுவான இலக்காக இருந்த போதிலும், புனே ஆடுகளம் பந்துவீச்சுக்கு சாதகமானது என்பதால் பெங்களூரின் வெற்றி தொங்குநிலையிலேயே இருந்தது. இதற்கேற்றாற்போல் ஆரம்ப வீரரான ஹெட், இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். கோக்லி ஓர் முனையில் நிலைத்துநின்றாலும் மறுமுனையில் இலக்குச் சரிவு நீண்டுகொண்டே சென்றது. வில்லியர்ஸ் 3, கேதர் யாதவ் 7, சச்சின் பேபி 3 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 48 ஓட்டங்களுக்கு முதல் 5 இலக்குகளை இழந்தது பெங்களூர். தடுமாற்றம் தொடர முடிவில் அந்த அணி 96 ஓட்டங்களையே எடுக்க இயன்றது. கோக்லி 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 61 ஓட்டங்களால் வெற்றிபெற்றது புனே.

இதுவரை 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள பெங்களூர், 2 வெற்றி 7 தோல்வி ஒரு சமநிலை என மொத்தம் 5 புள்ளிகளையே பெற்றுள்ளது. எஞ்சியுள்ள 4 ஆட்டங்களில் வென்றாலும் அந்த அணியால் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேற இயலாது. (ம)



# மாகாணமட்ட கால்பந்தாட்டம்; யாழ். மாவட்டம் இறுதியில்

யாழ்ப்பாணம். ஏப். 30
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-23)





# மீண்டு வருவார் மலிங்க; நம்பிக்கையில் பட்டேல்

தற்போது சில தடுமாற்றங்களை எதிர்கொண்டுள்ள மும்பை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க, பெரும் பலத்துடன் மீண்டு வருவார் என்று சக வீரர் பட்டேல் நம்பிக்கை தெரிவித்தார்.

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மலிங்க மும்பை அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரையிலும் முடிவடைந்துள்ள ஆட்டங்களின் அடிப்படையில் அவர் பெரியளவில் சோபிக்கவில்லை. இதனால் அவர் ஓரிரு ஆட்டங்களில் இருந்தும் நீக்கப்பட்டார். இனிவரும் ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக அணியில் இருப்பாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. இந்த நிலையிலேயே மலிங்க தொடர்பில் இவ்வாறு தெரிவித்தார் பார்திவ் பட்டேல்.

"மலிங்க தற்போது திறனில் இல்லாமை குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. அவர் விரைவில் முழுப் பலத்துடன் களத்துக்குத் திரும்புவார். மலிங்கவின் பந்துவீச்சால் கடந்த காலங்களில் மும்பை பல வெற்றிகளைக் குவித்துள்ளது. இனிவரும் காலங்களிலும் அவர் அணிக்குத் தேவையான ஒருவரே" என பட்டேல் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது இந்திய தொழில் முயற்சியாளர்களால் நடத்தப்படும் அம்பனையில் உள்ள எலிபண்ட் மெட்டல் அண்ட் அலுமினியம் வேக்ஸ் பிரைவேட் லிமிடெட் பிரபல அலுமினியம் பாத்திரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு விற்பனை பிரதிநிதிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு உடனடியாக தேவை படுகின்றனர். முன் அனுபவம் விரும்பத்தக்கது. Motor சைக்கிள் இருப்பது அத்தியாவசியமானது. விவரங்களை emawpi@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். **முகவரி :- அம்பனை, தெல்லிப்பழை.**

**மேலதிக தொடர்பு :- 075 348 3557, 021 224 3338**

பழைய அலுமினிய பாத்திரங்கள் மற்றும் கிளிப் சீட் நியாய விலைக்கு உடன் காசிற்கு கொள்வனவு செய்யப்படும்.










## வேலையாள்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

1. சப்பிளையர் ஆண்,பெண்
2. காசாளர்
3. சாரதி
4. பில் கிளாக்
5. குசினி வேலையாள்கள்
6. மரக்கறி வெட்டுபவர்கள் ஆண்,பெண்
7. சுத்திகரிப்பாளர் ஆண்,பெண்

மேலும் இதர வேலைகளுக்கு, உடனடி
**தொடர்புகளுக்கு .077 791 7753**
**யாழ்ப்பாணம்.** 8391

## Rent A Car

**நாள் , மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.** 29489

**தொடர்பு: 075 204 0061,077 469 6695**

## காணி விற்பனைக்கு

மருத்துவ பீடத்துக்கு அண்மையில் பொற்பதி வீதிப் பிள்ளையார் கோயிலை அடுத்து உள்ள ஒழுங்கையில் 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**076 639 9277**

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல மூக்குக் கண்ணாடியகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. O/L or A/L தகைமை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**077 206 3374**

## வீடு விற்பனைக்கு

இளவாலை. போயிட்டி சந்தியில் 2 பரப்பு, குளி எட்டு நிலப்பரப்பில் அமைந்துள்ள 2400 சதுரஅடி புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட ஆடம்பர வீடு விற்பனைக்குண்டு.

**077 354 7460, 076 688 5242**

## பணிப்பெண் தேவை

வயது 40-55 வரை. அனுபவமுள்ள, வீட்டில் தங்கிநின்று பணிசெய்ய கூடிய தாய் இருக்கவேண்டும். தங்குமிட வசதி, 3 நேர உணவு, நீதியான சம்பளம் வழங்கப்படும். வார இறுதியில் ஓய்வு உண்டு.

**தொடர்பு. 077 040 1620** 29492

## நிறைவாழ்வு மையம்

**இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகம்.**

**Seek help from Centre for Holistic healing**
**நிறைவாழ்வு மையத்தை நாடுங்கள்**

Diploma in Counselling (Week-end Courses)
உளவளத்துணை வார இறுதி வகுப்புகள்

Crash Courses on Psycho - Social Issues (Short - Term)
உள மற்றும் சமூக விழிப்புணர்வு குறித்த குறுகிய கால பயிற்சி நெறி

Pleasant Cottages Home for Elderly
முதியோர் பராமரிப்புக்கான "மகிழ்ச்சி இல்லம்"

Women Empowerment programmes
பெண்கள் வலுவூட்டல் மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள்

**சிறுவர் துர்ப்பிரயோகம் சார்பான குறுகிய கால பயிற்சிநெறி**

ஆரம்பம் : மே மாதம் 13 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு நேர்முக தெரிவும் அறிமுகவகுப்பும் ஆரம்பமாகும்.

பயிற்சிக்காலம் மற்றும் பயிற்சி முறை : வார இறுதி நாள்களில் மு.ப. 9 தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை ஆறுமாத் காலத்திற்கு வகுப்பறை கல்வியுடன் செயன்முறை பயிற்சியும் உள்ளடக்கப்படும்.

அனுமதிக்குரிய தகைமைகள் : முன்பள்ளி மற்றும் சிறுவர்களுடன் தொடர்புபட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆர்வலர்கள் விண்ணப்பிக்கலாம். டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

**தொடர்புக்கு : 021 205 4443 / 077 737 0494**
**நிறைவாழ்வு மையம், மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தோற்றம்**
**17.11.1941**

**மறைவு**
**07.04.2017**

கடந்த 07.04.2017
வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது
அன்புத்தந்தை

**அமரர் சி. அ. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்களின அந்தியேட்டி கிரியை (02.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் 04.05.2017 வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன்அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவிகள் பல புரிந்தும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் மலர்வளையம் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 446, காங்கேசன்துறை வீதி.**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
02 . 01 . 1940



ஆண்டவன் அடியில்
24 . 04 . 2015

**அமரர் இராமலிங்கம் இராசதுரை (J.P)**

(முன்னாள் உறுப்பினர் - வலி தெற்கு பிரதேசசபை)

**திதி : 01.05.2017**

அன்பின் உறைவிடமாய் வாழ்ந்து
அனைவரின் உள்ளங்களில் நிறைந்து
இயல்பினால் பணி பல ஆற்றி இதயங்கள் என்றுமே வாழ்த்த
ஈராண்டாய் உம் பிரிவெண்ணி ஏங்கியே நிற்கின்றோம் ஐயா
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம்
ஆண்டுகள் கடந்தாலும் ஆறுமோ எம் துயர்

முக்கிய குறிப்பு: அமரர் இராமலிங்கம் இராசதுரை (J.P) அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடத் திறப்பு நிகழ்வு இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் நடைபெறும். அனைவரும் கலந்து கொள்ளவும்.

**நாகம்மாள் கோயில் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org